காஞ்சிபுரம் மாவட்டத்

தொல்லியல் ஏடு

பதிப்பாசிரியர்

முனைவர் **சீதாராம் குருமூர்த்தி** இஆப,

முதன்மை ஆணையர்

ஆசிரியர்

இரா. சிவானந்தம்

கல்வெட்டாய்வாளர்

சென்னை

வெளியீடு :

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை

சென்னை – 600 008.

2008

BIBLIOGRAPHICAL DATA

Title	:	**Kanchipuram Mavattath Tholliyal Kaiyedu**
Editor	:	Principal Commissioner of Archaeology
Author	:	R. Sivanantham, Epigraphist
Copy right	:	T.N. State Dept. of Archaeology
Subject	:	History
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	197
Year	:	2008
Type Point	:	11 pt
No. of Pages	:	300
Paper used	:	80 Gsm Maplitho
Type Setter	:	Gangarani Kaniniyagam Royapettah, Chennai - 600 014. Ph : 2861 3747
Printer	:	**TAMCOS** **Royapettah, Chennai - 600 014.**
Publisher	:	**State Dept. of Archaeology** **Tamil Valarchi Valaagam** **Halls Road, Egmore, Chennai - 600 008.**
Price	:	**Rs. 116/-**

முன் அட்டை : சொக்கீஸ்வரர் கோயில், காஞ்சிபுரம்

பின் அட்டை : தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பாதுகாக்கும்
காஞ்சிபுரம் மாவட்ட மரபுச் சின்னங்கள் - 12

அட்டைப்பட வடிவமைப்பு : **மு.த. ஸ்ரீதரன்,** நிழற்பட மெடுப்பவர்
பா. வளர்மதி, நேர்முக உதவியர்

பதிப்புரை

''வேழம் உடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து – பூழியார்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயற்
தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து''

என்னும் அவ்வையின் பாடல் வரிகள் தொண்டை நாட்டின் சான்றோர் வளத்தினைக் காட்டுகிறது. இந்தப் பெருமையைத் தொண்டை நாட்டுக்கு அளித்தது காஞ்சி என்றால் அது மிகையல்ல. வரலாற்றுக்கு முந்தைய காலம், வரலாற்றுக் காலம் ஆகிய இருகால கட்டப் பண்புகளை உள்ளடக்கி, சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் தொடர்ந்து வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டு சிறப்புறத் திகழ்கிறது.

காஞ்சிபுர நகரம் மற்றும் இம்மாவட்டத்தின் வரலாறு, கலை, பண்பாடு தொடர்பான பல நூல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் அறிஞர்கள் பலர் எழுதி வெளிவந்துள்ளன. தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை இம்மாவட்டத்தில் பல கள ஆய்வுகள், அகழாய்வுகள் மற்றும் கல்வெட்டுகளைப் படியெடுத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டது. இவற்றின் வாயிலாகக் காஞ்சிபுரம் மாவட்டத்தின் வரலாற்றினைத் தொல்லியல் நோக்கில் அனைத்து மக்களும் அறியும்வண்ணம், தமிழில் வெளிக்கொணர வேண்டும் என்பது இத்துறையின் நோக்கங்களில் ஒன்றாகும்.

காஞ்சிபுரம் மாவட்டம் கலைகளின் பிறப்பிடமாகத் திகழ்கிறது. காஞ்சிபுரம் மற்றும் மாமல்லபுரம் கட்டடக் கலை வரலாற்றுக்கு ஓர் உன்னத இடத்தைப் பெற்றுத் தந்துள்ளன என்பதற்கு இருவேறு கருத்துகள் இல்லை. தமிழகத்தில் மிகுதியான குடைவரைகள் காணப்படுவது இப்பகுதியில்தான். இங்குள்ள வரலாற்றுச் சின்னங்கள், கல்வெட்டுகள், கலை மற்றும் பண்பாட்டு எச்சங்கள் அடிப்படையில் இடம்பெற்றுள்ள சில ஊர்களைப் பற்றிய விளக்கங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இத்தொல்லியல் கையேட்டினை உருவாக்குவதில் பெரும் பங்காற்றிய இத்துறை கல்வெட்டாய்வாளர் திரு. இரா. சிவானந்தம் மிகுந்த பாராட்டுக்குரியவர். இந்நூலுக்குரிய நிழற்படங்கள் மற்றும் அட்டை வடிவமைப்பினைச் செய்த நிழற்படமெடுப்பவர் திரு. மு.த. ஸ்ரீதரன், இந்நூல் வெளிவருவதற்குப் பணியாற்றிய கல்வெட்டாய்வாளர்கள் திருமதி அர. வசந்த கல்யாணி மற்றும் திரு. கி.சு. சம்பத் ஆகியோரும் பாராட்டுக்குரியோர்.

இத்துறையின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து இத்துறை வெளியீடுகளுக்கு நிதி உதவி நல்கிய தமிழ்நாடு அரசிற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொல்லியல் ஆர்வலர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இக்கையேட்டினை வரவேற்றுப் பயன்பெறுவர் என்பது என் நம்பிக்கை.

சீதாராம் குருமூர்த்தி
முதன்மை ஆணையர்
தொல்லியல் துறை

20-3-2008
சென்னை – 8.

முன்னுரை

வரலாற்றை அறிய நமக்குக் கிடைக்கும் சான்றுகள் தொல்லியல், காசுகள், கல்வெட்டுகள், கலைகள், இலக்கியங்கள் எனப் பல்வேறு வகைகளில் உள்ளன. அவற்றைக் காலவாரியாகப் பகுத்தும், தொகுத்தும் பார்க்கும்போது முழுமையான வரலாறு கிடைக்கின்றது. இவ்வரலாற்றினை அடுத்த தலைமுறையினரும் அறியும் வகையில் இட்டுச்செல்வது நம் அனைவரின் கடமை யாகும். காஞ்சிபுரம் மாவட்டம் அன்று தொண்டை மண்டலமெனும் பரந்த பகுதியினுள் இருந்துள்ளது. தொண்டை மண்டலம் மிகப் பழைமையான வரலாற்றுத் தடயங்களைக் கொண்டது. வரலாற் றுக்கு முற்பட்ட பழைய கற்கால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகள் இப்பகுதிகளில் கிடைக்கின்றன. சங்க இலக்கியங்கள் போற்றும் காஞ்சிபுரம் போன்ற ஊர்கள் இருந்த பகுதி, கலை மற்றும் வரலாற்றுப் பெட்டகமெனப் போற்றப்பெறும் வகையில் பல்லவர் ஆட்சி புரிந்த பகுதியாகும். சோழர் ஆட்சியில் குடவோலைமுறையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஊராட்சி நிருவாகம் சிறந்து விளங்கியது. மேலும், பாண்டியர், சம்புவராயர், விஜயநகரர் என அரச மரபுகள் தொடர்ந்து ஆட்சிபுரிந்து வளம்சேர்த்த பகுதியாகும்.

கல்வெட்டு, கோயில், கலை, தொல்லியல் தொடர்பான முக்கிய ஊர்களைப்பற்றி ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களும் அறியும்வண்ணம் இந்நூல் வெளியிடப்படுகிறது.

இதுபோன்ற நூல்கள் வெளிவருவதன் மூலம் அவ்வவ் பகுதி வரலாறு, தொல்லியல் சின்னங்களின் சிறப்பு, மக்களின் வாழ்க்கை முறைகள் ஆகியவற்றை மக்கள் அறிவதோடு, தொல்லியல் சின்னங்கள் பற்றிய விழிப்புணர்வையும் அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்பது இத்துறையின் நோக்கங்களில் ஒன்றாகும்.

இந்நூல் வெளியிட நிதியுதவி அளித்த தமிழக அரசுக்கும், இந்நூல் சிறப்புற வெளிவர உதவிப் புரிந்த தொல்லியல் துறை முதன்மை ஆணையர் முனைவர் சீதாராம் குருமூர்த்தி, இஆப அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலில் தேவையான திருத்தங்கள் செய்தளித்த இத்துறை மேனாள் தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர் முனைவர் நா. மார்க்சியகாந்தி, ஆலோசனைகளை வழங்கிய முனைவர் சு. இராசகோபால், பதிவு அலுவலர், திருச்சி, முனைவர் ஆ. பத்மாவதி, மேனாள் கல்வெட்டாய்வாளர், இந்நூலிற்கு தொடக்க நிலையில் பணியாற்றிய மேனாள் தொல்லியல் அலுவலர் திரு. ச. கிருஷ்ணமூர்த்தி, நிர்வாக உதவியளித்த உதவி இயக்குநர் திருமதி சு. சீதாலட்சுமி ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரா. சிவானந்தம்

கல்வெட்டாய்வாளர்

உள்ளடக்கம்

வரலாற்றுப் பின்னணி

1. தொல்பழங்காலம் - 11
2. சங்க காலக் காஞ்சி - 16
3. பல்லவர் - 20
4. சோழர் - 36
5. விஜயநகர அரசு - 54

வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள்

6. மதுராந்தகம் வட்டம் - 65
7. செய்யூர் வட்டம் - 77
8. திருக்கழுக்குன்றம் வட்டம் - 83
9. செங்கல்பட்டு வட்டம் - 110
10. தாம்பரம் வட்டம் - 125
11. உத்தரமேரூர் வட்டம் - 130
12. காஞ்சிபுரம் வட்டம் - 147
13. திருப்பெரும்புதூர் வட்டம் - 180


காஞ்சிபுரம் மாவட்டத்தில் அகழாய்வு நடைபெற்ற இடங்கள் - 197


செய்தித் தொகுப்புகள் - 211

நிழற்படங்கள் - 256

தமிழ்நாடு

காஞ்சிபுரம் மாவட்டம்




காஞ்சிபுரம் மாவட்டம்
Scale : 1 Inch = 10 Kms
C
D
E
19
Gangai
Kanchipuram
வங்காள விரிகுடா

வரலாற்றுப் பிற்காலம்

தொல்பழங்காலம்

எழுத்துச் சான்றுகள் தோன்றுவதற்கு முந்தைய காலத்தை வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (Pre-historic Period) என்றும், எழுத்துக்கலை தோன்றி அதனை அடிப்படைச் சான்றாகக் கொண்டு விளங்கும் காலம் வரலாற்றுக் காலம் (Historic Period) என்றும், எழுத்துச் சான்றிருப்பினும் அவை படிக்கப்படாதிருக்கும் காலம் (Proto-historic Period) என்றும் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதன் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டான். வேட்டையாடுவதற்குக் கரடு முரடான கற்கருவிகளைப் பயன்படுத்தினான். எனவே இக்காலத்தைக் கற்காலம் (Stone Age) என்பர். கற்காலம் மூன்று பிரிவுகளைக் கொண்டது. அவை பழைய கற்காலம் (Palaeolithic Age), இடைக் கற்காலம் (Mesolithic Age), புதிய கற்காலம் (Neolithic Age) என்பதாகும். இந்தியாவில் பழைய கற்காலப் பண்பாடு சுமார் ஐந்து இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியிருக்கலாம் என்பது டாக்டர் எச்.டி. சங்காலியாவின் கருத்தாகும்.

பழைய கற்காலம்

கற்காலத்தைச் சேர்ந்த ஏராளமான கற்கருவிகள் கோற்றலை ஆற்றின் பள்ளத்தாக்கிலும் அதன் கிளை ஆறான ஆரணியாற்றுப் படுகைகளிலும் கிடைக்கின்றன. இந்தியாவில் முதன்முதலாகத் தமிழ் நாட்டில் தான் பழங்கற்காலக் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டன. 1863-இல் இராபர்ட் புரூஸ்புட் என்ற நிலவமைப்பியல் ஆய்வாளர் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்லாவரத்துக்கு அருகில் முதன் முதலாகக் கற்கருவிகளைக் கண்டுபிடித்தார். இதனைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் பூண்டிருக்கே அத்திரம்பாக்கம் என்ற

ஊருக்கருகில் கோற்றலையாற்றுப் பள்ளத்தாக்கின் மேற்பரப்பாய்வில் அதிகமான கற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1962-64 ஆம் ஆண்டு மத்தியத் தொல்லியல் துறையும் 2003-04 ஆம் ஆண்டு தனியார் நிறுவனம் ஒன்றும் அப்பகுதியில் அகழாய்வுகள் மேற்கொண்டு பல அரிய செய்திகளை வெளியிட்டுள்ளன.

இந்தியாவின் பழைய கற்காலத்தை இரண்டு தொழில் முறைகளாகப் பிரித்துள்ளனர். வட இந்தியாவில் சோன் (Soan or Sohan) ஆற்றுப் பள்ளத்தாக்கில் கிடைக்கும் கற்கருவிகளைச் சோன் தொழில்முறை என்றும், தமிழ்நாட்டில் சென்னைக்கருகே கோற்றலை யாற்றின் பள்ளத்தாக்குப் பகுதிகளில் கிடைக்கும் கற்கருவிகளைச் சென்னைத் தொழில் முறை (Madras Industry) என்றும் அழைக்கின்றனர்.

சென்னைக் கற்கருவிகளில் ஒருவகைக் கைக்கோடரிகள் மிக அதிகளவில் கிடைப்பதால் அதனைக் கைக்கோடரிப் பண்பாடு (Handaxe Culture) என்றும் அழைப்பர். இக்கற்கருவிகள் கூழாங் கல்லிலிருந்து (Quartizite) செய்யப்பட்டவை. இக்கூழாங் கல்லிலிருந்து மிக எளிதான முறையில் சில்லுகளைப் பெயர்த் தெடுத்துக் கருவிகளை உண்டாக்கலாம்.

பழங்கற்கால மக்கள் நாடோடிகளாகவும் வேட்டையாடும் தொழிலையும் மேற்கொண்டிருந்தனர். இவர்கள் கற்களையும் உறுதியான மரக்கிளைகளையும் கருவிகளாகப் பயன்படுத்தி யுள்ளனர். நெருப்பின் பயனை அறிந்திருந்தனர். விலங்குகளின் தோலையும் மரப்பட்டைகளையும் ஆடைகளாகப் பயன்படுத் தினர். மலைக் குகைகளில் வாழ்ந்தனர். மேலும் இவர்கள் இறந்த வர்களை அடக்கம் செய்யும் வழக்கத்தினை அறிந்திருக்க வில்லை.

பழைய கற்காலக் கருவிகள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பரந்தூர், புத்தூர், வதியூர், சேத்துப்பட்டு, மாகானியம், மன்னூர், ஓரகடம், சாலமங்கலம், சிறுமாத்தூர், சிறுவஞ்சூர், ஸ்ரீபெரும்புதூர், தொல்லாழி, நன்மங்கலம், பல்லாவரம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன.

புதியகற்காலம்

நாடோடிகளாக வாழ்ந்த மக்கள் நாளடைவில் கூரை வேய்ந்த வீடுகள் அமைத்து வாழத்தொடங்கினர். பழைய கற்காலக் கருவிகளைப் போல் அல்லாமல் வழுவழுப்பான கூர்மையான கற்கருவிகளைச் செய்யத் தொடங்கினர். இக்கருவிகளைக் கொண்டு வேளாண்மை செய்யத் தொடங்கினர். தமிழகத்தில் சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் இப்பண்பாட்டுக் கருவிகள் காணப்படுகின்றன. மேலும் வேலூர் மாவட்டத்திலுள்ள பையம்பள்ளி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட கருவிகளைக் கொண்டு இப்புதிய பண்பாட்டின் சிறப்புகளை அறியமுடிகிறது.

இவர்கள் வேளாண்மைக்கு உதவும் விலங்கினங்களான ஆடு மாடுகளை வளர்த்தனர். கேழ்வரகு, பச்சைப்பயிறு, கொள்ளு ஆகிய தானியங்களைப் பயிர் செய்தனர். இக்காலத்தில் இறந்தவர்களைக் குழிதோண்டிப் புதைக்கும் மரபு தோன்றியுள்ளது. இம்மக்கள் இறந்தவர்களின் உடலை வீட்டிற்குள்ளேயே அல்லது வீட்டிற்கு அருகிலேயே புதைத்தனர்.

பெருங்கற்காலம்

புதிய கற்காலத்திற்கு அடுத்த நிலை இது. மக்கள் இறந்த வர்களைப் புதைக்கும் போது பெருங்கற்களைப் பயன்படுத்தி ஈமச்சின்னங்களை உருவாக்கினர். அதனால் இக்காலம் பெருங் கற்காலம் எனப் பெயர்பெற்றது. மேலும் இக்கால மக்கள் இரும்பைப் பயன்படுத்தத் தொடங்கியதால் ''இரும்புக் காலம்'' என்றும் அழைக்கப்படுகிறது. பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் பல வகையாகக் கிடைக்கின்றன. அவை கல்திட்டை, கல்பதுக்கை, கற்கிடை, கல்வரிசை, தொப்பிக்கல், குடைக்கல், ஈமத்தாழி, ஈமப்பேழை, குடைவறை தாழ்வறை என்பவையாகும்.

கல்திட்டை என்பதில் தரைமட்டத்திற்குமேல் பெரிய கருங்கற் களைக் கொண்டு நான்கு புறமும் சுவர்போல் அமைத்து சதுரமான அல்லது நீள் சதுரமான அறை உண்டாக்கப்பட்டது. தரையைக் கற்கொண்டு சமப்படுத்தி மேல் பகுதி ஒரு பட்டைக் கல்லையோ அல்லது இரண்டு மூன்று பட்டைக் கற்களையோ கொண்டு மூடப்

பட்டது. இத்தகைய கல்திட்டைகள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் சானூர், பெரும்பேர் ஆகிய இடங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

நான்கு புறமும் நான்கு பலகைக் கற்களைப் பூமியில் ஊன்றி நிறுத்தி, ஓர் அறை உருவாக்கப்பட்டது. இப்பலகைக் கற்கள் ஒன்றோடு ஒன்றின் முனையும் ஒரு பக்கம் நீட்டி நிறுத்தப்பட்டு 'ஸ்வஸ்திக' வடிவத்தில் இருக்கும். இதன் மேற்பகுதியில் பெரிய பலகைக் கல்லால் மூடப்பட்டிருக்கும். இதன் மேல் மண் அல்லது கற்களைக் கொண்டு மேடு எழுப்பப்பட்டது. இத்தகைய ஈமச்சின்னங்கள் கல்பதுக்கை என்றழைக்கப்படுகிறது.

கற்கிடை என்பது ஆழமான குழியைத் தோண்டி அதனுள் ஈமத்தாழி அல்லது ஈமப்பேழை ஆகியவற்றோடு ஈமப்பொருட்களை வைத்து அதன் மீது மணல் அல்லது கற்கள் குவித்து வைக்கப்படும். இதனைச் சுற்றிக் கற்கள் கொண்டு வட்டமாக அமைக்கப்படும். இவ்வகை ஈமச்சின்னத்தினைக் கற்கிடை அல்லது கல்வட்டம் என்றழைப்பர். இவ்வகையான ஈமச்சின்னங்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் குன்னத்தூர், குன்னவாக்கம், சானூர், பல்லாவரம், பெரும்பேர் ஆகிய ஊர்களில் காணப்படுகின்றன.

ஈமத்தாழி என்பன கீழ்ப்பகுதி குவிந்தும் மேற்பகுதி அகன்ற வாயுடனும் தோற்றமளிக்கும் சுடுமண்ணாலான தாழிகளாகும். இவை ஆழமான குழியில் ஈமப்பொருட்களுடன் வைத்துப் புதைக்கப்பட்டன.

ஈமப்பேழை, சுடுமண்ணால் நீண்ட பெட்டி போன்ற அமைப்புடன் காணப்படும். இப்பேழையின் அடிப்பகுதி பல கால்களுடனும் மேல் உள்ள மூடிப் பகுதி ஆடு போன்ற விலங்கு உருவங்களையும் கொண்டிருக்கும். இவ்வகை ஈமச்சின்னங்கள் குன்னத்தூர், பெரும்பேர், சானூர் ஆகிய இடங்களில் காணப்படு கின்றன.

பெருங்கற்கால மக்கள் நாகரிக வாழ்க்கையை மேற் கொண்டனர் என்பதை இவ் ஈமச்சின்னங்களில் கிடைத்துள்ள பொருட்களைக் கொண்டு அறியமுடிகிறது. சுட்ட செங்கற்களைக் கொண்ட வீடுகளில் வாழ்ந்தனர் என்பது குன்னத்தூரில் மேற்கொண்ட அகழாய்வினால் தெரியவருகிறது.

குடிநீருக்காக உறைகிணறுகளைத் தோண்டியும் வீட்டிலிருந்த கழிவுநீரைச் சுடுமண் குழாய் மூலம் வெளியேற்றியுள்ளனர். அகழாய்வுகளில் மட்கலன்கள், இரும்பிலான பொருட்கள் அதிகம் கிடைப்பதால் இம்மக்கள் இத்தொழில்களையே முக்கியத் தொழில்களாகக் கொண்டிருந்தனர் எனத் தெரிகிறது. கருப்பு சிவப்பு மட்கலன்கள், கருப்பு மட்கலன்கள், சிவப்பு மட்கலன்கள், செம்பழுப்புப் பூச்சு என நான்கு வகை மட்கலன்களைப் பயன்படுத்தி யுள்ளனர். வேட்டையாடுவதற்குப் பயன்படும் குத்துவாள், வேல்கள், முள்கொண்ட அம்பு முனைகள், ஈட்டிகள் போன்றவையும் வேளாண்மைக் கருவிகளான மண்வெட்டிகள், கொத்துகள், கோடரிகள், அரிவாள்கள், கடப்பாறைகள் ஆகியவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. வேளாண்மைத் தொழில் நாகரிக வளர்ச்சிக்கு அடிப்படையான தொழிலாகும். புதிய கற்காலத்தில் தொடக்க நிலையில் இருந்த வேளாண்மைத் தொழில் பெருங்கற் காலத்தில் சிறப்பான நிலையை அடைந்தது. இதனைக் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெருங்கற்காலச் ஈமச்சின்னங்கள் காணப்படும் பகுதிகளுக்கு அருகே ஏரிகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் இருப்பதன் மூலமும் உறுதிப்படுத்தலாம்.

சங்க காலக் காஞ்சி

சங்க காலத் தமிழக வரலாற்றினை அறிவதற்குத் துணை நிற்பவை சங்க இலக்கியங்களாகும். பாண்டியர் தலைநகரான மதுரையைச் சங்க இலக்கியங்கள் மதுரை, கூடல் என்ற இருபெயர் களால் சுட்டுகின்றன. அதுபோல் தொண்டை நாட்டின் தலைநகரான காஞ்சியைச் சங்க இலக்கியங்கள் காஞ்சி, கச்சி என்ற இரு பெயர்களால் குறிப்பிடுகின்றன.

காஞ்சி, காஞ்சிபுரம், கஞ்சி, கஞ்சிபுரம், காஞ்சீ, காஞ்சீபுரம், காஞ்சி மாநகர், கச்சியம்பதி, சின்னக்காஞ்சி, சிவகாஞ்சி, விஷ்ணு காஞ்சி, ஜைனகாஞ்சி, புத்த காஞ்சி, காஞ்சனபுரம், காஞ்சீபுரி, அத்தியூர், திரு அத்தியூர், சம்பாபுரி, பல்லவேந்திரபுரி, முப்புவனவனம், காமபீடம், தபோமயம், மும்மூர்த்தி வாசம், துண்டிரபுரம், இலயசித்தூர், பிரமபுரம், விண்டுபுரம், சிவபுரம், சருவசித்திகரம், கன்னிகாப்பு, ஆதிபீடம், பிரளயசித்து, இந்துபுரம், மும்முடீஸ்வரம், காமகோட்டம், சகலசித்தி தாண்டகபுரம், சத்திய வ்ரத க்ஷேத்திரம் போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப் பட்டுள்ளது இந்நகரம்.

இவற்றுள் காஞ்சி, காஞ்சிபுரம், காஞ்சி நாடு, கச்சி, கச்சிப்பேடு, கச்சிமாநகர் தவிர மற்றவை அனைத்தும் கி.பி. 6-ம் நூற்றாண்டிற்குப் பிறகு உருவான பெயர்களாகும்.

காஞ்சி என்ற சொல்லுக்குக் 'காஞ்சி' என்ற ஒருவகை மரம் (பூவரசு மரம்), மகளிர் இடையில் அணியும் மேகலை, நிலையாமை, மதில் என்ற பல பொருள்கள் உள்ளன. காஞ்சி மரங்கள் நிறைந்த பகுதி என்பதால் இப்பெயர் பெற்றது எனலாம்.

> "வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்க்
> குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங் கொடிப்
> பாசிலைக் குருகின் புன்புறவரிப்பூ"

– இப்பெரும்பாணாற்றுப்படை பாடல் வரிகளில் காஞ்சியின் இயற்கை வர்ணனையில் 'காஞ்சி' மரங்கள் சூழ்ந்த என்ற குறிப்பு இதனை மேலும் வலுவூட்டுகிறது.

சங்க இலக்கிய 'பத்துப்பாட்டு' நூல்களில் ஒன்றான பெரும் பாணாற்றுப்படை திரையன் என்ற மன்னன் கச்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான் எனக் கூறுகிறது. திரையனிடம் சென்று பரிசில் பெற்று வரும் பாணன் ஒருவன் தன் எதிரில் கண்ட வறுமையில் வாடிய பெரும்பாணனை, திரையனிடம் சென்று பரிசில் பெற ஆற்றுப்படுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது. மேலும் திரையன் வீற்றிருந்த இடத்திற்குச் செல்லும் வழியின் சிறப்பையும், அவன் வீற்றிருந்த மூதூரின் சிறப்பையும், அவனின் விருந்தோம்பல் பண்பையும் விரிவாக எடுத்து இயம்புகிறது.

''அடங்காத் தானையோடு உடன்று மேல்வந்த
வொன்னாத் தெவ்வர் உலை விடத்தார்த்துக்
கச்சியோனே கைவண் தோன்றல்'' பெரும். 418–420

''புலவுக் கடலுடத்த வானஞ் சூடிய
மலர்தலை யுலகத்துள்ளும் பலர் தொழ
விழவு மேம்பட்ட பழவிறன் மூதூர்'' பெரும். 409–411

என்ற இப்பெரும்பாணாற்றுப்படை பாடல் வரிகள் திரையனை 'கச்சியோன்' எனவும் இவ்வூரை மூதூர் எனவும் சுட்டுகிறது.

கச்சிப்பேட்டு நன்னாகையார், கச்சிப்பேட்டு இளந்தச்சனார், கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார், கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார் ஆகிய சங்ககாலப் புலவர்கள் கச்சி, காஞ்சி ஆகிய இவ்வூர்களில் வாழ்ந்தவர்கள் ஆவர்.

இப்புலவர்களில் கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார் என்பவர் பெயரில் உள்ள காஞ்சி கச்சியை அடுத்துள்ள ஊர் என்பதைக் குறிக்கிறது. எனவே கச்சி, கச்சிப்பேடு, கச்சிப்பேட்டுக் காஞ்சி என்ற இம்மூன்று பெயர்களையும் அணுகும்போது கச்சி என்பது ஊர், இவ்வூரின் புறப்பகுதி கச்சிப்பேடு, கச்சிப்பேட்டின் அருகிலிருந்த ஊர் காஞ்சி என்பதாகும் என முனைவர் கு. பகவதி 'காஞ்சிபுரம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டிற்கு முன்' என்ற தனது நூலில் குறிப்பிடுகிறார். மேலும் கச்சி, காஞ்சி, ஆகிய இரு சொற்களும் தமிழ்ச் சொற்களே

யாகும். இவை இயற்கை காரணமாக இடப்பட்ட ஊர்ப் பெயர்களாகும். கச்சி ஒரு மூதூர் எனவும், கச்சி சங்ககால அரசன் திரையனின் தலைநகர் என்றும், காஞ்சி மக்கள் வாழ்ந்த பகுதியாக விளங்கியது எனவும் கச்சி வணிகத்திலும், காஞ்சி புலமை வளர்ச்சியிலும் சிறப்புற்றுத் திகழ்ந்தது என மேலும் விரிவாகத் தனது நூலில் எடுத்துரைத் துள்ளார்.

பல்லவர்களே காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு முதன் முதலாக ஆட்சி செய்யத் தொடங்கியுள்ளனர். வேலூர்ப்பாளையம் செப்பேடு குமாரவிஷ்ணு காஞ்சியை வென்றதாகக் கூறுகிறது. மேலும் ஸ்கந்த சிஷ்யன் என்பவன் சத்தியசேனன் என்ற அரசனிடமிருந்து பிராமணர்களுக்குரிய கடிகையைக் கைப்பற்றி யுள்ளான் என்றும் தெரிவிக்கிறது. எனவே பல்லவர் கடிகை அமைந்திருந்த காஞ்சியில் முடிசூட்டிக் கொண்டு ஆட்சி செய்துள்ளனர். யுவான் சுவாங் தனது பயணக் குறிப்பில் வடநாட்டுப் பல்கலைக் கழகங்களையும் காஞ்சியிலிருந்த பல்கலைக் கழகத் தையும் அதனின் நூலகத்தைப் பற்றியும் சிறிது விளக்கியுள்ளார்.

‘கச்சிப் பல தளியும் ஏகம்பத்தும்
கயிலாத நாதனையே காணலாம்’

எனக் கச்சி ஏகாம்பரநாதனைத் திருநாவுக்கரசர் புகழ்ந்துள்ளார் மேலும்,

செவ்வியைப் பாகம் கொண்டார் சேந்தனை மகனாகக் கொண்டார்
மல்லிகை கண்ணியொரு மாமலர் கொன்றை சூடிக்
கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர் தன் உள்ளால்
எல்லியை விளங்க நின்றார் இலங்கு மேற்றளியனாரே 4-431

எனக் காஞ்சியின் கல்வி வளத்தினைப் பற்றித் திருநாவுக்கரசர் தனது பாடலில் சுட்டிக் காட்டியுள்ளார். இவரும் கச்சி, காஞ்சி ஆகிய பகுதி களைக் கூறி காஞ்சி கல்வியிற் சிறந்திருந்ததை விளக்கியுள்ளார்.

சங்க இலக்கியங்களில் ‘காஞ்சி’ என்றும், மணிமேகலை காஞ்சி நகர், காஞ்சி நாடு எனக் குறிப்பிட்டுள்ளதை தவிர, ‘காஞ்சிபுரம்’ என வழங்கவில்லை. பதஞ்சலி இவ்வூரினைக் ‘காஞ்சிபுரக’ என அழைத்ததற்குப் பின் பல்லவர் செப்பேடுகளே முதன் முதல் ‘காஞ்சிபுரம்’ என அழைக்கத் தொடங்கியுள்ளதை அறிய முடிகிறது.

'ஆங்கவன் தானும் நின்னத்திற் கேதுப்
பூங்கொடி கச்சி மாநகராதனின்
மற்றும் மாநகர் மாதவன் பெயர்நாள்'

– மணிமேகலை 28 : 151 – 153

மூதூராக இருந்த கச்சி பின்னர் மாநகராக வளர்ச்சியடைந் துள்ளது.

'..... நீடுகுழைக்
காந்தளஞ் சிலம்பிற் களிறு படிந்தாங்குப்
பாம்பணைப் பள்ளி அமர்ந்தோ னாங்கண்
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்க்
குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்
பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூ'' பெரும். 371-376

கச்சிக்குச் செல்லும் வழியில் இயற்கையை வர்ணிக்கும்போது திருவெஃகா இறைவன் பாம்பணையின் பள்ளிகொண்டிருந்த திருமாலைப்பற்றியும், அதனருகே இருந்த காஞ்சியையும் சிறப்பாகப் பெரும்பாணாற்றுப்படை எடுத்துரைக்கிறது. தற்போதைய பெரிய காஞ்சிபுரம் என்று அழைக்கப்படும் ஊர் அப்போது கச்சி எனவும், சின்ன காஞ்சிபுரம் என்று அழைக்கப்படும் பகுதி அப்போது காஞ்சி என அழைக்கப் பட்டிருக்கலாம்.

நீனிறவுருவின் நெடியோன் கொப்பூழ்
நான்முக ஒருவற் பயந்த பல்லிதழ்த்
தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றிச்
சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின் பெரும். 402-405

இவ்வூர் தாமரைப் பூவடிவம் கொண்ட ஊராக இருந்துள்ளது என மேலே காட்டிய உருத்திரங்கண்ணனார் பாடல் வரிகளால் அறிகிறோம். மேலும்,

ஏரியிரண்டும் சிறகா எயில் வயிறா
காடுடைய பீலி கடிகாவா – நீர் வண்ணன்.
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு''

என்ற இத் தனிப்பாடல் இக்காஞ்சியை மயில் போன்றிருந்தது என வர்ணிக்கிறது.

பல்லவர்

காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தொண்டை மண்டலத்தையும் அதனைச் சுற்றியுள்ள நாடுகளையும் கி.பி. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 9-ஆம் நூற்றாண்டு வரை சுமார் ஆறு நூற்றாண்டுகள் பல்லவர் ஆட்சி புரிந்துள்ளனர்.

பல்லவர் ஆட்சிக் காலத்தை வரலாற்று அறிஞர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். தொடக்க காலத்திலிருந்து ஆறாம் நூற்றாண்டின் இடை வரை ஒரு பகுதி. ஆறாம் நூற்றாண்டின் இடையிலிருந்து எட்டாம் நூற்றாண்டின் இடைவரை உள்ளது இரண்டாவது பகுதி. எட்டாம் நூற்றாண்டின் இடையிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டு வரை உள்ளது மூன்றாவது பகுதியாகும்.

முதல் பிரிவில் உள்ள பல்லவ மன்னர்களைப் பற்றிய விவரங்கள் அதிகமாகத் தெரியவில்லை. இந்தக் காலத்தைச் சாசனங்கள் வழங்கிய காலம், சமஸ்கிருத சாசனங்கள் வழங்கிய காலம் என இருவகையாக பிரிக்கின்றனர்.

கி.பி. ஆறாம் நூற்றாண்டின் மத்தியில் சிம்மவர்மன் என்பவன் பல்லவ நாட்டை ஆட்சி செய்தான். அவன் மகன் சிம்ம விஷ்ணு சோழ நாட்டைப் பல்லவ அரசோடு இணைத்துக் கொண்டதுதான் பல்லவர் பற்றிக் கிடைக்கும் முதல் செய்தியாகும். அதிலிருந்து 8-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை சிம்ம விஷ்ணு வம்சத்தைச் சேர்ந்தவர்கள் ஆட்சி செய்தனர். இதே காலகட்டத்தில் வாதாபியைச் சாளுக்கிய வம்சத்தினர் ஆட்சி புரிந்தனர். வடக்கே ஹர்ஷ வர்த்தனர் ஆட்சியும் தெற்கே மதுரையில் கடுங்கோன் தலைமையில் பாண்டியர் மீண்டும் தங்களது அரசை நிறுவியும் ஆட்சி செய்யத் தொடங்கினர்.

பல்லவரின் தோற்றம் குறித்துத் தெளிவான கருத்துகள் இல்லை. பல்லவர் தமிழகத்தைச் சாராதவர்கள் என்றும், தமிழகத்தைச் சார்ந்தவர்கள் என்றும் இருவேறு கருத்துகள் உள்ளன. பாரத்துவாஜ கோத்திரத்தைச் சார்ந்த பல்லவ வம்சத்தைச் சார்ந்தவன் ஒருவன் நாக அரசன் மகளை மணந்து ஆட்சிப் பீடம் ஏறியதாக இவர்களுடைய சாசனங்கள் தெரிவிக்கின்றன.

சோழ மன்னனான கிள்ளி என்பவன் நாகலோகம் சென்று நாக கன்னிகை ஒருத்தியை மணந்து அங்கே சில காலம் தங்கியிருந்தான். அவன் தனக்குப் பிறந்த பிள்ளைக்குத் தொண்டைக் கொடி ஒன்றினை அடையாளமாகக் கட்டி அவன் தந்தையான சோழ மன்னனிடம் சேர்க்கப் படகு மூலம் அனுப்பி வைத்தான். அது கடலில் மூழ்கவே, நீரில் மிதந்து வந்து கரை சேர்ந்த குழந்தையைத் தொண்டைக் கொடியின் அடையாளம் கண்டு சோழ மன்னன் எடுத்து வளர்த்துத் தன் நாட்டின் ஒரு பகுதிக்கு முடிசூட்டி வைத்தான். தொண்டைக் கொடியின் அடையாளத்தோடு வந்ததால் 'தொண்டைமான்' என்றும், கடல் திரையால் கரை சேர்ந்ததனால் 'திரையன்' என்றும் அவன் பெயர் பெற்றான். இந்த இளந்திரையன் காஞ்சியில் அரசாண்டான் எனத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

இதை வலுவூட்டும் வண்ணம் தளவானூரிலுள்ள முதலாம் மகேந்திரவர்மனின் தமிழ்க் கல்வெட்டொன்று அவன் தொண்டை யந்தார் வேந்தன் எனக் குறிப்பிடுகிறது. இதிலிருந்து பல்லவர்கள் தொண்டைமான் என்ற விருதைச் சூட்டியிருந்தனர் என்பதை அறியமுடிகிறது.

இளந்திரையனின் தந்தையான சோழமன்னன் கிள்ளி மணந்த நாககன்னியின் பெயர் பீலிவளை என்றும், அவள் தந்தையின் பெயர் வளைவணன் என்றும் மணிமேகலை கூறுகிறது.

பல்லவர் தங்களைப் பிரம்மக்ஷத்திரியர் என அழைத்துக் கொண்டது பற்றிக் காசாக்குடிச் செப்பேடு தெரிவிக்கிறது. அவர்கள் தங்கள் வம்சத்தினர் விஷ்ணுவின் நாபிக் கமலத்திலிருந்து தோன்றிய பிரம்மாவிடமிருந்து அங்கிரஸ், பிரகஸ்பதி, சம்யு, பரத்வாசர், துரோணர், அசுவத்தாமன், பல்லவன் என்ற வரிசையிலே வந்தவர்கள் எனக் கூறிக் கொண்டவர்கள். அவர்களுடைய சாசனங்களில் இந்த முறையே காணப்படுகின்றது.

முற்காலப் பல்லவர்

கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வேலூர்ப் பாளையச் செப்பேடு பல்லவ அரச மரபினைரைப் பற்றிக் கூறுகிறது. அதில் வீரகூர்சன் என்பவன் நாகராஜன் மகளை மணந்துகொண்டு அரசைக் கைக்கொண்டான். அவனையடுத்து ஸ்கந்தவர்மன், மூன்றாம் அரசனாகக் குமார விஷ்ணு, நான்காம் அரசனாகப் 'புத்தவர்மன்' என்ற பெயர்களைக் குறிப்பிடுகின்றது. வாயலூரில் கிடைக்கும் கல்வெட்டிலும் பல்லவ அரச மரபின் பட்டியலில் இந்நான்கு அரசர்களும் இதே வரிசையில் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள்.

பல்லவ சாசனங்களில் கிடைத்தவற்றுள் மிகவும் பழமை யானது மயிதவோலு செப்பேடுகள் ஆகும். பிராகிருத மொழியில் உள்ளது. அச்செப்பேடு சிவஸ்கந்தவர்மன் இளவரசனாக இருந்தபோது அளிக்கப்பட்டதாகும். செப்பேட்டு முத்திரையில் சிவஸ்கந்தவர்மன் என்று சமஸ்கிருதத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதே மன்னனின் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வழங்கப்பட்ட மற்றொரு சாசனம் ஹிரஹத ஹள்ளிச் செப்பேடாகும்.

இவனே பல்லவ வம்சத்தின் முதல் அரசன் எனவும் இவன் ஸ்கந்தசிஷ்யன் எனப் பெயர் பெற்றிருந்தான் என்பதும் வரலாற்றாய் வாளர்களின் கருத்தாகும். இவனே காஞ்சியில் புகழ்பெற்றிருந்த கடிகையைச் சத்திய சேனனிடமிருந்து கைப்பற்றியுள்ளான். ஸ்கந்த சிஷ்யன் மகனான குமாரவிஷ்ணு காஞ்சியைக் கைப்பற்றினான் என்று வேலூர்ப் பாளையச் செப்பேடு தெரிவிக்கிறது. தந்தையின் ஆட்சியில் நடைபெற்ற போரில் இவனே முன்னின்று நடத்தி வெற்றி கொண்டதால் இவன் கடிகையைக் கைப்பற்றினான் என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்.

இந் நான்கு அரசர்களும் ஒரே வம்சத்தின் வழி வந்தவர்கள் எனலாம். ஸ்கந்தவர்மன் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சி செய்துள்ளான். இவ்வழி வந்த அரசர்களின் ஆட்சி கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் இடையிலே முடிவடைந்து விட்டது.

வேலூர்ப்பாளையச் செப்பேடு புத்தவர்மன் காலத்திற்குப் பிறகு விஷ்ணுகோபன் ஆட்சி செய்தான், இவனுக்குப் பின் சிம்மவர்மன் தோன்றினான் எனக் கூறுகிறது. இதிலே குறிப்பிடப் பட்டுள்ள

விஷ்ணுகோபனைப் பற்றிய செய்திகளை முழுமையாக அறியமுடிய வில்லை.

பிற்காலப் பல்லவர்

பள்ளன் கோயில் சாசனத்தை வழங்கிய சிம்மவர்மன் வழிவந்தவர்கள் நானூறு ஆண்டுகள் ஆட்சி செய்தனர். ஒன்றன் பின் ஒன்றாக இரு கிளைகளைச் சேர்ந்தவர்கள் இவர்கள். தந்தையின் காலத்திலேயே ஆட்சி நிர்வாகத்தில் பங்கு கொண்டிருந்த சிம்மவிஷ்ணுவின் தலைமுறையினர் ஒரு கிளையாகவும் இவனது தம்பி பீமவர்மன் தலைமுறை ஒரு கிளையாகவும் இந்த இரண்டு தலைமுறையினரும் ஆட்சி புரிந்தனர்.

பள்ளன் கோயில் சாசனம் மிக முக்கியமானது. ஓர் அரசனின் ஆணையைத் தமிழிலேயே தாங்கிய தமிழ்நாட்டுச் செப்பேட்டுச் சாசனங்களில் இதுவே முதலாவதாகும். இச் சாசனம் முதலாம் மகேந்திரவர்மனின் பாட்டனாகிய சிம்மவர்மனின் காலத்தியது. இச்செப்பேட்டின் சமஸ்கிருதப் பகுதியில் 'ஸ்வர்க்க' என்ற மங்கலச் சொல்லில் தொடங்கினாலும் தமிழ்ப் பகுதியில் 'ஸ்வஸ்திஸ்ரீ' என்று பொதுவாக இடம்பெறும் மங்கலச் சொல்லில் தொடங்காமல் தூய தமிழில் 'கோவிசைய' என்ற சொல்லுடன் தொடங்குகிறது.

காஞ்சிபுரம் வைகுண்டப் பெருமாள் கோயில் உட்புறச் சுவர்களில் பல்லவ அரச வம்சத்தினரின் வரலாற்று நிகழ்வுகள் சிற்பங்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

சிம்மவர்மன் (கி.பி. 550 – 560)

பல்லவர் காலக் கல்வெட்டுகளில் மிகவும் பழமையானது ஆந்திர மாநிலத்திலுள்ள 'மஞ்சிக்கல்லு' என்னுமிடத்தில் கிடைத்துள்ள சிம்மவர்மனின் கல்வெட்டாகும். இது பிராக்ருத மொழியில் பிற்கால பிராமி எழுத்தில் அமைந்துள்ளது. திருவண்ணா மலை மாவட்டம் செங்கம் பகுதியில் சிம்மவர்மனின் ஆறாவது ஆட்சியாண்டைச் சேர்ந்த நடுகல் ஒன்று கிடைத்துள்ளது. சிம்மவர்மனின் பள்ளன் கோயில் செப்பேடு காஞ்சிபுரம் அருகே உள்ள திருப்பருத்திக்குன்றம் கோயிலுக்குத் தானம் அளித்துள்ள செய்தியைக் கூறுகிறது. அப்போதிருந்த வர்த்தமானேஸ்வரர்

கோயிலின் வழிபாட்டிற்காக வெண்குன்றக் கோட்டத்து பெருநகர் நாட்டு அமண் சேர்க்கை என்ற ஊரினையும், தாமர் என்ற ஊரில் பதினாறரைப்பட்டி நிலமும் பள்ளிச் சந்தமாக அளித்துள்ள செய்தியை அச்செப்பேடு கூறுகிறது. மேலும் இந்நிலங்கள் நந்தி சங்கத்தைச் சார்ந்த வஜ்ர நந்திக் குரவரின் பொறுப்பில் கொடுக்கப் பட்டுள்ளன.

சிம்மவிஷ்ணு (கி.பி. 555-590)

முதலாம் மகேந்திரவர்மன் தான் இயற்றிய 'மத்தவிலாசப் பிரகசனம்' எனும் நாடக நூலில் 'பல்லவ குலம் என்ற உலகைத் தாங்கும் குலமலை போன்றவன்; நுகர்ச்சிப் பொருட்கள் அனைத்தை யும் உடையவன்; பல நாடுகளை வென்றவன்; வீரத்தில் இந்திரனையும், செல்வத்தில் குபேரனையும், அரசர்களுள் சிங்கத்தையும் போன்றவன்' எனப் பலவாறாகத் தனது தந்தையான சிம்மவிஷ்ணுவின் குணநலன்களைப் புகழ்ந்துள்ளான்.

சிம்மவிஷ்ணுவின் காலத்திய கல்வெட்டுகள் அனைத்தும் நடுகல் கல்வெட்டுகளாகும். இவை தமிழ் மொழியில் வட்டெழுத்து களாக எழுதப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் தருமபுரி மற்றும் செங்கம் பகுதிகளிலே கிடைத்துள்ளன. செங்கம் பகுதியில் கிடைத்துள்ள கல்வெட்டு இவனது 33-வது ஆட்சியாண்டைச் சார்ந்ததாகும். எனவே இவன் 33 ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளான்.

சிம்மவிஷ்ணுவுக்குப் பின் அவனது தம்பி பீமவர்மன் முடிசூட்டப்பெற்றான் என்றும் பீமவர்மனுக்குப் பின் அவனின் மகன் புத்தவர்மன் பல்லவ அரசனாக விளங்கினான் என்றும் காசாக்குடிச் செப்பேடு கூறுகிறது. இச்செய்தி வேறெந்த சாசனத்திலும் காணப்பட வில்லை. எனவே முதலாம் மகேந்திரவர்மன் முடிசூடப் பெறுவதற்கு முன்பு இவர்கள் தொண்டை மண்டலத்தை ஆட்சி செய்திருக்கலாம் அல்லது பல்லவ நாட்டின் ஒரு பகுதியை ஆட்சி செய்திருக்கலாம்.

முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 590 – 630)

பல்லவ அரசர்களில் மிகவும் பெருமையும் புகழும் வாய்ந்த முதல் அரசன் முதலாம் மகேந்திரவர்மனே. பல்லவ மரபில் மகேந்திரவர்மன் என்ற பெயருடைய முதல் அரசன் இவனே.

மகேந்திரவர்மனின் தலைநகரம் காஞ்சிபுரம். மகாகவி காளிதாசர் காஞ்சி மாநகரை 'நகரேஷு காஞ்சி' எனப் புகழ்கிறார். மகேந்திர வர்மனுடைய மனைவியருள் ஒருத்தி புவனமகாதேவி. இவ்விருவருக்கும் பிறந்த மகனே நரசிம்மவர்மன் எனும் மாமல்ல னாவான். இம் மாமல்லனே மாமல்லபுரம் நகரை உருவாக்கியவன்.

முதலாம் மகேந்திரவர்மன் மிகச்சிறந்த வீரன், ஆரிய வர்த்தத்தை ஒரு குடையின் கீழ்க் கொண்டு வந்த ஹர்ஷ சக்கரவர்த்தியை தோற்கடித்த சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி காஞ்சியின் மீது படையெடுத்து வந்தபோது காஞ்சியின் எல்லைக்கருகே உள்ள புள்ளலூரில் முதலாம் மகேந்திரவர்மன் அவனைத் தோற்கடித்து விரட்டியடித்தான்.

இவனது காலத்தில் பல்லவ அரசு வடக்கே வடபெண்ணை யாற்றிலிருந்து தெற்கே புதுக்கோட்டைப் பகுதி வரை இருந்தது. தற்போதைய நெல்லூர் மாவட்டத்தின் தென்பகுதி, சித்தூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாகும்.

மகேந்திரன் என்பது அவனது இயற்பெயராகும். போத்தரையன் என்பது பல்லவ மன்னர்களின் பட்டப்பெயராகும். மகேந்திர போத்தரையன் என்றே பல கல்வெட்டுகளில் தன்னைக் கூறிக்கொள் கிறான். மகேந்திரன் என்பது தவிர, மகேந்திரவர்மன், மகேந்திர விக்ரமவர்மன், மகேந்திர போத்தரசன் என பல பெயர்களில் அவன் அழைக்கப்படுகிறான். இதுமட்டுமின்றி இவனுக்குப் பல சிறப்புப் பெயர்கள் உள்ளன. அவையாவன : மகாப்பிடுகு, லலிதாங்குரன், குணபரன், மத்தவிலாசன், அவனிபாஜனன், சத்யசந்தன், புருஷோத்தமன், சத்துருமல்லன், சங்கீரணஜாதி, சித்திரக்காரப்புலி, சேத்தாகாரி, விசித்ரசித்தன், அலுப்தகாமன், கலகப்பிரியன், அபிமுகன், நரேந்திர போத்தரையன் என்பனவாகும்.

மகேந்திரவர்மன் பரிவாதினி என்கிற வீணையை மீட்டு வதில் வல்லவனாக விளங்கினான். இவனுடைய குடுமியான் மலைக் கல்வெட்டில் ஏராளமான இசைக் குறிப்புகள் காணப் படுவதால், இவன் சிறந்த இசைக் கலைஞனாக இருந்தான் எனலாம்.

மேலும் சங்கீரணம் என்ற ஒருவகைத் தாளத்தை அமைத்தவன் இவன். அதனால் இவன் 'சங்கீரண ஜாதி' என அழைக்கப்பட்டான்.

மகேந்திரவர்மன் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் செங்கற்களால் கோயிலையும் அதன்முன் மண்டபத்தைக் கருங்கல்லாலும் அமைத்தான் என்று கருதப்படுகிறது. அத்தூணில் இவனுடைய சிறப்புப் பெயர்கள் அபிமுக, சித்ரகார புலி போன்றவை பொறிக்கப்பட்டுள்ளன. இத்தூண்கள் தற்போது சென்னை அரசு அருங்காட்சியக வாயிலில் நடப்பட்டுள்ளன.

ஒரு பாறையைக் குடைந்து கோயிலை உருவாக்கும் பழக்கத்தைத் வடதமிழகத்தில் தோற்றுவித்தவன் மகேந்திர வர்மன் தான். தமிழகத்தில் மண்டகப்பட்டு குடைவரையே இவன் எடுத்த முதல் குடைவரைக் கோயிலாகும். இக்குடைவரையில் உள்ள கல்வெட்டு இக்கோயிலை செங்கல், மரம், உலோகம், சுண்ணாம்பு இல்லாமல் பிரம்மா, ஈஸ்வரன், விஷ்ணு ஆகியவர்களுக்கு விசித்திர சித்தன் என்னும் அரசனால் அமைக்கப்பட்டது எனத் தெரிவிக்கிறது.

மகேந்திரவர்மனின் குடைவரைகள் பெரும்பாலும் மலையின் உச்சியிலோ அடிவாரத்திலோ இல்லாமல் மலைச்சரிவில் நடு மலையில் குடையப் பெற்றிருக்கும். குடைவரைத் தூண்களில் இவனது பட்டப் பெயர்கள் பொறிக்கப்பட்டிருக்கும். கருவறையின் முன் வாயிற்காவலர் சிலைகள் காணப்படும்.

மகேந்திரவர்மன் கல்வெட்டில் வடமொழி கிரந்த எழுத்திலும் தமிழ்மொழி, தமிழ் எழுத்திலும் காணப்படுகின்றன. காஞ்சிபுரம் மாவட்டம் வல்லம் குடைவரையில் காணப்படும் மகேந்திரனின் கல்வெட்டு வருமாறு :

பகாப்பிடுகு லலிதாங்குரன் சத்ருமல்லன் குணபரன்
மயெந்திரப் பொத்தரெசரு அடியான்
வயந்தப்பிரி அரெசரு மகன் கந்தசெனன்
செய்வித்த தெவகுலம்

மேலும், இம்மன்னன் காலத்திய நடுகல் கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ் மொழியில் வட்டெழுத்தில் காணப்படுகின்றன.

மகேந்திரன் இசை, சிற்ப, சித்திரங்களில் மட்டுமின்றி நாடகத் துறையிலும் புலமை பெற்றவன். அவன் எழுதிய மத்தவிலாசப் பிரகசனம் என்ற நூலே அதற்குச் சான்றாகும். இந்நாடகம் கபாலிக, புத்தசமயத்தை ஆதரிக்கும் சிலரின் கபட ஆசைகளை நையாண்டி செய்யும் வண்ணம் இயற்றப்பட்டுள்ளது. இந் நாடகம் சிற்பமாக வடிக்கப்பட்டு காஞ்சிபுரம் தான் தோன்றீசுவரர் கோயில் சுவர்களில் காணப்படுகின்றன.

முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி. 630-668)

முதலாம் மகேந்திரவர்மனின் மகன் 'மாமல்லன்' என்ற சிறப்புப் பெயர் பெற்றவன். மாமல்லபுரம் நகரம் இவனால் நிறுவப்பட்டதாகும். முதலாம் நரசிம்மவர்மனுக்கு மாமல்லன், ஸ்ரீபரன், ஸ்ரீமேகன், ஸ்ரீநிதி, இரணஜயன் அத்யந்தகாமன், போன்ற விருதுப்பெயர்கள் கல்வெட்டுகளில் அறியலாம்.

இவனது பெயரைக் கொண்ட மாமல்லபுரம் துறைமுகம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் சிறந்து விளங்கியுள்ளது. இவனது காலத்திற்கு பின் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் (730-795) வாழ்ந்த திருமங்கையாழ்வார் தனது பாடலில்

புலங்கொள் நிதிக் குவையொடு
புழைக் கைம்மாக் களிற்றினமும்
நலங்கொள் நவமணிக் குவையும்
சுமந்தொரங்கும் நான்றொசிந்து
கலங்களியங்கும் மல்லைக்
கடலமலைத் தலசயனம்
வலங்கொள் மனத்தாரவரை
வலங்கொள் என் மடநெஞ்சே

என்று மாமல்லபுரம் சிறந்த துறைமுகமாக் இருந்துள்ளதைத் தெளிவாகக் கூறுகிறார். இவனது படைத்தலைவராக இருந்த 'பரஞ்சோதி' என்பவரே நாயன்மார்களில் ஒருவரான 'சிறுத்தொண்டர்' எனச் சிறப்புப் பெற்ற சிவத் தொண்டர் ஆவார்.

முதலாம் மகேந்திரவர்மன் ஆட்சிக்காலத்தில் பல்லவ நாட்டின் மீது படையெடுத்த இரண்டாம் புலிகேசி புள்ளலூரில் தோற்கடிக்கப் பட்டு விரட்டியடிக்கப்பட்டான். பின்னர் இரண்டாவது முறையாக நரசிம்மவர்மன்மீது படையெடுத்து வந்த இரண்டாம் புலிகேசியின் படைகள் பரியளம், மணிமங்கலம், சூரமாரம் ஆகிய இடங்களில் தோற்கடிக்கப்பட்டது.

இதன் பின்னர் நரசிம்மவர்மனுடைய 18-ஆம் ஆட்சி யாண்டில் (கி.பி. 642-643) மேலைச் சாளுக்கியத் தலைநகரான வாதாபியின் மீது படையெடுத்துச் சாளுக்கிய மன்னான இரண்டாம் புலிகேசியை வென்றான். இம்மாபெரும் வெற்றியின் காரணமாக நரசிம்மவர்மன் 'வாதாபி கொண்ட நரசிம்மவர்மன்' என்று அழைக்கப்பெறுகிறான். மேலும் 'வாதாபி கொண்ட நரசிங்க போத்தரையன்' என்ற பட்டமும் பெற்றிருந்ததைத் திருக்கழுக் குன்றத்திலுள்ள இம்மன்னனின் தமிழ்க் கல்வெட்டும் தெரிவிக்கிறது.

இலங்கை நாட்டு இளவரசனாகிய மானவர்மனுக்கு உதவி செய்வதற்காகக் கடற்படையொன்றினை அனுப்பி மீண்டும் மானவர் மனை அரசனாக்கினான் என்பதைக் காசாக்குடிச் செப்பேடு கூறுகிறது.

இவனது ஆட்சிக் காலத்தில் யுவான் சுவாங் தமிழகத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ளான். தனது நூலில் தக்காணத்தில் ஆட்சி புரிந்த இரண்டாம் புலிகேசி வடநாட்டுப் பேரரசனாகிய ஹர்ஷவர்த்த னரைப் போரில் முறியடித்த செய்தியைக் கூறுகிறான். காஞ்சிபுரத்தைக் 'காஞ்சிபுலோ' என்று குறித்துள்ளான். மேலும் புத்த விகாரங்கள் இருந்தன என்றும் புத்த சமய அறிஞர் தருமபாலர் காஞ்சியைச் சேர்ந்தவர் என்ற குறிப்புகளும் காணப்படுகின்றன.

இரண்டாம் மகேந்திரவர்மன் (கி.பி. 660-670)

மாமல்லனின் ஆட்சிக்குப் பின் இவன் இரண்டு ஆண்டுகளே ஆட்சிக் கட்டிலில் இருந்தான். காஞ்சியில் இருந்த கடிகையைச் சீர்த்திருத்தினான். இரண்டாம் புலிகேசியின் மகன் விக்கிரமாத்தித்தன் காஞ்சிக்குப் அடிக்கடி படையெடுத்து இரண்டாம் மகேந்திரனுக்குத் தொல்லை கொடுத்தான். இவர்களுக்கிடையே நடந்த போர்களில் ஒன்றில் இவன் இறந்திருக்கவேண்டுமென்று வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். இவன் ஆட்சிக் கால நடுகல் கல்வெட்டுகள் இரண்டு

தருமபுரி மற்றும் செங்கம் பகுதியில் கிடைத்துள்ளன. இந்த நடுகல் கல்வெட்டுகள் வட்டெழுத்தில் தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ளன.

முதலாம் பரமேசுவரவர்மன் (கி.பி. 670 – 700)

இரண்டாம் மகேந்திரவர்மனுக்குப் பிறகு அவனுடைய மகன் முதலாம் பரமேசுவரவர்மன் பல்லவ அரசனாகப் பொறுப் பேற்று கி.பி. 670 முதல் 700 வரை ஆட்சி செய்தான். இரண்டாம் புலிகேசியின் மகனான முதலாம் விக்கிரமாதித்தன் தெற்கே காவிரி வரை தன் படைகளுடன் முன்னேறினான். எனினும் பரமேசுவரவர்மன் தன் படைகளைத் திரட்டி பெருவளநல்லூரில் நடைபெற்ற போரில் விக்கிரமாதித்தனைத் தோற்கடித்தான். வாதாபி வரை துரத்தி அந்நகரைக் கைப்பற்றினான். வாதாபி விக்கிரமாதித்தனின் பட்டப் பெயரான இரணரசிகன் என்ற பெயரால் இந்நகர் இரணரசிகபுரம் என்றழைக்கப்பட்டது. இரணரசிகபுரம் எனும் வாதாபியை வெற்றி கொண்டதால் முதலாம் பரமேசுவரவர்மன் தன்னை இரணரசிகபுரத்தைக் கைப்பற்றியவன் எனப் பட்டம் கொண்டான்.

முதலாம் பரமேசுவரவர்மன் கூரம் எனும் ஊரில் வித்யாவினீத பல்லவ பரமேஸ்வர கிருஹம் என்ற சிவன் கோயிலை எடுப்பித்து அதற்குப் பரமேஸ்வர மங்கலம் எனும் சிற்றூரைத் தானமளித்துள்ள செய்தியை அவனால் வெளியிடப் பட்ட கூரம் செப்பேடு கூறுகிறது.

இரண்டாம் நரசிம்மவர்மன் (இராஜசிம்மன்) (கி.பி. 695–728)

இராஜசிம்மன் என்ற விருதுப் பெயருடைய இரண்டாம் நரசிம்மவர்மன் கி.பி. 695 முதல் 728 வரை ஆட்சி செய்துள்ளான். இவனுடைய கல்வெட்டுகள் பெரும்பாலும் கிரந்த எழுத்துடன் கூடிய வடமொழியிலே காணப்படுகின்றன. இவனது காலத்தில் தான் தமிழகத்தில் சமஸ்கிருத மொழியைத் தேவநாகரி எழுத்தில் எழுதும் வழக்கம் உண்டாகியது. மேலும் தருமபுரிப் பகுதியில் கிடைக்கும் தமிழ் மொழியிலமைந்த நடுகல் கல்வெட்டுகள் வட்டெழுத்தில் எழுதப்பட்டுள்ளன. கடல் கடந்து லட்சத்தீவு முதலிய தீவுகளையும் இவன் ஆட்சி செய்துள்ளான்.

இவனது காலத்தில் பல்லவ நாடு பேரமைதியுடன் காணப் பட்டது. சிறந்த சிவபக்தனான இவன் சிவசூடாமணி என்று பட்டம் பூண்டவன். சைவ சித்தாந்தத் துறையில் பல நூல்களைக்

கண்டறிந்தவன். சுந்தரமூர்த்தி நாயனார் தம்முடைய திருத் தொண்டடத் தொகையில் ''கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன்'' என சமகாலத்தவனான இராஜசிம்மனைக் குறிப்பிட்டுள்ளார்.

மாமல்லையில் காண்கிற கலைப்படைப்புகளைத் தோற்றுவித்தவன் இவனே என்று தொல்லியல் அறிஞர் முனைவர் இரா. நாகசாமி எடுத் துரைக்கிறார். காஞ்சி கைலாசநாதர் கோயில், பனமலை, வாயலூர், திருப்போரூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள கோயில்களை எழுப்பியவன் இவனே. மாமல்லை, காஞ்சி கயிலாயநாதர், பனமலை ஆகிய கோயில்களில் இவனது பல பட்டப் பெயர்கள் காணப்படு கின்றன. மேலும் வாயலூர் கைலாச நாதர் கோயில் தூணில் இவனது மூதாதையர்களின் பெயர்ப் பட்டியல் பொறிக்கப்பட்டுள்ளன. சீன மன்னனுக்கு நாகப்பட்டினத்தில் புத்தப் பள்ளியைக் கட்ட அனுமதியளித்துள்ளான். முதலாம் நரசிம்மன் போன்று இவனும் 'மாமல்லன்' என்ற பட்டம் பெற்றிருந்தான். வேலூர்ப் பாளையச் செப்பேடுகளில் ''மகேந்திரனையொத்த இராசசிம்மன் சந்திரமௌலி யாகிய சிவபெருமானுக்குக் கயிலாய மலையையொத்த கற்கோயிலை அமைத்தான்'' என்ற குறிப்பில் காஞ்சி கயிலாசநாதர் கோயில் அமைத்தவன் இவனென்ற செய்தியைக் கூறுகிற்து. இக் கைலாச நாதர் கோயில் தின்னனூரில் (திருநின்றவூர்) வாழ்ந்த நாயன்மார்களில் ஒருவரான பூசலார் நாயனார் புராணத்துடன் தொடர்புடையது.

காஞ்சியில் உள்ள மதங்கேஸ்வரர், ஐராவதேஸ்வரர், பிறவாதானீஸ் வரர், இறவாதனீஸ்வரர் கோயில்களும் இவனுடைய காலத்தவையாகும்.

இராஜசிம்மன் ரணஜயன், ரணவிக்கிரமன், அபராஜிதன், அதிரணசண்டன், அரிமர்த்தனன், பார்த்தவிக்கிரமன், சித்திர கார்முகன், சங்கிரமராமா, காலகாலன் என்ற விருதுப்பெயர்களைக் கொண்டிருந்தான்.

இவனது அவையில் இருந்த தண்டி என்ற வடமொழிக் கவிஞர் 'அவந்தி சுந்தரிகதா' 'அவந்தி சுந்தரிகதாசாரம்' ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இந்நூலில் மாமல்லபுரத்தைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவர் வடமொழிக் காப்பியங்களுக்கு எழுதிய அலங்கார நூலே தமிழில் உள்ள 'தண்டியலங்காரம்' என்னும் நூலுக்கு முதல் நூலாகும்.

மூன்றாம் மகேந்திரவர்மன் (கி.பி. 720 – 28)

இராஜசிம்மனுடைய முதல் மகனாகிய மூன்றாம் மகேந்திர வர்மன் சிறிது காலமே இருந்தான். இவன் காஞ்சி கைலாசநாதர் கோயில் முகமண்டபத்தின் முன் உள்ள சிறிய சிவன் கோயிலை 'ஸ்ரீ மகேந்திர வர்மேசுவர கிருஹம்' என்னும் தன் பெயரிலேயே எடுத்துள்ளான். மேலும் காஞ்சி ஒக்கப் பிறந்தான் குளத்தெருவின் வடபுறத்தில் இம்மன்னனின் கல்வெட்டொன்று காணப்படுகிறது.

இரண்டாம் பரமேஸ்வரவர்மன் (கி.பி. 728 – 31)

இராஜசிம்மனின் காலத்திற்கு பிறகு இவன் மூன்று ஆண்டுகளே ஆட்சி செய்தான். திருவதிகை வீரட்டானேசுவரர் கோயிலில் இவனது மூன்றாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுத் தவிர வேறெந்தக் கல்வெட்டுகளும் கிடைக்காத நிலையில் மூன்றாண்டு களே ஆட்சி புரிந்திருக்க வேண்டும். சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் காஞ்சி மீது படையெடுத்து பரமேஸ்வரவர்மனைத் தோற்கடித்துத் திறை பெற்றுச் சென்றான். விக்கிரமாதித்தனுக்கு உதவி புரிந்த கங்கமன்னன் எரியப்பா மீது படையெடுத்து நடத்திய போரில் இரண்டாம் பரமேஸ்வரவர்மன் உயிரிழந்தான்.

இரண்டாம் நந்திவர்மன் (கி.பி. 731 – 796)

சிம்மவர்மனின் (கி.பி. 550) இரு மகன்களுள் சிம்மவிஷ்ணு கி.பி. 557–550 வரை ஆட்சி செலுத்தினான். சிம்மவர்னின் இரண்டாவது மகனும் சிம்மவிஷ்ணுவினின் சகோதரனுமான பீமவர்மன் அதேசமயத்தில் பல்லவ நாட்டின் ஒரு பகுதியில் ஆட்சியை மேற்கொண்டான். எனினும் அவனது மரபினர் தொடர்ந்து ஆட்சி செய்ய முடியவில்லை. சிம்மவர்னின் மரபினரே தொடர்ந்து ஆட்சி புரிந்துவந்தனர். இம்மரபில் இரண்டாம் பரமேஸ்வர வர்மனுக்குப் பிறகு இவனுக்கு வாரிசு இல்லாததால் சிம்மவர்மனின் இரண்டாம் மகனான பீமவர்மனின் வம்சத்தவனான இரண்டாம் நந்திவர்மன் என்பவன் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தான்.

பீமவர்மனின் வழிவந்த ஆறாவது தலைமுறையினன் இவன். 'பல்லவ மல்லன்' என்றபட்டம் பூண்டிருந்தவன். தனது 12-ஆம் அகவையில் ஆட்சிக் கட்டிலில் ஏறி 65 ஆண்டுகள் ஆட்சி செய்தான்.

மாமல்லபுரத்தில் இவனது 65-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். சாளுக்கியர், பாண்டியர், கங்கர், இராட்டிரகூடர் ஆகிய மன்னர்களுடன் பலமுறை போரிட்டவன். காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலை எடுப்பித்தவன் இவனே. இக்கோயில் திருச்சுற்றுச் சுவர்களில் இவனது மூதாதையர் பற்றிய வரலாறு புடைச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. வைகுந்தப் பெருமாள் கோயில் மூன்று தளங்களுடன் கூடியது. காசாக்குடிச் செப்பேடு இவனை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 'பரமேஸ்வர போத்தன்' என்றழைக்கிறது. பரமேஸ்வர போத்தன் என்ற இவனது பெயரால் வைகுந்தப் பெருமாள் கோயில் 'பரமேஸ்வர விண்ணகரம்' என்றழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

உத்திரமேரூர் சுந்தரவரதர் கோயிலையும் இவன் கட்டியுள்ளான். பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான திருமங்கை ஆழ்வார் இம்மன்னனின் சமகாலத்தவர். திருமங்கையாழ்வார் மாமல்லை கடற்கரை ஜலசயனப் பெருமாள் மீது இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். இப்பாடல்கள் மாமல்லபுரத்தினைக் 'கடல் மல்லை' என்று குறிப்பிட்டுள்ளன. இவனைத் 'தொண்டையர் கோன்' என்றும் சிறப்பித்துள்ளார்.

திருப்புலிவனம், காஞ்சி முக்தேஸ்வரர், திரிபுராந்தகம், திருவிடந்தை ஆகிய கோயில்களை எடுப்பித்துள்ளான். இவன் 'விடேல் விடுகு' என்ற பெயரில் ஆணைகளை வெளியிட்டான்.

தந்திவர்மன் (கி.பி. 796 - 847)

தந்திவர்மன் தனது தந்தையான இரண்டாம் நந்திவர்மனுக்குப் பின் கி.பி. 796-ல் அரியணை ஏறினான். இரண்டாம் நந்திவர்மன் இராட்டிரகூட மன்னன் தந்திதுர்க்கனுடைய மகள் ரேவா என்பவளைத் திருமணம் செய்து கொண்டான். ஆதலால் தந்திதுர்க்கனின் பெயரால் தந்திவர்மன் என இம்மன்னனுக்குப் பெயரிடப்பட்டுள்ளது. கி.பி. 804-ஆம் ஆண்டு இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கோவிந்தனிடம் தோல்வியடைந்து, இராட்டிரகூடர்களுக்குக் கப்பம் கட்டி ஆட்சி செய்தான். கி.பி. 814-ல் மூன்றாம் கோவிந்தன் இறப்பிற்குப் பின் இராட்டிரகூடர்களின் பிடியிலிருந்து விலகித் தன்னாட்சியுரிமை அடைந்தான். இருப்பினும் தந்திவர்மனுடைய 21-ஆம் ஆட்சியாண்டு முதல் 49-ஆம் ஆட்சியாண்டு வரையான

கல்வெட்டுகள் ஏதும் தொண்டை மண்டலத்தில் காணப்பட வில்லை. ஏனெனில் தெலுங்குச் சோழனான மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் எனும் ஸ்ரீகண்ட சோழன் என்பவன் பாண்டிய மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனுடைய உதவியைப் பெற்றுப் பல்லவ நாட்டை தந்திவர்மனிடமிருந்து கைப்பற்றி ஆட்சி செய்தார் என வரலாற்று அறிஞர் டி.வி. மகாலிங்கம் கூறியுள்ளார்.

காஞ்சியைக் கைப்பற்றிய பின் தனக்கு அடிபணிந்த பல்லவ மரபைச் சார்ந்த 'அபிமானன்' என்பவனைத் தனது ஆளுநராக நியமித்தான். ஏனெனில் அபிமான சித்தியின் 28-ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலில் காணப்படுகிறது. தந்திவர்மனுடைய 49-ஆம் ஆட்சியாண்டில் அவனது மகன் மூன்றாம் நந்திவர்மன், பாண்டிய மன்னன் இரண்டாம் வரகுணன், ஸ்ரீகண்டச் சோழன் மற்றும் அபிமான சித்தி ஆகியோரைக் கொண்ட படையை எதிர்த்துத் தெள்ளாறு என்ற ஊரில் போரிட்டு வெற்றி கொண்டு மீண்டும் காஞ்சியைக் கைப்பற்றியுள்ளான். தந்திவர்மன் 'வயிரமேகன்' என்ற விருதுப்பெயரைப் பெற்றிருந்தான். இவனது காலத்தில் வாழ்ந்த திருமங்கையாழ்வாரும் இவனை 'வயிர மேகன்' என அழைத்துள்ளார். திருவெள்ளறை கோயில் அருகே 'ஸ்வஸ்திக' வடிவக் கிணற்றைத் தந்திவர்மனின் அதிகாரி கம்பன் அரையன் என்பவன் அமைத்துள்ளான்.

மூன்றாம் நந்திவர்மன் (கி.பி. 846 - 869)

தெள்ளாற்றில் பாண்டியனை வெற்றி கொண்டதால் 'தெள்ளாறு எறிந்த நந்தி' எனப் பட்டம் பெற்றான். வெறியலூர், கடம்பூர், பழையாறு, குறுக்கோட்டை, வெள்ளாறு ஆகிய பல போர்களில் பாண்டியனை வெற்றிக் கொண்டான். நந்திக் கலம்பகத்தில் இவனது தெள்ளாற்றுப் போர் புகழ்ந்து கூறப்பட்டு உள்ளது. பாரத வெண்பா 'தெள்ளாற்றில் வென்றோன்' எனப் புகழ் கிறது. 'கடற்படை அவனி நாரணன்' என்ற பட்டம் பெற்றிருந்தான். காவிரிப்பூம்பட்டினம் இவனின் ஆட்சிக்குட் பட்டிருந்தது. இவனது காலத்தில் பூம்புகாரிலிருந்து பல வணிகர்கள் தாய்லாந்து என வழங்கும் சயாம் நாட்டிலுள்ள 'தாக்குவா பா' எனும் இடத்தில் குடியேறினர். அங்கு கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டொன்று கிடைத்துள்ளது. அக்கல்வெட்டில் 'அவனி

நாரணம்' என்ற ஏரியை நாங்கூர்வேள்' என்பான் அமைத்து மணிக்கிராமத்தார் (வணிகக் குழுமத்தினர்) பாதுகாப்பில் வைத்தான் எனக் கூறப்பட்டுள்ளது. அங்கு திருமால் கோயில் ஒன்றும் எழுப்பப் பட்டுள்ளது.

இவன் 'காவிரிவள நாடன்' என்று அழைக்கப்பட்டதிலிருந்து சோழநாடு முழுவதும் இவனது ஆட்சிக்குட்பட்டிருந்தது என்பதை அறியமுடிகிறது.

இவன் 'கடல் மல்லைப் புரவலன்', 'மல்லைக் காவலன்', 'மல்லை வேந்தன்', 'மல்லையர் கோன்' என்ற பல பட்டப் பெயர்களில் புகழப்படுவதன் மூலம் மாமல்லபுரம் சிறப்புற்றிருந்ததை அறியலாம்.

காஞ்சி உலகளந்த பெருமாள் கோயில் கல்வெட்டு இம்மன்னனின் ஆட்சி சிறப்பைப் பற்றி கூறுகிறது. இம்மன்னனின் மனைவி தர்மமகாதேவியின் பெயரால் 'தர்மமகா தேவீஸ்வரம்' என்ற கோயில் எடுக்கப்பட்டது. தற்போது இக் கோயில் 'முக்தேஸ்வரர்' என அழைக்கப்படுகிறது.

நிருபதுங்கவர்மன் (கி.பி. 865 – 906)

தெள்ளாறு எறிந்த நந்திவர்மனுக்கு சங்கா, மாறம்பாவை என இரு மனைவியர் இருந்தனர். தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை கண்டுபிடித்த வேலஞ்சேரி செப்புபட்டயத்தில் கம்பவர்மனின் மகன் அபராஜிதன் என்பது தெரியவருகிறது. நிருபதுங்கவர்மனுக்கும் அபராஜிதவர்மனுக்கும் இடையே பல்லவ நாட்டின் அரசுரிமைப் போராட்டம் நடைபெற்றது. நிருபதுங்கனுக்குப் பாண்டிய மன்னன் இரண்டாம் வரகுணனும் அபராஜிதனுக்குக் கங்க மன்னன் முதலாம் பிருதிவிபதியும், ஆதித்தச் சோழனும் உதவி செய்தனர். கி.பி. 895-ல் திருப்புறம்பியத்தில் நடைபெற்ற போரில் அபிராஜிதவர்மன் வெற்றிகொண்டு பல்லவ நாட்டின் அரசனான். இதனை ஆம்பூரில் கிடைத்துள்ள நிருபதுங்கவர்மனின் 26-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டும், கங்க மன்னர் பிருதிவியின் உதயேந்திரம் செப்பேடும் உறுதிப்படுத்தியுள்ளன.

அபராஜிதவர்மன் (கி.பி. 870 - 890)

கி.பி. 895-இல் திருப்புறம்பியம் போரில் வெற்றிகண்ட அபராஜிதவர்மன் 18 ஆண்டுகள் ஆட்சி செய்தான். ஆனால் தொண்டை மண்டலத்தின் வடபகுதியில் அபராஜிதவர்மனின் கல்வெட்டுகளும், தென்பகுதியில் ஆதித்தச் சோழனின் கல்வெட்டு களும் காணப்படுவதிலிருந்து தொண்டை மண்டலத்தில் ஆதித்தனின் ஆதிக்கம் இருந்துள்ளமை அறியமுடிகிறது. பின் அபராஜிதனை வென்று தொண்டை மண்டலத்தின் வடபகுதியைச் சோழப் பேரரசுடன் இணைத்துக் கொண்டான்.

சோழர்

இந்திய வரலாற்றில் சோழப் பேரரசின் பங்கு மிகச் சிறப்பான தாகும். சோழர் வரலாற்றை அறிந்து கொள்ள கல்வெட்டுகள், செப்பேடுகள், காசுகள் மற்றும் அக்கால கலைச் சிற்பங்கள் ஆகியவை உதவி புரிகின்றன.

சோழர் வரலாறு உலக வரலாற்றில் ஓர் உன்னத இடத்தைப் பெற்றது. ஏனெனில் ஊராட்சியினை நிருவகிக்க குடவோலை முறையால் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ்வூராட்சி முறையைப் பற்றிக் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர்க் கல்வெட்டுகள் விரிவாக எடுத்துரைக்கின்றன.

சோழர் காலத்தில் ஊர் நிருவாகம், பெண்களுக்கான உரிமை, சொத்துரிமை, அலுவலர்கள் நியமனம், மருத்துவம், வணிகம் ஆகியவை சிறந்திருந்தன.

விஜயாலய சோழன் (கி.பி. 850 – 871)

சோழர் அரசை நிறுவியவன் இவனே. ''தொண்ணூற்று ஆறு புண்கள் மார்பிலே கொண்ட வீரன்'' என மூவருலா இவனைப் புகழ்கிறது. தஞ்சையில் நிசும்பசூதனி கோயில். புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலையில் விஜயாலய சோழீச்சுரம் ஆகிய கோயில்களை எடுப்பித்தான்.

முதலாம் ஆதித்த சோழன் (871-907)

'தொண்டை நாடு பாவின சோழன்' என இவனது தில்லை தானம் கல்வெட்டுக் கூறுகிறது. பல்லவ மன்னன் அபராஜிதனுக்குப் பாண்டியனுக்கு எதிரான போரில் உதவியளித்ததால் சோழ

மண்டலத்தைப் பெற்று ஆட்சி செய்தான். பின்னர் அபராஜிதனைத் தோற்கடித்துத் தொண்டை மண்டலத்தையும் கைப்பற்றினான். யானை மீதிருந்த பல்லவ மன்னனை ஆதித்தன் தோற்கடித்தான் என்று ஆதித்தனின் கன்னியாகுமரி கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

இவனது 23-ஆம் ஆட்சியாண்டிற்குப் பிற்பட்ட கல்வெட்டுகள் மிகுதியாகத் தொண்டை மண்டலப் பகுதியில் கிடைக்கின்றன. திருக்கழுக்குன்றம் பக்தவச்சேலஸ்வரர் கோயில் ஆபரணக் கொட்டிலான துங்கானை வடிவில் அமைந்துள்ளப் பகுதியே முன்பு இவனால் எழுப்பப்பட்டக் கோயிலாகும். காவிரிக் கரை இருபுறமும் பல கோயில்கள் கட்டினான் என்று அன்பில் செப்பேடு கூறுகின்றது.

முதலாம் பராந்த சோழன் (கி.பி. 907-955)

முற்காலச் சோழர்களில் மிகச் சிறந்த வெற்றி வீரனாக முதலாம் பராந்தகன் விளங்கினான். இவன் பாண்டியரை வென்று மதுரையை அழித்ததால் 'மதுராந்தகன்' என்றும், இராட்டிரகூட மன்னனான இரண்டாம் கிருஷ்ணனை வென்றதால் 'வீர சோழன்' என்றும், கடல் கடந்து சென்று சிங்கள நாட்டை வென்றதால் 'சிங்களாந்தகன்' என்றும் பலவாறு புகழப்படுகிறான். இவன் தனது மூன்றாவது ஆட்சியாண்டில் மதுரையைக் கைப்பற்றியதால் 'மதுரை கொண்ட' என்ற பட்டத்தையும் 37 ஆம் ஆண்டில் ஈழத்தை வென்றதால் 'மதுரையும் ஈழமுங் கொண்ட' என்ற பட்டத்தையும் பெற்றுள்ளான்.

அந்தணர்களுக்கு அனேக சதுர்வேதி மங்கலங்களை வீர நாராயணம் என்ற பெயரில் அமைத்துக் கொடுத்துள்ளான். அவற்றுள் சிறந்தது வீரநாராயணச் சதுர்வேதிமங்கலமாகும். தற்போது அவ்வூர் காட்டுமன்னார்குடி என்றழைக்கப்படுகிறது. அவ்வூரின் அருகே உள்ள வீராணம் ஏரி அவனது பெயரால் 'பராந்தகன் வீர நாராயணன் ஏரி', என அழைக்கப்பட்ட சிறப்பிற்குரியது.

விக்கிரம சோழனுலா இவன் தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன்வேய்ந்ததை

''கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றங்
காதலாற் பொன் வேய்ந்த காவலனும்''

என்ற பாடல் வரிகளால் வர்ணிக்கின்றது. இதனால் இவன் 'கோயில்

பொன்வேய்ந்த பெருமாள்' என அழைக்கப்பட்டான். இவனது காலம் முதலே தில்லை நடராஜப் பெருமான் சோழர்களின் குலதெய்வமாகக் கொள்ளப்பட்டார். சிவபெருமானின் பாதகமலங்களில் படியும் தேனீயாகப் பராந்தகன் விளங்கினான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடு தெரிவிக்கின்றது.

நெல்லூர்ப் பகுதியை ஆண்ட பாணர்கள், வைதும்பர்கள் ஆகிய சிற்றரசர்களோடு போரிட்டுத் தன் வடஎல்லையை விரிவுபடுத்தினான். இக்குறுநில மன்னர்கள் இராட்டிரகூட மன்னனான மூன்றாம் கிருஷ்ணனின் உதவியை நாடினர். பின்னர் மூன்றாம் கிருஷ்ணன் சோழநாட்டின் மீது படையெடுத்தான் கி.பி. 949-இல் தக்கோலம் என்ற இடத்தில் இப்போர் நடைபெற்றது. பராந்தகனின் மகன் இராஜாதித்தன் கங்க நாட்டுப் பூதுகனின் அம்புபட்டுக் கொல்லப்பட்டான். காஞ்சி முதல் தஞ்சை வரையிலுள்ள பகுதியைக் கைப்பற்றியதால் 'கச்சியும் தஞ்சையுங் கொண்ட கன்னர தேவன்' எனப் பட்டப் பெயர் பெற்றான். சோழ நாட்டின் வடபகுதி 25 ஆண்டுகள் இவனது ஆளுமையின் கீழ் இருந்தது. முதலாம் இராசராசன் காலத்தில்தான் காஞ்சிப்பகுதி சோழநாட்டுடன் நிரந்தரமாக இணைக்கப்பட்டது.

இவனது ஆட்சிக் காலத்தில் உள்ளாட்சி முறை சிறப்பாக நடைபெற்றது. இதனை உத்திரமேரூர்க் கல்வெட்டுகள் விரிவாக எடுத்துரைக்கின்றன. அக்கால உள்ளாட்சி அமைப்பின் பெருமையை விளக்கும் இவ்வூர்க் கல்வெட்டுகள் உலகச் சிறப்புடையதாகும்.

கண்டராதித்தன் (கி.பி. 950 - 957)

இராசகேசரி பட்டம் ஏற்று ஆட்சி செய்த கண்டராதித்தன் பராந்தகனின் இரண்டாம் மகன் ஆவான். திருமுனைப்பாடி மற்றும் தொண்டைநாட்டினைத் தக்கோலப் போரில் இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனிடம் இழந்த பின்னர் சோழநாடு மட்டும் இவனது ஆட்சிக்குட்பட்டிருந்தது. மழவரையன் மகளான செம்பியன் மாதேவியை மணந்தான். இவர்களுக்கு பிறந்தவனே உத்தமச் சோழன் மதுராந்தகன். சிறந்த சிவபக்கதனான இக்கண்டராதித்தன், சைவத்

திருமுறை பன்னிரண்டில் ஒன்றான ஒன்பதாந் திருமுறையில் தில்லையம்பலத்தைப் புகழ்ந்து 'திருவிசைப்பா' இயற்றிய ஒன்பது நாயன்மார்களில் இவரும் ஒருவர் ஆவார்.

அரிஞ்சய சோழன் (கி.பி. 954 - 60)

கண்டராதித்தனைத் தொடர்ந்து அவனது தம்பி அரிஞ்சய சோழன் ஆட்சி செய்தான். திருமுனைப்பாடி நாட்டையும், தொண்டை நாட்டையும் கைப்பற்ற முனைந்தான். 'ஆற்றூர்த் துஞ்சின தேவர்' எனக் கல்வெட்டுகள் கூறுவதால், அரிஞ்சயன் ஆற்றூரில் இறந்திருக்கவேண்டும்.

சுந்தரச் சோழன் இரண்டாம் பராந்தகன் (கி.பி. 957 – 975)

அரிஞ்சயனைத் தொடர்ந்து இரண்டாம் பராந்தகன் எனும் சுந்தர சோழன் ஆட்சிக்கு வந்தான். 'மதுரை கொண்ட இராசகேசரிவர்மன்', 'மதுராந்தகன் சுந்தர சோழன்' எனக் கல்வெட்டுகள் இவனைக் குறிப் பிடுவதால் பாண்டியருடன் போரிட்டான் என்பது தெளிவாகிறது. காஞ்சியிலுள்ள 'பொன்மாளிகைத் துஞ்சிய தேவர்' என்று கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவனுடன் இவனது மனைவி வானவன் மாதேவியும் உடன்கட்டை ஏறி உயிர் நீத்தார்.

'செந்திரு மடந்தைமன் ஸ்ரீராஜராஜன்
இந்திர சமானன் இராஜ சர்வஞ்ஞனென்னும்
புலியைப் பயந்த பொன் மான்'

என இவரைத் திருக்கோயிலூர்க் கல்வெட்டுப் புகழ்கிறது.

ஆதித்த கரிகாலன் (கி.பி. 960 – 965)

சுந்தரச் சோழனுக்கு ஆதித்த கரிகாலன், அருண்மொழித் தேவன் ஆகிய இரு புதல்வர்கள் இருந்தனர். ஆதித்த கரிகாலன் 'வீரபாண்டியன் தலை கொண்டான்' என்னும் பெயர் பெற்றான். பெருவீரனான ஆதித்த கரிகாலனைச் சில அரசியல் அதிகாரிகள் சூழ்ச்சி செய்து கொலை செய்துள்ளனர். வீரநாரயணபுரத்தைச் சேர்ந்த சிலர் கொலைக்குக் காரணமாக இருந்தார்கள் என்பதை உடையார்குடிக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

உத்தம சோழனான மதுராந்தகன் (கி.பி. 971 – 987)

முதலாம் பராந்தகனின் இரண்டாம் மகன் கண்டராதித்தன், அவனுடைய மகன் உத்தம சோழன் ஆவான். இவன் இந்திரனை யொத்த ஆற்றலுடையவன் என்று ஆனைமங்கலச் செப்பேடு குறிப்பிடுகின்றது. உத்தம சோழன் 'பரகேசரி' பட்டம் பெற்றுத் தொண்டை நாட்டையும், திருமுனைப்பாடி நாட்டையும் இணைத்து ஆட்சி புரிந்தான்.

முதலாம் இராஜராஜன் (கி.பி. 985-1014)

இரண்டாம் பராந்தகன் என்ற சுந்தர சோழனுக்கும் வானவன் மாதேவியாருக்கும் ஐப்பசித் திங்கள் சதயத் திருநாளில் பிறந்த இராஜராஜனின் இயற்பெயர் அருண்மொழிவர்மன் என்பதாகும். இராஜராஜன் தன் நாட்டு எல்லையைத் தெற்கே ஈழத்திலிருந்து வடக்கே ரெய்ச்சூர், வேங்கி, கலிங்கம் ஆகிய பகுதிகள் வரை விரிவடையச் செய்தான். முதலாம் பராந்தகன் முதல் உத்தம சோழன் ஆட்சிக் காலம் வரை வலிமை குன்றியிருந்த சோழ அரசு, இவனது காலத்தில் சோழப் பேரரசாக விரிவடைந்தது.

ஈழநாட்டை வென்ற இராஜராஜன் அதன் தலைநகரான 'பொலன்னருவா'வில் சிவபெருமானுக்கு இருதளக் கற்றளி யொன்று எடுப்பித்தான்.

முதலாம் இராஜராஜன் மூன்றாம் ஆட்சியாண்டு முதல் 'இராசகேசரி' என்ற பட்டம் புனைந்துள்ளான். தன்னுடைய ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகளை விளக்கும் மெய்க்கீர்த்தியைத் தன் கல்வெட்டுகளின் தொடக்கத்தில் பொறிக்கும் முறையை மேற்கொண்டான். இவனது மெய்கீர்த்தி 'திருமகள் போல' என்று தொடங்குகின்றது.

இராஜராஜனின் ஆட்சியின் கீழ் பாண்டி மண்டலம், சேர மண்டலம், தொண்டை மண்டலமாகிய ஜெயங்கொண்ட சோழ மண்டலம், கங்க மண்டலம், கொங்கு மண்டலம், நுளம்பபாடி நாடு, கலிங்க நாடு, இலங்கையாகிய மும்முடிச் சோழ மண்டலம் ஆகியவை உள்ளடங்கி இருந்தன.

இராஜராஜன் என்ற சிறப்புப் பெயரைத் தவிர க்ஷத்திரிய சிகாமணி, உய்யக் கொண்டான், பாண்டிய குலாசினி, கேரளாந்தகன், இராஜாஸ்ரயன், சிவபாத சேகரன், சிங்களாந்தகன், மும்முடிச் சோழன், நிகரிலி சோழன், இராசமார்த்தாண்டன் போன்ற பல பெயர்கள் இவனுக்கு வழங்கப்பட்டிருந்தமையைக் கல்வெட்டுகளால் அறியலாம். ஊர்கள், ஆறுகள், கோயில்கள் ஆகியவற்றிற்கு இவனது பெயர் இடப்பட்டுள்ளது. இன்றளவும் அப்பெயர்கள் நின்று நிலவுவதைக் காணமுடிகிறது.

முதலாம் இராஜேந்திரன் (கி.பி. 1012 – 1044)

இராஜராஜன் தன் ஆட்சிக் காலத்திலேயே தன் மகனைப் போர்ப் பயிற்சியிலும், ஆட்சிப் பொறுப்பிலும் நன்கு பழக்கித் தன் ஆட்சியின் இறுதி காலத்தில் அரசானாக்கினான். 'பரகேசரி' என்ற பட்டம் பெற்று அரியணையேறிய இராஜேந்திரன் தந்தையின் காலத்திலேயே பல போர்களில் ஈடுபட்டுப் பெரும் வெற்றிகளைப் பெற்று சோழப் பேரரசின் வலிமையை உயர்த்தினான். 'மதுராந்தகன்' என்ற இயற்பெயர் கொண்ட இவனுக்கு இராஜேந்திரன் என்ற அபிடேகப் பெயர் சூட்டப்பட்டது.

மேலும் முடிகொண்ட சோழன், உத்தம சோழன், விக்கிரம சோழன், சோழேந்திர சிம்மன், கடாரங் கொண்டான், கங்கை கொண்டான் போன்ற சிறப்புப் பெயர்களும் இவன் பெற்றிருந்தான்.

தலைநகரைத் தஞ்சையிலிருந்து கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மாற்றினான். இந்நகரமே சோழப் பேரசின் முக்கியத் தலைநகராக இவன் காலந் தொடங்கி விளங்கியது. இங்கு அமைந்திருந்த அரண்மனையின் எச்சங்கள் அகழாய்வு மூலம் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையால் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது.

'வடதிசை கங்கையும் தென்திசை இலங்கையும் குடதிசை மகோதையும் குணதிசை கடாரமும் மாப்பொரு தண்டாற் கொண்ட' என்ற மெய்க்கீர்த்திக் கல்வெட்டு வரிகள் இவனது பெருமையைப் பறைசாற்றுகின்றன.

இராஜேந்திரனுடைய கங்கை கடார வெற்றிகளை முதன் முதலாக அவனது 11-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தெரிவிக்கிறது. 'புஞ்சை' என்னும் இடத்திலுள்ள அவனது 14-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில்தான் அவனது முழு மெய்க்கீர்த்தியும் காணப்படுகிறது.

கங்கையைச் சோழநாட்டிற்குக் கொண்டு வந்து அதனைப் புனிதமாக்கினான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடு குறிப்பிடு கின்றது. தன் கங்கை வெற்றியின் நினைவாக 'கங்காபுரி' என்ற கங்கை கொண்ட சோழபுரத்தை நிர்மாணித்து, கங்கை கொண்ட சோழீஸ்வரம் என்ற கோயிலையும் எடுப்பித்தான். மேலும் நீர்ப்பாசனத்திற்காக 'சோழகங்கம்' என்ற ஏரியை உருவாக்கினான். இக்கங்கை வெற்றியை மாபெரும் வெற்றியாகக் கருதி 'கங்கை கொண்டான்' என்று பொறிக்கப்பட்ட பொற்காசுகளையும் வெளியிட்டான்.

''விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமும்
முதிர்பட வல்லை மதுரமண் டலமும்
காமிடை வலிநகர் நாமணைக் கோணமும்
வெஞ்சிலை வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசடைப் பழன மாசுணி தேசமும்
அயர்வில்வண் கீர்த்தி யாதிநக ரவையில்
சந்திரன் தொல்குலத் திந்திரனை
விளையமர் களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனை தொடுநிறை குலதனக் குவையும்
கிட்டருஞ் செறிமிளை யொட்ட விஷயமும்
பூசரர் சேர்நல் கோசல நாடும்
தன்ம பாலனை வெம்முனை யழித்து
வண்டமர் சோலைத் தண்ட புத்தியும்
இரண சூரனை முரணுறத் தாக்கித்
திக்கணை கீர்த்தித் தக்கண லாடமும்
கோவிந்த சந்தன் மாவிழிந் தோடத்
தங்காத சாரல் வங்காள தேசமும்
தொடுகடல் சங்கு கொடுடல்மகி பாலனை
வெஞ்சமர் வளாகத்து அஞ்சுவித் தருளி
ஒண் திறல் யானையும் பெண்டிர்பண் டாரமும்
நித்தில நெடுங்கடல் உத்தர லாடமும்
வெறிமலர் தீர்த்தத்து எறிபுனல் கங்கையும்

அலைகடல் நடுவுள் பலகலம் செலுத்திச்
சங்கிராம விசையோத் துங்க வன்மன்
ஆகிய கடாரத்து அரசனை வாகயம்''

என்ற முதலாம் இராஜேந்திரன் மெய்க்கீர்த்தியால் கங்கைப் படையெடுப்பில் சக்கரக் கோட்டம், ஒட்டதேயம், கோசல நாடு, தக்காண லாடம், வங்காள தேசம், உத்தரலாடம் ஆகியன கைப்பற்றப் பட்டுச் சோழப் படைகள் கங்கையை அடைந்த செய்தியைத் தெரிவிக்கின்றன.

இராஜராஜனைப் போலச் சைவ சமய வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டான். இவனது காலத்தில் பல கோயில்கள் கற்றளியாக மாற்றப்பட்டன. காளாமுகப் பிரிவைச் சேர்ந்த லகுலீச பண்டிதருக்குப் பெரும் ஆதரவளித்துள்ளான். இதனைத் திருவொற்றியூர் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. பௌத்த, சமண, வைணவக் கோயில்களுக்கும் பல நிவந்தங்கள் அளித்துச் சிறப்புச் செய்தான்.

காஞ்சிபுரம் மாவட்டம் 'காவந்தண்டலம்' என்ற ஊரில் 'இராஜேந்திர சோளீஸ்வரம்' என்ற கோயிலை அவனது அதிகாரி ஒருவன் கட்டியுள்ளான். அவனது குருவாக இருந்த ஈசான சிவபண்டிதர் கூழம்பந்தலில் 'கங்கை கொண்ட சோளீஸ்வரம்' என்ற கோயிலை எடுப்பித்துள்ளார். இம்மாவட்டத்தில் 'அகரம்' என்ற ஊரில் நான்காயிரம் சிவப்பிராமணர்களைக் குடியமர்த்தி, இங்குக் கைலாசநாதர் கோயிலும் கட்டப்பட்டுள்ளது.

முதலாம் இராஜாதிராஜன் (கி.பி. 1044 - 52)

'பரகேசரி' முதலாம் இராஜேந்திர சோழனின் இறுதி காலத்தில் பல படையெடுப்புகளை மேற்கொண்டு வெற்றிகண்ட அவனது மகன்களில் ஒருவன் இந்த இராஜாதிராஜன் ஆவான்.

சாளுக்கியர்களுடன் மூன்று முறை போர் செய்து சோழப் பேரரசின் வலிமையை நிலை நாட்டினான். கி.பி. 1054 - ஆம் ஆண்டு இராஜாதிராஜன் சாளுக்கிய நாட்டைக் கைப்பற்ற கிருஷ்ணா நதிக்கரையிலுள்ள தலமரம் கொப்பம் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் பெரும்படையொன்று அவனைச் சூழ்ந்து அவனது யானையையும், அவனையும் கொன்றது. இதனையறிந்த அவனது தம்பி இரண்டாம் இராஜேந்திரன் பெரும்படையுடன் சென்று

சாளுக்கியரை வென்று, சாளுக்கிய நகரமான கொல்லாபுரத்தில் ஒரு வெற்றித் தூணை நிறுவி அப்போர்க் களத்திலேயே சோழச் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொண்டான்.

இரண்டாம் இராஜேந்திரன் (கி.பி. 1051-63)

இராஜேந்திரன் தன் முன்னோர்களைப் போன்று ஈழத்தின் மீது படையெடுத்து ஈழத்தை ஆண்ட கலிங்க மன்னன் வீரசலாமேகனைக் கொன்றான். பின்னர் மானாபரணரின் இரு புதல்வர்களையும் சிறைப் பிடித்து அங்குச் சோழராட்சியை நிலை பெறச் செய்தான். கி.பி. 1059 ஆம் ஆண்டு மேலைச் சாளுக்கிய மன்னனான ஆகவமல்லன் சோழர் மீது படையெடுத்து வந்தான். ஆகவமல்லனை எதிர்த்து இரண்டாம் இராஜேந்திரன் மற்றும் அவனது சகோதரர்கள் இராஜமகேந்திரன், வீரராஜேந்திரன் ஆகிய இம்மூவரும் எதிர்கொண்டு முடக்காறு என்ற இடத்தில் போரிட்டுப் புறமுதுகிட்டு ஓடச் செய்தனர்.

வீரராஜேந்திரன் (1063-1070)

இரண்டாம் இராஜேந்திரனின் இளவலான வீரராஜேந்திரன் கி.பி. 1063-இல் ஆட்சிக்கு வந்தான். 'வீரமே துணையாகவும், தியாகமே அணியாகவும்' என்ற இவனது ஏழாம் ஆட்சியாண்டு மெய்க் கீர்த்தியால் பல போர்களில் ஈடுபட்டுள்ளதை அறியமுடிகிறது. ஆகவமல்லனை ஐந்து முறை வென்றான் எனக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவன் பொத்தப்பி வேந்தன், கேரளன், ஜனநாதன் தம்பி, பாண்டியன் ஸ்ரீவல்லன் மகன் வீர கேசரியையும், போரில் கொன்று வெற்றி பெற்றான் என்று இவனது 4-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. இவனது ஆட்சிக் காலம் முழுவதும் போரிலேயே செலவிட்டான்.

சிறந்த தமிழ்ப் பற்றுடையவனான இவனின் வேண்டு கோளுக்கிணங்க புத்தமித்திரன் என்பவர் ஐந்திலக்கணங்களும் அடங்கிய 'வீர சோழியம்' என்ற இலக்கண நூலை எழுதினார்.

அதிராஜேந்திரன்

வீரராஜேந்திரனை அடுத்து அவனது புதல்வன் அதிராஜேந் திரன் முடிசூட்டப்பட்டான். இவன் நோய்வாய்ப்பட்டு இறந்ததாகக் கூறுவர். தஞ்சை கூகூரிலுள்ள கல்வெட்டில் அதிராஜேந்திரன்

நோயிலிருந்து குணமடைய வேண்டி அவ்வூர் கோயிலில் தினம் இருமுறை தேவாரப்பதிகம் ஓதப்பட்டுள்ளது என்ற செய்தி இதனை வலுப்படுத்துகிறது.

முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1070-1120)

''சுங்கந்தவிர்த்திருள் நீக்கி உலகாண்ட ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவன்'' என்று கல்வெட்டில் புகழப்பெற்ற இம்மன்னன் கீழைச் சாளுக்கிய மன்னனாகிய இராசராச நரேந்திரனின் மகன் ஆவான். இவனது தாய் கங்கை கொண்ட சோழன் எனும் முதலாம் இராஜேந்திரனின் மகளாகிய அம்மங்கை தேவியார் ஆவார். இராஜேந்திரன் என்று தனது தாய்வழிப் பாட்டனின் பெயரையே பெற்றிருந்தான். இளமை பருவத்தைத் தஞ்சையிலேயே கழித்தவன். தமிழ் மொழியையே தாய்மொழியாகக் கொண்டு பயின்று தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களை மேற்கொண்டு இவன் தன்னைச் சோழ அரசகுமாரனாகவே கருதினான். சோழ நாட்டில் வீரராஜேந்திர சோழனுக்குப் பிறகு சில மாதங்கள் அரசாண்ட அவன் மகன் அதிராஜேந்திரன் கி.பி. 1070-ஆம் ஆண்டில் நோய்வாய்பட்டு இறந்தான். அவனுக்கு வாரிசுகள் யாரும் இல்லாததாலும் சோழர் மரபில் வேறு அரச குமாரர்கள் ஒருவரும் இல்லாமையாலும் சோழப் பேரரசு அரசனின்று அல்லலுற்றது. குறுநில அரசர்களின் கலகம் ஒரு புறமும் உள்நாட்டுக் குழப்பம் மற்றொரு புறமும் தோன்றின. சோழநாடு அரசனின்றி நிலை குலைந்திருந்த செய்தியை வடக்கே போர் புரிந்திருந்து கொண்டிருந்த இராஜேந்திரன் அறிந்து கங்கை கொண்ட சோழபுரம் விரைந்தான்.

அங்கிருந்த அமைச்சர் படைத்தலைவர் முதலான அரசியல் அதிகாரிகள் எல்லோரும் இவ்வரசகுமாரன் தக்கசமயத்தில் வந்தது கண்டு அகமகிழ்ந்து, இவனது உரிமையையும் ஏற்றுக் கொண்டு சோழனாட்டு ஆட்சியை இவனுக்கே அளிப்பது என்று உறுதி செய்தனர். அவ்வாறே கி.பி. 1070 ஆம் ஆண்டு தலைநகரில் முறைப்படி முடிசூட்டப் பெற்றான். அந்நன்னாளில் குலோத்துங்க சோழன் என்னும் சிறப்புப் பெயர் பெற்று அரியணை ஏறினான். சோழப் பேரரசையும், வேங்கி நாட்டையும் ஆளத் தொடங்கினான். சோழரின் பரம்பரை எதிரியான மேலைச் சாளுக்கியராலும் ஏதும்

செய்ய இயவில்லை. இதனால் இவன் ஐம்பது ஆண்டு காலம் ஆட்சி செய்தான்.

இவன் சக்கரக் கோட்டடம், பாண்டி நாடு, சேர நாடு, கலிங்கம், ஈழம், கங்கபாடி, வேங்கிநாடு ஆகிய நாடுகளின் மீது போர் தொடுத்து வெற்றிபெற்றான்.

முதலாம் குலோத்துங்கன், சப்தம் விஷ்ணுவர்த்தனன், இராஜேந்திரன், அபயன், சயதரன், ஜெயதுங்கன், கரிகாலன், உலகுய்ய வந்தான், விருதராஜ பயங்கரன், இராஜ நாராயணன், மனுகுல தீபன், உபயகுலோத்தமன் போன்ற பல சிறப்புப் பெயர் களும் பெற்று ஆட்சி புரிந்தான். 'திரிபுவனச் சக்கரவர்த்தி' என்று பட்டம் புனைந்து ஆட்சி செய்த முதல் மன்னன் இவனே.

கி.பி. 1077-ஆம் ஆண்டு 72 பேர்களைக் கொண்ட குழுவைச் சீனாவிற்கு அனுப்பி சீனாவுடன் நல்லுறவு மேற்கொண்டான். கி.பி. 1090-இல் கடாரத்து மன்னன் வேண்டிக் கொண்டதற்கிணங்க நாகப்பட்டினத்திலிருந்த இராஜராஜப் பெரும்பள்ளி, இராஜேந்திர சோழப் பெரும்பள்ளி ஆகிய இரண்டு புத்த விகாரங்களுக்கும் இறையிலியாக சில ஊர்களை அளித்தான். கம்போஜ நாட்டு மன்னன் ஹர்ஷவர்மனுடன் நல்லுறவு கொண்டிருந்தான்.

சைவ சமயத்துடன் ஈடுபாடு கொண்டிருந்ததால் 'திருநீற்றுச் சோழன்' என்று போற்றப்படுகிறான். சூரிய வழிபாட்டிற்காகத் தமிழ்நாட்டில் ஆடுதுறையை அடுத்த சூரியனார் கோயிலை இவனது 44-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1114 இல்) கட்டினான். கலிங்க நாட்டிலுள்ள கோனாரக் கோயிலுக்கு ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு முன்பு எழுப்பப்பட்ட கோயிலாகும் இது.

இம்மன்னன் தில்லையில் பல திருப்பணிகள் செய்துள்ளான். இதனை,

'ஓதும் சகரர் யாண்டு ஒருபத் தெட்டின்மேல்
ஆதிமூ லந்நாளில் ஆன்தனில் சோதி
துளங்கில மேற்சோழன் சோழகுல வல்லி
களங்கமற வைத்தான் கரு''

''வண்ணந் திகழும் கொடி மாடம் மற்றும் சோழ குலவல்லி
நண்ணும் தலைமை உடையாறை நாமார் புகழ் பாமாலை
எண்ணும் படியிற் புகழான ரென்றே அன்றே என்னுடைய
கண்ணும் பழனக் கழுமலம் நடந்தார் திருவை மலர்ந்தாரே''

இக்கல்வெட்டுப் பாடல்களால் சகரயாண்டு 1018 - இல் (கி.பி. 1096) தில்லைத் திருப்பணியைத் தொடங்கினான் எனத் தோன்றுகிறது.

விக்கிரமச் சோழன் (கி.பி. 1118-1136)

முதலாம் குலோத்துங்கனின் மகனான விக்கிரம சோழன், கி.பி. 1118-இல் இளவரசுப் பட்டம் பெற்றுத் தந்தைக்கு உதவி புரிந்து வந்தவன். கி.பி. 1120-இல் தந்தை இறக்கவே அரியணை ஏறினான். இவனது சகோதரர்களாகிய இராசராச சோழகங்கன், இராசராச மும்முடிச் சோழன், வீர சோழன் ஆகியோர் முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்திலேயே இறந்ததால் நான்காவது மகனாகி'ய விக்கிரம சோழன் அரியணை ஏற வாய்ப்பு ஏற்பட்டது. இவன் 'பரகேசரி' என்ற பட்டம் புனைந்து அரசாட்சி செய்தான். மேலும் தியாக சமுத்திரம், அகளங்கன் ஆகிய சிறப்புப் பெயர்களும் பெற்றிருந்தான்.

காஞ்சிபுரம் வட்டம் சிவன்கூடல் கல்வெட்டொன்று விக்கிரம சோழன் பிறந்த ஆனித் திங்கள் உத்திரட்டாதி நாள் முதல் ஏழு நாட்கள் திருவிழா நடத்துவதற்கு கி.பி. 1128-இல் நிலம் அளித்த செய்தி மூலம் இவன் ஆனித் திங்கள் உத்திரட்டாதி நன்னாளில் பிறந்தான் எனத் தெரியவருகிறது.

விக்கிரமச் சோழனின் 6-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1125) தொண்டை நாடு மற்றும் நடு நாட்டிலும் பெருவெள்ளம் ஏற்பட்டு அதனால் அப்பகுதிகளில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது என்று திருவோத்தூர் மற்றும் திருவதிகைக் கல்வெட்டுகளால் அறியப்படு கிறது. இதேபோல் 11-ஆம் ஆட்சியாண்டில் சோழ நாட்டில் பஞ்சம் ஏற்பட்டதைத் தஞ்சை மாவட்டம் கோவிலடிக் கல்வெட்டு வெளிக் கொணர்கிறது.

தில்லைச் சிற்றம்பலத்தைச் சூழ்ந்த திருச்சுற்றுமாளிகை, கோபுரவாயில், கூடசாலை, பலிபீடம் என்பவற்றிற்குப் பொன் வேய்ந்தான். மேலும் தான் பிறந்த உத்திரட்டாதி நாளில் நடைபெறும் பெருவிழாவின் போது இறைவன் எழுந்தருளும் திருத்தேரைப் பொன்வேய்ந்து அதற்கு முத்து வடங்கள் அணிவித்துள்ளான். இவை இவன் ஆற்றிய அரிய தில்லைத் திருப்பணிகளாகும்.

‘மண்ணுயிர்கெல்லாம் இன்னுயிர்த் தாய்போல்
தண்ணளி பரப்பித் தனித் தனிப் பார்த்து
மண் முழுதுங் களிப்ப’’

என்ற இவனது மெய்க்கீழ்த்தி வரிகளால் மக்கள் நலம் அறிந்து ஆட்சிசெய்தான் என்பதை உணரலாம்.

விக்கிரமச் சோழனின் அவைக்களப் புலவராக ஒட்டக்கூத்தர் வீற்றிருந்தார். மேலும் இம்மன்னனின் மீது ‘விக்கிரம சோழனுலா’ எனும் நூலொன்றை ஒட்டக்கூத்தர் இயற்றியுள்ளார்.

இரண்டாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1133-1150)

விக்கிரம சோழனைப் பின்பற்றி அவனது மகன் இரண்டாம் குலோத்துங்கன் ‘இராசகேசரி’ பட்டம் புனைந்து அரியணை ஏறினோன். இவனது ஆட்சிக் காலத்தில் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அரிய நிகழ்வுகள் எதுவும் இல்லை. ‘தில்லைத் திருநகர் சிறப்புடைத்தாகத் திருமுடி சூடிய ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்’ எனக் கல்வெட்டு இவனைக் குறிப்பிடுகிறது.

இவன் தந்தையின் ஆட்சிக் காலத்தில் அவைக்களப் புலவராக விளங்கிய ஒட்டக்கூத்தர் இவனுக்குத் தமிழாசிரியராய் அமர்ந்து இவனைச் செந்தமிழில் புலமை வாய்ந்த அரசனாகச் செய்தார். ஒட்டக்கூத்தர் இவன் மீது ‘குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்’, ‘குலோத்துங்க சோழனுலா’ என இரு நூல்களை இயற்றியுள்ளார்.

மருதத்தூருடையான் குன்றன் திருச்சிற்றம்பலமுடையார் என்பவன், தொண்டை மண்டலத்தில் களத்தூர்க் கோட்டத்தி லுள்ள மருதத்தூரினன். இவன் சோழனாட்டு உறத்தூர் கூற்றத்து பையூருடையான் வேதவன முடையான் மேல் ஒரு பாடல் பாடி இரும்பூதி என்ற ஊரை முற்றுட்டாகப் பெற்று அதனைப் பையூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு வழங்கியதைப் புதுக்கோட்டை கல்வெட்டொன்று புலப்படுத்துகின்றது.

இரண்டாம் குலோத்துங்கனின் தலைநகராகக் கங்கை கொண்ட சோழபுரம் விளங்கியது. இம்மாநகர் ‘கங்காபுரி’ என்று குலோத்துங்கச் சோழனுலாவிலும், ‘கங்காபுரம்’ என்று தண்டியலங் காரம் மேற்கோள் பாடலிலும் கூறப்பட்டுள்ளது.

இவனுக்கு அபயன், அனபாயன், எதிரிலாப் பெருமாள், கலிகடிந்த சோழன், திருநீற்றுச் சோழன், பெரிய பெருமாள் ஆகிய சிறப்புப் பெயர்கள் வழங்கப்பட்டிருந்தன. இவற்றுள் அபயன் திருநீற்றுச் சோழன் என இரு பெயர்களும் முதற் குலோத்துங் கனுக்கும் வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டாம் இராஜராஜ சோழன் (கி.பி. 1146-1163)

இரண்டாம் குலோத்துங்க சோழன் கி.பி. 1150-இல் இறந்த பிறகு, அவனது புதல்வனாகிய இரண்டாம் இராஜராஜன் சோழப் பேரரசிற்கு மன்னனாகக் கங்கை கொண்ட சோழபுரத்தில் முடி சூட்டப் பெற்றான். இவன் தந்தை இராசகேசரி என்னும் பட்டம் பெற்றிருந்ததால் இவன் 'பரகேசரி' என்னும் பட்டம் புனைந்து ஆட்சி செய்யத் தொடங்கினான்.

இம்மன்னனின் கல்வெட்டுகள் வடக்கே கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர் மாவட்டங்களிலும் மேற்கே சேலம், கோலார் மாவட்டங்களிலும் காணப்படுவதால் வெங்கிநாடு, கொங்கு நாடு, கங்க நாடு ஆகியவை இவனது ஆட்சிக்குட்பட்டிருந்தன என்பது தெளிவாகிறது. இவன் காலத்திலும் பெரும் போர்கள், ஏதும் நிகழ வில்லை. இவனை 'முத்தமிழுக்குத் தலைவன்', 'இராச பண்டிதன்' என இவனது மெய்க்கீர்த்திகள் குறிப்பிடுவதால் தமிழ்மொழிப் பற்றாளனாய் விளங்கினான் என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது.

இம்மன்னின் ஆட்சிக் காலத்தில் மலையமலைப் பகுதியில் காவிரியாறு அடைப்பு ஏற்பட்டு கிழக்கு நோக்கி தண்ணீர் வராமல் தடைபடவே சோழனாட்டு வளம் குன்றத் தொடங்கியதால், அம்மலை நடுவில் வெட்டி காவிரியாற்றிற்கு வழிஏற்படுத்தி சோழநாட்டிற்கு என்றும் தண்ணீர் வர ஏற்பாடு செய்தான். இதனை

'மலை கொன்று பொன்னிக்கு வழிகண்ட கண்டன்
வரராச ராசன்கை வாளென்ன வந்தே'

என்னும் தக்கயாகப் பரணிப் பாடல் வரிகளால் விளங்க முடிகிறது.

மேலும்

'சுழியிட்ட காவிரிக்குச் சோணாடு வாழ
வழியிட்ட வாள் காண வாரீர்'

என இராசராசன் சோழனுலா பாடல் அடிகளாலும் நன்கு விளங்குகிறது.

இராசராசபுரம் என்னும் நகரில் 'இராசராசேச்சரம்' என்ற சிவாலயம் ஒன்றினை எடுப்பித்தான். இவ்வூர் தற்போது தாராசுரம் என்றழைக்கப்படுகிறது. இக் கோயில் கருவறையின் புறச்சுவரில் 63 நாயன்மார்களின் திருவுருவங்களும், திருச்சுற்று மாளிகையின் வடபுறத்தில் 108 சைவ ஆசாரியர்களின் உருவங்களும் காணப்படுகின்றன.

இம்மன்னன் சோழேந்திர சிங்கன், தெய்வப் பெருமாள், கண்டன், சொக்கப் பெருமாள், இராசகம்பீரன் ஆகிய சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தான்.

இரண்டாம் இராஜாதிராஜ சோழன் (கி.பி. 1163-1178)

இரண்டாம் இராஜாதிராஜன் கி.பி. 1163-ஆம் ஆண்டில் இளவரசுப் பட்டம் பெற்றுக் கி.பி. 1166-ஆம் ஆண்டில் சோழப் பேரரசின் சக்கரவர்த்தியாகப் பொறுப்பேற்றான். இவன் விக்கிரம சோழனின் பேரனும் நெறியுடைப் பெருமானின் மகனும் ஆவான். இவனுடைய இயற்பெயர் எதிரிலிப்பெருமாள் என்பதாகும். இரண்டாம் இராஜராஜன் பரகேசரி என்னும் பட்டம் பெற்றிருந்த தால் இவன் 'இராசகேசரி' என்ற பட்டத்துடன் ஆட்சி புரிந்தான்.

பராக்கிரம பாண்டியன் மதுரையை ஆட்சி செய்து கொண் டிருந்தபோது குலசேகரன் மதுரையை முற்றுகையிட்டான். பராக்கிரமன் சிங்கள மன்னனான பராக்கிரம பாகுவின் உதவி கேட்டான். ஆனால் அவனுடைய படைகள் வரும் முன்னரே பராக்கிரம பாண்டியனும் அவனது அதிகாரிகளும் கைப்பற்றப் பட்டு கொல்லப்பட்டனர். இறுதியில் சிங்களப் படைகள் நான்கு முறை குலசேகரனைத் தோற்கடித்தது. இதன் பின்னர் குலசேகரன் சோழ மன்னான இரண்டாம் இராஜாதிராஜனின் உதவியை நாட, அவனும் சிங்களப் படைகளைத் தோற்கடித்து மீண்டும் குலசேகர பாண்டியனை ஆட்சியில் அமர்த்தினான்.

இதனையறிந்த சிங்கள மன்னன் பராக்கிரம பாகு தன் படைகளைத் திரட்டி சோழப்படைகளை எதிர்க்க முற்பட்டான். ஆனால் இராஜாதிராஜன் பெரும் படையைப் பல்லவராயன்

தலைமையில் அனுப்பினான். சோழப்படை இலங்கை நோக்கிச் சென்று படைத்தலைவர்களின் தலைகளைக் கொய்து வந்து மதுரைக் கோட்டை வாயிலில் வைத்தது. இதன் பின்னர் குலசேகரன் சோழருக்கு எதிராக சிங்களவருடன் நட்புறவும் திருமண உறவும் செய்து கொண்டான். இதனால் சோழர் மதுரையைத் தாக்கிக் குலசேகரனை ஆட்சியிலிருந்து அகற்றி வீரபாண்டியனை ஆட்சியில் அமர்த்தினார். இவனது காலம் வரையிலும் வீரபாண்டியன் மதுரையில் ஆட்சிசெய்தான். இவ்வெற்றிகளால் 'மதுரையும் ஈழமும் கொண்ட கோ இராசகேசரி வர்மன்' என்ற பட்டம் பெற்றான்.

பாண்டிய நாட்டுப் போரின் முற்பகுதி இலங்கைச் சரிதமாகிய மகாவம்வத்தின் 76 மற்றும் 77ஆம் அதிகாரங்களில் கூறப் பட்டுள்ளன. எஞ்சிய பகுதியைக் காஞ்சிபுரம் மாவட்டம் ஆர்ப்பாக்கம், மயிலாடுதுறையை அடுத்த பல்லவராயன் பேட்டை, திருவாலங்காடு மற்றும் திருக்கடவூர் மயானம் ஆகிய ஊர்களில் முறையே இவனது 5, 8, 12 - ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. திருக்கடவூரிலுள்ள இராஜாதிராஜனது 12-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் தான் (கி.பி. 1175) இவன் மதுரையும் ஈழமும் கொண்ட திரிபுவனச் சக்கரவர்த்திகள் என்று முதன்முதலில் குறிக்கப்பெற்றுள்ளான். எனவே இப்போர் கி.பி. 1167 க்கும் கி.பி. 1175க்கும் இடையில் நடைபெற்றுள்ளது எனத் தெரியவருகிறது.

இம்மன்னனை மயிலாடுதுறை ஆற்றூர் கல்வெட்டுகள் 'கரிகால சோழன்' என்றும் சிதம்பரம் கல்வெட்டொன்று 'இராசாதிராச தேவராகிய கரிகால சோழ தேவர்' என்றும் அழைக்கின்றன. எனவே இவன் 'கரிகாலன்' என்ற சிறப்பு பெயர் பெற்றிருந்தமையும் தெரிய வருகிறது.

மூன்றாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1178 - 1218)

குலோத்துங்கன் பரகேசரி என்ற பட்டம் புனைந்து 40 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவனது ஆட்சிக் காலத்தில் குலசேகர பாண்டியனின் மகன் விக்கிரம பாண்டியன் சோழனிடம் அடைக்கலம் பெற்றான். பாண்டி நாட்டில் ஆட்சி செலுத்தி வந்த வீரபாண்டியன் சிங்களருடன் சேர்ந்து கொண்டதன் பகைமை

காரணமாக வீரபாண்டியன் மீது போர்தொடுத்து பாண்டி நாட்டைக் கைப்பற்றி விக்கிரம பாண்டியனை மன்னனாக்கினான். பதவியிழந்த வீரபாண்டியன் சேரரின் உதவியுடன் மீண்டும் சோழருடன் போரிட, நெட்டூர் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் சோழப் படைகள் வெற்றி பெற்றன. இதனால் மூன்றாம் குலோத்துங்கன் 'மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய என்றழைக்கப்பட்டான்.

'வட மன்னரைத் தறைப்படுத்து முனிவாறிக்
கச்சிபுக்கு முழுதர சையுந்திறை கவர்ந்து'

என்ற மெய்க்கீர்த்தி வரிகளால் குலோத்துங்கன் வடபுலத்து மன்னர்களான தெலுங்குச் சோழன், பொத்தப்பிச் சோழன் ஆகியோரை வென்று காஞ்சியில் வெற்றி முரசோடு நுழைந்தான் எனத் தெரிகிறது.

தில்லைச் சிற்றம்பலவனின் 'ஏகபக்தன்' என்று கூறிக் கொள்ளும் இவன் திருவாரூர் இறைவனின் தோழனுமாவான். கும்பகோணம் அருகே திரிபுவனத்தில் 'திரிபுவனவீரேச்சுரம்' என்ற கற்றளியைக் கட்டியுள்ளான். தில்லைக் கூத்தனுக்குப் பொன் வேய்ந்தது, அம்பலவாணருடைய முகமண்டபம் மற்றும் சிவகாமி அம்மையின் கோபுரம் எழுப்பியது ஆகியன இவனது தில்லைத் திருப்பணிகளாகும்.

இவனது காலத்தில் வாழ்ந்த குணவீர பண்டிதர் என்ற புலவர் 'நேமிநாதம்', 'வச்சணந்தி மாலை', 'வெண்பாப் பாட்டியல்' போன்ற இலக்கண நூல்களை எழுதியுள்ளார்.

மூன்றாம் இராஜராஜன் (கி.பி. 1216-1256)

மூன்றாம் குலோத்துங்கனின் மகனான மூன்றாம் இராஜராஜன் 'இராசகேசரி' என்ற பட்டம் புனைந்து ஆட்சி செய்தான். இவனது ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசு மிகவும் வலிமையிழந்து காணப்பட்டது. இதற்கு முக்கிய காரணம், அரசியல் அதிகாரிகளும், குறுநில மன்னர்களும் மன்னனின் ஆட்சிக்கு கட்டுப்படாமல் கலகம் விளைவித்ததேயாகும். கி.பி. 1219-ஆம் ஆண்டு மாறவர்மன் சுந்தர பாண்டியன் சோழ நாட்டின் மீது படையெடுத்துத் தஞ்சை உறையூர்

ஆகிய சோழ நாட்டின் தலைநரங்களைத் தரைமட்டமாக்கித் தீ வைத்துக் கொளுத்தினான் என்று கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

பின்னர் சோழப்பேரரசை மீண்டும் சோழனிடம் அளித்தான். இதற்குக் காரணம் ஹொய்சாள மன்னனான இரண்டாம் வல்லாள தேவனும் அவனது மகன் வீரசிம்மனும், சோழனுக்கு உதவி புரிந்ததேயாகும். மீண்டும் பாண்டியன் கி.பி. 1231 ஆம் ஆண்டு சோழனின் மீது படையெடுத்தான் இதனையறிந்த வீரசிம்மன் பெரும்படையுடன் வந்து சோழ அரசை மீட்டு மீண்டும் இராஜராஜனிடமே அளித்தான்.

பின்னர் வீரநரசிம்மன் ஒருபெரும் படையைக் காஞ்சி மாநகரில் 'தண்ட நாயகர்' தலைமையில் நிறுத்தி வைத்திருந்தான்.

மூன்றாம் இராஜேந்திர சோழன் (கி.பி. 1246 - 1279)

மூன்றாம் இராஜராஜன் 44ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு கிடைப்பினும் அவனது காலத்திலேயே மூன்றாம் இராஜராஜனின் மகனான மூன்றாம் இராஜேந்திரனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டி ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தான். இவன் இருவர் பாண்டியர் முடித்தலை கொண்டருளிய மகாராஜாதிராஜ நரபதி' என்று போற்றப்படுகிறான். பாண்டிய மன்னனான முதலாம் சடையவர்ம சுந்தரபாண்டியன் கி.பி. 1251-ல் மதுரையில் அரியணை ஏறினான். கி.பி. 1257-ல் சோழ நாட்டின்மீது படையெடுத்து இராஜேந்திரனைப் போரில் வென்று வலிமைமிக்க சோழப் பேரரசை நலிவுறச் செய்தான். மூன்றாம் இராஜேந்திரனின் 33-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு வேதாரண்யத்தில் கிடைக்கின்றது. எனவே கி.பி. 1279இல் இறந்திருக்க வேண்டும். இவ்வாறு விஜயாலய சோழனால் தோற்று விக்கப்பட்ட சோழ அரசு இராஜராஜன், இராஜேந்திரன் காலங்களில் பேரரசாகத் திகழ்ந்து, 450 ஆண்டுகள் தமிழகத்தை ஆட்சி செய்து மறைந்தது.

விஜயநகர அரசு

சங்கம வம்சத்தைச் சார்ந்த ஐந்து சகோதரர்களில் அரிஅரன் மற்றும் புக்கன் ஆகிய இருவரும் கி.பி. 1336-ஆம் ஆண்டு விஜயநகரப் பேரரசை நிறுவினர். தென்னிந்தியாவின் நடுப்பகுதியில் விஜயநகரம் அமைந்திருந்தது. துங்கபத்திரா ஆற்றில் தென்பகுதியில் இருந்த இந்நகரம், மலை, குன்று, காடு ஆகியவைகளால் சூழப்பட்டிருந்தது.

முதலாம் அரிஅரன் (கி.பி. 1336-56)

சங்கம குமாரரான அரிஅரன் கி.பி. 1336-ஆம் ஆண்டு விஜயநகர அரசராக முடிசூட்டிக் கொள்ளும் போது அவரது ஆட்சி தென்கிழக்கில் நெல்லூர் முதல் மேற்கில் தார்வார் வரையிலும், வடக்கில் பாதாமி வரையிலும் பரவியிருந்தது. தேவகிரியிலிருந்து சுல்தான்களின் படையெடுப்பைச் சமாளிக்க வர்தாபிக் கோட்டையைப் பலப்படுத்தி வலிமை பொருந்திய படை ஒன்றினை அங்கு நிறுத்தினான். கிழக்குப் பகுதியின் உதயகிரியில் சிறந்த கோட்டையை அமைத்து கம்பணனிடம் ஒப்படைத்தான். தம் நாட்டினைப் பல தலங்களாகவும், நாடுகளாகவும் பிரித்து அவற்றில் வரிவசூல் செய்யவும் உள்ளூர் ஆட்சிப் பொறுப்பினைக் கவனிக்கவும் அரசாங்க அலுவலர்களை நியமித்தான். ஹொய்சாள மன்னன் நான்காம் வல்லாளன் விஜயநகர அரசு மீது கி.பி. 1346-இல் போர் தொடுக்க இப்போரில் அவனை அடக்கித் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான்.

முதலாம் புக்கன் (கி.பி. 1356-77)

முதலாம் அரிஅரனின் ஆட்சிக்குப் பின் அவனது சகோதரன் முதலாம் புக்கன் பட்டத்திற்கு வந்தான். இவனது மகன் குமார கம்பணனனை மதுரை நோக்கி படையெடுக்கச் செய்து மதுரை

சுல்தான்கள் ஆட்சி முடிவுறச் செய்தான். பின்னர் கோலார் மாவட்டத்துக்கும் தமிழகத்திற்கும் அரசப் பிரதிநிதியாக குமார கம்பணனை நியமனம் செய்தான். சம்புவராயனை வெற்றி கொண்டு காஞ்சியையும் கைப்பற்றி மதுரை வரை படை நடத்திச் சென்று சுல்தான்களை வெற்றிக் கொண்டு இராமேஸ்வரம் வரை தனது ஆட்சியைப் பரப்பினான். இவ்வெற்றியை 'மதுரா விஜயம்' என்ற வடமொழி நூல் விரிவாக எடுத்துரைக்கின்றது. கி.பி. 1361 முதல் கி.பி. 1374 வரை குமார கம்பணனின் பதினைந்து கல்வெட்டுகள் காஞ்சியில் காணப்படுகின்றன. அக்கல்வெட்டுகளில் காலத்தால் முந்தியது சக ஆண்டு 1282 (கி.பி. 1361) ஐச் சேர்ந்தது. இக்கல்வெட்டில் நிலம் தானமளித்துள்ள செய்தி மற்றும் அமைச்சர்களான சோமப்பா மற்றும் கோபண்ணா ஆகியோரைப் பற்றிய குறிப்பு ஆகியன உள்ளன. கோபண்ணா காஞ்சிப் பகுதி அதிகாரியாக நியமிக்கப்பட்டு. பின்னர் செஞ்சிப் பகுதிக்கு மாற்றப்பட்டார். குமார கம்பணன் இப்பகுதியில் பல அதிகாரிகளை நியமித்து நிர்வாகத்தினைச் செம்மைபடுத்தினான். இவனது கல்வெட்டுகளுமின்றி வீரபுக்கனின் கல்வெட்டுக்களும் திருமுக்கூடல், களத்தூர், திருப்புட்குழி ஆகிய ஊர்களில் காணப்படுகின்றன. புக்கனுக்குப் பின் ஆட்சி செலுத்த விருந்த குமார கம்பணன் கி.பி. 1374-இல் இறந்தான். இதன் பின்னர் இரண்டாம் அரிஅரன் ஆட்சிக்கு வந்தான்.

இரண்டாம் அரிஅரன் (கி.பி. 1377-1404)

முதலாம் புக்கனுக்குப் பிறகு புக்கன் - கௌராம்பி இவர்களுக்கு பிறந்த இரண்டாம் அரிஅரன் கி.பி. 1377இல் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றான். அவருடைய சகோதர்கள் தங்களுக்கு அரசப் பதவி கொடுக்கவில்லை என்று, தமிழகத்தில் கலகம் விளைவித்தனர். இரண்டாம் அரிஅரன் தனது மகன் விருபாக்ஷனை (விருப்பண்ண உடையார்) தமிழ்நாட்டின் அரசப் பிரதிநிதியாக்கி கி.பி. 1377-ஆம் ஆண்டு இறுதிக்குள் அக்கலகத்தை அடக்கினான். காஞ்சிப் பகுதியில் இவனது கல்வெட்டுகள் கி.பி. 1378 முதல் காணப்படுகின்றன. காஞ்சி காமாட்சியம்மன் விமானத்தில் செம்புக் கவசம் எற்படுத்த கி.பி. 1393-இல் செம்பு வழங்கியுள்ளான். காஞ்சி அருளாளப் பெருமாள் கோயிலில் கல்வெட்டில் ஒப்புலதேவ மகாராஜனின் தந்தையான பிள்ளையார் பொதுக்கன் ஒளபல தேவ மகாராஜரின் பல பட்டங்கள் காணப்படுகின்றன இதுவே இப்பகுதியில் காணப்படும் இரண்டாம் அரிஅரனின் ஆட்சியின் பிற்பகுதிக் கல்வெட்டாகும்.

இரண்டாம் அரிஅரன் இறந்தவுடன் பட்டத்திற்குப் போட்டி நிலவியது. அவனது மகன்களான முதலாம் விருபாக்ஷன், இரண்டாம் புக்கன், முதலாம் தேவராயன், ஆகியோரிடையே மிகப்பெரிய போட்டி நிலவியது. கி.பி. 1404 முதல் கி.பி. 1422 வரை இம்மூவரும் குறுகிய காலங்களே ஆட்சி செலுத்தினர்.

இரண்டாம் அரிஅரனின் மூத்த மைந்தனான விருபாக்ஷன் காஞ்சியின் அரசுக் கட்டிலில் அமர்ந்துள்ளான். திருப்புலிவன நெசவாளிகள் கூடுதலான வரிகட்ட முடியாமல் ஊரைவிட்டு வெளியேற முடிவெடுத்தனர். இதனையறிந்த அவன் வரிமாற்றம் செய்து அவ்வூரிலே தொடர்ந்து வசிக்க ஏற்பாடுசெய்தான். இதே போல் பெருநகர் நெசவாளிகளுக்கும் அவர்களின் பழைய வரி பாக்கிகளைத் தள்ளுபடி செய்து சலுகை வழங்கினான்.

இரண்டாம் புக்கன் தன் அண்ணனான விருபாக்ஷனை ஆட்சி கட்டிலிருந்து இறக்கி சிலகாலம் இவன் ஆட்சி புரிந்தான். இவனது அமைச்சர் இருசப்பா என்பவர் திருப்பருத்திக் குன்றம் சமணக் கோயிலில் கி.பி. 1382-ல் சங்கீத மண்டபம் ஒன்றைக் கட்டி, இம்மண்டப விதானத்தில் பல வண்ண ஓவியங்கள் தீட்ட ஏற்பாடு செய்தார்.

முதலாம் தேவராயன் (கி.பி. 1406-22)

முதலாம் தேவராயன், தன் அண்ணன் இரண்டாம் புக்கனிடமிருந்து ஆட்சியைப் பெற்றுக் கி.பி. 1406-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1422 வரை ஆட்சி செய்தான். அவனது காலம் முழுமையும் போரிலே கழித்தான். பாமினி சுல்தான். ஃபிருஸ் உடன் நடைபெற்ற முதல் போரில் உடன்படிக்கையும் கி.பி. 1419இல் நடைபெற்ற இரண்டாவது போரில் தேவராயர் வெற்றியும் பெற்றான்.

முதலாம் வீரவிஜயன்

முதலாம் தேவராயருக்குப் பின் அவரது மகன் இராமச்சந்திர ராயர் பதவி ஏற்றார். மிகக் குறுகிய காலமே ஆட்சி பீடத்தில் இருந்தார். வித்தியாரண்யக் கலைஞானம் என்னும் பாடலில் முதலாம் தேவராயருக்குப்பின் இராமச்சந்திராவும் முதலாம் வீர விஜயனும் முறையே ஆட்சி புரிந்தனர் எனக் குறிபிடப்பட்டுள்ளது. இராமச்சந்திர னுக்குப் பின் பதவியேற்ற முதலாம் வீரவிஜயனுக்கு 'விஜய பூபதி',

'விஜய புக்கன்', 'வீர புக்கன்' எனப் பல பெயர்கள் உண்டு. இம் மன்னனின் ஆட்சியில் தாம் ஏதும் முக்கியப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளாது தம் மகன் இரண்டாம் தேவராயனிடமே விட்டு விட்டார். பாமினி சுல்தான்களுடனும், ஓரிய தளபதிகளுடனும் நடந்த இரு போர்களிலும் இரண்டாம் தேவராயனே தலைமையேற்று நடத்தினான்.

இரண்டாம் தேவராயர் (கி.பி. 1422-1446)

வீர விஜயனின் மகனான இரண்டாம் தேவராயர் தனது சிறந்த படை வலிமையால் விஜயநகர ஆட்சியை வலிமையுறச் செய்தார். அப்துர்ரஸாக் என்பவர் முகம்மதிய பாரசீக அரசனின் தூதர். அவர் தனது 'பாரசீக வரலாறு' எனும் நூலில் இரண்டாம் தேவராயரின் ஆட்சிச் சிறப்பைப் பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

காஞ்சி காமாட்சியம்மன் கோயிலில் இவரது ஆறு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இங்குள்ள கல்வெட்டொன்று, பல கோயில் சொத்துகளைத் தனது அரசு அதிகாரிகளும் உள்ளூர் மக்களும் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுத்து நிறுத்தி முறைப் படுத்தினான் என்ற செய்தியைத் தெரிவிக்கின்றது. தேவராயரின் நன்மை வேண்டி 'ஸ்ரீ காமாட்சிபுரம்' என்ற அக்ரஹாரத்தை இப்பகுதி அதிகாரியான மண்டல புருஷர் என்பவர் உருவாக்கியுள்ளார். தனது சகோதரர் பிரதாப தேவராயருடன் ஆட்சி புரிந்து வந்ததை மாங்காடு காமாட்சியம்மன் கோயிலில் உள்ள மூன்று கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன. பிரதாப தேவராயரின் ஆட்சியில் அரசனின் நலத்திற்காகத் திருப்புலிவன வியாக்ரபுரீஸ்வர கோயிலுக்குத் தேவப்பா என்பவன் கணக்கன் பட்டு எனும் சேடியநல்லூரைத் தேவதானமாக்கியுள்ளான்.

மல்லிகார்சுனன்(கி.பி.1447-1465)

இரண்டாம் தேவராயருக்குப் பின் அவரது மகன் மல்லிகார்சுனன் பட்டம் ஏற்றான். கங்கதாசர் தம்முடைய நாடக நூலில் பாமினி சுல்தானையும் ஓரிசா படைத் தளபதியையும் வென்றதாகக் கூறுகிறார். 'மல்லிகார்ஜுனன் என்கிற இம்மடி பிரவத தேவன் எனக் கல்வெட்டுகள் இவனைக் குறிக்கின்றன. சந்திரகிரி கவிஞர் அப்பரச உடையார் நினைவாகக் காஞ்சி திருவேகம்பமுடைய கோயிலைப்

பழுதுபார்க்க இருகிராமங்களின் வரிகளை மறுநிர்ணயம் செய்துள்ளான். சமண சமயத்தைச் சேர்ந்த நேமிசந்திரர் இவனது அவையில் இருந்துள்ளார். ஒரிசா கஜபதி வேந்தனின் காஞ்சிப் படையெடுப்பு வெற்றியால் இவனது ஆட்சி முடிவுற்றது.

இரண்டாம் விருபாக்ஷன் (கி.பி. 1466 - 69)

இரண்டாம் தேவராயனின் இளைய மகனும் மல்லிகார்ஜுனனின் தம்பியுமான இரண்டாம் விருபாக்ஷன் கஜபதி மன்னனிடம் போரிட்டு மீண்டும் காஞ்சியைக் கைப்பற்றினான். விஜயநகரப் பேரரசின் கீழ் சிற்றரசனாக இருந்த பாண மன்னன் புவனவீர சமரகோலாகலன் காஞ்சியின் மீது படையெடுத்துச் சுயாட்சி பெற்றான். இப்பாண மன்னன் ஏகாம்பரநாதர் மற்றும் காமாட்சியம்மன் கோயில்களுக்குத் தன் பெயரில் கிராமங்களை ஏற்படுத்தித் தானமளித்துள்ளான். இவன் தனது பெயரில் 'சமரகோலாகலன்' மற்றும் 'புவனேகவீரன்' என்ற காசுகளை வெளியிட்டான். இரண்டாம் விருப்பண்ணனின் கி.பி. 1467 முதல் 1471 வரையான நான்கு கல்வெட்டுகள் காஞ்சியில் காணப்படுகின்றன. இரண்டாம் விருப்பண்ணனுடன் சங்கம வம்சத்தைச் சேர்ந்தவர்களின் ஆட்சி நிறைவுற்றது.

சாளுவ நரசிம்மன் (கி.பி. 1486-90)

'சாளுவர்' என்பது வேட்டையின் போது பயன்படுத்தப் படும் ஒரு வகை பறவையைக் குறிக்கும் சொல்லாகும். 'சாளுவர்' என்ற சொல் தெலுங்கிலும் கன்னடத்திலும் வழங்கப்படுகிறது. சாளுவ நரசிம்மரின் பாட்டன் முதலாம் கம்பணனனுடன் மதுரைப் படையெடுப்பில் கலந்து கொண்டான். அப்போரில் நரசிம்மனின் திறனை அறிந்து அதற்காக 'சாளுவர்' என்ற பட்டம் சூட்டப்பட்டது. அதன்பிறகு அப்பரம்பரையினர் 'சாளுவர்' என்ற பட்டம் பெற்றனர்.

சங்கம வம்சத்தைச் சார்ந்த இரண்டாம் விருப்பண்ணனின் முக்கிய அதிகாரிகளையும் பிரபுக்களையும் தன் வசப்படுத்தித்தான் முடிசூட்டிக் கொண்டான். காஞ்சி வரதராஜர் கோயிலில் பேரருளாளர்,

நாச்சியார், பெருந்தேவியார் படிமங்கள் இடம்பெறக் கங்காதரன் மகன் விருபாட்சத் தண்டநாயகமும், நரசிங்கராய மகாபிரதானியும் தானமளித்தனர். கி.பி. 1487-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று கந்தாடை இராமானுஜர் என்னும் வைணவர், 'இராமனுஜகூடம்' ஏற்படுத்தியதைத் தெரிவிக்கிறது.

நரச நாயகர் (கி.பி. 1492-1506)

சாளுவ நரசிம்மன் தாம் இறக்கும்போது தம்முடைய மகன்கள் இருவரும் சிறுவயதினராய் இருந்ததால் அவர்கள் அரசப் பொறுப்பினை ஏற்கும்வரை அவர்களுக்குப் பாதுகாவலராக இருக்க நரச நாயகருக்கு உத்தரவிட்டார். அதன்படி, மூத்த மகனான திம்மா என்பவனை இளவரசனாக அமர்த்தி தாமே முன்னின்று அரசாட்சி செய்தான். சாளுவ நரசிம்மனின் கீழ்ப் பணியாற்றிய துளுவ குலத் தலைவர்களில் மிகச் சிறந்தவர் நரச நாயகராவார். பகைவர்களால் 'திம்மா' இறந்துவிட, அவனது தம்பி இரண்டாம் நரசிம்மன் இளவரச னாக்கப்பட்டு அரசாட்சியை நாயகர் தொடர்ந்து மேற்கொண்டார். அரச குமாரர்களைக் காத்து ஆட்சி செய்ததால் அவர் 'ரக்ஷகர்த்தா', 'ஸ்வாமி' என அழைக்கப்பட்டார்.

வீரநரசிம்மன் (கி.பி. 1506-089)

நரச நாயகருக்குப் பின் அவரது மூத்த குமாரன் வீர நரசிம்மன் ஆட்சி பொறுப்பினை ஏற்றான். அப்போது இம்மடி நரசிம்மன் (இரண்டாம் நரசிம்மன்) அரச பதவியை தாம் வகிக்கும் வயதையடைந்தான். வீரநரசிம்மன், இரண்டாம் நரசிம்மனை அரச பதவியிலிருந்து நீக்கி தாமே அரசனாக விரும்பி, பெனுகொண்டாக் கோட்டையில் தங்கியிருந்தபோது அவரைக் கொலை செய்துவிட்டு கி.பி. 1506ஆம் ஆண்டு பதவியேற்றான். இரண்டாம் நரசிம்மனுடன் சாளுவ மரபு மறைந்தது.

கிருஷ்ணதேவராயன் (கி.பி. 1509-29)

நரச நாயகருக்கும் நாகம்பாளுக்கும் மகனாக கிருஷ்ண தேவராயன் பிறந்தான். இவனுடைய ஆட்சியல் சமூக, பொருளாதார,

சமயக் கூறுகளில் தமிழகம் சிறப்புடன் இருந்தது. கிருஷ்ண தேவராயன் சிறந்த போர் வீரனாக மட்டுமின்றி சிறந்த ஆட்சியாள னாகவும் விளங்கினான். பேரரசு முழுவதும் அவனது நேரடி ஆடசிக்குட்பட்டிருப்பினும் அவை பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஓர் ஆளுநர் தலைமையின் கீழ் இருந்தது. கிருஷ்ணதேவராயன் வடமொழியிலும் தெலுங்கு மொழியிலும் நன்கு புலமை பெற்றிருந்ததால். 'ஆந்திர போஜர்' என அழைத்தனர். கிருஷ்ணதேவராயன் 'ஆமுக்த மால்யதா', என்றும் சிறந்த நூலை எழுதினார். மேலும் 'ஜாம்பவதி கல்யாணம்', 'உஷா பரிணயம்' ஆகிய இரு நாடக நூல்களையும் எழுதியுள்ளார். அவரது அவையில் இருந்த எட்டு சிறந்த புலவர்களை 'அஷ்ட திக்கஜங்கள்' என்றழைத்தனர். அவர்கள் அல்லசானி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா, ராமபத்திரா, தூர்ஜடி மல்லண்ணா, சூரண்ணா, ராம ராஜபூஷணா மற்றும் தென்னாலி இராமகிருஷ்ணா ஆகியோராவார்.

புண்ணியத் தலங்களைத் தரிசிக்க தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொண்டான். அப்போது ஏகாம்பரநாதர் கோயில் தெப்ப உற்சவம் நடத்த வேண்டி இரண்டு ஊர்களைத் தானமாக அளித்தான். மேலும் இரண்டு சிறிய தேர்களைச் செய்தளித்துள்ளான். கி.பி. 1517இல் காஞ்சியில் பயணம் மேற்கொண்ட கிருஷ்ண தேவராயர் ஏகாம்பரநாதர் மற்றும் வரதராஜர் திருவிழாக்களின்போது கோயில் தேர்கள் செல்லும் பாதை தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்மன்னன் மற்றும் அவரது பெற்றோர் நினைவாக அருளாளப் பெருமாள் கோயில் விமானத்திற்குத் தங்கக் கவசம் இம்மன்னனால் ஏற்படுத்தப் பட்டுள்ளது. தன் மனைவி துர்காதேவியுடன் விஜயம் செய்த இம்மன்னன் 1000 வராகன் பொன் காணிக்கையும், பொன் கூடத்தில் துலாபாரமும் கொடுத்துள்ளான்.

அச்சுதராயன் (கி.பி. 1529-42)

கிருஷ்ணதேவராயனுக்குப் பின் அவனது ஒன்றுவிட்ட சகோதரன் அச்சுதராயன் பதவியேற்றான். கிருஷ்ணதேவராயன் இறந்த பின் சந்திரகிரி சிறையிலிருந்து விஜயநகரம் வரும்

வழியிலேயே திருப்பதி மற்றும் காளஹஸ்தி ஆகிய இடங்களில் அவனுக்கு மக்கள் முடிசூட்டி மகிழ்ந்தனர். அச்சுதராயனின் ஆட்சிக் காலம் மிகவும் குழப்பமானதாக இருந்தது. உள்நாட்டுக் கலகங்களும், அந்நியர் படையெடுப்பும், இராமராயரின் பேராசையுமே அக்குழப்பங்களுக்கு முக்கிய காரணமாக இருந்தன. காஞ்சியில் உள்ள இவனது கி.பி. 1533 - ஆம் ஆண்டு கல்வெட்டு, தனது முடிசூட்டு விழாவின் போது தனக்கு அளிக்கப்பட்ட ஊர்களைக் காஞ்சி ஏகாம்பரநாதர் மற்றும் வரதராஜர் கோயில்களுக்குச் சமமாகப் பிரித்தளிக்குமாறு கூறி, சாளுவ நாயகனிடம் அப்பணி ஒப்படைக்கப் பட்டது. ஆனால் சாளுவ நாயகன் ஏகாம்பரநாதர் கோயிலுக்கு அதிகமான ஊர்களை ஒதுக்கினான். இதனையறிந்த அச்சுதராயன் தாமே முன்னின்று சமமாகப் பிரித்தளித்தான்.

அச்சுதராயன் இறந்தவுடன் மரபு வழியுரிமை போராட்டம் தோன்றியது, கிருஷ்ண தேவராயரின் மருமகன் இராமராயன், சதாசிவருக்குப் பட்டம் சூட்டித் தாமே பேராட்சியளராக எட்டு ஆண்டுகள் திறம்படப் பணியாற்றினான்.

ஆரவீடு மரபினர்

ஆறு ஆண்டுகள் இராமராயனின் தம்பி திருமலை என்பவர், சதாசிவாராயன் சார்பாக ஆட்சி செய்தார். அக்காலத்தில் நாட்டில் குழப்பமும் கலவரமும் மிகுந்திருந்தன. கி.பி. 1570 -ல் திருமலை அரச பட்டத்தை வெளிப்படையாக ஏற்றார். திருமலை தமது மூன்று மகன்களையும் பேரரசின் ஒவ்வொரு பகுதிக்கும் பிரதிநிதிகளாக நியமித்தான். ஸ்ரீரங்கன் தெலுங்கு நாட்டிலும், இராமன் கன்னட நாட்டிலும், வேங்கடபதி தமிழ் நாட்டிலும் அரச பிரதிநிதிகளாக ஆட்சி செய்தனர்.

கி.பி. 1571-ல் திருமலை அரச பதவியை விட்டு விலகியவுடன் அவனின் மூத்த மகன் ஸ்ரீரங்கன் அரியணை ஏறினான். ஸ்ரீரங்கரால் முஸ்லிம்களின் தாக்குதல்களை நிறுத்த முடியவில்லை. ஆதலால் அவனுக்குப்பின் கி.பி. 1585-ல் அவனது

தம்பி இரண்டாவது வேங்கடன் பதவி ஏற்று கி.பி. 1614 வரை ஆட்சி செய்தான். கோல்கொண்டாவோடு போரிட்டு வெற்றி பெற்றதன் பயனாக தன் அரசைக் கிருஷ்ணா ஆற்றங்கரை வரை விரிவாக்கினான். உதயகிரியைக் கைக்கொண்டு. வேலூர் லிங்கம நாயக்கரை போன்ற பல கிளர்ச்சியாளர்களையும் கட்டுப்படுத்தினான். அரவீடு மரபில் தோன்றிய மன்னர்களுள் தலைசிறந்தவர் வேங்கடவன் என்பதில் ஐயமில்லை. இராமதேவரும் (கி.பி. 1617 - 30), அவருக்குப்பின் மூன்றாவது வேங்கடரும் (கி.பி. 1630-42) பெயரளவில் ஆட்சி புரிந்தனர். இப்பேரரசின் ஊக்கமும் செல்வாக்கும் குறைந்தது. கி.பி. 1642-ல் வேங்கடன் இறந்தபின் அவனது மருமகன் மூன்றாம் ஸ்ரீரங்கன் அரசரானான். இஸ்லாமியர்களின் படையெடுப்பால் தஞ்சாவூருக்கும் மைசூருக்கும் தப்பினார். செஞ்சி மற்றும் தஞ்சாவூர் ஆகிய பகுதிகள் பீஜப்பூர் சுல்தான்கள் கையில் சிக்கின. கி.பி. 1652க்குள் கர்நாடகம் முழுவதையும் இஸ்லாமியர்கள் கைப்பற்றினர். இருப்பினும் கி.பி. 1675-ஆம் ஆண்டு வரை மைசூரிலிருந்து மூன்றாம் ஸ்ரீரங்கன் ஆட்சி செய்தான். ஸ்ரீரங்கன் மறைவிற்குப் பின் விஜயநகரப் பேரரசும் மறைந்தது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள்

மதுராந்தகம் வட்டம்

அச்சிறுபாக்கம்

சென்னை - விழுப்புரம் நெடுஞ்சாலையில் சென்னையிலிருந்து 96 கி.மீ தொலைவிலும் மேல்மருவத்தூரிலிருந்து 5 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது. இவ்வூரிலுள்ள ஆட்சீஸ்வரர் சிவன் கோயில் திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகியோரால் பாடப் பெற்ற தலமாகும். இக்கோயிலினுள் உடையாட்சீஸ்வரர், எமையாட்சீஸ்வரர் என இரு மூலவர்களுக்கும் தனித் தனியே கருவறைகள் அமைக்கப்பட்டிருப்பது சிறப்பாகும். இங்குள்ள கல்வெட்டுகளில் தொன்மையானது முதலாம் இராஜேந்திர சோழனின் 3-வது ஆட்சியாண்டுக் (கி.பி. 1015) கல்வெட்டாகும். இவ்வூரை அச்சிறுபாக்கம் என்றே கல்வெட்டுகள் குறிக்கின்றன. மேலும், இவ்வூர் களத்தூர் கோட்டத்தில் தன்னாட்சி பெற்ற ஊராக இருந்த மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்தின் தென் எல்லையாக இருந்துள்ளது. 'பெரும்பேர்' என்ற ஊரும் மதுராந்தகத்தின் தென் எல்லையாக இருந்துள்ளதை அவ்வூர்க் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. மேலும் புலிபரக்கோயில், பழனையூர் ஆகிய இவ்விரண்டு ஊர்கள் மதுராந்தகத்தின் வட எல்லையாக இருந்துள்ளன என்பதை அவ்வூர்க் கல்வெட்டுகளால் அறியலாம்.

முதலாம் இராசேந்திரனின் காலத்தில் இவ்வூர் அச்சிறுபாக்கம் எனவும், இறைவன் மகாதேவர் எனவும் அழைக்கப்பட்டுள்ளார். முதலாம் குலோத்துங்கன் 43ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1113) 'ஆட்சிகொண்ட மகாதேவர்' என இறைவனின் பெயர் மாற்றம் அடைந்துள்ளது. இவனது காலத்திற்குப் பிந்தைய கல்வெட்டுகள் 'ஆட்சி கொண்ட மகா தேவர்' என்று அழைக்கப்பட்டதை தெரிவிக்கின்றன.

இரண்டாம் குலோத்துங்கச் சோழன் தனது சிறப்புப் பெயர்களில் ஒன்றான 'கலிகடிந்த சோழன்' என்ற சிறப்புப் பெயரில் செம்பியன் சாத்தனூர், முடியம்பாக்கம், சிறுகடுவம் பாக்கம், கடகவட்டி, புலியுன்னி ஆகிய கிராமங்களைச் சேர்த்து புதிய ஊரினை உருவாக்கி அதற்கு 'கலிகடிந்த சோழன் சாத்தனூர்' என்று பெயரிட்டான். இவ்வூரினை அச்சிறுபாக்கம் ஆட்சி கொண்ட மகாதேவன் கோயிலுக்குத் தனது அதிகாரியான குலோத்துங்கச் சோழ பிரம்மராயர் தந்த ஆலோசனையின் பேரில் தானம் அளித்துள்ளான்.

இரண்டாம் குலோத்துங்கன் விக்கிரம சோழபுர அபிஷேக மண்டபத்து முத்து பந்தலில் இருந்தபோது இவனின் அதிகாரியான விக்கிரம சோழ பிரம்மராயர் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒய்மா நாட்டிலுள்ள குறிப்பிட்ட நிலத்தினை அச்சிறுபாக்கம் கோயிலில் இவ்வரசனால் நிறுவப்பட்ட குலோத்துங்க சோழீஸ்வரமுடையார் இறைவனின் வழிபாட்டிற்கு தானம் அளித்தான்.

இரண்டாம் இராஜராஜனின் ஆட்சிக் காலத்தில் இப்பகுதியில் சிற்றரசனாக இருந்த செங்கேணி இராஜநாராயண சம்புவராயன் இக்கோயிலில் உணவளிக்க 'பாடிக்காவல்' வருவாயையும் காலை வழிபாட்டிற்காக இங்கு வசூலிக்கப்பட்ட தறி இறை, தட்டார் பட்டம், செக்குக்கடமை போன்ற வரி வசூலையும் இக்கோயிலுக்கு வழங்கினான்.

செங்கேணி அம்மையப்பன் பாண்டி நாடு கொண்டான் கண்டராசூரியன் என்கிற இராஜராஜ சம்புவராயன் மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சியில் இப்பகுதி செங்கேணி வம்ச சிற்றரசனாக இருந்துள்ளான். இவன் இக்கோயிலுக்குக் கி.பி. 1190 இல் இரண்டு தங்க ஆபரணங்களைத் தானமாக வழங்கியுள்ளான். மேற்கூறப்பட்ட இம்முழுப் பெயரையும் இவ்வூர்க் கல்வெட்டுத் தெரிவிப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதேபோன்று இவனது மகன் அத்திமல்லன் என்கிற குலோத்துங்க சோழச் சம்புவராயன் அச்சிறுபாக்கம், நெற்குன்றம், புலியுன்னி ஊர்களின் வரி வசூல்களை இக்கோயிலுக்கு கி.பி. 1193இல் தானமளித்தான்.

வெங்கலப் பாக்கத்தைச் சேர்ந்த பாலமுழான் வேளான் அம்மையப்பன் என்பவன் விளக்கெரிக்க 10 எருமைகளும் ஒரு குத்துவிளக்கும் தானமாக அளித்துள்ளான். மலை மண்டலத்தைச்

சார்ந்த புவனி விச்சாதிர தேவன் என்பவன் இறைவனுக்குத் திருப்பாவாடை மற்றும் நந்தவனத்தில் பணிபுரிபவர்களுக்கு இரு வீட்டு மனையும் வழங்கியுள்ள செய்தி கல்வெட்டுகளால் தெரிய வருகின்றன. சோழர் காலம் தொடங்கி தற்போது வரை இவ்வூர் சீரும் சிறப்புடன் விளங்குகிறது.

அரசர்கோயில்

இவ்வூரில் வரதராஜ பெருமாள் கோயிலொன்று உள்ளது. இக்கோயில் இறைவனது பெயர் திருவரசூர் எம்பெருமான் என்றழைக்கப்பட்டுள்ளார். வானவதரயரின் இளைய சகோதரர் ஆணையார் என்கிற அதியமான் தேவன் என்பவர் இவ்விறை வனுக்கு 40 பணத்திற்கு நிலம் ஒன்றினை வாங்கித் தேவதானமாக அளித்துள்ளான். மேலும் இரண்டாம் சுந்தர பாண்டியனின் 15வது ஆட்சியாண்டு (கி.பி. 1291) கல்வெட்டினால் பாத்தூரில் திருவரசு நாயனார் கோயில் அமைந்திருந்ததாகத் தெரிகிறது. ஆனால் தற்போது பாத்தூர், தனியாகவும், பாத்தூரிலிருந்து பிரிந்து இக்கோயில் உள்ள பகுதி அரசர்கோயில் என்ற தனி கிராமமாகவும் இருக்கின்றது.

அனந்த மங்கலம்

மதுராந்தகம் வட்டம் ஒரத்தியிலிருந்து 8 கி.மீ தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரின் மலை உச்சியில் இருதீர்த்தங்கரர் களின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவ்வுருவங்களின் கீழ் 'ரெட்ட நேமி அடிகள்' 'அரட்டராந நேமிகள்' என்ற எழுத்துப் பொறிப்புகள் காணப்படுகின்றன. இதனருகே முதலாம் பராந்தகனின் 38-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 945) வர்த்தமானப் பெரியடிகள் என்பவர் ஜினகிரியில் உள்ள ஒரு சமணத் துறவியின் உணவுக்காக ஐந்து கழஞ்சு பொன் அளித்த செய்தியைக் கூறும் கல்வெட்டுள்ளது.

தீர்த்தங்கரர் சிற்பங்களில், உள்ள எழுத்துப்பொறிப்பு பராந்தகன் கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டுள்ளதால் தீர்த்தங்கரர் சிற்பங்கள் கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படு கிறது. தற்போது சாமான் குண்ணு (சமணர் குன்று) என்றழைக்கப் படுவது, அப்போது ஜினகிரி என்றழைக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பகுதி சமணர்கள் வாழ்ந்த இடமாக இருந்ததால். 'நந்த மங்கலம்' என்பது அனந்தமங்கலம் என்று ஆகியுள்ளது.

முதல் குலேத்துங்கன் சோழன் காலத்திய 'அகஸ்தீஸ்வரர்' என்ற சிவன் கோயிலும் இங்குள்ளது. மூன்றாம் இராஜராசன் காலக் கல்வெட்டொன்று 'பாடி காவல்' வரியைத் திருப்பணிக்கு செலவிட்ட செய்தியைத் தெரிவிக்கிறது.

ஓரத்தி

கி.பி. 901-ஆம் ஆண்டில் இவ்வூர் 'உரத்தி' என்ற பெயருடன் இருந்திருக்கிறது. இவ்வூரில் வீரன் ஒருவன் வாள் கொண்டு தன் தலையைத் தானே அறுத்து தலைப்பலி கொடுப்பது போன்ற நவ கண்டம் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் உள்ள கல்வெட்டு மேற்பகுதி தமிழிலும் கீழ்ப்பகுதி கன்னடத்திலும் உள்ளது. ஓரத்தியிலுள்ள மலையில் சமணத் துறவிகள் வாழ்ந்தனர் என்பதற்கு அடையாளமாக, இவ்வூர் மலையில் சமணர் படுக்கைகள் இரண்டு காணப்படுகின்றன. இவ்வூர் ஏரியின் மதகினை நெடுங்கல் நாட்டு ஆற்றூரில் வாழ்ந்த சமணர்கள் எடுத்துள்ளதை இவ்வூர் கல்வெட்டால் அறியலாம்.

ஓரத்தி மற்றும் இவ்வூரினைச் சுற்றியுள்ள பகுதிகளில் கற்காலக் கருவிகள் கிடைத்துள்ளதால் இப்பகுதி கற்கால முதல் மக்கள் வாழ்விடமாக இருந்து வருகின்றது எனலாம்.

ஓணம்பாக்கம்

மதுராந்தகம் வட்டத்தில் மேல்மருவத்தூரிலிருந்து செய்யூர் செல்லும் சாலையில் 9கி.மீ. தொலைவில் இச்சிற்றூர் உள்ளது. இவ்வூருக்குக் கிழக்கே ஊசிமலை மற்றும் கருப்புக்குன்று ஆகிய இரு குன்றுகள் உள்ளன. ஊசிமலை குரவன் குன்று, பஞ்சபாண்டவ மலை என்றும் அழைக்கப்படுகிறது. இந்த மலையில் ஐந்து சமணப்படுக்கைகள் காணப்படுகின்றன. இதனருகில் இயற்கை சுனை ஒன்று அமைந்துள்ளது. இப்படுக்கைகளின் தலைப்பகுதியில் இருந்த தமிழ் பிராமி எழுத்துக்கள் தற்போது ஆங்கில எழுத்துக்களாக மாற்றப்பட்டுள்ளன.

இம்மலை அருகே கருப்புக் குன்று அமைந்துள்ளது. இம்மலையின் உச்சிக்கு செல்லும் பாதையில் சிறிய கோட்டம்

போன்ற அமைப்புடன் பார்ச்வநாதர் கோயில் உள்ளது. இப்பார்ச்வநாதர் சிற்பத்தின் தலைக்குமேல் ஐந்து தலை நாகம் விரிந்த நிலையிலும், அவரின் இருபக்கமும், யக்ஷன், யக்ஷியும் நின்ற நிலையில் உள்ளனர். பார்ச்வநாதர் கோயில் குன்றின் இடது புறத்தில் கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரந்தக் கல்வெட்டொன்று காணப்படுகிறது. 'இருபத்திரண்டு' என்ற சமண சமயத்தைச் சார்ந்தவர்களின் சமயம் மற்றும் சமுதாயத்தை நிர்வகிக்கும் குழுவை நிறுவிய வசுதேவ சித்தாந்த படாரர் என்ற சமண முனியால் இக்கோயில் எடுக்கப்பட்டுள்ள செய்தியை அக்கல்வெட்டு தெரிவிக்கிறது. எழுத்தமைதியும் சிற்பத்தின் அமைதியும் மேலே உள்ள சிகரம் மாமல்லபுரத்திலுள்ள கலை அமைப்புகளோடு ஒத்திருப்பதால் இது கி.பி. 8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பதை அறியமுடிகிறது. இப்பாறையைக் கடந்து சிறிது தூரம் செல்ல மற்றொரு பாறையில் ஆதிநாதர் உருவமும் அதனையடுத்து 24வது தீர்த்தங்கரரான மகாவீரரின் உருவமும் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இக்குன்றின் மேற்குப் பகுதியில் சில சமணப்படுக்கைகள் காணப்படுகின்றன. இப்படுக்கை மேல் உள்ள குன்றில் நீர் ஒழுகாத வண்ணம் விளிம்பு வெட்டப் பட்டுள்ளது. மற்றும் படுக்கைக்கு முன் பந்தல் அமைக்க குன்றில் மேல்பகுதியில் இரு பக்கமும் இருகுழிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

இம்மலையில் உச்சியில் சிறிய கோயிலொன்று ஏற்படுத்த வரைபடமும் கோயிலை ஏற்படுத்த செதுக்கத் தொடங்கியதன் எச்சங்களும் காணப்படுகின்றன. இவ்வூர் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் சிறந்த சமண சமயத் தலமாக விளங்கியுள்ளது.

கடப்பேரி

மதுராந்தகம் ஊரின் உட்புறம் கிழக்குப் பகுதியில் உள்ள வெண்காட்டீஸ்வரர் கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் இறைவன் பெயரைச் 'சுவேதாரண்யேசுவரர்' என்று வடமொழிப் படுத்திச் சுட்டுகின்றனர்.

இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டது இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரச் சோழனின் 12-ஆவது

ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். முதலாம் இராசராசனின் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. முதலாம் குலோத்துங்கனின் 15-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1085) பல்லவ மரபில் செங்கேணிக்குடியில் தோன்றிய செங்கேணி சாத்தன் சோழனான வாணாதிராஜர் என்பவர் திருவெண்காடுடைய மகாதேவர் கோயிலைத் திருக்கற்றளியாக எடுப்பித்தார் என்று கல்வெட்டு கூறுகிறது. எனவே முன்பிருந்த கோயில் கருவறை மாற்றப்பட்டு குலோத்துங்கனின் 15-ஆவது ஆட்சியாண்டில் திருக்கற்றளியாக மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.

சுந்தரச்சோழன் நீண்ட ஆயுள்பெறவும் வெற்றிபெறவும் வேண்டி செம்பியன் வலிவலநாட்டு மூவேந்தவேளான் என்பவன் இக்கோயிலுக்கு நிலம் தானம் அளித்துள்ளான். முதலாம் இராசராசன் காலத்தில் இக்கோயிலைச் சுற்றி (மாடவீதி) திருவெண்காட்டுப் பெருந்தெரு அமைத்து இவற்றில் சிவபிராமணர்கள், உவச்சர்கள், தபஸ்விகள் மற்றும் தேவரடியார் ஆகியோர் குடியேற இவ்வூர் மகாசபையினர் அனுமதியளித்துள்ளனர்.

இக்கோயில் கல்வெட்டுகள் இறைவனைத் 'திருவெண் காடுடைய மகாதேவர்' 'திருவெண்காடு உடையார்'. என்றே குறிப்பிட்டுள்ளன.

இக்கோயிலருகே இருந்த தில்லைவாழ் அந்தணன் மடத்தில் சிவயோகிகளுக்கும், துறவிகளுக்கும் உணவளித்துள்ளனர். செங்கேணிச்சாத்தன் சோழன் இக்கோயில் பூசை, திருவிழா முதலிய வற்றை நடத்துவதற்காக 2000 பொற்காசுகளை இவ்வூர் சபையாரிடம் அளித்தான். இக்காசுகள் மூலம் என்றத்தூர் எனும் ஊரைத் தேவதானமாக இக்கோயிலுக்கு விட்டனர். இதில் குறிப்பிடப் பட்டுள்ள என்றத்தூர் என்ற ஊர் தற்போது 'ஜமீன் என்டத்தூர்' என்று வழங்குகிறது.

இவ்வூரில் வியாபாரிகள் வாழ்ந்த தெரு 'புவனமுழு துடைப் பெருந்தெரு' என்றழைக்கப்பட்டுள்ளதை விக்கிரம சோழனின் 15-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

குலசேகரப் பாண்டியனின் படைத்தலைவன் பாண்டிய மண்டல கீழ்க்களக் கூற்றத்து சோழமாணிக்க நல்லூர் என்னும்

மணப்படை வீட்டைச் சேர்ந்த கைக்கோள முதலிகளில் விரதமுடித்த பெருமாள் மகன் திருநெல்வேலி உடையான் என்பவன் மதுராந்தகத்தில் தங்கினான். அவன் திருவெண்காட்டு மகாதேவன் கோயிலின் திருநடை மாளிகையில் பாண்டீசுவர முடைய நாயனார் மற்றும் புவனபதி நாச்சியார் என்னும் திருமேனிகளை எழுந்தருளச் செய்து, பூசைகளுக்காக நிலமும் வழங்கியுள்ளான்.

கருங்குழி

கருங்குழிக்கோட்டை : சென்னையிலிருந்து 80 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இக்கோட்டை காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தில் உள்ளது. இக்கோட்டை கி.பி. 17ஆம் நூற்றாண்டில் முகமதியரால் கட்டப்பட்டதாகும். கருங்கல்லால் கட்டப்பட்ட இக்கோட்டைக்குத் தெற்கே கிளியாறு என்ற ஆறு இயற்கை அரணாக உள்ளது. இது சிறு ஜமீன்களிடமிருந்து வரியாக வசூலிக்கப்பட்ட தானியங்களைச் சேமித்து வைக்கப் பயன்பட்டது.

இக்கோட்டை கி.பி. 1750-இல் பிரஞ்சுக்காரர்களின் வசம் இருந்தது. பின்னர் கி.பி. 1759 - இல் சர் அயர் கூட் என்னும் பிரிட்டிஷ் தளபதி வந்தவாசிக் கோட்டையை முற்றுகையிட்டு வென்ற பின்னர் கருங்குழிக் கோட்டையை ஆங்கிலேயர்கள் கைப்பற்றினார்கள். கி.பி. 1780 - இல் நடைபெற்ற ஹைதர் அலியின் படையெடுப்பால் இக்கோட்டை ஹைதர் அலியின் கட்டுப்பாட்டிற்கு வந்தது. பின்பு கி.பி. 1781இல் சர் அயர் கூட் மற்றும் தளபதி டேவிஸ்டனின் ஆயிரம் வீரர்கள் அடங்கிய பெரும்படை இக்கோட்டையை மீண்டும் கைப்பற்றியது.

இக்கோட்டையைப் பற்றி ஆர்மி என்பவர் எழுதிய குறிப்பு வருமாறு ''இக்கோட்டையின் நான்கு புறங்களும் பெரும் மதில்களால் சூழப்பட்டுள்ளது. இதன் சுற்றளவு 1500 மீ. ஆகும். இது கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது.'' இதன் இரண்டு மூலைகளில் இரண்டு கொத்தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோட்டையின் தளபதி ஐரிஷ் நாட்டைச் சேர்ந்த கர்னல் ஓர்நல்லி ஆவார். இக்கோட்டை கி.பி. 1782-இல் சென்னை கவர்னர் லாட் மக்காட்னி அவர்களது ஆணையின் பேரில் இடித்துத் தள்ளப்பட்டது. தற்போது

கோட்டையானது முற்றிலுமாகச் சிதைந்து வெறும் கோட்டை மேடாக சுமார் 15 ஏக்கர் பரப்பளவில் காணப்படுகிறது.

நெடுங்கல்

கி.பி. 809 - இல் 'தந்திவர்மன் காலத்தில் ஈதுரக் கோட்டத்தில் 'நெடுங்கல்' ஒரு நாட்டுப் பிரிவாக இருந்துள்ளது. தற்போது இவ்வூர் 'நெடுங்கல்' என்னும் அதே பெயருடன் அச்சிறுபாக்கத்தி லிருந்து 8 கி.மீ தொலைவில் உள்ள கரசங்கால் இரயில் நிலையத்திற்கு வடமேற்கே அமைந்துள்ளது. இங்கு செங்கல்லால் கட்டப்பட்ட இடிந்தக் கோட்டையின் சிதிலங்கள் காணப்படுகின்றன. இவ்விடம் 'கோட்டைக் கரைமேடு' என்றழைக்கப்படுகிறது. அங்கே 'கோட்டைக் காத்தான்' என்ற ஒரு கோயிலும் இருந்திருக்கின்றது.

நெடுங்கல்லிருந்து கிழக்கே 5 கி.மீ. தொலைவில் 'ஆத்தூர்' என்ற ஊர் உள்ளது. இவ்வூர் 'நெடுங்கல் நாட்டுப் பிரிவில் ஆற்றூர்' எனக் கல்வெட்டில் அழைக்கப்பட்டுள்ளது. ஆற்றூரிலிருந்த சமணர்கள் ஒரத்தி ஏரிக்கு மதகு எடுத்துள்ளனர், இதனை ஒரத்தி மதகு கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

புலிப்புரக் கோயில்

புலிப்புரக் கோயில் என்றழைக்கப்படும் இவ்வூரிலுள்ள வியாக்ரபுரீஸ்வரர் கோயில் கல்வெட்டுகளில் இவ்வூர் 'மாத்தூர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவும் ''மதுராந்தக சதுர்வேதி மங்கலத்தின் வடபிடாகை மாத்தூர் உடையார் திருப்புலிப்பத நாயனார்'' என்றதால் மதுராந்தகத்தின் வடதிசைச் சிற்றூராக மாத்தூர் இருந்துள்ளது. 'திருப்புலிப்பத நாயனார்' என்று அழைக்கப்பட்ட இவ்விறைவன் பெயரைப் பின்னர் வடமொழியில் 'வியாக்ரபுரீஸ்வரர்' என்று அழைக்கின்றனர். உத்திரமேரூர் அருகே உள்ள திருப்புலிவனம் இறைவனும் வியாக்ரபுரீஸ்வரர் என அழைக்கப்படுவது குறிப்பிடத் தக்கது. இவ்வூர் இறைவனின் பெயரால் புலிப்புரக்கோயில் எனப் பெயர் மாற்றம் அடைந்துள்ளது.

விஜயநகர அரசர் பிரபுடதேவ மகாராயரின் இப்பகுதி அதிகாரியான அன்னதாத தண்ணாயக்கரின் மகன் தன்மராயர் உடல் நலன் பெறுவதற்காக நிலம் தானமாக வழங்கப்பட்டுள்ளது.

இக்கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் வாழ்ந்த கைக்கோளர், சாலியர், வாணிகர், கோயிலங்காடி, சேனையங்காடி மற்றும் அனைத்து புறக்கலனைகள் உட்பட முன்புள்ள குடிகளும் பின்னர் குடியேறுபவர்களையும் ஏற்றுக் கொண்டு அவர்களிடம் வசூலிக்கப் படும் வரிகளிலிருந்து பூசைகளும் திருப்பணிகளும் நடைபெற்றன. இராசநாராயணன் கி.பி. 1361-இல் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்வித்துள்ளான். விஜயநகர அரசன் விஜயபூபதிராயர் (கி.பி. 1418) இவ்வூரில் வாழ்ந்த கைக்கோளர்களுக்கான விதிக்கப்பட்ட வரிகளைக் குறைத்துள்ள செய்திகளைக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

மதுராந்தகத்திலுள்ள திருவெண்காடுடையார் கோயிலுக்கும் மாத்தூர் திருப்புலிபகவர் கோயிலுக்கும் உரிய நிலத்தினை தனித் தனியே பிரித்துக் கொண்டதை மற்றொரு கல்வெட்டுத் தெரிவிக் கிறது.

பெரும்பேர்

காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில் சென்னை - திருச்சி நெடுஞ்சாலையில் தொழுப்பேடிலிருந்து 3கி.மீ தொலைவில் இச்சிற்றூர் அமைந்துள்ளது. இவ்வூர் தான்தோன்றீஸ்வரர் சிவன் கோயில் 'சிறுபேறு' செல்லும் வழியில் ஏரிக்கரைக்கு அருகில் உள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூர் 'பெரும்பேறூர்' என்றும் பெரும் பேறூரான திரிபுவன நல்லூர்' என்றழைக்கப்படுகிறது. இக்கோயில் இறைவனைப் பெரும்பேறூர் ஆளுடையார் ஸ்ரீகரணீஸ்வர முடையார், திருத்தான் தோன்றீ மகா ஸ்ரீ கரணஈஸ்வரமுடையார் என்று கல்வெட்டுகள் சுட்டுகின்றன. பெரும்போறூர் அப்போது 'தனியூர் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்தின் தென் பிடாகை பெரும்பேறூர்' என்று குறிப்பிட்டுள்ளதால் மதுராந்தகம் ஊரின் தென் பகுதிச் சிற்றூராக இவ்வூர் இருந்ததை அறியமுடிகிறது. இதேபோல் புலிப்பரக் கோவில், மற்றும் பழையனூர் ஆகியவை மதுராந்தகத்தின் வடபகுதிச் சிற்றூர்களாக இருந்தன என்பதை அவ்வூர்க் கல்வெட்டு களால் அறியமுடிகிறது.

திருத்தான்தோன்றி ஈஸ்வரர்க்கு அமுது சமைக்கத் தேவையான 'திருச்செந்நெல் நடை' மற்றும் திருவாராதனை செய்வதற்காக மதுராந்தக சதுர்வேதி மங்கலத்து மகாசபையார் நிலம் அளித்

துள்ளனர்.

கருவறையில் உள்ள லிங்கதேவர் செப்புக் கலசம் பொருத்திய நிலையிலே காட்சியளிக்கிறார். இக்கோயிலின் வடமேற்கு மூலையில் பல்லவர் காலத்து அழகிய கொற்றவைச் சிற்பம் ஒன்று காணப் படுகிறது. பல்லவர் காலத்தில் செங்கற்றளியாக இருந்தது, சோழர் காலத்தில் கற்றளியாகக் கட்டப்பட்டுள்ளது.

மேலும் இவ்வூரில் கைலாசநாதர், ஆதிகேசவப் பெருமாள், மற்றும் மலை மீது சுப்ரமணியர் சுவாமி ஆகிய கோயில்கள் உள்ளன.

மதுராந்தகம்

''ஜெயங்கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துத் தனியூர் மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்து'' என்ற பரகேசரிவர்மன் முதலாம் பராந்தமனின் 7-ஆம் ஆண்டு (கி.பி. 907-955) கல்வெட்டு மூலம் இவ்வூர் 10-ஆம் நூற்றாண்டு முதல் 'மதுராந்தகம்' என்ற பெயரிலே அழைக்கப்பட்டு வருவது சிறப்பாகும்.

திருவாலாங்காட்டுச் செப்பேடு முதலாம் பராந்தகனை 'மதுராந்தகன்' எனப் போற்றுகிறது. இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரச் சோழனைக் கொடும்பாளூர் கல்வெட்டு 'மதுராந்தகன் சுந்தரச் சோழன்' என்று சுட்டுகிறது. மேலும் மதுராந்தகன் உத்தமச் சோழன், மதுராந்தகன் கண்டராதித்தன் ஆகியோரும் அப்பெயர் பெற்றிருந் தனர். முதலாம் இராசேந்திரனின் இயற்பெயர் மதுராந்தகன் என்பதாகும். வீரராசேந்திரனுக்கும் மதுராந்தகன் எனும் பெயர் வழங்கியது. இரண்டாம் இராசேந்திரன் மகளுக்கு 'மதுராந்தகி' என்றும் பெயர் வழங்கியுள்ளது.

முதலாம் பராந்தகன் முதன் முதலில் மதுரையைக் கைப்பற்றி சோழப் அரசை விரிவுபடுத்தி 'மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரிவர்மன்' என்றழைக்கப்பட்டுள்ளான். 'மதுராந்தகன்' என்ற சொல்லுக்கு 'மதுரைக்கு (பாண்டிய நாட்டிற்கு) அழிவினை உண்டாக்கியவன் என்ற பொருளாகும். சோழர் ஆட்சியைத் தொண்டை மண்டலம் வரை விரிவுபடுத்தி ஆட்சி செய்தான் இவன்.

இவனின் மேற்கண்ட 7ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு 'மதுராந்தகச் சதுர்வேதி மங்கலம்' என்று சுட்டுவதிலிருந்து. முதலாம் பராந்தகனே தன்னுடைய பெயரில் மதுராந்தகச் சதுர்வேதிமங்கலம்' எனப் பெயரிட்டு இவ்வூரைத் தானமாகக் கொடுத்துச் சிறப்பு பெற்றான் எனத் தெரிகிறது.

கோதண்டராமன் கோயில் / ஏரிகாத்த ராமர் கோயில் : ராமனும், சீதாதேவியும் கைகோர்த்து நின்ற நிலையில் கிழக்கு நோக்கி அமைந்துள்ள இக்கோயிலில் கி.பி. 1796-ல் ஆங்கிலேயக் கலெக்டர் வியோனல் பிளேசுதுரை என்பவரால் இவ்வூர் ஏரி உடையாமல் காக்கப்பட்டதால் இக்கோயிலில் உள்ள தாயார் சன்னதி இவரால் கட்டிக் கொடுக்கப்பட்டது. அதன் பிறகே இக்கோயில் 'ஏரி காத்த ராமர் கோயில்' என்றழைக்கப்பட்டு வருகிறது. இக்கோயிலில் உள்ள முதலாம் பராந்தகனின் கல்வெட்டில் இவ்வூர் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலம் என்றும் இறைவன் திரு அயோத்திய பெருமான் என்றும் கூறப்பெறுகிறது. அதேபோல் விக்கிரமச் சோழனின் கல்வெட்டும் (கி.பி.1125) திரு அயோத்திப்பெருமான் என்றே சுட்டுகிறது.

ராமானுஜர் முதன் முதலில் பெரிய நம்பியை கி.பி. 1045-ல் மதுராந்தகம் கோதண்டராமன் கோயிலில் சந்தித்தார். அப்போது பஞ்சலுமஸ்காரம்' 'மந்திரார்த்தினம்' 'த்வயம்' தத்துவங்களை உபதேசித்துள்ளார் என்பதை இராஜமானுஜரின் வரலாற்றிலிருந்து அறிகிறோம்.

முதலாம் பராந்தகன் இக்கோயிலுக்கு தேவதானமாக நிலம் அளித்துள்ளான். நில எல்லைகளைக் குறிப்பிடும்போது தற்போது உள்ள செங்காட்டூர், செய்யூர், பெரும்பாக்கம் ஆகிய ஊர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மதூர்

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தில் சென்னை - விழுப்புரம் நெடுஞ்சாலையில் அச்சிறுபாக்கத்திலிருந்து எலப்பாக்கம் செல்லும் சாலையில் 9 கி.மீ. தொலைவில் மதூர் என்ற இச்சிற்றூர் உள்ளது. இவ்வூரில் ஸ்ரீபூமி நீளா சமேத ஸ்ரீ மாதவப்

பெருமாள் கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறையில் திருமால் ஸ்ரீதேவி பூதேவியாருடன் நின்றநிலையில் காட்சியளிக் கிறார். இக்கோயிலின் அதிட்டானப் பகுதி வரை பழைய கருங்கற்கல் அமைப்பாலும் ஏனையப் பகுதி முழுவதும் தற்போதைய கட்டுமானமாக உள்ளது. கோயில் முன் தீபஸ்தம்பம் ஒன்று உள்ளது. இக்கோயிலின் நிலைகால் மீதிருந்த பலகைகல் கோயிலின் அருகே தனியாக வைக்கப்பட்டுள்ளது. இப்பலகைக் கல்லில் கல்வெட் டொன்று உள்ளது. இக்கல்வெட்டு கோவிந்த உடையார் என்பவர் இக்கோயிலை நிர்மாணித்துள்ள செய்தியைத் தெரிவிக்கிறது. மேலும் இக்கல்வெட்டில் எழுத்தமைதியைக் கொண்டு இக்கோயில் கி.பி. 16-17ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பட்டிருக்கலாம் என்பதை அறியமுடிகிறது.

செய்யூர் வட்டம்

ஆலம்பரை

தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னமாக உள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டத்தில் கிழக்குக் கடற்கரைச் சாலையில் கடப்பாக்கத்திலிருந்து கிழக்கே 3 கி.மீ. தொலைவில் கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளது. சங்க காலத்தில் இவ்வூர் இடைக்கழி நாட்டின் ஒரு பகுதியாக இருந்துள்ளது. சங்க இலக்கியங் களில் ஒன்றான சிறுபாணற்றுப்படையைப் பாடிய நல்லூர் நத்தத்தனார் இவ்வூரைச் சேர்ந்தவர். நல்லூர் நத்தத்தனாரைக் குறிப்பிடும்போது இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுவதன் மூலம் அறியமுடிகிறது. முற்காலத்தில் சோபட்டினம் என்றழைக்கப்பட்ட மரக்காணம் இவ்வூருக்கு அருகில் உள்ளது. ஆலம்பரைக்கு அருகில் உள்ள வெடாலில் உள்ள முதலாம் இராஜராஜனின் 9ஆவது ஆட்சிக்காலக் கல்வெட்டில் இடைக்கழி நாட்டுக்கோன் பற்றிய குறிப்பும் கிடைக்கின்றது. சங்ககாலம் முதல் தொடர்ந்து இவ்வூரின் வரலாறு கிடைக்கின்றது. மேலும் இப்பகுதியை அகழாய்வு மேற்கொண்டால் பல புதிய வரலாற்றுச் செய்திகள் வெளிப்படும். ஆலம்பறைக் கடற்கரையில் கட்டப்பட்டுள்ள கோட்டை முகமதியர் காலத்துக் 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். நவாப் காலத்தில் கோட்டை யாக மட்டுமின்றி நல்ல துறைமுகமாகச் செயல்பட்டுள்ளது. தற்போது இக்கோட்டை இடிந்து சில பகுதிகள் மட்டும் காணப்படுகின்றன.

இக்கோட்டையின் மதில் சுவர்கள் சுமார் 100 அடி உயரம் கொண்டதாகும். பிரெஞ்ச் கவர்னரின் துபாஷாக இருந்த ஆனந்தரங்கம் பிள்ளை அவர்கள் இக்கோட்டையைப் பற்றித் தனது நாட்குறிப்பில் 'ஆலம்பர்வா', 'ஆலம்புரவி' எனக் குறிப்பிட்டுள்ளார். பிரெஞ்ச்

கவர்னராக டூப்ளக்ஸ் இருந்தபோது அதேகாலகட்டத்தில் கி.பி. 1736 முதல் 1790 வரை இப்பகுதியை கர்நாடக நவாப் தோஸ்த் அலிகான் ஆட்சி செய்துள்ளான்.

தோஸ்த் அலிகான், பிரெஞ்ச் கவர்னர் டூப்ளக்ஸ் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆலம்பறையில் காசு தயாரிக்கும் தொழிற் சாலையிலிருந்து (மின்ட்) காசு அச்சடித்து அனுப்ப கி.பி. 1736 இல் அனுமதி அளித்தார். ஆலம்பரை மற்றும் பாண்டிச் சேரி ஆகிய இடங்களிலும் காசுச் சாலைகள் இருந்துள்ளன. இத்தொழிற்சாலையி லிருந்து வெளியிட்ட காசுகள் 'ஆலம்பரை காசு' 'ஆலம்பறை வராகன்' என அழைக்கப்பட்டன. இந்த 'ஆலம்பறை வராகன்' மூன்று ரூபாய்க்குச் சமமானதாக இருந்தது. பாண்டிச்சேரி காசுத் தொழிற் சாலைக்குத் தலைமையாக ஆலம்பரையைச் சேர்ந்த 'போத்திபத்தன்' என்ற ஆசாரியை நியமித்து ஓராயிரம் வராகன் அளித்துள்ளனர்.

தோஸ்த் அலிகானின், கீழிருந்த இமாம் சாகிப் என்பவர் 50,000 வராகன் காசுகளைச் சுப்பையா, இரங்கப்பச் செட்டியார் மூலம் அனுப்பியுள்ளனர். மேலும் 50,000 வராகன் வேண்டி 1,00,000 பாண்டிச்சேரி வெள்ளிக் காசுகளை அளித்துள்ளனர்.

இமாம் சாஹிப் மற்றும் பிரெஞ்சு கவர்னர் இருவருக்கு மிடையே நட்புறவு ஏற்பட்டது. இமாம் சாகிப் பாண்டிசேரி சென்று கவர்னருக்கு வளையல் மற்றும் துணிமணிகளை அளித்தான். இமாம் குடும்பத்தினர் ஆலம்பரை கோட்டையில் வசித்து வந்தனர். அப்போது இமாம் சாகிப்பின் மனைவி பாண்டிச்சேரி கோட்டைக்குச் சென்றார். அறையில் ஓய்வு எடுக்கும்போது துணியில் தீப்பிடித்து உடலில் காயங்கள் ஏற்பட்டது. மங்களா என்ற பெண் தீவிர சிகிச்சை அளித்தும் பயனில்லாமல் இறந்தார். பின்னர் ஆலம்பரை கோட்டையில் இவரது உடல் புதைக்கப்பட்டது. ஆலம்பரை துறைமுகத்திலிருந்து உப்பு, நெய், மற்றும் துணிவகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான தோஸ்த் அலிகான் மற்றும் முசாபர் ஜங்கின் மருமகனான சந்தா சாகிப்பிற்கு, பிரெஞ்ச் கவர்னர் டுப்ஸக்ஸ் ஆதரவளித்தார். இதன் பிரதிபலனாகக் கி.பி. 1750 இல் ஆலம்பரைக் கோட்டையை முசாபர்ஜங் அவர்கள் டூப்ளக்ஸிடம் கொடுத்தார்.

பிரிட்டிஷ் இராணுவம் கி.பி. 1760இல் பாண்டிச்சேரிக்குள் நுழைந்து தாக்கினர். இதன் பின்னர் பாண்டிச்சேரி அவர்கள்

வசமானது. இதே ஆண்டில் சர் அயர் கூட் வசம் ஆலம்பரைக் கோட்டை சென்றது.

ஆலம்பரைக் கோட்டையின் மேற்கில் கால்வாய் ஒன்று உள்ளது. இக்கால்வாய் கி.பி. 1878இல் பிரிடடிஷ் கவர்னர் பக்கிங்காம் அவர்களால் உருவாக்கப்பட்டதாகும். இக்கால்வாய் ஆந்திரபிரதேசம் கிருஷ்ணாநதியிலிருந்து பாண்டிச்சேரி வரை 260 கி.மீ. தொலைவு உடையதாகும். போக்குவரத்து வசதியில்லாததால் உருவாக்கப்பட்ட இக்கால்வாய், உருவாக்கிய 'பக்கிங்காம்' பெயராலே 'பக்கிங்காம் கால்வாய்' எனப் பெயர் பெற்றது. இக்கால்வாய் வழியாக அரிசி, உப்பு, விறகு, கருவாடு போன்றவை மரக்காணம் முதல் சென்னை வரை படகு மூலம் எடுத்துச் செல்லப்பட்டன. 1967-இல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் இக்கால்வாய் முழுவதும் மண் மூடியதால் தொடர்ந்து போக்குவரத்து நடை பெற இயலவில்லை.

இந்த ஆலம்பரை கோட்டை மற்றும் இத்துறைமுகம் தமிழக வரலாற்றில் முக்கிய பங்கு வகித்தது. தற்போது அழிந்த நிலையில் உள்ள இக்கோட்டை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இந்தளூர்

அச்சிறுபாக்கத்திற்கு தென் கிழக்கே 5 கி.மீ தொலைவில் இந்தளூர் என்ற இச்சிற்றூர் உள்ளது. இவ்வூரிலுள்ள விநாயகர் கோயிலுக்கு முன்பாகக் 'கோழி நினைவுக்கல்' ஒன்று காணப்படுகிறது. இந்நினைவுக் கல்லைத் தெய்வமாக இவ்வூர் மக்கள் வழிபட்டு வருகின்றனர். இக்கல்லில் சேவல் உருவம் ஒன்று செதுக்கப் பட்டுள்ளது. இவ்வுருவத்தின் மேற்பகுதியில் 7ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியைக் கொண்ட வட்டெழுத்துக் கல்வெட்டொன்று காணப்படுகிறது. அக்கல்வெட்டின் வாசகம் ''கீழச்சேரி கோழி பொடு கொத்த'' என்பதிலிருந்து கீழச் சேரியை சேர்ந்த கோழி ஒன்று பகைக் கோழியுடன் போரிட்டு இறந்துள்ளது. இதனின் வீரத்திற்காகக் இவ்வூர் மக்களால் எடுக்கப்பட்ட நினைவுக் கல்லாகும் இது. பறவைக்காக எடுக்கப்பட்ட நினைவுக் கல் இது ஒன்றே.

பரமேஸ்வரமங்கலம்

பாலாற்றின் தென்கரையில் இவ்வூரும் வடகரையில் வாயலூர் என்ற பல்லவர்காலச் சிறப்பு பெற்ற ஊரும் உள்ளன.

கைலாசநாதர் கோயில் : இங்கு பல்லவ மன்னன் நிருபதுங்க வர்மனின் 15 மற்றும் 16-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் கோயில் வெளியே உள்ள கணபதி சிலை அருகே உள்ள தனிப் பலகை கல்லில் காணப்படுகிறது. பரமேஸ்வர மங்கலம் சைலேஸ்வரம் என்னும் இக்கோயில் கணபதி சிலையையும், இக்கணபதிக்கு தனிச் சிறு கோயிலையும் தண்டியக்கிழார் பாண்டிய கிரமவித்தர் மனைவி தேவச்சாணி என்பவள் எடுப்பித்துள்ளாள். சைலேஸ்வரம் கோயிலில் மதிய உணவு அளிக்கவும் விளக்கு ஒன்றினை வைப்பதற்கும் மண்ணைக்குடி விழுப்பரையர் மகன் நந்திநிறைமதி என்பவன் 11 கழஞ்சு பொன்னை இக்கோயில் கணப்பெருமக்களிடம் அளித்துள் ளான். அப்போது இக்கோயிலின் பெயர் சைலேஸ்வரம் என்றும் ஊரின் பெயர் 'பரமேஸ்வரமங்கலம்' என்றழைக்கப்பட்டுள்ளது.

செண்பகேஸ்வரர் : இவ்வூரின் புறப்பகுதியான நந்தத்தில் செண்பகேஸ்வரர் என்ற இக்கோயில் அமைந்துள்ளது. இங்கு முதலாம் இராஜராஜன், முதலாம் குலோத்துங்கன், மற்றும் மூன்றாம் இராஜராஜனின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் மூலம் இவ்வூர் இராஜராஜனின் பட்டப்பெயர்களின் ஒன்றான 'நிகரிலிச்சோழ சதுர்வேதிமங்கலம்' என்று அழைக்கப்பட்டுள்ளது தெரிகிறது. இக்கோயில் பராந்தகன் காலத்தைச் சார்ந்தது. பின்னர் இக்கோயில் மறுசீரமைப்பு செய்து கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் விமானம் மூன்று தளங்களைக் கொண்டுள்ளது. தேவகோட்டங்களில் தென்பகுதியில் பிட்சாடனர், கணபதி, ஆலமர்ச் செல்வர் (தட்சணா மூர்த்தி) ஆகிய உருவங்களும் மேற்குப் பகுதியில் அடிமுடிகாணா அண்ணல் (லிங்கோத்பவர்) உருவமும், வட பகுதியில் பிரம்மா, துர்கை, அரிகரன் ஆகிய உருவங்களும் வைக்கப்பட்டுள்ளன.

தென்பகுதி கோட்டத்திலுள்ள பிட்சாடனர் உருவமும், வடபகுதிக் கோட்டத்திலுள்ள அரிஅரனின் உருவமும், உத்தம சோழனின் காலத்தில் கோயில் மறுசீரமைப்புச் செய்யும் போது வைக்கப்பட்டதாகும்.

இக்கோயிலில் பல்லவ கால வலம்புரிவிநாயகர் மற்றும் உடைந்த நிலையில் இரு துவாரபாலகர்கள் சிற்பங்கள் உதிரியாகக் கிடக்கின்றன.

வெடால்

வெடால் சிவன் கோயில் கல்வெட்டுகளில் காலத்தால் தொன்மையானது முதலாம் இராஜராஜனின் 9-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 994) கல்வெட்டாகும். இக்கல்வெட்டில், பல்லவன் இடைக்கழிநாட்டுக் கோன் என்னும் ஏறன் சுத்தியின் மனைவி குளிர்கோயில் என்பவள், கூத்தப்பெருமான் (நடராஜர்) உமாபட்டாலரகி திருமேனிகள் உள்ள பள்ளியறையில் நந்தா விளக்கு எரிக்க நிலம் தானமளித்துள்ளாள். இப்பள்ளியறை இறைவி உமாபட்டாலகி திருமேனி ஏற்கனவே இவளால் செய்விக்கப் பட்டது ஒரு சிறப்பாகும். மேலும் இவள் தானமளித்த நிலங்களுக்கு இவ்வூர் மகாசபையினர் வரி விலக்கு அளித்துள்ளனர். முதலாம் இராஜராஜன் காலத்தில் விடால் என்றழைக்கப்பட்டது இவ்வூர். முதலாம் இராஜேந்திரனின் 20-வது ஆட்சியாண்டுக் (கி.பி. 1034) கல்வெட்டால் 'சோழகேரள சதுர்வேதி மங்கலம்' என இவ்வூருக்கு தனது பட்டப்பெயர்களில் ஒன்றினைச் சூட்டியுள்ளதை அறிய முடிகிறது.

ஓய்மா நாட்டு முன்னூரைச் சார்ந்த சோழ கேரளப் பெரியரையன் என்னும் துட்டன் வீரதுங்கன் கொடுத்த பொன் மூலம் இவ்வூர் மகாசபையார் சில நிலங்களை வாங்கி, இவ்வூர் திருவடவாய் முகாக்னீஸ்வரமுடையார் கோயிலில் விளக்கெரிக்க வகை செய்துள்ளனர். இவ்வூர்சபையார் இந்நிலங்களுக்கு இறை நீக்கி யுள்ளனர். மலையகுலாந்தகப் பெரியரையன் என்பவன் இக்கோயி லில் உணவளிக்கவும் ஆடவல்லான் (நடராசன்) திருமேனிக்கு நான்கு விளக்கு வைப்பதற்குமாக நிலம் தானமளித்துள்ளான். ஆனாங்கூர் வெளிப்பாக்கிழான் அரங்கன் நமியநந்தி என்பவன் விடாலைச் சேர்ந்த திருமங்கலக் கிழான் அனுங்கனரையனிடமிருந்து குறிப்பிட்ட நிலத்தினை வாங்கி இவ்வூர் கோயில் மடத்திற்கு மடப்புறமாக அளித்துள்ளான். இந்நில வருவாய் மூலம் கார்த்திகை முதல் நான்கு மாதங்களுக்கு இம்மடத்திற்கு விறகு கொடுக்கவும்; பங்குனி முதல் நீர் ஊற்ற வேண்டியும் ஏற்பாடு செய்துள்ளான். மேலும்

அரங்கன் நமியநந்தி இக்கோயில் இறைவன் திருவனவாயிலாண்டாருக்கு அமுது படைக்க நிலம் வழங்கியுள்ளதை மற்றொரு கல்வெட்டால் அறியமுடிகிறது. இக்கோயிலில் சித்திரை விசு, மார்கழி திருவாதிரை போன்ற விழாக்களின் போது உணவளிக்க நிலம் தானமாக வழங்கப்பட்டுள்ளது.

இக்கோயில் கல்வெட்டுகளால் இறைவன் 'திருவட வாயில் ஆண்டார்', 'திருவடவாய்முக அக்னீஸ்வரர்' என்றும் இவ்வூர் 'விடால்' என்றும் அழைக்கப்பட்டுள்ளதை விளங்கலாம்.

வில்லிவாக்கம்

இவ்வூர் அகஸ்தீஸ்வரர் கோயில் கருவறை மேற்கு சுவரிலுள்ள வீரபாண்டியனின் 12-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு மணவிற் கோட்டத்து கூவத்தைச் சார்ந்தவன் இவ்வூர் திருவகத்தீஸ்வரமுடைய நாயனார் கோயிலில் விளக்கெரிக்கத் தானம் அளித்துள்ளச் செய்தியை தெரிவிக்கிறது. இவ்வூர் ஒய்மா நாடாகிய விஜயராஜேந்திர வள நாட்டில் 'வில்லிவாக்கம் எனும் கங்கை கொண்ட சோழநல்லூர்' என அழைக்கப்பட்டுள்ளது.

திருக்கழுக்குன்றம் வட்டம்

ஆனூர்

செங்கல்பட்டிலிருந்து 15கி.மீ. தொலைவில் ஒட்டிவாக்கம் இரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள பொன்விளைந்த களத்தூரை அடுத்து இவ்வூர் உள்ளது. ஆனூரில் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் காணப்படுவதால் இவ்வூரில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே மக்கள் வாழ்ந்திருந்தனர் எனத் தெரிகிறது. இவ்வூரில் அட்டபுரீசுவரர் என்ற சிவன் கோயிலும் வேத நாராயண பெருமாள் கோயிலும் உள்ளன.

கல்வெட்டுகளின் மூலம் இவ்வூர் அன்னியூர் என்றும் ஆனியூர் என்றும், ஆதியூர் ஆன 'சத்தியாசிரயக் குலகால சதுர்வேதி மங்கலம்' என்றும் வழங்கப்பட்டதை அறியமுடிகிறது. கல்வெட்டுகளில் இவ்வூர் இறைவன் 'திருவம்பங்காட்டு மகாதேவர்' என அழைக்கப்படுகிறார். ஆனூரில் காணப்படும் கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டது பல்லவ மன்னன் கம்பவர்மனின் (கி.பி. 868-900) இருபத்தைந்தாவது ஆடசியாண்டுக் கல்வெட்டாகும்.

இக்கோயில் திருச்சுற்றுச் சுவரில் அறிய சிற்பங்கள் காணப்படுகின்றன. மாவுக்கல்லினால் (Soap Stone) ஆன பலகைக் கல்லில் செதுக்கப்பட்ட ஒரு சிற்பத் தொகுதி காணப்படுகின்றது. இது ஒரு அரியச் சிற்பத் தொகுதியாகும். இது போன்ற மாவுக்கலால் செதுக்கப்பட்ட சிற்பத் தொகுதிகள் தமிழகத்தில் மணிமங்கலம், முன்னூர், பிரம்மதேசம், உக்கல், வேலஞ்சேரி, தென்னேரி, உத்திரமேரூர் ஆகிய ஊர்களில் கிடைத்துள்ளன.

இச்சிற்பத் தொடரில் உள்ள சிற்பங்கள் முறையே பிரம்மா, நரசிம்மர், மேடைமீது சிவலிங்கம், முருகன், தேவசேனை, காளை மீது சிவனும் உமையும், லட்சுமி (ஸ்ரீவத்சம்) துர்கை தனது இடது காலால் எருமைத்தலையை மிதித்து இடது கையால் அதன் வாலினைப்

பிடித்து வலது கையிலுள்ள நீண்ட வாளினால் மகிஷனைக் கொல்வது போன்றும், மேடை மீது விநாயகர் அதற்கடுத்து மேல் நோக்கிய இரு கூப்பியக் கரங்களும் காணப்படுகின்றன.

இரண்டு கரங்களுடன் நின்ற நிலையில் உள்ள உமை, விநாயகர் மற்றும் துர்க்கை தவிர பிற உருவங்களின் கரங்கள் தொங்கிய நிலையிலேயே சித்தரிக்கப்பட்டுள்ளன. உமையின் ஒரு கையில் தாமரையும், துர்க்கையின் வலது கரத்தில் வாளும், பிள்ளையாரின் ஒரு கையில் பழமும், மற்றொரு கையில் தந்தமும் காணப்படுகின்றன. இச்சிற்பத் தொடர் (கி.பி. 6-7 ஆம் நூற்றாண்டு) பல்லவர் காலத்தைச் சார்ந்தது.

இவையன்றி முற்காலச் சோழர் காலத்தைச் சேர்ந்த ஜேஷ்டா தேவி, விநாயகர் ஆகிய உதிரிச் சிற்பங்கள் செங்கல் சுவற்றில் பதிக்கப்பட்டுள்ளன.

இடையாத்தூர் / எடையாத்தூர்

கொனேரின்மை கொண்டான் குலசேகரன் இடையாற்றூர் என்கிற இராஜநாராயண சதுர்வேதி மங்கலத்து பட்டர்களுக்கு சிரார்த்த தட்சணையாக நிலம் அளித்துள்ளான்.

சோகண்டி

'சோகண்டி' என்ற இவ்வூர் சுந்தர பாண்டியன் காலத்தில் சோவண்டி என்றழைக்கப்பட்டுள்ளது. இவ்வூரைப் பிராமணர் களுக்குரிய ஊராக 'சுந்தரபாண்டியன் சதுர்வேதிமங்கலம்' என்று பெயரிட்டு, இவ்வூர் அகரம் பெரியநாடவர் என்பவருக்குத் தானமாக அளிக்கப்பட்டுள்ளது. இச்செய்தியைச் சோகண்டி குளக்கரை கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

திருக்கழுக்குன்றம்

செங்கற்பட்டிலிருந்து மாமல்லபுரம் செல்லும் வழியில் 15 கி.மீ. தொலைவில் திருக்கழுக்குன்றம் என்ற இத்திருத்தலம் உள்ளது. இவ்வூரில் அமைந்திருக்கும் வேதகிரி மலையின் உச்சியில் கட்டுமானக் கோயிலொன்றும், இம்மலையின் நடுவில் கிழக்கு நோக்கிக் குடைவரைக் கோயிலொன்றும் அமைந்துள்ளன. இக்குடை

வரைக் கோயில் கருவறை, அர்த்த மண்டபம், முன்மண்டபம் ஆகிய அமைப்பைக் கொண்டுள்ளது. இம்மண்டபப் பகுதித் தளத்தைச் சற்று உயர்த்தி வேறுபடுத்தி முகமண்டபம் மற்றும் அர்த்த மண்டம் என இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நீள் சதுரவடிவில் அமைக்கப் பட்டுள்ளது. இது முன் பகுதியில் இரண்டு தூண்களும், மண்டபத் தின் நடுவில் இரண்டு தூண்களுமாக நான்கு தூண்களைக் கொண்டுள்ளது. இவ்விரு வரிசைத் தூண்களுக்குப் பக்கவாட்டில் சுவரையொட்டி அரைத்தூண்கள் நான்கு அமைக்கப்பட்டுள்ளன. இம்முழுத் தூண்களின் மேல்பகுதியும் கீழ்ப்பகுதியும் சதுர அமைப்புடனும் நடுப்பகுதி எண்பட்டை அமைப்புடனும் அமைக்கப் பட்டுள்ளன.

கருவறை வாயிலின் இருபுறமும் வாயிற்காவலர்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளனர். அர்த்தமண்டபத்தின் பின்சுவரில் கருவறை வாயில்காவலர்களின் இருபுறமும் உள்ள கோட்டங்களில், தென்புறத்தில் நான்முகனும் வலப்புறத்தில் திருமாலும் அழகிய புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படுகின்றனர். முகமண்டபத்தின் இரு பக்கச் சுவர்களிலும் இரண்டு கைகளுடன் கூடிய தேவர்களின் உருவங்கள் செதுக்கப் பட்டுள்ளன.

மண்டபத்தின் உட்புறம் வடக்குப் பகுதி தூணின் மேற்புறத்தில் உள்ள பல்லவர் காலத் தமிழ் கல்வெட்டில் வாதாபி கொண்ட நரசிங்கப் போத்தரையனின் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது. இக்கல்வெட்டின் மூலமும் குடைவரை அமைப்பைக் கொண்டும் இக்குடைவரையை நரசிம்மவர்மன் வாதாபியை வெற்றி கொண்டபின் எடுத்துள்ளான் என அறிகிறோம்.

வேதகிரீஸ்வரர் கோயில்

திருக்கழுக்குன்ற மலை மீதுள்ள கற்றளி வேதகிரீஸ்வரர் கோயில் என்றழைக்கப்படுகிறது. இவ்வூரிலுள்ள ஐம்பத்தொரு கல்வெட்டுகள் ஒன்றிலும் வேதகிரீஸ்வரர் என்ற பெயர் காணப்பட வில்லை. மேலும் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் பாடல்களிலும் வேத கிரீசுவரர் என்ற பெயர் காணப்படவில்லை. இவ்விறைவனை 'திருமலைமேல் உடையவர்', 'திருக்கழுக்குன்ற நாயனார்' 'திருமலை யாளுடைய நாயனர் என்றே கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

கருவறையின் பின்புறச் சுவரில் புடைப்புச் சிற்பங்களாகச் சோமாஸ்கந்தர், தட்சணாமூர்த்தி, மாதொருபாகன் (அர்த்தநாரி) ஆகிய மூன்று உருவங்களும் காணப்படுகின்றன. பல்லவ மன்னன் இராஜசிம்மன் காலம் முதல் இரண்டாம் நந்திவர்மன் காலம் வரை தான் கருவறையில் புடைப்புச் சிற்பங்களாக இறை உருவங்கள் அமைக்கப்பட்டன. இந்தப் புடைப்புச் சிற்பங்கள் இராஜசிம்மன் காலத்திய கலையை ஒத்திருப்பதால், இக்கோயில் இராஜசிம்மன் காலத்தில் முதலில் எழுப்பப்பட்டிருக்க வேண்டும் என்பது வரலாற்று அறிஞர்களின் கருத்தாகும்.

இக்கோயில் கருவறையின் தெற்குச் சுவரில் 'ஸ்வஸ்திஸ்ரீ இத்திருக்கற்றளி செய்வித்தான் அரிவாட் பாக்கிழான் சாத்தன் மஹிபாலன்' என்ற கல்வெட்டினால் இக்கோயிலைக் கருங்கற் தளியாகக் கட்டியவன் சாத்தன் மஹிபாலன் என்பதை அறிய முடிகிறது. திருச்சுற்றின் தென்பகுதியில் உள்ள விநாயகர் கோயில் வாயிற்படிக்கு மேல் உள்ளக் கல்வெட்டு இவ்விநாயகர் கோயிலையும் மலையில் ஏறத் திருப்படிகளையும் பூவினூருடையான் சூரிய தேவன் என்பவன் செய்வித்துள்ளான் என்பதைத் தெரிவிக்கிறது.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த காந்தராயன் என்பவன் கோயில் முன் மண்டபத்தை விரிவு படுத்திய செய்தியை இங்குள்ள பாடல் கல்வெட்டொன்று விளக்குகிறது.

பல்லவர் காலந்தொடங்கி சோழமன்னர்களில் பராந்தகன், முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன், இராஜாதிராஜன் வீரராஜேந்திரன் மற்றும் சம்புவராய சிற்றரசனும் தானம் அளித்து சிறப்பாக இக்கோயில் விரிவடைந்துள்ளது.

பக்தவச்சலேஸ்வரர் கோயில்

மலை அடிவாரத்தில் உள்ளது மிகப்பெரிய கோயிலாகப் பக்தவச்சலேஸ்வரர் கோயில் என்று அழைக்கப்படும் தற்போதைய கருவறையுடன் கூடிய கோயில் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 9-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுதான் காலத்தால் முந்தையது என்பதால் இக்கோயில் 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம்.

ஆனால் இக் கோயிலின் வடதிசையில் இரண்டாம் திருச்சுற்றில் தூங்கானை வடிவ அமைப்பில் தெற்கு நோக்கி

அமைந்துள்ள ஒரு கட்டடம் உள்ளது. இதுவே திருக்கழுக்குன்ற திருமூலத்தான முடையார் கோயிலாகும். தொண்டை மண்டலச் சிறப்பான தூங்கனை வடிவ அமைப்புடன் காணப்படுகின்ற, இக்கோயிலில் ஆதித்தச் சோழனின் 27-ஆம்ஆட்சியாண்டு (கி.பி. 898) முதல் இரண்டாம் இராசாதிராசனின் 9-ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1172) வரையிலான கல்வெட்டுகள் வெளிப்புறச் சுவரில் காண்படுகின்றன.

இக்கோயிலில் உள்ள ஆதித்த சோழனின் 27-ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு திருக்கழுக்குன்றத்துத் திருமூலத்தானத்துப் பெருமானடிகளுக்குப் பல்லவ மன்னன் ஸ்கந்தசிஷ்யன் வழங்கிய தானத்தை வாதாபி கொண்ட நரசிம்மன் உறுதி செய்தபடியே ஆதித்தச் சோழனும் தொண்டை மண்டலத்தை வெற்றிக் கொண்ட பிறகு இத்தானத்தைத் தொடரச் செய்த செய்தியைத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டின் மூலம் பல்லவ மன்னன் ஸ்கந்தசிஷ்யன் காலத்தில் மண் தளியாக இருந்த இக் கோயில் ஆதித்த சோழன் காலத்தில் கற்றளியாக மாற்றம் அடைந்துள்ளது. நன்கு வளர்ச்சி அடைந்து வந்த நிலையில் 13-ஆம் நூற்றாண்டிற்குப் பின் பாண்டியர் ஆட்சிக் காலத்தில் இக் கோயில் பக்தவச்சலேஸ்வரர் கோயிலின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டுள்ளது.

தூங்கானை வடிவில் அமைந்துள்ள திருக்கழுக்குன்ற மூலத்தானத்துப் பெருமானடிகள் கருவறைச் சுவர்க் கோட்டங்களில் கணபதி, ஆலமர்ச்செல்வர், திருமால், பிரம்மன், துர்கை ஆகிய உருவங்கள் காணப்படுகின்றன. இவ்வுருவங்கள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உருவ அமைதியில் உள்ளன.

மலை மீதுள்ள குடைவரை கோயில் நரசிம்மவர்மனாலும் மலை உச்சியில் உள்ள திருக்கழுக்குன்றப் பெருமானடிகள் புடைப்புச் சிற்பம் மட்டும் பல்லவ மன்னன் இராசசிம்மனாலும் எடுக்கப்பட்டது. ஆனால் கீழே உள்ள தாழக் கோயில் என்றழைக்கப்டுகின்ற திருக்கழுக் குன்ற ஸ்ரீ முலத்தானத்துப் பெருமானடிகளின் தூங்கானை வடிவக் கோயில் ஆதித்த சோழனால் கற்றளியாக எடுக்கப்பட்டிருந்தாலும் பல்லவ மன்னன் மகேந்திரவர்னுக்கு முற்பட்டவரும், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் காலத்துக்கு முற்பட்டவனுமான ஸ்கந்த சிஷ்யன் என்ற பல்லவ மன்னனால் இக்கோயில் முதலில் மண் தளியாக எடுப்பிக்கப்பட்டது. எனவே, திருக்கழுக்குன்றக் கோயில்களில் இது மிகப் பழமையானது எனலாம்.

திருவானைக் கோயில்

திருவாலீஸ்வரர் கோயில் என்றழைக்கப்படுகின்ற இக்கோயில் கருவறை சதுரவடிவ அமைப்பிலும் கருவறை விமானம் தூங்கானை வடிவ அமைப்புடனும் காணப்படுகிறது. இக்கோயில் பிற்காலச் சோழர் காலத்தில் எழுப்பப்பட்டதாகும். இங்குள்ள கல்வெட்டுகளில் காலத்தால் தொன்மையானது விக்கிரமச் சோழனின் 9-ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி. 1127) கல்வெட்டாகும். இங்குள்ள கல்வெட்டுகள் இவ்வூரைத் திருவாலக்கோயில் என்றே குறிப்பிட்டு உள்ளன. இரண்டாம் குலோத்துங்கனின் அரசு அதிகாரியான அநபாய மூவேந்த வேளான் என்பவன் கி.பி. 1145 ஆம் ஆண்டில் அரும்பாக்கம் மற்றும் உழலூர் கிராமத்தின் ஒருபகுதியை இணைத்து அநபாய நல்லூர் என்ற புதிய ஊரினை ஏற்படுத்தி இக்கோயில் வழிபாட்டிற்காக வழங்கியுள்ளான். இதேபோன்று நென்மேலி கிராமத்தினுடன் குறிப்பிட்ட நிலத்தினையும் சேர்த்து 'குலோத்துங்கச் சோழன் திருநீற்றுச் சோழ நல்லூர் என்ற மன்னின் பட்டப்பெயரால் மற்றொரு கிராமத்தையும் ஏற்படுத்தி இவ்வூர் இறைவன் வழிபாட் டிற்காக அளித்துள்ளச் செய்தியைக் கல்வெட்டுகள் தெரிவிக் கின்றன.

காளமுக சைவ குருவினர் கோமடத்து ஞானராசி பண்டிதர் மற்றும் சைலராசி பண்டிதர் ஆகியோர் பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன. திருவொற்றியூர் காளமுக சைவர்களின் மையமாக சோழர் காலத்தில் சிறப்புடன் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். குளவை ஊர் பரமசிவன் தழுவக் குழைந்தான் ஆளுடையான் விளக்கெரிக்கத் தானமளித்துள்ளான். கரிகால சோழத் தமிழதரையன் இக்கோயிலின் வடக்கேயுள்ள குன்றின் மேல் விளக்கெரிக்க நில தானமளித் துள்ளான். 'திருவாலக் கோயிலுடைய நாயனார்' என்று இக்கோயில் இறைவனைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவ்வூர் கைக்கோளர் மற்றும் நடனப்பெண்களுக்கு மதுராந்தகத்தின் வடவெல்லையான விட்டூரில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன. இதேபோன்று இராஜ நாராயண சம்புவராயன் நரியஞ்சேரி என்ற புண்டரீக நல்லூரைக் கைக்கோளர்களுக்கு மானியமாக அளித் துள்ளான். சுந்தரபாண்டியன் காலத்தில் (கி.பி. 1265) புஷ்பகிரி ஜீயர், இக்கோயிலில் விளக்கெரிக்க ஆறுபசுக்களைத் தானம் செய்துள்ள செய்தியைக் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. கிருஷ்ண தேவ

ராயரின் முகவர் மூட்டு கனகராயன் இக்கோயிலில் திருவிழாக்கள் நடைபெற வழிவகை செய்துள்ளான்.

நெம்மேலி

விக்கிரமச் சோழனின் 8-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி 1126) இவ்வூர் நென்மேலி என்றும் விக்கிரம பாண்டியனின் 8-ஆவது ஆட்சியாண்டில் நென்மேலி என்கிற புண்டரீக நல்லூர் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. களத்தூர் தமிழதரையனான உத்தமன் திருச்சிற்றம்பலமுடையான் என்பவன் இக்கோயிலைச் சுற்றி மடைவளாகம் அமைக்கவும் வழிபாட்டிற்காகவும் வரிநீக்கி நில தானமளித்துள்ளான். இவ்வூர் சிவபிராமணரால் நிறுவப்பட்ட புண்டரீக நாயகர் திருமேனிக்கு களத்தூர் தமிழதரையன் வம்சத்தினர் வரி நீக்கி நிலத்தினை மானியமாக அளித்துள்ளனர். இவ்விறைவனை 'அவிமுக்தீஸ்வரம் உடைய நாயனார்' எனக் கல்வெட்டுகள் பகர்கின்றன. இங்குள்ள விக்கிரமபாண்டியன் கல்வெட்டு பாண்டிய மன்னன் மூன்றாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியனின் கல்வெட்டாகும். இவனைப் பற்றி அறிந்து கொள்ள இக்கல்வெட்டைத் தவிர வேறெந்த தடயங்களும் இல்லை எனக் கல்வெட்டறிஞர் குடந்தை என். சேதுராமன் தனது 'பாண்டியர் வரலாறு' எனும் நூலில் தெரிவித்துள்ளார்.

நெரும்பூர்

இவ்வூர் திருவாலீஸ்வரர் கோயிலில் காணப்படும் 8 கல்வெட்டுகளில் காலாத்தால் முந்தியது முதலாம் இராசராசனின் கல்வெட்டாகும். மற்றவை பிற்காலச் சோழர், சம்புவராயர், விஜயநகர காலக் கல்வெட்டுகளாகும். இக்கல்வெட்டுகளில் இவ்வூர் 'நெருமூர்' என்றும் 'நெருமூரான மதுராந்தக நல்லூர்' எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும் நெருமூர் ஒரு நாட்டுப்பிரிவாக இருந்துள்ளது. தற்போது திருவாலீஸ்வரர் என்றழைக்கப்படும் இறைவனது பெயர் அப்போது திருவான்மீசுவரமுடையார் என்றழைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள கோயில் முதலாம் குலோத்துங்கன் ஆட்சியில் முழுக் கற்றளியாக எடுப்பிக்கப்பட்டதாகும். கி.பி. 12ஆம் நூற்றாண்டில் திருவான்மீசுவரமுடைய மகாதேவர்க்கு வேட்டக்குடியான் புலியதேவன் என்பவன் இவ்வூரிலும் சூளாமணி மங்கலத்திலும் இறையிழிச்சி விழாப்புறமாக நிலம் வழங்கியுள்ளான். இராஜ

நாராயணன் (கி.பி. 1365) இக்கோயில் திருப்பணிக்கு ஒரு வேலி நிலம் தானம் அளித்துள்ளான். இரண்டாம் தேவராயர் காலத்தில் (கி.பி. 1436) இவ்வூரில் இருந்த கைக்கோளரிடம் தறி ஒன்றுக்கு ஆண்டுதோறும் இரண்டு பொன் வரியாக வசூலிக்கப்பட்டுள்ளது.

பொன்விளைந்த களத்தூர்

திருக்கழுக்குன்ற வட்டத்தில் செங்கல்பட்டிலிருந்து தெற்கே 10கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது இச்சிற்றூர். இவ்வூரில் முன்குடுமீஸ்வரர், ஆதிபுரீஸ்வரர், கோதண்டராமர், லட்சுமி நரசிம்ம சுவாமி ஆகியோருக்குக் கோயில்கள் உள்ளன. 63 நாயன்மார்களில் ஒருவரான கூற்றுவ நாயனார், நளவெண்பா பாடிய புகழேந்திப் புலவர், அந்தகக்கவி வீரராகவ முதலியார், படிக்காசு தம்பிரான் ஆகியோர் இவ்வூரில் பிறந்தனர் என்பது சிறப்புச் செய்தியாகும். இங்குள்ள கோயில்களில் காலத்தால் தொன்மையானது முன்குடுமீஸ்வரர் கோயிலாகும். இக்கோயில் மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் மண் தளியாக எடுக்கப்பட்டு உள்ளது. சிம்ம வர்மனின் 14ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி. 860) கல்வெட்டு இவ்வூர் ஏரியிலிருந்து வரும் வருவாயிலிருந்து மூன்று பங்குகளை 'பரமேஸ்வரம்' என்ற இக்கோயிலுக்கு இவ்வூர் சபையார் வழங்க வேண்டும் எனக் கூறுகிறது.

மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் எடுக்கப்பட்ட இக்கோயில் பிற்காலச் சோழமன்னனான விக்கிரமச் சோழன் காலத்தில் முழுமையான புதிய கற்றளியாக மாற்றமடைந்துள்ளது. தற்போதுள்ள இக்கோயில் விக்கிரமச் சோழன் காலத்தியதாகும்.

இவ்வூர்க் கல்வெட்டுகள் இவ்வூரைக் களத்தூர் என்றும் இறைவனைப் 'பெருந்திருக்கோயில் மகாதேவர்' எனவும் அழைக் கின்றன. இரண்டாம் குலோத்துங்கச் சோழனின் 12ஆவது ஆட்சி யாண்டில் களத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நிலங்களை ஒன்றிணைத்து இவ்வூருக்குக் 'குலோத்துங்கச் சோழர் திருத்தொண்டத் தொகை நல்லூர்' என பெயரிட்டு இவ்விறைவனுக்குத் தேவதானமாக அனபாய மூவேந்தவேளான் என்ற அரசு அதிகாரி வழங்கியுள்ளான். இவனே திருவானைக் கோயில் கல்வெட்டுகளில் 'அநபாய நல்லூர்' 'குலோத்துங்க சோழ திருநீற்றுச் சோழ நல்லூர்' ஆகிய புதிய ஊர்களை உருவாக்கியவன் என்பது குறிப்பிடத்தக்கது. கி.பி. 1191-ல்

பாழிப்பாக்கத்தைச் சேர்ந்த நடனமகளிர் இருவர் இக்கோயிலுக்கு நிலம் தானமளித்து, இக்கோயிலில் க்ஷேத்ரபாலர் திருமேனியையும் நிறுவியுள்ளனர். களத்தூரின் புறப்பகுதியான ஒத்திவாக்கத்தைச் சேர்ந்த நாட்டியப் பெண் ஒருத்தி 1152 குழி நிலத்தினைத் தானமளித் துள்ளாள்.

திருவொற்றியூர் அரவிந்தவள்ளி என்ற நடனப்பெண்மணி இக்கோயிலில் சண்டிகேசுவரர் சிலையை நிறுவியும் விளக்கெரிக்க பணமும் அளித்துள்ளாள். திருமயிலாப்பூர் மாடவீதிப் பெருந் தெருவில் வசித்த வியாபாரி ஒருவன் விளக்கொன்றினைத் தானம் செய்துள்ளான்.

விஜயகண்ட கோபாலனின் 15-ஆவது ஆட்சியாண்டில் அருளாளப் பெருமான் என்ற இராஜராஜ விழுப்பரையன் என்பவன் தன் தாயின் நினைவாக இக்கோயிலில் உள்ள அம்மன் கோயிலை எழுப்பி, நிலத்தினை தானமாக வழங்கியுள்ளான்.

பிற்காலப் பாண்டியர்களான மாறவர்மன் சுந்தரபாண்டியன் மற்றும் ஜடாவர்மன் காலங்களில் இவ்வூர் 'கங்கை கொண்ட சதுர் வேதிமங்கலம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளது. அப்போது இவ்வூர் கைக்கோளர்கள் வழிபாட்டிற்காக நிலங்கள் தானமளித் துள்ளனர்.

ஆதிபுரீஸ்வரர் : முதலாம் குலோத்துங்கச் சோழனின் 46-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1116) களத்தூர் அருவீஸ்வர முடைய மகாதேவர் என அழைக்கப்பட்டுள்ளார். இவ்வூர் உத்தமன் வடுகையன் என்பவன், இக்கோயிலுக்கு நந்தா விளக்கொன்று எரிக்க வழிவகை செய்துள்ளான். இக்கோயில் இறைவனுக்குப் புனித நீர் அபிஷேகம் செய்ய வேண்டி இக்கோயிலினுள் கிணறு ஒன்றை உய்யவந்தான் செம்பொன் என்பவன் எடுத்துள்ள செய்தியைக் கருவறையின் தென்புறச்சுவர்க் கல்வெட்டுத் தெரிவிக்கிறது

மாமல்லபுரம்

பண்டைக் காலத்தில் மல்லை, மாமல்லை, கடல் மல்லை என்ற பெயர்களால் விளங்கி, இடைக்காலத்தில் மகாமல்லபுரம், மல்லாபுரி, ஜனநாதபுரம் போன்ற பெயர்களைக் கொண்டிருந்து, பிற்காலத்தில் மகாபலிபுரம் என்ற பெயரால் அழைக்கப்பட்டு, இன்று மாமல்லபுரம்

என அழைக்கப்படுகிறது. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்நகரம், தொன்று தொட்டே சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்கிறது.

பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில், இந்நகரின் சிறப்பு அதிகரித்தது. எனவே அவனுடைய சிறப்புப் பெயரான மாமல்லன் என்ற பெயர் கொண்டு, மாமல்லபுரம் என பெயர் சூட்டப்பட்டது. இதையே மகாமல்லபுரம் என்றும் குறிப்பர். கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமஸ்கிருத கவி தண்டி என்பவர், 'அவந்தி சுந்தரி கதாசாரம்' என்ற நூலில் இவ்வூரை மகாமல்லபுரம் என்றே குறித்துள்ளார். கி.பி. 8ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை ஆண்ட பல்லவ மன்னனான நந்திவர்மனின் கல்வெட்டு ஒன்றில் இவ்வூர் 'நகரமான 'மாமல்லபுரம்' என்று குறிக்கப்பட்டுள்ளது. ''நகரம்'' என்பது வணிகக் குழுக்கள் வாழும் பகுதியாகும். எனவே இவ்வூர் 8-ஆம் நூற்றாண்டிலிருந்து சிறந்த வாணிபத் தலமாகத் திகழ்ந்தது என்று அறியலாம். அதே காலத்தில் வாழ்ந்த வைணவப் பெரியாரான திருமங்கையாழ்வார் இந்நகரைக் 'கடல்மல்லை' என்று குறிக்கிறார்.

முதலாம் இராஜராஜனின் கல்வெட்டில் இவ்வூர் 'மாமல்லபுரம் நகரம்' என்றும் முதலாம் இராசேந்திரனுடைய கல்வெட்டில் 'மாமல்லபுரமான ஜனநாதபுரம்' என்றும் குறிக்கப் பட்டுள்ளது. இதில் 'ஜனநாதன்' என்பது முதலாம் இராஜராஜ சோழனுடைய பட்டப் பெயராகும். பல்லவ மன்னர்களுள் மிகச் சிறந்த வீரன் மாமல்லன் ஆவான். சோழர்களில் தலைசிறந்தவன் முதலாம் இராஜராஜன், இவ்விரு பெருமன்னர்களின் பெயர்களையும் கொண்டு 'மாமல்லபுர மான ஜனநாதபுரம்' என்றழைக்கப்பட்டது பெருமைக்குரிய செய்தியாகும்.

மாமல்லன் என்ற பெயர் கொண்ட முதலாம் நரசிம்மவர்மன் பெயரால் இவ்வூர் மாமல்லபுரம் என்றழைக்கப்படுகிறது. மாமல்ல னுடைய தந்தை முதலாம் மஹேந்திரவர்மன், முதன் முதலில் குகைக் கோயிலை உருவாக்கியவன் இவனே. முதலாம் மஹேந்திரவர்மனைத் தொடர்ந்து இவனது மகன் முதலாம் நரசிம்மவர்மனான 'மாமல்லன்' தனது தந்தையைப் போன்று குகைக் கோயில்களைத் தோற்றுவித்தான்.

அதுமட்டுமின்றி குன்றுகளைச் செதுக்கி ஒற்றைக் கற்கோயில் அமைப்பை தோற்றுவித்தான். இரதங்கள் என்றழைக்கப்படும் ஒற்றைக் கற்கோயில்கள் இவனால் ஏற்படுத்தப்பட்டவையாகும்.

முதலாம் மஹேந்திரவர்மனின் குகைக்கோயில்கள் நீண்ட சதுர மண்டப அமைப்புடன் காணப்படும். இம்மண்டபங்களில் அமைக்கப்பட்டுள்ள தூண்களின் மேல் மற்றும் கீழ்ப்பகுதிகள் நான்கு சதுரப்பட்டைகளாகவும் நடுப்பகுதி எண்பட்டை வடிவிலும் காணப்படும்.

முதலாம் நரசிம்மவர்மனின் குகைக் கோயில்களில் உள்ள தூண்கள் முதலாம் 'மஹேந்திரவர்மனின் தூண் அமைப்பினின்று வேறுபட்டு காணப்படுகின்றன. இவனால் அமைக்கப்பட்ட குகைக்கோயில் மண்டபங்களில் காணப்படும் தூண்களில் அமர்ந்துள்ள சிம்மம் தலை மீது தூண்களைத் தாங்குவது போன்று காணப்படும். சிம்மத் தூண்களையுடைய குகைக் கோயில்கள் மாமல்லனால் தோற்றுவிக்கப்பட்டவை என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

குடைவரைக் கோயில்கள், ஒன்றைக் கற்கோயில்களை அடுத்து கட்டடக் கோயில்களை இராஜசிம்மன் தோற்றுவித்தான். காஞ்சியில் உள்ள கைலாயநாதர் கட்டடக் கோயிலை கட்டுவித்தவன் இராஜசிம்மன் ஆவான். குகைக் கோயில்களைக் கட்டுவதை விட்டு கட்டடக் கோயில்கள் கட்டுவதில் ஆர்வம் காட்டினான். மாமல்லன் குந்து சிம்ம சிற்பங்களை அறிமுகப்படுத்தினான். ஆனால் இராஜசிம்மன்னால் கட்டப்பட்ட கட்டடக் கோயில்கள் சிம்மங்கள் பாயும் சிம்மங்களாக உருவாக்கப்பட்டுள்ளன. மாமல்லபுரத்தில் உள்ள கட்டக் கலைக் கொண்ட கடற்கரைக் கோயிலில் இராஜசிம்மனின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. எனவே கடற்கரைக் கோயில் இராஜசிம்மனால் தோற்றுவிக்கப்பட்டது என்பது புலானகிறது.

குடைவரைக் கோயில்கள்

மும்மூர்த்தி குகை : ஊரின் வடபுறத்தில் மும்மூர்த்தி குகை என்ற குடைவரைக் கோயிலில் மூன்று கருவறைகள் காணப் படுகின்றன. வடபுறத்தில் உள்ள கருவறையில் முருகனின்

உருவமும், நடுவில் சிவபெருமானின் உருவமும் மூன்றாவது கருவறையில் திருமாலின் உருவமும் உள்ளன.

முருகனின் உருவம் நின்ற நிலையில் நான்கு கரங்களுடன் காணப்படுகிறது. மேலிருகரங்களில் தாமரையும், அக்க மாலையும் உள்ளன.

இம் மூர்த்தி குகைகளுக்கு தென்புறத்தில் உள்ள பாறையில் கொற்றவை (துர்க்கை) உருவம் ஒன்று காணப்படுகின்றது. எருமைத்தலைமீது நான்கு கைகளுடன் நின்ற நிலையில் உள்ளது. மேலிருகரங்களில் ஆழியும் சங்கும் கீழிருகரங்களில் ஒன்று தொடை மீதும் மற்றொன்று அபயகரத்துடனும் காட்சியளிக்கிறது.

கோடிக்கல் மண்டபம்

மும்மூர்த்தி குகைக்கு மேற்கே தென்புறப் பாறையில் உள்ள குகைக் கோயில் கோடிக்கல் மண்டபம் என்றழைக்கப்படுகிறது. நீண்ட சதுர அமைப்புடன் நடுவில் கருவறை குடைவிக்கப் பட்டுள்ளது. கருவறை வாயிலின் வடக்குப் புறத்திலுள்ள காவற் பெண் வலது கையில் கத்தியுடனும் இடது கையில் கேடயமுடனும் காணப்படுகிறாள். தென்புறத்திலுள்ள காவற் பெண் வலது கையில் வில்லைப் பிடித்துக் கொண்டும் இடது கை குறங்கின் மீதும் வைக்கப்பட்டுள்ளது. இரண்டு காவற் பெண்களும் கச்சணிந்து சடைமுடித்து தரித்து உள்ளனர். வாயிலைக் காத்து நிற்பவர்கள் பெண்கள் என்பதைக் கொண்டு இக் குடைவரைக் கோயில் கொற்றவைக்காக ஏற்படுத்தப்பட்டது எனக் கொள்ளலாம். இங்குள்ள தென்புறத் தூணின் மேல் பகுதியில் 'வாமாங்குசன்' என்ற இராஜசிம்மனின் பட்டப் பெயர் பல்லவ கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கீழ் இடது கரம் தொடை மீதும், வலது கரம் அபயமுத்திரை யுடன் உள்ளது. மார்பில் இரண்டு மலராரங்கள் குறுக்காக அணியப் பட்டுள்ளன. இந்த ஆரஅமைப்பை 'வீர அணி' என்று தமிழிலும் 'சன்ன வீரம்' என்று வடமொழியிலும் குறிப்பிடுவர். முருகனின் காலடியில் இருபுறமும் இரண்டு அடியார்கள் அமர்ந்த நிலையில்

காணப்படுகின்றனர். இக்கருவறையின் முன் படிக்கல்லில் 'மல்லன்' என்ற பெயர் பல்லவ கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

நடுவிலுள்ள கருவறையின் பின்புறச் சுவரில் சிவபெருமான் நின்ற நிலையில் நான்கு கரங்களுடன் காணப்படுகிறார். மேலிரு கைகளில் மழுவும், அக்கமாலையும், இடது கரம் தொடை மீதும் வலது கரம் அபயமுத்திரையுடனும் உள்ளது. இவரின் காலடியிலும் இரண்டு அடியார்கள் வீற்றிருக்கின்றனர். இக்கருவறையின் மத்தியில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

மூன்றாவது கருவறையில் திருமால் நின்ற நிலையில் நான்கு கரங்களுடன் காணப்படுகிறார். மேலிரு கரங்களில் ஆழியும் சங்கும் கீழ்க் கரங்களில் ஒன்று தொடை மீதும் மற்றொன்று அபய முத்திரையுடன் காட்சியளிக்கிறார். இவரின் காலடியிலும் இரண்டு அடியார்கள் காணப்படுகின்றனர்.

மூன்று இறை உருவங்களுக்கும் வடிக்கப்பட்ட குகை என்பதால், இது மும்மூர்த்தி குகை என்றழைக்கப்படுகிறது.

தர்மராஜ மண்டபம்

இக் குகைக் கோயில் கல்வெட்டில் 'அத்யந்தகாம பல்லவேச்சுர கிருஹம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நீண்ட சதுரமாக இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இங்குள்ள மூன்று கருவறைகளில் நடுவில் உள்ளது பெரியதாகவும் மற்றவை சிறிதாகவும் அமைக்கப் பட்டுள்ளன. இக் குகையின் தென்புறச்சுவரில் காணப்படும் சமஸ்கிருத மொழிக் கல்வெட்டில் எதிரிகளை வென்றவனும், ரணஜயன் என்று பட்டம் பூண்டவனுமான அத்யந்தகாமன் என்ற மன்னனால் சிவபெருமானுக்கு இக்கோயில் தோற்றுவிக்கப்பட்டது என்றும். மேலும் குடிமக்களுடைய விருப்பங்கள் அனைத்தும் நிறைவேற்றும் பொருட்டும் சிவபெருமானின் அருள் வேண்டியும் இம்மன்னால் சிறந்த இச்சிவாலயம் தோற்றுவிக்கப்பட்டது என்றும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இவற்றிலிருந்து அத்யந்தகாமன் என்ற இரண்டாம் நரசிம்மன்னனான இராஜசிம்மன்னனால் இக்கோயில் தோற்றுவிக்கப்பட்டது என்பதை அறியமுடிகிறது. எனவே நடுவிலுள்ள பெரிய கருவறை சிவபெருமானுக்கு எடுக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. வல மற்றும் இடப்புறம் உள்ள குகைக்

ஒவ்வொரு உருவமும் தத்ரூபமாகக் காட்டப்பட்டுள்ளது. போரின் சீற்றத்தைக் கண்முன்னே காட்டுகின்ற இச்சிற்பம் உலகச் சிறப்புடையது என்பதில் ஐயமில்லை.

அரிதுயில் அனந்த சயனம்

அனந்தனின் அணைப்பில் திருமால் அரிதுயிலுடன் படுத்திருக்கும் காட்சி மிகச்சிறப்புடன் காணப்படுகிறது. அவரின் காற் புறம் மது, கைபடன் என்ற இரு அரக்கர்களும் ஆணவம் மேலிட நிற்கின்றனர். மேலே யோக நித்திரையாகிய சக்தி பறந்து செல்கிறாள். பெருமானின் அருகே சக்கரத்தாழ்வார் மனித உருவில் இருப்பதை அவரது தலை முடியிலே சக்கரம் இருப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம். அடுத்து மார்க்கண்டேயன் மற்றும் நிலமகள் ஆகியோர் பணிந்து வணங்கும் காட்சியாகச் செதுக்கப்பட்டுள்ளது.

மேலும் பஞ்ச பாண்டவ மண்டபம், கோனேரி மண்டபம், புலிப்புதர் மண்டபம், மகிஷாசுரன் போன்ற குடை வரைகளும் எழில் மிகு அமைப்புடன் இங்குக் காணப்படுகின்றன.

ஒற்றைக்கல் கோயில்கள்

மலை அல்லது குன்றுகளைக் குடைந்து எடுக்கப்பட்ட கோயில்கள் குடைவரைக் கோயில்கள் அல்லது குகைக் கோயில்கள் என்றழைக்கப்பட்டன. அதற்கு அடுத்த நிலையில் ஒரே குன்றினைச் செதுக்கி தோற்றுவிக்கப்பட்ட கோயில்கள் ஒற்றைக்கல் கோயில்கள் அல்லது மலை தளிகள் என்பதாகும். மாமல்லபுரத்தில் உள்ள பஞ்ச பாண்டவர் இரதங்கள் இவ்வகையைச் சார்ந்தவை. பஞ்ச பாண்டவர் களுக்கும் இந்த இரதங்களுக்கும் ஏதும் தொடர்பில்லை. ஆனால் மக்கள் வழக்கத்தில் அழைப்பதால் அப்பெயரிலே இங்கு விளக்கப் படுகிறது. தர்மராஜ இரதம், பீம இரதம், அர்ச்சுனன் இரதம், திரௌபதி இரதம், சகா தேவ இரதம் என்ற ஐந்து கோயில்களும் யானை, சிங்கம், எருது ஆகிய மூன்று விலங்குகளின் சிற்பங்களும் ஒரே இடத்தில் காணப்படுகின்றன.

இவற்றில் திரௌபதி இரதம், அர்ச்சுனன் இரதம், பீம இரதம், தர்மராஜ இரதம் ஆகிய இந் நான்கு இரதங்களும் வடக்கிலிருந்து

தெற்காக ஒரே வரிசையில் படிப்படியாக உயர்ந்து உருவாக்கப் பட்டுள்ளன. இந்நான்கு இரதங்களும் ஒரே குன்றிலிருந்து தோற்றுவிக்கப்பட்டவையாகும். இந்நான்கு இரதங்கள் உள்ள வரிசையிலிருந்து சற்று தனித்து உள்ளது சகதேவ இரதம் ஆகும்.

தர்மராஜ இரதம்

தர்மராஜ இரதம் என்னும் அத்யந்தகாம பல்லவேச்சுர கிரகத்தில் மூன்று தளங்கள் உள்ளன. மூன்று தளங்களிலும் சிவன், திருமால் ஆகிய தெய்வங்களின் உருவங்கள் பல உள்ளன. கீழிருந்து இரண்டாம் தளத்திற்கு செல்ல படிகள் இல்லை. ஆனால் மூன்றாம் தளத்திற்கு செல்ல இரண்டாம் தளத்தின் கிழக்குப் பகுதியில் படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்படிகளின் புறச்சுவரில் 'மாமல்லன்' என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

இந்த இரதத்தின் கீழ்த்தளத்தின் நடுவில் உள்ள கருவறையைச் சுற்றி வருவதற்கு வழி அமைக்க முனையப்பட்டு இப்பணி பாதியிலேயே நின்றுவிட்டது. கீழ்த்தளத்தில் நான்கு பக்கங்களிலும் சிம்மத்தூண்கள் உள்ளன. இதில் ஒவ்வொரு தளத்திலும் ஒரு கருவறையாக மூன்று கருவறைகள் கொண்ட கோயிலாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தளத்திலும் கிழக்குப் பகுதியாக வலம் வந்தால் அடுத்தடுத்து உள்ள இறை உருவங்களைக் காணலாம்.

இந்த இரதத்தின் கீழ்த் தளத்தில் காணப்படும் இறை உருவங்களாவன 1. அர்த்தநாரி என்றழைக்கப்படும் மாதொருபாகன், 2. சுப்ரமணியர், 3. சிவபெருமான், 4. நரசிம்மனின் உருவம், 5. சிவபெருமான், 6. பைரவர், 7. நான்முகனான பிரமன், 8. அரிகரன் ஆகியோர் உருவங்கள் உள்ளன. இரண்டாவது தளத்தில், 1. கையில் மணி எந்திய அடியார், 2. அடியார், 3. சிவபெருமான், 4. காலசம்கார மூர்த்தி, 5. வீணையுடன் உள்ள பெருமான், 6. சிவன் திருமால் ஆகிய இருவரின் உருவமான அரிகரன், 7. சிவபெருமான் நந்திகேசுவரின் அருகில் நிற்கும் உருவம், 8. கண்ணன், பாம்பின் மீது காளியமர்த்தன நடன உருவம், 9. சிவனின் உருவம். ஆகியவை காணப்படுகின்றன.

தர்ம இராஜ இரதத்தில் கல்வெட்டுப் பொறிப்புகள் காணப் படுகின்றன. இதில் காணப்படும் பெயர்களாவன 1. பிரதிவிஸாரன்,

கருவறையின் வாயிலில் இரண்டு காவற் பெண்கள் உருவம் காணப்படுகின்றன. ஒருத்தி கையில் வாளையும் மற்றொருத்தி வில்லையும் ஏந்தி நிற்கின்றனர்.

கொற்றவை தாமரை மலர் மீது நான்கு கைகளுடன் நின்ற நிலையில் காணப்படுகிறாள். காலருகே இரண்டு அடியார்களில் ஒருவர் மலரால் அர்ச்சித்திடும் நிலையிலும் மற்றவர் வாளால் தன் தலையை அறிந்து கொள்ளும் காட்சியையும் காண்கிறோம்.

இக் கருவறை வெளிச் சுவர்களில் கொற்றவையின் சிற்பங்களே செதுக்கப்பட்டுள்ளன.

சகதேவ இரதம்

மேற்கண்ட நான்கு இரதங்களும் ஒரே வரிசையில் காணப்படு கின்றன. இதன் எதிரே தனித்து காண்கின்ற இரதம் சகதேவ இரதம் என்றழைக்கப்படுகிறது. இக் கோயில் இந்திரனுக்காக எடுக்கப்பட்ட தாகும். இக்கோயில் தூங்கானை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பை கஜபிருஷ்டம் (யானையின் பின்பகுதி) என்று வடமொழியில் அழைப்பர். இதனை விளக்கும் வகையில் இதனருகிலே நின்ற நிலையிலே ஒரு யானை செதுக்கப்பட்டுள்ளது. கருவறை முழுமையாக செதுக்கப்படவில்லை. மேலும் சுவர்களில் சிற்பங்கள் ஏதுமில்லை. கருவறை முன் உள்ள மண்டபத் தூண்களை அமர்ந்த யானைகள் தாங்கி நிற்பது போலச் செதுக்கப்பட்டுள்ளன.

அர்ச்சுனன் தவம்

திறந்த வெளியில் உள்ள பாறைகளில் அழகியப் புடைப்புச் சிற்பங்களாக அர்ச்சுனம் தவம், ஆநிரைக் காக்க குன்றமெடுத்த கண்ணன் (கோவர்த்தன மலையைத் தூக்கும் கண்ணன்) சிற்பங்கள் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளன. மாமல்லபுரச் சிற்பக் கலைகளுக்கு மகுடம் சூட்டும் கலைப்படைப்புகள் இவையே ஆகும்.

நீளமான பாறையில் அதனிடையில் சிறிய இடைவெளியில் ஒரு நதி விண்ணிலிருந்து மண்ணிற்கு பாய்வது போல வடிவமைக் கப்பட்டுள்ளது. விண்ணில் வாழும் தேவர்கள், கந்தர்வர்கள், இயக்கர்கள், வித்தியாதரர்கள், சித்தர்கள், கின்னரர்கள், கிம்புருடர்கள், பூவுலகில் திரியும் கானவர்கள், முனிவர்கள், விலங்குகள், பறவைகள் ஆகிய சிற்பங்கள் எழிலுடன் காணப்படுகின்றன.

சூரியன், சந்திரன் தலைகளுக்குப் பின்னால், பின் வட்டம் காட்டப்பட்டுள்ளன. பாதி மனித உருவமும் பாதி பறவை உருவமும் இணைந்து காணப்படுவர்கள் கின்னரர்கள். கின்னரர்கள் யாழ் மீட்டுவதில் சிறந்தவர்கள் என்பதால் கின்னரர்கள் யாழ் வாசித்துக் கொண்டும், கையில் தாளமும் வைத்துள்ளனர். கானவர்களாகிய வேடர்கள், கிராதர்கள் சடை, மீசை, தாடி, தோல் ஆடையுடன், வில்லேந்தித் தோன்றுகின்றனர். விலங்குகளான முயல், கலைமான், பன்றி, புலி, ஆமை, பூனை, மிகப்பெரிய யானை உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இரண்டு கைகளை உயர்த்தி ஒரே காலில் நின்று கொண்டு நீண்ட தாடி, மீசையுடன் மார்பில் எலும்பு தெரியும் வண்ணம் தவம் செய்யும் உருவம் உள்ளது. இவ்வுருவத்தினை அர்ச்சுனன் என்றும் பகீரதன் என்றும் கூறும், இருவேறு நிலைப்பாடுகள் உள்ளன. இம்முனிவருக்குக் கீழ் சிவபெருமான் நான்கு கைகளுடன் சூலம், மழுவுடன் அருள் பாலிக்கும் நிலையில் உள்ளார். இக்காட்சியின் கீழ் திருமால் கோயிலொன்று உள்ளது. இங்கு சக்கரமும் சங்கும் காணப்படுவதால் உறுதிபடுத்தலாம்.

இப்பாறைச் சிற்பங்கள் இவுலகத்தை எழிலாக காட்டியுள்ளது மிகச் சிறப்பானதாகும்.

குன்றெடுத்து ஆநிரைகாத்த ஆயன்

அர்ச்சுனன் தவத்திலிருந்து தெற்கே சென்றால் கிருஷ்ண மண்டபத்தில் கண்ணன் குன்றெடுத்து ஆநிரைக் காத்த காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள முன் மண்டபம் பிற்காலத்தில் எடுக்கப்பட்டதாகும். இச்சிற்பம் வடிக்கப்பட்டுள்ள குன்றையே கண்ணன் தூக்கி நிற்பது போல் சிறப்பான முறையில் செதுக்கப் பட்டுள்ளது. இந்திரனுக்கு ஆயர்கள் எடுத்த விழாவை கண்ணன் தடுத்ததால் ஆத்திரத்தில் இந்திரன் கல் மழையாகப் பெய்விக்க, ஆயர்கள் மற்றும் ஆநிரைகள் மிரண்டதால் கண்ணன் குன்றத்தைக் கையிலே தூக்க அக்குன்றத்தின் கீழ் ஆநிரைகளும் ஆயர்களும் பாதுகாக்கப்பட்டனர் என்ற புராணக் காட்சி சிறப்பாகச் செதுக்கப் பட்டுள்ளது.

சுவரில் திருமால் கருடன் மீதமர்ந்து கஜேந்திர்னுக்கு மோட்சம் அளிக்கும் புராணக் காட்சி செதுக்கப்பட்டுள்ளது. வடப்புறச் சுவரில் கண்ணன் காளிங்கனின் (பாம்பு) மீது நடனம் புரியும் சிற்பமும் அதையடுத்துக் குதிரை வடிவில் வந்த அசுரனைக் கண்ணன் வதைக்கும் காட்சியும் காணப்படுகிறது.

ராஜசிம்ம பல்லவேச்வர கிருஹம்

சிறிய கருவற்ற விமானத்துடன் மேற்கு நோக்கி அமைந் துள்ள கோயிலின் கருவறை சதுர வடிவத்துடன் காணப்படுகிறது. கருவறை மற்றும் எளிய அர்த்த மண்டபம் ஆகிய கட்டட அமைப்புடன் விளங்குகிறது. கருவறை பின்புறச் சுவரில் சோமஸ்கந்த மூர்த்தி உருவம் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் கீழ்ப்பகுதியில் இருபுறமும் முதலாம் இராஜராஜ னுடைய கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இச்சிறிய கோயிலின் முன் சிறிய மண்டபமும், அதற்கு முன்னர் ஒரு பெரிய மண்டபமும் அமைத்துள்ளனர். திருச்சுற்றின் வாயில் மேற்குப் புறம் வைக்கப்பட்டு உள்ளது. திருச்சுற்று மதிலின் உட்புறம் பல்லவர் காலச் சிற்பங்களும் சிங்கத்தின் மீதமர்ந்த வீரர்களின் சிற்பங்களும் உள்ளன.

மேற்கு வாயில் நிலைகளாக இரண்டு சிற்பங்கள் காணப்படுகின்றன. தென்புறம் ஏகபாதமூர்த்தியின் உருவம் மூன்று தலை, ஓர் உடல், ஆறு கைகள், ஒரு கால் ஆகியவற்றுடன் நின்ற நிலையில் உள்ளது. வடபுறம் பல தலைகளுடன் பாம்பின் கீழ் நாகராஜனின் உருவமும் காணப்படுகிறது. இவ்வாயில் எதிரே உள்ள மூன்று பலிபீடங்களில் ஒன்றில் கிரந்த எழுத்தகளில் சமஸ்கிருதச் செய்யுட்கள் உள்ளன.

இக்கோயில் கடற்கரை ஓரத்தில் கட்டப்பட்டுள்ளதாலும் கருங்கற்களால் அல்லாமல் மணற்கல்லால் கட்டப்பட்டுள்ளதால் கடற்காற்றுப்பட்டு கட்டடங்கள் பழுதடைந்து வருகின்றன.

கிழக்கு மற்றும் மேற்கு நோக்கியுள்ள இரு சிவாலயங்களும் இராஜசிம்மனால் தோற்றுவிக்கப்பட்டவை என்பதை இங்குள்ள கல்வெட்டுகளால் உறுதிபடுத்தமுடியும். அனந்த சயனக் கோயிலில் கட்டடக் கணைலையைக் கொண்டு இக் கோயிலும் இராஜசிம்மனால் எழுப்பட்டிருக்கவேண்டும் என்பது அறிஞர்களின் கருத்துரைப்பர்.

முகுந்த நாயனார் கோயில்

மாமல்லபுரத்தின் வடக்கே கங்கை கொண்டான் மண்டபத்திலிருந்து சென்னை செல்லும் நெடுஞ்சாலையில் சிறிது தூரத்தில் இக்கோயிலைக் காணலாம். கிழக்கு நோக்கி அமைந்துள்ள இக்கோயில் கருவறையின் உட்புறச்சுவரில் சோமாஸ்கந்த மூர்த்தியின் உருவம் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. கருவறையினுள் லிங்கம் ஒன்றும் காணப்படுகிறது. சுவர்களில் சிற்பங்கள் ஏதும் காணப்படவில்லை. ஆனால் விமான சிகரத்தில் கிழக்கே உமாமகேசுவரர், மேற்கே தென்முகக் கடவுளான தட்சணாமூர்த்தி, மேற்கே யோக நரசிம்மர், வடக்கே நான்முகனான பிரம்மன் ஆகிய சிற்பங்கள் உள்ளன. தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையால் கண்டறியப்பட்ட கல்வெட்டொன்றினால் இக்கோயில் 'திருமுகலிப்பா முடையார்' என்ற பெயர் பெற்றிருந்ததை அறியமுடிகிறது. சோழர் காலத்தில் 'முகலிநாதன்' என்றழைக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கோயிலின் கிழக்குப் பகுதியில் புதைந்து கிடந்த, பேன் பார்க்கும் குரங்கின் சிற்பம் தற்போது 'அர்ச்சுனன் தவம்' அமைந்துள்ள பாறைச் சிற்பத்திற்கு அருகே வைக்கப்பட்டுள்ளது.

வழுவதூர்

சுந்தரபாண்டியன் காலத்தில் இவ்வூர் 'வைவழுதூர்' என்றும் இறைவன் 'திருவக்னீஸ்வரமுடைய நாயனார்' என்றும் அழைக்கப்பட்டுள்ளன. இக்கோயில் பிராமணர்கள் கருவூலத்திலிருந்து பணம் பெற்றுக்கொண்டு 11 விளக்குகள் எரித்துள்ளனர்.

வாயலூர்

வாயலூர் வியாக்ரபுரீஸ்வரர் கோயில் தூங்கானை வடிவக் கோயிலாக அமைந்துள்ளது. கருவறை விமானம் இல்லாமல் உள்ளது. நான்கு பட்டை வடிவம் கொண்ட தூண் ஒன்றில் இரண்டாம் நரசிம்மவர்மனின் - பல்லவ கிரந்தக் கல்வெட்டுக் காணப்படுகிறது. இதில் பல்லவர்களின் முன்னோர்கள் பிரம்மா முதல் பரமேஸ்வரவர்மன் வரை கூறப்பட்டுள்ளது.

கன்னர தேவனின் 22-ஆவது ஆட்சியாண்டு மற்றும் முதலாம் இராஜராஜனின் 12-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இங்குக்

செங்கல்பட்டு வட்டம்

அகரம்

செங்கல்பட்டு வட்டத்தில், செங்கல்பட்டு - திருப்போரூர் செல்லும் சாலையில் இவ்வூர் அமைந்துள்ளது. முதலாம் இராசேந்திர சோழனின் அதிகாரியான தீபத்தரையன் என்பவன் 'திருக்கயிலாயம்' என இக்கோயிலையும் 'வானவன் மாதேவி என இவ்வூருக்கு ஒரு அரசியின் பெயரிட்டு எடுப்பித்துள்ளான். முதலாம் இராஜேந்திரனின் 8-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவ்வரசனைச் செங்கோல் வளவன், பொன்னி நாடன், பூம்புகார் தலைவன், மேரு மலையில் புலிக்கொடி நாட்டியவன் எனப் பலவாறு புகழ்கிறது. மேலும் இவ்வூரில் நான்காயிரம் பிராமணர்களைக் குடியமர்த்தி வானவன் மாதேவி சதுர்வேதி மங்கலம் என்ற பெயரிட்டான். வானவன் மாதேவி என்றிருந்த இவ்வூர் காலவழக்கில் மானம்பதி என்று மருவியுள்ளது. தற்போது மானம்பதி' 'அகரம்' என்ற அழைக்கப்படும் இவ்வூர்கள் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் ஒரே ஊராக இருந்துள்ளது. ஜெயங்கொண்ட சோழமண்டலத்து ஆமூர் கோட்டத்தில் குமிழி நாட்டுப்பிரிவில் இவ்வூர் இருந்துள்ளது. விஜயநகர காலத்தில் கைலாசமுலை - அகரம் என்றழைக்கப்பட்டு தற்போது 'அகரம்' என்ற பெயர் சுட்டப்படுகிறது.

கி.பி. 1647-இல் செய்யூர் கந்தசாமி கோயிலுக்கு இவ்வூரைத் தானமாக அளித்ததை இவ் ஊரில் உள்ள தனிப் பலகைக் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது.

அமணம்பாக்கம்

செங்கல்பட்டு நகரத்தின் வடகிழக்கே 5கி.மீ தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. பெருங்கற்காலத்தைச் சேர்ந்த தொப்பிக்கல்

(Capstone), நெடுங்கல் ஆகியவை இப்பகுதியில் மத்திய தொல்லியல் அளவீட்டுத் துறையால் கண்டறியப்பட்டன. இவ்வூர் மலையின் கிழக்குப் பகுதியில் நுண்கற்கால கருவிகளும் கண்டறி யப்பட்டுள்ளன.

ஆத்தூர்

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டத்தில் செங்கல்பட்டிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் சாலையில் 5 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. சகலபுவனச் சக்கரவர்த்தியான கோப்பெருஞ்சிங்கன் தில்லைக் கூத்தனிடம், மிகுந்த பக்தி கொண்டவன். இவ்வரசனின் நாட்டியக் கலையில் ஆர்வம் கொண்டிருந்தான். இதனைக் 'கரணதாரன்', 'பரதார்ணவன்', 'பரதம்வல்லான்' என்ற இவனது சிறப்புப் பெயர்களால் அறியமுடிகிறது. தில்லை கூத்தனின் கோயிலை விரிவுபடுத்த விரும்பினான். தில்லையின் தெற்குக் கோபுர வாயிலுக்கு மேலுள்ள எழுநிலை மாடம் கோப்பெருஞ்சிங்கனால் கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பல்லவ சிற்றரசன் தன் ஐந்தாம் ஆட்சியாண்டில் திருச்சிற்றம்பலமுடைய நாயனார் கோயில் தெற்குத் திருவாசல் சொக்கச்சீயன் எழுநிலைக் கோபுரமாகச் செய்ய திருப்பணிக்கு உடலாக ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஊற்றுக் காட்டு கோட்டத்து ஆற்றூர் நாட்டு ராஜராஜ நல்லூரான ஆற்றூர் கிராமத்தில் முந்நூற்றொன்றே முக்கால் வேலி நிலத்தைத் தேவதான இறையிலியாக அளித்த செய்தியை இக்கல்வெட்டு கூறுகிறது. இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ள ஆற்றூர் என்பது இவ்வூரே ஆகும். முன்பு ஆற்றூர் என்று குறிப்பிட்ட இவ்வூர் தற்போது ஆத்தூர் என்றழைக்கப்படுகிறது.

இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கல்வெட்டு ஆத்தூரில் உள்ள முக்தீஸ்வரர் கோயிலில் உள்ளது. இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் காலத்தால் முந்தியது முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்தியது என்பதால் இக்கோயில் முதலாம் குலோத்துங்கன் காலத்திலோ அதற்கு சற்று முற்பட்ட காலத்தைச் சார்ந்தது எனலாம்.

இவ்வூரில் கல்யாண வரதராஜர் என்ற கோயிலும் உள்ளது. மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் 8 வேலி நிலங்களை வழி

பாட்டிற்காகவும் 5 வேலி நிலங்களை பட்ட விருத்தியாகவும் இறைநீக்கி அளித்த செய்திகளை இக்கோயில் உள்ள கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

ஒத்திவாக்கம்

விஜயநகர மன்னன் திருவரங்கனின் முகவர் வயிரவ நாயனார், கலியுகராய பிள்ளைக்காக இவ்வூர் இறைவன் விருப்பாட்சீஸ்வரருக்கு திருமடை வளாகமாக நிலம் வழங்கியுள்ளான். இவ்வூர் அருகே பள்ளாங்குழிக் குன்றில் கல்வெட்டொன்று உள்ளது. இக்கல்வெட்டு கண்ணப்பன் தூசி உள்ளாரில் நல்லான் என்பவன் இம்மலைக்கு வந்த செய்தியை தெரிவிக்கிறது. மேலும் பஞ்சநதிவாணன் நீலகங்கரையன் மற்றும் தூசி அபயம்புக்கான் நீலகங்கரையன் ஆகியோர் இங்கிருந்து வேட்டைக்குச் சென்றதாகக் இக்கல்வெட்டுக் குறிப்பால் அறியமுடிகிறது.

ஓரகடம்

வாடாமல்லீஸ்வரர் கோயில் அருகே காணப்படும் இரண்டு கல்வெட்டுகளில் ஒன்றில் இக் கோயிலுக்கு விளக்கெரிக்க ஆடு தானமாக அளித்துள்ள செய்தி உள்ளது. இவ்வூர் முதலாம் இராஜேந்திர சோழனின் 4-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1016) 'உறோடகம் என்கிற பல்லவமல்ல சதுர்வேதிமங்கலம்' என்றும் இறைவனது பெயர் 'திருவாடா மலையாழ்வார்' என்றும் வழங்கப் பட்டுள்ளது. மேலும் இவ்வூர் விக்கிரம சோழனின் காலத்தில் நாட்டுப்பிரிவாக மாறியதைத் திருவடிசூலம் கல்வெட்டொன்றால் புலனாகிறது.

காயரம்பேடு

இவ்வூர் இராசேந்திர சதுர்வேதி மங்கலத்து ஊராரிடம் இருந்து நிலம் ஒன்றினை வாங்கித் திருவஞ்சீஸ்வரம் உடையாரான இக்கோயில் இறைவனுக்கு ஸ்ரீபலி (உணவு படைத்தல்) நிகழ்ச்சிக் காகக் கொடுத்துள்ளான். மேலும் இதனை நிர்வகிக்க இவ்வூரார் இருவரை நியமித்துள்ளான். இச் செய்தியை இக்கோயிலில் உள்ள முதலாம் இராஜராஜனின் 13-ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி. 998) கல்வெட்டுக் கூறுகிறது. இதன் வாயிலாக முதலாம் இராஜராஜனின்

காலத்தில் இக்கோயில் எழுப்பட்டது எனலாம். மேலும் சோமநாத கிரமவித்தன் என்பவனும் விளக்கு வைக்க நிலம் வழங்கியுள்ளான். மேலும் முதலாம் இராஜேந்திரன், விக்கிரம சோழன் காலக் கல்வெட்டுகள் இருப்பினும் அக்கல்வெட்டுகளில் அவர்களின் மெய்க்கீர்த்தி மட்டுமே காணப்படுகின்றது.

கீரப்பாக்கம்

கீரப்பாக்கத்தின் வடக்கே தேசவல்லவ ஜினாலயத்தைக் யாபானீய சங்கத்தின் மகாவீர குருவின் சீடர் அமரமுதல் குரு அவர்கள் கட்டியுள்ளதை இங்குள்ள 9-ஆம் நூற்றாண்டுக் கிரந்தக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது: மேலும் குமிழி கணத்தைச் சேர்ந்தவர்கள் இச்சங்கத்திலிருந்தவருக்கு உணவளிக்க ஏற்பாடு செய்துள்ளனர். ''குமிழி கண' குழுவைப் பற்றிய குறிப்பிலிருந்து தற்போது குமிழி என்றழைக்கும் ஊரைக் குறித்துள்ளனர். மேலும் கீரைப்பாட்டூர் ஏரியைத் தொடர்ந்து பாதுகாக்க வேண்டி 20 குழி நிலம் இவ்வூர் சங்கன் என்பவனிடம் அளிக்கப்பட்டுள்ள செய்தியை கம்பவர்மனின் 17-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுத் (கி.பி. 886) தெரிவிக்கிறது. புழற்கோட்டம், ஞாயிறு நாட்டு ஞாயிறு ஊரைச் சேர்ந்த குமாரந்தை அறவாணனின் மனைவி கண்டிக்கு இவ்வூரில் இருந்த பரம்பரைச் சொத்தை கீரைப்பாட்டூர் திகிரி ஏரியை மேம்படுத்துவதற்காக ஊர் நிருவாகத்தினரிடம் அவள் தானமாக அளித்துள்ளாள். இம்மூன்று கல்வெட்டுகளும் ஏரிக்கு அருகில் உள்ள நிலத்தில் வைக்கப்பட்டுள்ளன.

கோவளம்

சென்னை – மாமல்லபுரம் சாலையில் கோவளம் என்ற இவ்வூர் அமைந்துள்ளது. கோவளத்தில் உள்ள கைலாசநாதர் கோயில் சிவலிங்கத்தின் ஆவுடையார்ப் பகுதியில் கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது. ஸ்ரீசாத்தெருமான் மூர்த்திபேர்' என்ற கல்வெட்டு வாசகம் கி.பி. 8-9ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ளது. 'சாத்து' என்பது வணிக குழுக்களைக் குறிக்கும் சொல்லாகும். மேலும் கோவளம், ஒரு வணிகத் துறைமுகமாக விளங்கியதற்கு ஆதாரமாக பாக்கு, பஞ்சு மற்றும் பிற பொருள்களுக்கு வரிகள் வசூலித்துக் கோயில் வழிபாட்டிற்கு அளித்ததை இங்குள்ள கி.பி. 16-ஆம்

நூற்றாண்டைச் சார்ந்த மற்றொரு கல்வெட்டால் உறுதிபடுத் தலாம்.

சிங்கப்பெருமாள் கோயில்

சென்னை - விழுப்புரம் நெடுஞ்சாலையில் இக்கோயிலின் பெயரால் இவ்வூர் அழைக்கப்படுகிறது. இக்கோயில் பல்லவர் காலத்தில் எடுக்கப்பட்ட குடைவரைக் கோயிலாகும். தற்போது பாடலாத்திரி நரசிம்மப் பெருமாள் கோயில் என அழைக்கப்படு கிறது. இக்குடைவரைக் கோயிலையொட்டி மண்டபங்கள் மற்றும் பிற சிற்றாலயங்கள் அனைத்தும் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவை யாகும்.

குடைவரைக் கோயில் பாறையின் கிழக்குப்புறத்தில் குடையப் பட்டுள்ளது. இக்குடைவரை மண்டபத்தில் இரு முழுத்தூண்களும் பக்கச் சுவர்களிடையே இரண்டு அரைத்தூண்களும் காணப்படு கின்றன. இத்தூணின் மேல் மற்றும் கீழ்ப்பகுதி நான்கு பட்டை களுடனும் நடுப்பகுதி எண்பட்டைகளுடன் அமைந்துள்ளன. முதலாம் இராஜராஜனின் கல்வெட்டுகள், வடக்குத் தூணின் மேல்புறம் மற்றும் ஆண்டாள் சன்னதியின் பின்புறப் பாறையிலும் காணப்படுகின்றன. இக்கோயிலை 'நரசிங்க விண்ணகரம்', 'நரசிங்க விண்ணகரத்தேவர்' எனக் குறிப்பிட்டுள்ளன. கருவறையினுள் சுதைச் சிற்பமாக நான்கு கரங்களுடன் நரசிம்மர் அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். வலது கரத்தில் சக்கரமும், இடது கரத்தில் சங்கும், கீழ் வலக்கரம் அபய முத்திரையுடனும் கீழ்இடக்கரம் கடி அஸ்த முத்திரையிலும் உள்ளன. வலதுகால் சற்று மடித்தும் இடதுகால் தாமரை மேல் தொங்கவிட்ட நிலையிலும் காணப்படுகின்றார்.

இக்குடைவரைக் கோயில் மாமல்லனுக்கும் பரமேஸ் வரனுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்ததென்பது வரலாற்றிஞர் களின் கருத்தாகும்.

சிறுதாவூர்

இவ்வூரில் சிவன் மற்றும் திருமால் ஆகியோருக்கு கோயில்கள் உள்ளன. இங்குள்ள பெருமாள் கோயில் பார்த்திவேந்திரவர்மனின் காலத்தில் எடுக்கப்பட்டதாகும். திருமேற்றளி நின்றருளின

பெருமானடிகளுக்கு உணவு படைக்கும் போது இசையமைக்க வேண்டி ஐந்து நபர்களைப் பாடசிவன் சிங்கபுள்ளி என்பவன் நியமித்து அவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலத்திற்கு நரசிங்க மங்கலத்து ஊர் சபையார் வரிவிலக்கு அளித்துள்ளனர். காவிரி தென்கரைப் பகுதியில் அமைந்திருந்த புன்னைவாயில் ஊரைச் சேர்ந்த தேவநரசிங்கன் என்பவன் இவ்வூர் நரசிம்ஹமங்கலத்து பரசுராம விண்ணாகர ஆழ்வார் கோயிலில் விளக்கு வைக்க ஆடு தானமாக அளித் துள்ளான். தண்டய கிரமவித்தன் என்பவன் இக்கோயிலில் உள்ள வெண்ணைக் கூத்தாழ்வார் சிலையைக் கி.பி. 1052-இல் நிறுவி யுள்ளான். சிறுதாவூர் ஊரார் மற்றும் சபையினர் பரசுராம விண்ணகர் எம்பெருமான் வழிபாட்டிற்காக இக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களின் வரிகளைச் செலுத்துவதாக உறுதியளித்துள்ளனர். பையனூர் எனும் இராஜகேசரி சதுர்வேதிமங்கலம், சிறுதாவூர் எனும் நரசிங்க சதுர்வேதிமங்கலம் ஆகிய ஊர்ச் சபையினர் 'திருமநாமத்துக் காணி'யாக நிலதானம் அளித்துள்ளனர்.

பூதீஸ்வரர் கோயில் : முதலாம் இராஜராஜனின் 9-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 994) பூதீஸ்வரமுடையார் கோயிலில் மூன்று கால வழிபாட்டிற்காகப் பாலைபாணி என்பவன் நிலம் ஒன்றினை வாங்கித் தானமாக வழங்கியுள்ளான். மேலும் இவ்வூர் கணக்கன் திருவடிகள் பூத்தேரிச்செய்வன் என்பவன் இறைவன் முன் விளக்கெரிக்கச் சிவபிராமணர்களிடம் பொன் அளித்துள்ளான். நரசிங்க சதுர்வேதிமங்கலம் எனும் சிறுதாவூர் பூதீஸ்வரமுடையார் காலை வழிபாட்டிற்காகக் குலோத்துங்க தகடூர் நாடாழ்வான் என்பவன் இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சியில் (கி.பி. 1137) நிலம் வழங்கியுள்ளான். அரியலூர் அரையன் திருவேகம்பமுடையான் என்பவன் அர்த்தசாம பூசை வழிபாட்டிற்கு நிலம் தானம் கொடுத்துள்ளான். இக்கோயிலில் பணிபுரிந்த சோழமான் பிரம்பன் ஒற்றி எனும் தெலுங்கரையன் மற்றும் அவனது இருசகோதரர்கள் வாங்கிய சிறுதாவூர் மற்றும் ஆமூர் நிலங்களுக்கான வரியை இக்கோயில் தேவகன்மிகள் செலுத்தியுள்ளனர். இந்நிலத்தினை அவர்கள் இக்கோயிலுக்குத் தேவதானமாக வழங்கினர். அவ்வாறு தேவகன்மிகள் வரிகுறைப்பு செய்து தேவதானமாகப் பெற்றதற்கு மன்னனிடமிருந்து அனுமதியைப் பெற்றுள்ளனர். இக்கோயிலை மறுசீரமைப்புச் செய்து கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கட்டும்போது. தரைத்தளத்தில் பாவியக் கற்களைச் சீராளத் தேவன் எனும் தனிநின்று வென்றான் பல்லவராயன் அளித்துள்ளான்.

செங்கல்பட்டு

இவ்வூரில் கோதண்டராமர், மற்றும் ஏகாம்பரேசுவரர் கோயில்கள் உள்ளன. கோதண்டராமர் கோயில் செங்கற்பட்டு கோட்டையின் உள்ளிருந்து கி.பி. 1885 - ஆம் ஆண்டு இப்போதுள்ள இடத்திற்கு முழுமையாக இடப்பெயர்ச்சி செய்யப்பட்டுள்ளது. இங்கிருந்த இரு கல்வெட்டுகள் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் தற்போது உள்ளன. இங்குள்ள அம்மன் சன்னதியில் காணப்படும் கல்வெட்டு ஆற்றூர் எனும் இராஜராஜ நல்லூர் திருமல்லீஸ்வர முடைய நாயனார் கோயிலில் விளக்குவைக்க மாடுகள் தானமளிக்கப்பட்டுள்ளதைச் சொல்கின்றது. இதில் குறிப்பிட்டுள்ள ஆற்றூர் தற்போது செங்கல்பட்டிலிருந்து 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஆத்தூர் என்பதாகும்.

திருக்கச்சூர்

சென்னை - செங்கல்பட்டு சாலையில் சிங்கப்பெருமாள் கோயிலிலிருந்து 1.5 கி.மீ தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூர் திருக்கச்சூர், தியாகராஜபுரம், நித்த விநோத நல்லூர் என பலப் பெயர்களில் அழைக்கப்பட்டன.

ஊரின் நடுவே அமைந்துள்ள இக் கோயில் தாழக்கோயில் அல்லது ஆலக்கோயில் என அழைக்கப்படுகிறது. மற்றொரு கோயில் இவ்வூரின் மேற்கு பகுதியில் உள்ள சிறிய குன்றின் மீது அமைந்துள்ள மலைக் கோயிலாகும்.

''மாலை மதியே மலைமேல் மருந்தே மறவேனடியேன்
வயல் சூழ்ந்த ஆலகழனி பழன கச்சூர்
ஆலகோயில்'' *(7-ஆம் திருமுறை - 5)*

என்று சுந்தரமூர்த்தி நாயனார் 7-ஆம் திருமுறைப் பாடல் வரிகளால் இவ்விரு கோயில்களையும் பாடியுள்ளதை அறிகிறோம். திருக்கச்சூர் ஆலக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்து கருவறை, அர்த்த மண்டபம், முன் மண்டபம் அமைப்புடன் காணப்படுகிறது. இம்மண்டபத்தில் 56 தூண்கள் உள்ளன. இக்கோயில் இறைவன் கச்சபேஸ்வரர், விருந்திட்ட ஈஸ்வரர், இரந்திட்ட ஈசன், அமிர்த தியாகர், தியாகராஜ பெருமான் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

இக்கோயிலில் காணப்படும் அறுபது கல்வெட்டுகளில் பெரும்பான்மையான கல்வெட்டுகள் சோழர் காலத்தைச் சார்ந்தவை யாகும். இங்குள்ள கல்வெட்டுகளில் முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் இராஜராஜன், மூன்றாம் குலோத்துங்கன், சுந்தர பாண்டியன், வீரபாண்டியன், விருப்பண்ண உடையார், நரசிங்க ராயர் ஆகியோரின் கல்வெட்டுகள் உள்ளன. கல்வெட்டுகளில் இவ்வூர் ஜெயங்கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர் கோட்டத்து செங்குன்ற நாட்டு நித்தவிநோத நல்லூர் எனும் திருக்கச்சூர் என்றும் இறைவன் திருஆலக்கோயில் உடையார் நாயனார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுகளில் மூன்றாங் குலோத்துங்கனின் 35-ஆவது ஆட்சியாண்டில் இக்கோயிலுக்கு 67வேலி நிலம் தானமளிக்கப் பட்ட செய்தியுள்ளது. இரண்டாம் இராஜராஜனின் 18-ஆவது ஆட்சியாண்டில் இக்கோயிலுக்குத் தேவையான பாத்திரங்கள் அளிக்கப்பட்டன. விஜய கண்ட கோபாலனின் 25-ஆம் ஆட்சியாண்டில் இவ்வூரைச் சேர்ந்த ஒருவன் 'திருஞானசம்பந்த திருநந்தவனம்' ஏற்படுத்த நிலம் தானமளித்துள்ளான். காஞ்சிபுரம், திருக்காட்டுப்பள்ளி எண்ணெய் வாணிகர்கள் கூடி திருக்கச்சூர் கோயிலுக்கு எண்ணெய் அளிக்க முடிவெடுத்துள்ளனர். இதனை இரண்டாம் இராஜராஜனின் 18-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

மேலும் சுந்தரபாண்டியனின் 13-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1306) இப்பகுதியில் வாழ்ந்த பிராமணர்களிடம் கொலை, கொள்ளை மற்றும் பெண்களிடம் இழிவான செயல்களில் சிலர் மேற்கொண்டனர். இதனையறிந்த மன்னன். இச்செயல்களில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடித்து அந்த இடத்திலே சட்டத்தின் படி தண்டனை அளிக்க வேண்டும். மேலும் அவர்களின் வீடு மற்றும் பரம்பரை சொத்துகளைக் கைப்பற்றிக் கோயிலுக்கு விற்க வேண்டும். அச்சொத்திற்குரிய பணத்திலிருந்து தண்டனையாக விதித்த தொகையினைக் கருவூலத்திலே செலுத்தி, மீதியுள்ள தொகையை அவர்களது பெயரில் அறக்கட்டளை நிறுவி இக்கோயில் வழிபாட்டிற்கு அளிக்க உத்திரவிட்டதை இக்கல்வெட்டுத் தெளிவாகக் கூறுகிறது.

மலைக்கோயில் : மலைக் குன்றில் மேற்கு நோக்கி அமைந்துள்ள இவ்விறைவன் மருந்தீஸ்வரர் என அழைக்கப் படுகிறார். இம்மலை 'ஔஷதகிரி' என்றழைக்கப்படுகிறது. 'ஔஷதம்' என்பதற்குத் தமிழில் 'மருந்து' என்ற பொருளாகும். தமிழில் மருந்தீஸ்வரர், சமஸ்கிருதத்தில் ஔஷதீஸ்வரர் என வழங்கப்படுகிறார்.

திருவடிசூலம்

செங்கல்பட்டிலிருந்து திருப்போரூர் செல்லும் சாலையில் திருவடிசூலம் என்ற இவ்வூர் அமைந்துள்ளது திருஞானசம்பந்தர் தான் பாடிய இத்தலப்பதிகத்தில் இவ்வூரை 'திருஇடைச்சுரம்' என்று அழைத்துள்ளார். மேலும் இவ்வூர் ஞானபுரீஸ்வரர் சிவன் கோயிலுள்ள முதலாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன், கோப்பெருஞ்சிங்கன் ஆகியோரின் கல்வெட்டுகளில் 'திருவிடைச்சுரம்' என்றே குறிக்கப் படுகிறது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரை 'திருஇடைச்சுரம்' என்றழைக்கப்பட்ட இவ்வூர் கால வழக்கில் திருவடிச்சூலம் என மருவியுள்ளது. 'ஞானபுரீஸ்வரர்' என்று தற்போது அழைக்கப்படும் இறைவனின் பெயர் கல்வெட்டுகளில் 'திருவிடைச சுரம் உடையார்'; 'ஆளுடையார் திருவிடைச்சுரமுடைய நாயனார்' ஆகிய பெயர்களால் சுட்டப்படுகிறது. இக்கோயிலில் 13-ஆம் நூற்றாண்டில் பெருந்தண்டலத்தைச் சேர்ந்தவர் 'திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியார்' என்று இறைவியின் உருவையும் அதற்கெனத் தனிக்கோயிலையும் எழுப்பியுள்ளார். இவ்வூர்க் கல்வெட்டுகளில் பெருந்தேன் பாக்கம், மேல்பெருந்தேன் பாக்கம், பெருந்தண்டலம், களத்தூர், புலிப்பாக்கம், பல்லவபுரம், வல்லம் என்கிற ஜெயங்கொண்ட சோழ நல்லூர் ஆகிய ஊர்களின் பெயர் களையும் அறிய முடிகிறது.

திருவிடந்தை

சென்னை - மாமல்லபுரம் கிழக்குக் கடற்கரைச் சாலையில் கோவளத்தை அடுத்துள்ளது இவ்வூர். ஸ்ரீபுரி, வராகபுரி, அசுரகுல கால நல்லூர், நித்ய கல்யாணபுரி என்று புராணங்கள் பல பெயர்களால் சுட்டுகின்றன. வராகமூர்த்தியின் இடது தொடை மீது அகிலவள்ளி நாச்சியார் அமர்ந்து உள்ள நிலையால் இவ்வூர் திரு இடவெந்தை என

புராணத்தின் மூலம் பெயர் பெற்றது. மேலும் இங்குள்ள கல்வெட்டுகள் இவ்வூரினை ஆமூர் கோட்டத்தின் படூவூர் நாட்டு திருவிடவெந்தை எனக் குறிக்கின்றன. மாமல்லபுரம் ஆதிவராக கோயிலில் திருமாலின் வடபுறத்தில் தேவி அமர்ந்துள்ளதால் திரு வலவெந்தை என மாமல்லை அழைக்கப்படுகிறது என்கின்றனர். இராட்டிர கூட மன்னன் கன்னரதேவன் தனது 20-வது ஆட்சி யாண்டில் வராகதேவக் கோயில் வழிபாட்டிற்கு நிலம் வழங்கி யுள்ளான். மேலும் படுவூர் ஆலத்தூரான் ரணகேசரியின் மனைவி இக்கோயில் இறை உருவத்தை எடுப்பித்துள்ளாள்.

தையூர் என்கிற தலசயனபுரத்தைச் சேர்ந்த ஒருவன் இக்கோயிலில் விளக்கெரிக்க 12 கழஞ்சுப் பொன் அளித்துள்ளான். பார்த்திவேந்திரபதி 8-ஆவது ஆட்சியாண்டில் திருவிடவெந்தை வராகசுவாமி கோயில் மணவாளப்பெருமாள் திருமேனியைத் தலசயனப்புரம் எனும் தையூரைச் சேர்ந்த வையோடுகிழான் வைகுந் தடிகள், தழி எருமான் ஆகிய இரு சகோதரார்கள் எடுப்பித்துள்ளனர்.

இராஜராஜனின் 17-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1002) மன்னனின் பிறந்தநாளான ஆவணி சதய நட்சத்திரத்திலிருந்து ஏழு நாட்கள் திருவிழா நடைபெற வழிபாட்டிற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளான்.

விஜயராஜேந்திர சோழன் எனும் முதலாம் இராஜாதிராஜன் 35-ஆவது ஆட்சியாண்டில் தனது பிறந்தநாள் பரிசாகத் திருவிட வெந்தை ஊரைத் தேவதானமாக இக்கோயிலுக்கு வழங்கியுள்ளான். குலோத்துங்கனின் 45-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1115) திருமங்கையாழ்வார் பெயரில் இருந்த கலிச்சிங்கன் மடத்தில் அமாவாசை தினத்தன்று வைணவ பிராமணர்களுக்கு உணவளிக்க அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கிழக்கு நோக்கி அமைந்துள்ள இக்கோயில் இருதளத்துடன் கூடிய நாற்கர விமானமாக உள்ளது. கருவறை மற்றும் அர்த்தமண்டப கட்டட அமைப்புடன் தேவகோட்டத்தில் தெற்கே கணபதி மற்றும் அச்சுத (திருமால்) சத்யா உருவாகும். (திருமால்) உருவமும், வடக்கில் புருஷ(திருமால்) மற்றும் துர்கை ஆகிய உருவங்கள் அமைந்துள்ளன. 11-ஆம் நூற்றாண்டில இக்கோயில் மேலும் விரிவடைந்துள்ளது. முற்காலச் சோழர் காலத்தில் கட்டப்பட்டது.

இத்திருமால் கோயிலாகும். இங்கு கிடைக்கப்படும் காலத்தில் முந்தையது கன்னரதேவனின 20-வது ஆட்சியில் கல்வெட்டில் காணலாம்.

தையூர்

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், திருப்போரூர் உள்வட்டத்தில் அமைந்துள்ளது. கேளம்பாக்கத்திலிருந்து இவ்வூருக்குத் தனிச்சாலை உள்ளது. இவ்வூரில் மரகதவல்லி உடனுறை முருகேஸ்வரர் கோயில் என அழைக்கப்படும் சிவன் கோயில் உள்ளது. கோயிலின் கட்டட அமைப்பு கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. எனினும் கோயிலுள்ள சண்டிகேஸ்வரர், விநாயகர் ஆகிய சிற்பங்கள் கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். விநாயகர் சிற்பத்தின் பீடத்தில் 'ஸ்ரீ உருமேற்று' என்ற கல்வெட்டுப் பொறிப்பு உள்ளது. இவ்வெழுத்தமைதி கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். எனவே இக்கோயில் கி.பி. 13ஆம் நூற்றாண்டு வரை செங்கற் கட்டுமானமாக இருந்திருக்க வேண்டுமென்று அனுமானிக்கலாம்.

இக்கோயிலில் உள்ள மரகதவல்லியம்மன் சன்னதியின் மேற்குச் சுவர்க் குமுதத்திலும் பட்டியிலும் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 19ஆம் ஆட்சியாண்டுக் (13-ஆம் நூற்றாண்டு) கல்வெட்டுள்ளது. இக்கல்வெட்டில் இக்கோயில் இறைவன் பெயர் 'நாயனார் அழகிய சொக்கனார்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விஜயநகர அரசர் அச்சுத தேவராயரின் சக வருடம் 1458, பிரமாதி சம்வத்ஸரக் (கி.பி. 1536) கல்வெட்டில் "ஆமூர்க் கோட்டத்து குமிழி நாட்டில் ஆயிரம் வேலி பற்றில் ஸ்ரீ ராஜகேசரி நல்லூரான தையூர் நயினார் திருமுருகீஸ்வரமுடைய நயினார் என்ற குறிப்பால் தற்போது வழக்கிலுள்ள இறைவன் பெயர் விஜயநகர ஆட்சிக்காலத்தில் பெயர் மாற்றமடைந்துள்ளது எனக் கருதலாம்.

நந்திவரம் (கூடுவாஞ்சேரி)

சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் தாம்பரத்தை அடுத்து கூடுவாஞ்சேரியிலிருந்து 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்குள்ள விநாயகர் கோயிலில் உள்ள பலகைக் கல்லில் கிரந்தக் கல்வெட்டொன்று உள்ளது. இக்கல்வெட்டில் நந்திபுரத்தைச் சேர்ந்த சேக்கிழான் குட்டேரன் என்பவன்

நந்தவிளக்கொன்று வைத்ததற்கு தானம் அளித்துள்ள செய்தியைக் கூறுகிறது. இவ்வூர் முன்பு 'நந்திபுரம்' என்றழைக்கப் பட்டுள்ளது. பல்லவபுரம் என்ற ஊர் பல்லாவரம் என மருவியது போல் நந்திபுரம் என்பது 'நந்திவரம்' என மருவியுள்ளது எனலாம்.

படூர்

இவ்வூர் மணிகண்டீஸ்வரர் கோயில் கல்வெட்டுகளில் விக்கிரம சோழனின் 5-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி. 1123) காலத்தால் தொன்மையானது. இதில் ஆமூர் கோட்டத்து படுவூர் நாட்டு படூவூர் சிறுகாளேஸ்வரமுடைய மகாதேவர்க்கு குளப்பாக்கத்தைச் சேர்ந்த ஆற்றூரான் நிலம் ஒன்றினை வாங்கித் தானமளித்துள்ளான். படுவூர் எனும் அநவரத சுந்தர நல்லூரான இவ்வூரிலிருந்த பாரத்வாஜி சங்கநிதி என்ற சிவப்பிராமணன் இக்கோயிலில் விளக்கெரிக்க நிலம் அளித்துள்ளான்.

இவ்வூர் மேட்டுத் தெருவில் உள்ள கல்வெட்டு பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனின் 18-ஆவது ஆட்சியாண்டைச் சார்ந்தது (கி.பி. 864). படுவூர் விழுப்பெருந்தாய விஷ்ணுகிருஹத்து பெருமானடிகள் கோயிலுக்கு நந்தா விளக்கு வைத்துள்ள செய்தி மூலம் இவ்வூரில் பெருமாள் கோயில் ஒன்றிருந்ததை அறியமுடிகிறது.

பாலூர்

செங்கல்பட்டு வட்டத்தில் செங்கல்பட்டு - வாலாஜாபாத் செல்லும் சாலையில் ஆத்தூரை அடுத்து இவ்வூர் அமைந்துள்ளது. இங்குள்ள பதங்கேஸ்வரர் கோயில் மேற்கு மற்றும் தெற்குச் சுவரில் முதலாம் குலோத்துங்கனின் 31-ஆவது மற்றும் 38-ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கோயில் கட்டட அமைப்பைக் கொண்டும், கருவறையில் காணப்படும் கல்வெட்டுகளில் காலத்தால் தொன்மையானது முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டுகள் என்பதாலும் இக்கோயில் முதலாம் குலோத்துங்கனின் 31-ஆவது ஆட்சியாண்டிற்கு முன் எடுக்கப்பட்ட கோயில் எனலாம். இக்கல்வெட்டுகளில் இறைவன் 'திருபதங்காமுடைய மகாதேவர்' என்றும், இவ்வூரை 'இராஜேந்திர சோழ நல்லூர் எனும் பாலையூர்' எனக் குறிப்பிட்டுள்ளது. தற்போதைய கோயில் முதலாம் குலோத்துங்கன் காலத்தில்

எடுக்கப்பட்டது. இதற்கு முன் இக்கோயில் செங்கல் மற்றும் சுதைத் தளியாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் இக்கோயில் கிணற்றுப் பகுதியில் வைக்கப்பட்டுள்ள கல்லில் முதலாம் இராஜேந்திரனின் 3-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று காணப்படுகிறது. முதலாம் இராஜேந்திரன் காலத்தில் இவ்வூர் 'பாலையூர்' என்றே அழைக்கப்பட்டுள்ளது. மேலும் இறைவன் 'திருப்பனங்காடுடையார்' என அழைக்கப்பட்டுள்ளார். செங்கற் தளியாக இருந்த இக்கோயில் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் கற்றளியாக எழுப்பப் பட்டுள்ளது.

முதலாம் இராஜேந்திரனின் 3-ஆவது ஆட்சியாண்டில் இவ்வூர் திருப்பாலையூர் கிழவனின் மகள் கடாவி என்பவள் மகாதேவர் திருப்பனங்காடுடையார் கோயிலுக்கு விளக்கு வைத்துள்ளாள். இராஜாதிராஜன் ஆட்சியில் திருவாதிரை திருநாளில் உணவளிக்க இவ்வூரார் தானமளித்துள்ளனர். மையூர் நாட்டு இராஜேந்திர சோழபுரத்து நகரத்தார் நந்தாவிளக்கெரிக்க எண்ணெய் கொடையாக அளித்துள்ளனர். மூன்றாம் இராஜராஜனின் 18-ஆவது ஆட்சியாண்டில் இவ்வூர் தலைவனின் வேலையாள் வாசி என்பவனின் மகன் பெருங்காடன் எனும் இளமைப் பெரும் பறையன் விளக்கெரிக்க கொடுத்த பணத்தை இவ்வூர் சிவபிராமணர்கள் பெற்றுக் கொண்டனர். பாண்டி நாட்டு அதிகாரி குறிச்சியைச் சேர்ந்த அபிமானமேரு பல்லவரையன் இவ்வூரிலிருந்த 'ஆசாரசீலன் மடத்தில்' அமாவாசை தினத்தன்று உணவளிக்க நிலம் ஒன்றினை கொடையளித்துள்ளான். மூன்றாம் குலோத்துங்கன் இக்கோயில் வழிபாட்டிற்கும் திருப்பணிக்குமாய் நிலம் தானமளித்து நந்திய தரையர் என்பவர் நிறைவேற்ற நேரடி ஆணையிட்டுள்ளான்.

பொன்மார்

விஜயநகர மன்னன் சதாசிவராயர் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1520) ஜயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர் கோட்டத்துக் கால்வாய் நாட்டு தியாகவினோத நல்லூரான பொன்மாறு என்ற இவ்வூரின் பொயிலீசுரமுடைய நாயனாற்கும் வீரபத்திர நாயனாற்கும்

பூசை திருப்பணிகளுக்கும் சதாசிவராயர் மற்றும் இராமராயர் பெயரில் சீரங்கராயர் மற்றும் செங்கழுநீர்ப்பட்டு நாட்டவரும் பொயிலிச் சேரியை தானமாக விட்டுள்ளனர். சின்னா செட்டி மகன் வேதகிரி என்பவன் அமணேரி குளத்தில் 17-ஆம் நூற்றாண்டில் வண்டல் வெட்டித் தூர் எடுத்துள்ளான்.

மண்ணிவாக்கம்

சென்னை - விழுப்புரம் நெடுஞ்சாலையில் வண்டலூரி லிருந்து காஞ்சிபுரம் செல்லும் பாதையில் 2 கி.மீ. தெலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூர் மண்ணீஸ்வரர் கோயில் கருவறை குமுதப்படையில் விஜயநகர காலத்துக் கல்வெட்டொன்று காணப்படுகிறது. இக்கல்வெட்டு இம்மடி நரசிங்கராயர் (கி.பி. 1500) காலத்தைச் சார்ந்தது. இக்கல்வெட்டில் இவ்வூர் 'மண்ணிப்பாக்கம்' எனவும், இறைவன் 'மண்ணீசுரமுடைய நாயனார்' எனவும் அழைக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மடி நரசிங்கராயரின் காரியதரிசி களான தெக்ஷிணா சமுத்திராதிபதி சுவாமி நரசநாயக்கர், பொப்ப யராசாவின் குமாரர் கொப்பயராசா ஆகிய இருவரும் இப்பகுதியை நிர்வாகம் செய்துள்ளனர். அப்போது பெரிய குப்பய்யரும், சிவதம்பயரும் மண்ணிசுவரமுடையாருக்கு அமுது அளிக்க நிலம் அளித்துள்ளனர். இவ்வமுது படியுடன், கார்த்திகை அமுதுபடி மற்றும் மூன்று சந்தி விளக்குக்காக நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாம்பாக்கம்

மாம்பக்கம் என்ற இவ்வூர் செங்கல்பட்டிலிருந்து தெற்கே 15 கி.மீ தொலைவிலும் களத்தூரிலிருந்து 6 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது. இவ்வூரில் முருகேஸ்வரஸ்வாமியின் கோயில் உள்ளது. மாம்பாக்கத்தைச் சேர்ந்த 'முருகன் கலியன் என்பவன் முதலாம் இராஜராஜனின் 26ஆவது ஆட்சியாண்டில் இக்கோயிலைக் கட்டியுள்ளான். இக்கோயில் இறைவன் முருக ஈஸ்வரத்து ஆழ்வார்' என்ற கல்வெட்டுக் குறிப்பால் இதைக் கட்டிய முருகன் கலியன் என்பவனின் பெயராலேயே இவ்விறைவனது பெயர் வழங்கி யுள்ளதை அறியமுடிகிறது.

மானாமதி

இவ்வூர் செங்கல்பட்டிலிருந்து 24கி.மீ. தொலைவிலும் திருக்கழுக்குன்றத்திலிருந்து 12கி.மீ. தொலைவிலும் அமைந் துள்ளது. இவ்வூரில் திருக்காரை ஈஸ்வரர் என்ற சிவன் கோயில் உள்ளது. இக்கோயிலுள்ள கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டது முதலாம் பராந்தகனின் 15-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். எனவே இக்கோயில் பராந்தகன் காலத்தில் எழுப்பட்டிருக்கலாம். மேலும் இவனின் சமகாலத்தவனான மூன்றாம் இராடடிரகூட மன்னனின் 17-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டும் காணப்படு கிறது. இக்கல்வெட்டில் மதுராந்தக முப்படி இலாடராஜன் என்பவன் களகாட்டூர் (மானாமதி) திருக்கரபுரத்தாழ்வார் கோயிலில் விளக் கெரிக்க 96 ஆடுகள் தானமளித்துள்ளான். 'மங்கள ஏரியிலிருந்து வாய்க்கால் எடுக்க நிலம் வழங்கப்பட்டுள்ளது. களக்காட்டூர் ஊராரால் அரையன் தில்லைக் கூத்தன் எனும் இராஜராஜஅணிமுரி நாடாழ்வான் என்பவனுக்கு நிலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்நிலத்திலிருந்து பிடாரி மற்றும் சாஸ்தா கோயில்கள் நீங்கலாக விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்நிலத்திற்குக் 'கலைக்கலா பரணன்' எனப் பெயரிட்டு இக்கோயிலுக்கு தானமாகக் கொடுத் துள்ளான். இவ்வூர் கணக்கன் சிவதாசன் இஷபவாகன தேவன் திருவேகம்பமுடையான் மற்றும் அவனது சகோதரன் ஆளவந்த பிள்ளை ஆகிய இருவரும் வானவன் மாவேதி சதுர்வேதி மங்கலத்துத் திருக்கரப்புரமுடைய நாயனாருக்கு விளக்கு வைக்க மாடுகளைத் தானமளித்துள்ளனர்.

முதலாம் இராசேந்திரன் ஆட்சியில் இவ்வூரருகே உள்ள அகரம் கிராமத்தில் 4000 பிராமணர்களைக் குடியமர்த்தி வானவன் மாதவி சதுர்வேதிமங்கலம் எனப்பெயரிடப்பட்டது. அப்போது அகரத்தின் ஒரு பகுதியில் களகாட்டூர் இருந்தது. பிராமல ர்கள் வாழ்ந்தபகுதி அகரம் எனவும் ஏனைய பகுதி 'வானவன் மாதேவி' என்றிருந்து காலப்போக்கில் 'மானம்பதி என மருவியுள்ளது.

தாம்பரம் வட்டம்

திரிசூலம்

சென்னை பல்லாவரத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கி அமைந்துள்ள சிவன் கோயிலின் கருவறை மற்றும் அர்த்தமண்டபம் முதலில் எழுப்பப்பட்ட தாகும். இக்கருவறை மற்றும் சிகரம் முழுவதும் தூங்கானை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் கருவறை மற்றும் அர்த்த மண்டபத் தேவகோட்டங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி லிங்கோத்பவர், பிரம்மா, துர்கை ஆகிய உருவங்கள் காணப்படு கின்றன. இக்கோயிலில் உள்ள அம்மன் கோயில் மற்றும் திருச்சுற்றுமதில் ஆகியவை பிற்காலத்தில் ஏற்படுத்தப்பட்டவை யாகும். இக்கோயில் இறைவன் 'திருச்சுரமுடையார்' என அழைக்கப்பட்டுள்ளார். இக்கோயிலில் பிற்காலச் சோழரின் 13 கல்வெட்டுகளும் மாறவர்மன் குலசேகரனின் கல்வெட்டும் காணப் படுகின்றன. இங்குள்ள கல்வெட்டுகளில் காலத்தால் தொன்மை யானது முதலாம் குலோத்துங்கனின் 36-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். இக்கல்வெட்டு முதலாம் குலோத்துங்கனின் நேரடி அரசாணையாகும். இது 'சுங்கம் தவிர்த்த சோழதேவர்' எனக் குறித்துள்ள சிறப்பான கல்வெட்டாகும். இக்கோயில் இறைவன் உடையார் திருச்சுரமுடைய நாயனார் என்றும் இவ்வூர் பல்லாவரமான வானவன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப் பட்டுள்ளது. இவ்வூர் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துக் குலோத்துங்க சோழ வளநாட்டுப் புலியூர் கோட்டத்தின் சுரத்தூர் நாட்டுப் பிரிவின் கீழிருந்தது.

இக்கோயிலில் பணிபுரிபவர்கள், வழிபாடுதொடர வேண்டும் என விடுத்த வேண்டுகோளுக்கிணங்க கோயில் விழாக்கள் சிறப்புற

நடைபெற ஆவன செய்யப்பட்டுள்ளது. மேலும் வனராஜன் விடுத்த வேண்டுகோளின்படி முன்னலூர் கிராமத்தில் 41 வேலி நிலத்தினை அளித்து அவ்வூரினைக் குலோத்துங்கனின் சிறப்புப் பெயர்களில் ஒன்றான 'திருநீற்றுச் சோழ நல்லூர்' எனப் பெயரிட்டு வழிபாடு தொடர நிலம் தானமளித்துள்ளான். இவ்வூர் மகாசபையினர் இவ்விறைவனுக்கு அர்த்தசாம பூசைக்கு வேண்டி நிலம் தானமளித்துள்ளனர்.

விக்கிரம சோழன் காலத்தில் மணர்பாக்கம் (தற்போது கிண்டி அருகே உள்ளது இம்மணப்பாக்கம்) ஊரின் 972குழி நிலத்தினை இவ்வூர் திருச்சுர விளாகம் என்று பெயரிட்டு கோயிலில் உணவளிக்க கொடையளித்துள்ளனர். இம்மன்னனின் 14-ஆவது ஆட்சியாண்டில் பள்ளியறை இறைவிக்கு அமுது படைக்க நிலம் அளிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் குலோத்துங்கனின் 37ஆவது ஆண்டில் (கி.பி. 1215) பூந்தமல்லி என்கிற உய்யகொண்ட சோழபுரம் வணிகர்கள் திருச்சுரமுடைய நாயனார் கோயிலுக்குத் தேவையான பரிகலன்களைக் கொடையளித்துள்ளனர்.

பம்மல்

காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரம் வட்டத்தில் அமைந்துள்ள பம்மல் என்ற கிராமத்தில் புஷ்பகிரீஸ்வரர் என்றழைக்கப்படும் கோயில் உள்ளது. இக்கோயிலில் இரு கல்வெட்டுகள் உள்ளன. வீரராஜேந்திர சோழ தேவர் என வழங்கப்பட்ட மூன்றாம் குலோத்துங்கனின் 35-ஆவது ஆட்சியாண்டில் திருநீர்மலை எம்பெருமானுக்குத் திருவிடையாட்டமாகத் தாம்புரமான குணசீல நல்லூரில் நிலம் விடப்பட்டது. இக்கல்வெட்டால் தற்போது தாம்பரம் என அழைக்கப்படும் நகரம் சோழர் காலத்தில் தாம்புரம் எனும் குணசீல நல்லூர் என்று வழங்கப்பட்டுள்ளமை தெரியவருகிறது. இக் கல்வெட்டு மற்றும் மூன்றாம் இராசராசனின் 21-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளில் இவ்வூர் பம்மல் என்றும் இறைவன் 'அழகப்பெருமாள்' என்றழைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலுக்கு நீர்வண்ணப் பெருமாள் என்பவன் பால் கறக்கும் பசு ஒன்றைத் தானமாக அளித்துள்ளான். நீர்வண்ணப்பெருமாள் என்பது திருநீர்மலை இறைவனின் பெயராகும். திருநீர்மலை அரங்கநாதப் பெருமாள் கோயிலில் உள்ள இராமர் சன்னதியில் பொறிக்கப்

பட்டுள்ள கல்வெட்டுகளில் நான்கு பம்மல் நக்க நாயனார் கோயில் வழிபாட்டிற்கும் திருவிழாவுக்கும் நிலமளிக்கப்பட்ட செய்தியைக் குறிப்பிடுகின்றன.

ஜெயங்கொண்ட சோழமண்டலத்துக் குலோத்துங்க சோழ வளநாடு எனும் புலியூர் கோட்டத்தின் சுரட்டூர் நாட்டின் ஒரு பகுதியாக பம்மல் இருந்துள்ளது. இவ்வூர் பம்மல் 'அழகப் பெருமாள்' கோயிலுக்கு ஆதன்பாக்கம் நீலகங்கரையக்கோன் என்பவன் சந்தி விளக்கெரிக்க ஆடுகளைத் தானமளித்துள்ளான்.

பெருங்களத்தூர்

நெடுங்குன்ற நாட்டு பெருங்களத்தூர் என அழைக்கப் பட்ட, இவ்வூர் திருவகத்தீஸ்வரமுடைய நாயனார் கோயிலில் சந்தி விளக்கெரிக்க பசுக்கள் தானமளித்துள்ள செய்தியினை மூன்றாம் இராஜராஜனின் மூன்று கல்வெட்டுகளும் கூறுகின்றன.

பொழிச்சலூர்

பொழிச்சலூர் சாலையில் சுடுகாட்டின் எதிரில் உள்ள பாறையில் கல்வெட்டொன்று உள்ளது. இது வணிகக்குழு ஒன்றின் கல்வெட்டாகும். தென்னிந்திய வணிகக் குழுக்களுள் 'ஐயபொழில்' என்ற குழுவினரின் கல்வெட்டாகும். ஐயபொழில் குழுவினர் ''ஐயபொழில் ஐந்நூற்றுவர்' என்றும் கூறப்படுவதுண்டு. இவ்வணிகக் குழுவினரின் அறக்கொடைகளில் ஒன்று நீர் நிலைகளை அமைத்தலாகும். இக்குழுவைச் சேர்ந்த 'ஐந்நூற்றுவன்' என்பவன் பொழிச்சலூரில் ஒரு குளம் தோண்டு வித்து ஐந்நூற்றுவன் குளம் எனப் பெயரும் பொறித்துள்ளான். இவன் அவ்வணிகக் குழுவைச் சார்ந்தவன் என்பதற்கு அடையாளமாக நான்கடி உயரமுள்ள இப்பாறையில் வணிகக் குழுவின் சின்னங்களான குத்துவிளக்கு, கலப்பை, குறுவாள், பசும்பை ஆகியன கல்வெட்டின் இருபுறமும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு இக்கல்வெட்டு கி.பி. 12-13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கருதலாம்.

பொழிச்சலூர் அகத்தீஸ்வரர் கோயிலிலுள்ள ஆனந்தவல்லி அம்மன் சன்னதியில் இரு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. கி.பி.

12-ஆம் நூற்றாண்டு கல்வெட்டு புழிச்சலூர் திருவர்ஜுனீஸ் வரமுடையார் கோயிலுக்கு நிலம் தானமளித்துள்ள செய்தியைக் கூறுகிறது. தானமளித்த நிலத்தின் எல்லைகளாக வெள்ளரும் பாக்கம் எனும் ஸ்ரீதேவிச் சதுர்வேதி மங்கலம், மணல்பாக்கம், குளப்பாக்கம் ஆகிய ஊர்களைச் சுட்டுகிறது. இக்கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள மணல்பாக்கம், குளப்பாக்கம் என்ற ஊர்கள் தற்போது மணப்பாக்கம், கொளப்பாக்கம் என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றன. இவ்வம்மன் கோயில் அப்போது 'திருக்காமக். கோட்டமுடைய நாச்சியார்' என அழைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்விறைவியின் வழிபாட்டிற்குப் 'பட்டிக் கூற்றம்' கார்த்திகை பச்சை' ஆகிய வரிகளின் மூலம் வரும் வருவாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது 'பொழிச்சலூர்' என அழைக்கப்படும் இவ்வூர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் 'புழிச்சலூர்' என அழைக்கப்பட்டுள்ளது.

மாடம்பாக்கம்

தாம்பரத்தை அடுத்துள்ள இவ்வூரில் தேனுபுரீஸ்வரர் என்ற சிவன் கோயில் உள்ளது. இக் கோயில் கருவறை தொண்டை மண்டல சிறப்பான தூங்கானை மாட அமைப்பில் காணப்படுகிறது. கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ள இக்கோயில் தேவகோட்டங்களில் நிருத்த கணபதி, தட்சணா மூர்த்தி, விஷ்ணு, பிரம்மா மற்றும் துர்கை ஆகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரச் சோழன் (கி.பி. 956 - 973) காலத்தைச் சார்ந்தது என்பதை இக்கோயிலருகே கிடைத்த கி.பி. 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்தமைதியுடன் கூடிய கல்வெட்டால் உறுதிப்படுத்தலாம். இக்கல்வெட்டில் இவ்வூர் 'சிற்றேரி' என்றும் இறைவன் 'சிற்றேரி மகாதேவன்' எனவும் குறிக்கப்படுகிறது. ராஜகற்பக பல்லவராயன் என்பவன் உமாஸ்கந்தசகிதர், மற்றும் இறைவி நம்பிராட்டியார் திருமேனிகளை எடுப்பித்துள்ளான். சுந்தரச் சோழன் காலத்தில் எழுப்பப்பட்ட இக்கோயில் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் (1178-1218) மீண்டும் புதிதாக எழுப்பப்பட்டுள்ளது. அச்சமயத்தில் இவ்வூரை மாடம்பாக்கம் என்கிற உலகுய்யவந்த சோழ சதுர்வேதி மங்கலம் என்றும் இறைவனை 'சிற்றேரி ஆளுடைய நாயனார்' என்றும் அழைத்துள்ளனர்.

சிற்றரசன் பஞ்சநிதிவாணன் நீலகங்கரையன் இவ்வூரின் வடக்கில் 20 வேலி நிலத்தையும் இவனது மகன் அருணகிரி பெருமாள் நீலகங்கரையன் நெடுங்குன்ற நாட்டைச் சேர்ந்த மதுரைப்பாக்கம் கிராமத்தினையும் தானமாக அளித்துள்ளனர். இக்கோயிலில் ஜடாவர்ம சுந்தரபாண்டியன், விஜயநகரப் பேரரசு ஆட்சியாளர்கள் கம்பண உடையார், இரண்டாம் தேவராயர், சதாசிவ இராயர் ஆகியோரின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கோயில் முற்காலச் சோழர்காலம் முதல் விஜயநகரப் பேரரசு காலம் வரை மிகச் சிறப்பான நிலையில் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

உத்தரமேரூர் வட்டம்

அழிசூர்

இவ்வூர் அருளாளீஸ்வரர் கோயில் அருகே இரண்டு பலகைக்கற்கள் நடப்பட்டுள்ளன. இவற்றிலுள்ள விக்கிரம சோழனின் 5ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி. 1123) கல்வெட்டுகளாகும். இவ்வூர் பிராமணர்களுக்குத் தானமாக வழங்கிய ஊர் என்பதை 'ஜெயங் கொண்ட சோழமண்டலத்து காலியூர் கோட்டத்து அழிசூர் நாடு பிரம்ம தேயமாகிய சுங்கந்தவிர்த்த சோழச் சதுர்வேதி மங்கலமான அழிசியூர்' என்ற இக்கல்வெட்டு வாசகத்தால் அறியலாம். மேலும் முதலாம் குலோத்துங்கனின் சிறப்புப் பெயரான 'சுங்கந் தவிர்த்த சோழன்' என்ற பெயரிலே இவ்வூர் அமைந்திருந்தது சிறப்பம்ச மாகும்.

மாகறலீஸ்வரர் கோயிலில் சடையவர்மன் சுந்தரபாண்டி யனின் 7-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1257) கல்வெட்டு அழிசியூர் அருளாளீஸ்வரமுடைய நாயனார் மற்றும் வரதராஜ விண்ணகர் கோயில்களுக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டதைக் கூறுகிறது.

உத்தரமேரூர்

உத்தரமேரூர் சதுர்வேதி மங்கலம், இராஜேந்திர சோழச் சதுர்வேதி மங்கலம், விஜயகண்ட கோபாலச் சதுர்வேதி மங்கலம், பாண்டவவனம், பஞ்சவரத க்ஷேத்ரம், உத்தரமேலூர், உத்தரமேரூர் எனப் பல பெயர்களைப் பெற்றிருந்த இவ்வூர் வரலாற்றில் உலகப் புகழ் வாய்ந்த ஊராகும். இவ்வூர் அருகே பெருங்கற்கால ஈமச் சின்னங்கள் கிடைத்துள்ளதால் இவ்வூரில் இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பிருந்தே மக்கள் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

இவ்வூரில் கிடைக்கும் தொன்மையான கல்வெட்டு கி.பி. 750-இல் ஆண்ட பல்லவ மன்னன் நந்திவர்மனுடையதாகும். இவன் 'உத்திரமேரு' எனப் பெயர்பெற்றதால் இவனது பெயராலே 'உத்தரமேருச் சதுர்வேதி மங்கலம்' எனப் பெயரிடப்பட்டது. இதுவே வரலாற்று ஆதாரத்தின் மூலம் இவ்வூருக்கு வழங்கப்பட்ட முதல் பெயராகும். மேலும் இவ்வூரில் முக்கிய இடம்பெறுவது 'வயிரமேக தடாகம்' என்னும் ஏரியாகும். நந்திவர்மனின் மகனாகிய தந்திவர்மன் காலத்தில் இவ்வேரி விரிவாக்கம் அடைந்தது. பின்னர் கம்பவர்மன் (கி.பி. 868-900) ஆட்சிக் காலத்தில் இவ்வேரியின் கரைகள் உயர்த்தப்பட்டன. பல்லவ மன்னன் நந்திவர்மன் காலத்தில் 'சபா மண்டபம்' மற்றும் 'சுந்தரவரதர் கோயில்ஆகியன கட்டப்பட்டன. இக்கோயிலில் நந்திவர்மனின் கல்வெட்டுக் காணப்படுவதால் இதனை உறுதிபடுத்தலாம்

சுந்தரவரதராஜ பெருமாள் கோயில்

கிழக்கு நோக்கி அமைந்துள்ள இக்கோயிலின் விமானம் மூன்று தளங்களைக் கொண்டுள்ளது. கீழ்த் தளத்தில் நின்ற கோலத்திலும், இடைத் தளத்தில் அமர்ந்த கோலத்திலும், மேல்தளத்தில் கிடந்த கோலத்திலும் இக்கோயில் இறைவன் காணப்படுகிறார். கீழ்த் தளத்தில் கிழக்கு நோக்கிய கருவறை தவிர திசைக்கு ஒன்றாக மொத்தம் நான்கு கருவறைகள் காணப்படுகின்றன. கிழக்கே சுந்தர வரதர், தென்மேற்கே அச்சுதவரதர், மேற்கே அநிருத்த வரதர் வடக்கே ஆகிய கல்யாண வரதர் திருமால் உருவங்கள் காணப்படுகின்றன. இடைத்தளத்தில் இதேபோன்று நான்கு திசைகளிலும் அமர்ந் திருக்கும் திருமால் உருவங்கள் காணப்படுகின்றன. இவற்றில் முறையே கிழக்கே வைகுந்த வரதர், தெற்கே கிருஷ்ணன் மற்றும் அர்ச்சுனர், மேற்கே நரசிம்மப் பெருமான், வடக்கே வராக மூர்த்தி உருவங்கள் அமர்ந்த நிலையில் உள்ளன. மேல் தளத்தில் அனந்தசயனமாக திருமால் உருவம் உள்ளது.

இக்கோயிலின் தொன்மையான பெயர் 'திருப்வேலி விஷ்ணு க்ரஹம்' என்பதாகும். மேலும் 'கொங்கரையர் நின்ற பெருமாள் கோயில்', 'வெள்ளை மூர்த்தி ஆழ்வார் கோயில்', 'இராஜேந்திர சோழ விண்ணகர்', 'புருஷோத்தமத்துப் பெருமாள் கோயில்', 'பஞ்சவரதர் கோயில்' எனப் பலவாறு அழைக்கப்பட்டுள்ளதைக் கல்வெட்டு களால் அறியலாம்.

எட்டாம் நூற்றாண்டில் முதன் முதலில் எழுப்பட்டபோது இக்கோயிலின் அடிப்பகுதி மட்டும் கருங்கல்லால் கட்டப்பட்டது. அதனின் மேல் பகுதி முழுவதும் செங்கல்லால் கட்டப் பட்டதாகும். இந்த அடிப்பகுதி கருங்கல்லில்தான் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

ஏவம் வாஸ்து அபவத் மஹத் ப்ரவிகதம் நாம்னாச ஜாத்யாதினா
ஏனாஸ்மின் பகுபிஹ்ற் யதாகம விதை:
க்ராமே ப்ரயோகன் விதை:
திருப்மத்பாடக வாஸினா க்ருத தியா தக்ஷணா சதா வாக்மினா
தேன இதம் பரமேசுவரனே மஹதா திருப்வாக்மினோ பாஸ்கர:
அஸ்ய அலங்காரமானம் ச யதா லக்ஷண சம்யுதம்
யஸ்சைனம் வேத்தி சகலம் ஸ வை வாஸ்துவிதாம வர:

மேற்காணும் சமஸ்கிருத மொழி பல்லவ கிரந்தக் கல்வெட்டு, இங்குக் காணப்படுகிறது. இக்கோயிலைக் காஞ்சிபுரத்துப் பாடகம் என்னும் ஊரில் வாழ்ந்த பரமேசுவரன் என்ற தச்சன் கட்டினான். அவன் சிறந்த அறிவாளி, வாய்மையே தலையாய் நின்றவன், அவனால் இப்பெருங்கோயில் கட்டப்பட்டது. இதன் அளவுகளையும் அங்கங்களையும் எவனொருவன் அறிகிறானோ அவனே வாஸ்து வித்தையில் சிறந்தவன். இவ்வாஸ்து மிகவும் உன்னதமானது, பெயராலும், வகையாலும் மிகச் சிறந்தது. இது வாஸ்துக்களில் எல்லாம் சூரியனைப் போன்றது. இவ்வூரில் பல ஆகமவல்லுநர்கள் இருக்கின்றனர். அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என அனுபவம் மிக்கவர்கள் உள்ளனர். அவர்களின் அறிவுரையின் படி இக்கோயில் கட்டப்பட்டது என்பது இச் சமஸ்கிருதக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளக் கருத்தாகும்.

பார்த்திவேந்திர வர்மனின் கல்வெட்டில் 'கொங்கரையர் எடுப்பித்த திருப்வேலி விஷ்ணுக்ருஹம்' என்ற குறிப்புளது, 'கொங்கரையர் நின்ற பெருமாள்' மற்றும் 'இக்கோயில் கொங்கரையர் 'திருப் கோயில்' என்று பத்தாம் நூற்றாண்டு எழுத்தமைதியில் பொறிக்கப்பட்டுள்ளது. எனவே பத்தாம் நூற்றாண்டில் கொங்கரையர் என்பவரால் புதுப்பிக்கப்பட்டுள்ளது எனலாம்.

இவ்வூரில் கிடைக்கின்ற கல்வெட்டுக்களில் பெரும் பாலானவை பார்த்திவேந்திர வர்மனின் கல்வெட்டுகளாகும். இவன்

வீரபாண்டியனை வென்றதால் 'வீரபாண்டியன் தலை கொண்ட' என்ற பட்டம் பெற்றவன். இவ்வூர் இவனது காலத்தில் சிறப்புற்று இருந்தது.

இக்கோயிலில் காணப்படும் முதலாம் இராஜராஜனின் கல்வெட்டுகளில் இக்கோயில் 'கொங்கரையர் கோயில்', 'கொங் கரையர் கோயிலான திருப்வேலி விஷ்ணுக்ருஹம்', 'புருஷோத்தமம்' என்ற பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளன. இராஜராஜன் ஆட்சிக் காலத்தில் கொங்கரையன் திருப்கோயிலில் நின்ற பரமசுவாமிகளுக்கு விளக்கெரிக்க 96 ஆடுகள் தானமளிக்கப்பட்டன. இவனது இறுதி ஆண்டில் (கி.பி. 1014) வெள்ளை மூர்த்தி ஆழ்வார்க்கும், திருப்ராகவ தேவருக்கும் நாள் தோறும் மூன்று சந்திகளிலும் திருஅமுது படைக்க ஊர்ச் சபையார் நிலம் அளித்தனர். மேலும் திருப்பதியம் பாட சிலர் அமர்த்தப்பட்டனர்.

இராஜேந்திர சோழன் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்திருக் கிறான். அதனால் இக்கோயில் 'இராஜேந்திர சோழ விண்ணகர்' என்றழைக்கப்பட்டது. இவ்வூரின் பெயரும் 'இராஜேந்திர சோழச் சதுர்வேதிமங்கலம்' என அவனது 4-ஆவது ஆட்சியாண்டில் பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இக்கோயிலில் காலை, மாலை என இருவேளையும் நம்மாழ்வாரின் திருவாய்மொழியைப் பாட மூவர் நியமிக்கப்பட்டனர். இராஜேந்திர சோழன் ஆட்சியில் (கி.பி. 1042) இக்கோயிலுக்கு நந்தவனம் ஒன்று அமைக்கவும், குந்தவை ஆழ்வார் பெயரில் ஒரு மடம் ஏற்படுத்தவும், அம்மடத்தில் வைணவர்களுக்கு உணவளிக்க வேண்டியும் நிலம் தானமளிக்கப்பட்டது.

இக்கோயிலில் 38 வருடம் நடனமாடிய ஆயிரத்து இருநூற்றுவ மாணிக்கம் என்பவள் இக்கோயிலின் பிரகாரத்தையும் (திருச்சுற்று) முன்மண்டபத்தையும் மூன்றாங் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் கட்டியுள்ளாள்.

விக்கிரம சோழனின் 11 - ஆம் ஆட்சியாண்டில் அழகிய தேவன் என்பவன் வெள்ளை மூர்த்தி ஆழ்வாரின் திருவிழாவில் சொக்கப்பெருமாள் உலாவரும்போது அபிஷேகத்திற்கும் அமுதுபடி சாத்துப்படிகளுக்கும் நிலம் அளித்தான். இக்கல்வெட்டுச் செய்தியின் வாயிலாக வெள்ளை மூர்த்தி ஆழ்வார் என்பது மூலவரையும், சொக்கர் என்பது உற்சவரையும் குறித்துள்ளதை அறிய முடிகிறது. பின்னர்

வந்த பிற்கால பாண்டியன் வீரபாண்டியன் காலத்தில் இக்கோயில் சொக்கப் பெருமாள்கோயில் என அழைக்கப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

பாலசுப்ரமண்யர் கோயில் : சுந்தர வரதர் கோயிலுக்கு அருகில் இப் பாலசுப்பிரமணியர் கோயில் உள்ளது. இக் கோயிலும் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டதுதான். பார்த்தி வேந்திரவர்மன் காலத்தில் முருகப் பெருமானைச் சுப்ரமணிய பட்டாரர் என அழைத்தனர். இராஜராஜன் மற்றும் இராஜேந்திரன் காலங்களில் இக் கோயிலுக்கு விளக்கெரிக்கத் தானமளித்துள்ளனர்.

கயிலாயநாதர் கோயில் : இவ்வூரின் வடகிழக்கில் அமைந்துள்ள இக்கோயில் தற்போது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அடிப்பகுதி வரை கருங்கல்லாலும் மேல்பகுதி செங்கல்லால் கட்டப்பட்ட கோயிலாகும். இக்கோயில் விமானம் சுந்தரவரதர் கோயில் விமானம் போல் மூன்று தளங்களைக் கொண்டுள்ளது. சோழர் மற்றும் விஜயநகர மன்னர்களின் கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்படுகின்றன. 'எம்மூர் திருப்கயிலாயமுடைய மஹாதேவர் கோயில்' என இராஜராஜன் கல்வெட்டு இக்கோயிலைச் சுட்டுகிறது.

சப்தமாதர்கோயில் : கயிலாயநாதர் கோயில் அருகே சப்தமாதர்கள் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் தற்போது 'மாதரி அம்மன்' என்றழைக்கப்படுகிறது. இக்கோயில் அடிப்பகுதி கருங்கல்லிலும் மேல்பகுதி செங்கல்லாலும் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் கருவறையில் பிராம்மி, மாகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டா என்றழைக்கப்படும் ஏழு தாய்மார்களின் உருவங்கள் உள்ளன. முதலாம் பராந்தகனின் கல்வெட்டில், இவ்வூர் சௌமிய நாராயண பட்டன் என்பவன் இக்கோயிலில் ஒரு நொந்தா விளக்கெரிக்கப் பொன் தானமளித் துள்ளான். கல்வெட்டில் 'எம்மூர் சப்தமாதர்கள்', 'வாஸ்து பிடாரிமார்' என இவ்வேழு தாய்மார்களை குறித்துள்ளனர்.

துர்கை கோயில் : ஊரின் வடக்கே அமைந்துள்ள இக்கோயில், இவ்வூரில் அமைக்கப்பட்ட முதல் கோயிலாகும். இத்துர்கை 'வடவாயிற் செல்வி என்ற அழைக்கப்பட்டுள்ளதைக் கல்வெட்டால் அறிகிறோம். இவள் எருமைத் தலைமீது திரிபங்க நிலையில் எண்

கரத்துடன் காணப்படுகிறாள். மேலிரு கரங்களில் சக்கரம், சங்கும் அடுத்த இரு கரங்களில் அம்பு, வில்லும், அதற்கடுத்த இரு கரங்களில் வாள், கேடயமும், மற்ற இரு கரங்களில் வலது கரம் அபய முத்திரையுடனும் இடது கரத்தின் மீது கிளி ஒன்று அமர்ந்துமுள்ள தோற்றத்துடனும் காணப்படுகிறது.

உத்தரமேரூரில் காணப்படுகின்ற சிறு சிறு கோவில்களில் பலகைக் கல்லில் பல்லவர்காலப் பல இறை உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. பிரம்மா, சிவலிங்கம், பார்வதி, கணபதி, முருகன், நரசிம்மர், லட்சுமி, ஆகியன ஒரே ஆசனத்தில் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றன. இதேபோன்று கஜலட்சுமி, ஜேஷ்டா உருவங்களும் காணப்படுகின்றன.

ஊர்ச்சபை மண்டபம் : ஊரின் மையத்தில் 'ஊர்ச்சபை மண்டபம்' அமைந்துள்ளது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சபை மண்டபத்தின் அடிப்பகுதி இன்றும் உள்ளது. இவ்வூர்ச்சபை மேற்கொண்ட பணிகள் கல்வெட்டுகளாக இம் மண்டபத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள கல்வெட்டொன்று இம்மண்ட பத்தை 'இவ்வூர் சபா மண்டகம்' எனக் கூறுகிறது. இக்கல்வெட்டுகள் அனைத்திலும் சிறப்பிடம் பெறுவது முதலாம் பராந்தகன் காலத்தில் குடவோலை தேர்தல் முறையைப் பற்றி விளக்கும் கல்வெட்டே யாகும். முதலாம் குலோத்துங்கன் காலத்திற்கு முன்புவரை சீரும் சிறப்புடன் இருந்த ஊர்ச்சபை மண்டபத்தின் நிலை குறைந்தது. செங்கல் மற்றும் மரத்தால் கட்டப்பட்டிருந்த மண்டபத்தின் மேல்பகுதி பழுதடைந்தது. பின்னர் இம்மண்டபத்தின் கருங்கல்லால் எழுப்பப்பட்ட அடிப்பகுதி மட்டும் எஞ்சியது. இதன்மேல் முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் ஒரு திருமால் கோயில் எழுப்பப் பட்டது. அக்கோயிலுக்குச் 'சோழ நாராயண விண்ணகர்' எனப் பெயர் சூட்டப்பட்டது. ஊர்சபை மண்டபத்தின் அடிப்பகுதி மேல் எழுப்பப் பட்ட சோழ நாராயண விண்ணகர் என்றழைக்கப்பட்ட அக்கோயில் தற்போது வைகுந்தப்பெருமாள் என்று அழைக்கப்படுகிறது.

ஊராட்சி தேர்தல் முறை : முதலாம் பராந்தகச் சோழனின் 12-ஆவது (கி.பி. 919) மற்றும் 14-ஆவது (கி.பி. 921) ஆட்சியாண்டுகளில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளில் உத்தரமேரூர் கிராமச் சபையினரால் தேர்தல் நடத்திய முறையும் அவற்றின் விதிகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

முதலாம் பராந்தனின் ஆணையின்படி அச்சபைக் கூட்டத்தில் தத்தனூர் மூவேந்த வேளான் என்ற அரசியல் அதிகாரியின் முன்பாக அவ்வூர்ச் சபையோர் தாங்களாக முடிவு செய்து விதிகளை அமைத்துக் கொண்டனர். இவற்றில் உறுப்பினராக தேர்ந்தெடுப்பவர்களுக்கான தகுதிகள், தேர்ந்தெடுக்கும் முறை, அச்சபைக்குரிய பணிகள் ஆகியவற்றை அறியலாம்.

உறுப்பினராவதற்குத் தகுதியுடையவர்

1. தம்முடைய சொந்த மனையில் வீடு கட்டிக் கொண்டு அதில் குடியிருப்பவன்.
2. கால் நிலத்திற்கு மேல் பெற்றிருப்பவன்,
3. 35 வயதிற்கு மேல் 70 வயதுக்குட்பட்டவன்.
4. வேதத்திலும், சாஸ்திரத்திலும், காரியத்திலும், ஒழுக்கத்திலும் பொருள் சுத்தமும், மனச்சுத்தமும் கொண்டவன். மேலும் திறமையாகச் செயலாற்றி இனிதே முடிக்கும் வன்மையுடைய வனாக இருப்பவன்.
5. கடந்த மூன்றாண்டிற்குள் எந்த வாரியத்திலும் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படாதவர்.

உறுப்பினராவதற்குத் தகுதியற்றவர்

1. உறுப்பினராக இருந்து கணக்குக் காட்டாமல் இருந்தவர்.
2. இவர்களுக்குச் சிற்றரவை, பேரவை மக்கள்; இவர்களுக்கு அத்தை மாமன் மக்கள், இவர்களுக்குத் தாயோடு உடன் பிறந்தான், இவர்கள் தகப்பனோடு உடன் பிறந்தான். தன்னோடு உடன் பிறந்தான், இவர்களுக்கு பிள்ளை கொடுத்த மாமன், இவர்கள் மனைவியோடு உடன் பிறந்தாளை வேட்டான், உடன் பிறந்தான் மக்கள், தன் மகள் வேட்ட மருமகன், தன் தமப்பன், தன் மகன்.
3. கூடத்தகாதவர்களோடு கூடியவர்கள்
4. ஐம்பெரும் பாதகங்களில் முதல் நான்கினைப் புரிந்தவர்கள்

5. தீயோர்களின் கூட்டுறவால் கெட்டுப் போனவன்.
6. கொண்டது விடாத கொடியவர்களும் பிறர் பொருளைத் திருடியவர்கள்.
7. எவ்வகைப்பட்டம் கையூட்டு (இலஞ்சம்) வாங்கிப் பின்னர் தண்டம் செலுத்தாதவர்கள்.
8. மாபதகம் செய்தும், ஊருக்குத் துரோகம் செய்தும் கூடத் தகாதவரோடு கூடி குற்றம் செய்து பிராயச்சித்தம் பெற்றவர்கள்.
9. குற்றம் புரிந்து கழுதைமேல் ஏற்றப்பட்டவர்கள்.
10. கள்ளக் கையெழுத்திட்டவர்கள்.

இவை போன்ற செயலில் ஈடுபட்டவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் வாரியப் பெருமக்களாகத் தேர்ந்தெடுக்கும் உரிமையினை இழந்தவர்களாவர்

சபைகளின் பிரிவு

1. சதுர்வேதிமங்கலங்களிலிருந்த சபை.
2. கோயிலுக்குரிய தேவதானங்களில் இருந்த சபை
3. பிராமணரல்லாதவர் வாழ்ந்த ஊர்களின் சபை
4. வணிகர்கள் வாழும் நகரங்களில் இருந்தசபை

பெருங்குறி : ஊரில் வசித்து வந்த அனைத்து ஆண் மக்களும் கிராம சபையின் உறுப்பினராவர். அவர்களைத் திருவடியார் என்பர். அச்சபையையே பெருங்குறி என்றும் மகாசபை என்றும் அழைத்தனர்.

வாரியம் : பெருங்குறி சபையார் நடத்தும் குடவோலை மூலம் முன்னர் குறிப்பிட்ட தகுதிகளையுடைய உறுப்பினர்களே கிராம காரியங்களைச் செய்யும் வாரியத்தில் இடம் பெறுவர்.

குடைவோலை முறை : ஒவ்வொரு ஊரும் பலகுடும்புகளாகப் (ward) பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குடும்பிற்கும் ஓர் உறுப்பினர் மட்டும் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்தலைக் கண்காணிக்க ஓர் அதிகாரி நியமிக்கப்படுவார். உத்திரமேரூரில் முப்பது குடும்புகள் இருந்தன. தேர்தல் நாளன்று சிறியவர் முதல் பெரியவர் வரைபலரும் வந்து கூடுவர். முப்பது குடும்புகளாகப்

பிரிக்கப்பட்டவற்றில் ஒவ்வொருவரின் தகுதிகேற்ப அவர்களின் பெயர்களை ஓலையில் எழுதி எந்தப் பகுதியைச் சார்ந்த ஓலை என்பதை அறிய அதனைத் தனியே முப்பது கட்டுகளாகக் கட்டி குடத்தில் இடுவர். பின்னர் இளம் சிறுவனை அழைத்து இடப்பட்ட குடத்தினின்று ஓர் ஓலைக் கட்டினை அவிழ்த்து மற்றொரு குடத்தில் இட்டுக் குலுக்கி அச்சிறுவனைக் கொண்டு ஒரு ஓலையை மட்டும் எடுக்கச் செய்து, கரணத்தான் கையில் கொடுக்கச் செய்வர். அக்கரணத்தான் தன் கையில் ஏதும் இல்லை என்பதை காட்டக் கையை அகல விரித்துக் காட்டி, சிறுவன் கொடுத்த ஓலையை வாங்கி அனைவரும் கேட்கும் வண்ணம் உரக்கப்படிப்பான். பின்னர் அருகி லிருக்கும் நம்பிமார் படித்து அதனை உண்மையென்று தெரிவித் ததும் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் பெயரைத் தனி ஓலையில் எழுதுவர். இவ்வாறு தனித்தனியாக முப்பது உறுப்பினர்களைக் குடவோலை முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வாரிய உறுப்பினர்கள் : குடும்புகள் அனைத்திலும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்ட பின்னர், ஊர்ச் சபைக்குரிய வாரியங்கள் நிறுவப்படும். வாரியத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களின் வயது, கல்வி, அனுபவம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உயர்ந்தோர் பன்னிருவர் சம்வத்சர வாரியராக அமைக்கப் படுவர். மீதமுள்ள 18 பேர்களில் பன்னிருவர் தோட்டவாரியராகவும், ஏனைய அறுவர் ஏரிவாரியராகவும் தேர்ந்தெடுக்கப்படுவர். மீண்டும் அதுபோலவே குடவோலை மூலம் பன்னிருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அறுவர் பொன் வாரியராகவும் ஏனைய அறுவர் பஞ்சவார வாரியராகவும் அமைக்கப்படுவர். மேலும் அவ்வூரின் வளர்ச்சிக் கேற்ப வாரியங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

வாரியங்களும் கடமைகளும்

சம்வத்சரவாரியம்	-	ஊரின் பொதுகாரியம் அனைத்தையும் செய்தல்
ஏரி வாரியம்	-	ஊரின் நீர் நிலைகளை நிர்வகித்தல்
தோட்டவாரியம்	-	விளைநிலங்கள், புறம்போக்கு நிலங்களைக் கவனித்தல்

பஞ்சவாரியம்	-	பஞ்ச காலத்திற்குத் தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளல்
பொன் வாரியம்	-	பொன் உரைத்தல், பொற்காசுகளை ஆராய்தல்
கணக்கு வாரியம்	-	ஊர்க் கணக்குகளைக் கண்காணித்தல்
கலிங்கு வாரியம்	-	நீர்ப் பாசனங்களுக்குத் தேவையான வழிவகை செய்தல்
தடிவழி வாரியம்	-	வயல்கள், ஊர் வழிச் சாலைகளை மேம்படுத்தும் பணிகள்

தண்டனை : இவ்வுறுப்பினர் ஏதேனும் குற்றம் புரிந்தாலும் அச்சபை குற்றம் புரிந்தாலும் உறுப்பினர் நீக்கப்பட்டுத் தண்டனை அளிக்கப்பட்டனர்.

சபை கூடுமிடம் : முரசு அடித்தோ அல்லது காளம் ஊதியோ சபை கூடும் நேரம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டது. சபை உறுப்பினர். ஊதியமின்றிச் சேவை செய்தனர். பெரும்பாலும் பகல் நேரங்களிலே சபை கூட்டப்படும். சபையில் பணிபுரிபவர்களில் மத்தியஸ்தன், கரணத்தான் பாடிகாப்பான், தண்டுவான், அடிக்கீழ் நிற்பான் ஆகியோர் ஊதியம் பெற்றனர்.

இச்சபை மக்களுக்கு முக்கியம் அளித்து அமைக்கப்பட்டது. ஊதியம் அளிக்கப்படாததால் பொதுச் சேவை செய்ய விருப்ப முள்ளவர் மட்டுமே பங்கேற்க முடியும். இதன்மூலம் இச்சபை சிறப்பான முறையில் ஊராட்சி செய்துள்ளதை அறியமுடிகிறது.

திருப்புலிவனம்

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் வட்டத்தில் உத்திரமேரூரிலிருக்கு வடக்கே 5கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரில் வியாக்ரபுதிருப்ஸ்வரர் என்ற சிவன் கோயில் கிழக்கு நோக்கி உள்ளது. இவ்விறைவனைப் புலி வழிபட்டதால் வியாக்ரபுதிருப்ஸ்வரர் எனப் பெயர் பெற்றது என்பது புராணமாகும். கல்வெட்டுகளில் இவ்விறைவன் 'திருப்புலிவன முடைய நாயனார்' என அழைக்கப்பட்டுள்ளார். இக்கோயில், பல்லவ

மன்னன் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் (கி.பி. 8 ஆம் நூற்றாண்டு) முதன் முதலாக எழுப்பப்பட்டுள்ளது. மேலும் இக்கோயிலில் உள்ள மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் 37-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டின் மற்றொரு பிரதி கல்வெட்டு உத்திரமேரூர் வைகுந்தப் பெருமாள் கோயிலில் காணப்படுகிறது. இக்கல்வெட்டில் பல்லவ மன்னன் இராஜமார்த்தாண்டன் எனும் அபராஜித விக்ரமவர்மனின் 14-ஆவது ஆட்சியாண்டில் வைத்த நான்கு விளக்குகளும் கன்னர தேவனின் 18ஆவது ஆட்சியாண்டில் வைத்த இரண்டு விளக்கும், திரிபுவன வீரதேவனான மூன்றும் குலோத்துங்கனின் 14-ஆவது ஆட்சியாண்டில் வைத்த ஒரு விளக்கும் ஆக எட்டு விளக்குகளும் திருப்புலிவலமுடைய நாயனார் முன் தொடர்ந்து எரிக்க வேண்டி ஒப்பந்தம் செய்துள்ளதைக் குறிக்கின்றது.

எனவே இக்கோயில் பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் மண் மற்றும் சுதை கொண்டு எழுப்பப் பட்டிருக்கலாம். இங்குள்ள முதலாம் குலோத்துங்கனின் 8-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இக்கோயிலின் முன்மண்டபச் சுவரில் காணப்படுகிறது. மேலும் இதே மன்னனின் 35-ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்த இரண்டு கல்வெட்டுகள் வெளிப்புறச் சுவரில் காணப்படுகின்றன. எனவே முதலாம் குலோத்துங்கனின் 25-ஆவது ஆட்சியாண்டிற்கு முன்னும் இம்மன்னனின் 3-ஆவது ஆட்சியாண்டிற்குப் பின்னும் இக்காயிலின் தற்போதுள்ள கருவறை எழுப்பப்பட்டு உள்ளது. இம்மன்னனின் 3-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தேர்வடிவ மண்டபத்தின் கிழக்குச் சுவரில் காணப்படுவதன் மூலம் இக்கோயிலில் முன்பிருந்த கருவறைக்கு முன் இத்தேர்வடிவ மண்டபம் முதலாம் இராஜேந்திரன் காலத்தில் கட்டப்பட்டுள்ளது எனலாம். இக்கோயிலின் கட்டடக் கலையின் சிறப்பு இத்தேர்வடிவ மண்டபமாகும். இதே போன்ற அமைப்புடன் மேலக்கடம்பூர்க் கோயில் உள்ளது. ஆனால் மேலகடம்பூர்க் கோயில் கருவறையே தேர்வடிவில் காணப்படுகிறது. மேலும் இதேபோன்ற தேர்வடிவ மண்டபங்கள் சிதம்பரம், திருக்கச்சி தாராசுரம், மற்றும் திருபுவனம் ஆகிய கோயில்களில் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கு நோக்கி அமைந்துள்ள இக்கோயில் கருவறை, அந்தராளம், முன்மண்டபம் ஆகிய கட்டட அமைப்புடன் அமைக்கப்

பட்டுள்ளது. மேலும் கருவறை சதுரடிவமைப்பிலும் அதன் மீதுள்ள கிதிருப்வம் தூங்கானை வடிவிலும் (கஜப்ருஷ்டம்) காணப்படுகிறது. கருவறை மற்றும் அந்தராளத்தின் தென்பகுதியில் கணேசர், தெட்சிணாமூர்த்தி உருவங்களும் மேற்கில் விஷ்ணுவும், வடபகுதி யில் பிரம்மா மற்றும் துர்கை ஆகிய உருவங்களும் அமைந்துள்ளன. இவற்றில் தெட்சிணாமூர்த்தி கோயில் விஜயநகர காலத்தில் எடுக்கப்பட்டதாகும். திருச்சுற்று வாயில் கோபுரம் 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கால அமைப்புடன் உள்ளது.

மணயிற் கூற்றத்து மணயிற் காலிங்கராயனான பொன்னம் பல கூத்தன் விளக்கெரிக்க 12 கழஞ்சு பொன் அளித்துள்ளான். இவன் மணயிற் பகுதித் தலைவன். இவன் குலோத்துங்கனின் காலத்திலும், விக்கிரமச் சோழன் காலத்திலும் இருந்து சிதம்பரம் கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்துள்ளான். இரண்டாம் குலோத்துங்கச் சோழன் விக்கிரமபுரத்து முத்துப்பந்தலில் அமர்ந்து கொண்டு திருப்புலிவன முடைய மகாதேவருக்குப் பாப்பநல்லூர் கிராமத்திலிருந்து 60 வேலி நிலம் இறைநீக்கி அளித்துள்ளான். இது இவ்வரசனின் அதிகாரியான மூவேந்த வேளாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அளிக்கப்பட்ட தாகும். இக்கோயிலில் உள்ள சபா மண்டபத்தைச் சேதிராஜா என்பவர் எடுத்துள்ளதாகக் கிரந்தக் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. மேலும் இரு ஊர்களிடை ஏரியிலிருந்து தண்ணீர் எடுப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனையை இராஜ நாராயண சம்புவராயர் தீர்வு செய்துள்ளதை மற்றொரு கல்வெட்டின் மூலம் விளங்கலாம்.

திருமுக்கூடல்

செங்கற்பட்டு - காஞ்சிபுரம் சாலையில் செங்கற்பட்டி லிருந்து 20 கி.மீ. தொலைவில் பாலாற்றின் தென்கரையில் இயற்கை அழகுடன் அமைந்துள்ளது இச்சிற்றூர். பாலாறு, செய்யாறு, வேகவதி ஆகிய இம்மூன்று ஆறுகளும் கூடி ஒன்றாகும் இடமாதலால் இவ்வூர் திருமுக்கூடல் எனப் பெயர் பெற்றது. ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள வெங்கடேசப் பெருமாள் கோயில் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்வெட்டுகளைக் கொண்டுள்ளது. இத்திருக்கோயில் விமானம் தொண்டை மண்டலச் சிறப்பான தூங்கானை மாட அமைப்புடன் விளங்குகிறது. இக் கோயிலில் கல்லூரி (கடிகை), ஆதுலர் சாலை (மருத்துவ மனை), நடன சாலை ஆகியவை

இருந்துள்ளன என்பது இவ்வூர்க் கல்வெட்டுகளால் அறியப்படுகிறது.

இக்கோயில் கருவறைச் சுவரில் காணப்படும் வீரராசேந்திர சோழனின் கல்வெட்டு, இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டு களில் மிக நீளமான கல்வெட்டாகும். அப்பெருவேந்தன் ஆண்ட வரலாற்றினையும், போர்ச் செயல்களையும் அவனது குடும்பம் பற்றியும் விரிவாகக் இக்கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. வீரராசேந்திர சோழன் ஆவணி மாதத்தில் ஆயில்ய நாளில் பிறந்தான் என்பதை இக்கல்வெட்டு கூறுகிறது.

வீரராசேந்திரச் சோழன் இக்கோயிலில் கல்லூரி ஒன்றினை நிறுவினான். அக்கல்லூரியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவும், தங்குவதற்கு இடமும், தலைமுழுக்கு, மற்றும் விளக்குக்கும் எண்ணெய் அளிக்கப்பட்டது. மேலும் ஊரிலுள்ள மக்களுள் கல்வி பயில முடியாதவர்கள் கேள்வியறிவு பெறும் வண்ணம் சில நூல்கள் கோவிலில் இருந்த வியாக்யான மண்டபத்தில் படித்து விளக்கப் பட்டன.

கல்வி பயிலும் மாணவர்களுக்கும், ஊரிலுள்ளோர்க்கும் மருத்துவம் செய்வதற்கன்று ஓர் ஆதுலர் சாலை (மருத்துவ மனை) இருந்துள்ளது. இவற்றில் ஓராண்டுக்குத் தேவையான மருந்துகள் இருந்தன. மேலும் 'சல்லியக் கிரியை பண்ணுவான்' (அறுவை சிகிச்சை நிபுணர்) எனும் மருத்துவர் இருந்துள்ளது சிறப்புச் செய்தியாகும்.

இக்கோயிலில் நடனசாலை ஒன்று இருந்துள்ளது. இதற்கென்று தனியே நிவந்தங்களும் அளிக்கப்பட்டன. இக்கோயிலில் திருவிழா நடைபெறும் காலத்தில் நடனமாடும் நடன மகள்களுக்குத் 'தேவதாசி மானியம்'; நட்டுவஞ் சொல்லித் தந்த நட்டுவனார்க்கு 'நட்டுவ மானியம்', மத்தளம் வாசிப்பவனுக்கு 'மத்தள மானியம்', முரசு ஒலிப்பவனுக்கு 'டமார மானியம்' அளிக்கப்பட்டுள்ளன. மேலும் 'பண்டார மானியம்', 'பஞ்சாங்க மானியம்', 'குயவன் மானியம்', 'வாத்திய மானியம்', 'அர்ச்சகர் மானியம்' ஆகிய மானியங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வூர் சோழர் காலத்தில் சீரும் சிறப்புடன் இருந்துள்ளது.

திருவந்தவர்

திருவந்தவர் சிவன் கோயிலான திருவந்தநாதேஸ்வரர் கோயிலில் உள்ள விக்கிரம சோழனின் கல்வெட்டு, நாற்பத்தெண் ணாயிரக் கோன் எனும் நாராயணன் என்பவன் ஆடு மாடுகளை தான மளித்துள்ளதைத் தெரிவிக்கிறது. மேலும் வானவன் நல்லூர் என்ற ஊர் வடசாலைப்பாக்கம் மற்றும் சிற்றனைக்காவூர் என்ற ஊர்களிலிருந்து தனியே பிரிக்கப்பட்டுத் தனியூராக அமைக்கப் பட்டது. வடசாலைப் பாக்கம் தற்போது சாலவாக்கம் என்றும், சிற்றனைக்காவூர் என்பது சித்தனைக்காவூர் என்றும் பெயர் மாற்ற மடைந்துள்ளது.

நெய்யாடுப்பாக்கம்

ஜெயங்கொண்ட சோழமண்டலத்து, காலியூர்க் கோட்டத்து தொண்டு பழுவூர் நாட்டு நெய்யாற்றுப் பாக்கம் என இவ்வூர் மூன்றாம் குலோத்துங்கனின் 3-வது ஆட்சியாண்டில் பெயர் பெற்றிருந்தது. மேலும் இவ்வூர் பிருதிகங்க உடையாருக்கு இரண்டு சந்தி விளக்கு வைத்தது பற்றிய செய்தியை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இவ்வூர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் 'நெய்யாற்றுப்பாக்கம்' என்றும் இறை வனது பெயர் 'பிருதிகங்க உடையார்' என்றும் அழைக்கப்பட்டுள்ளன.

மேலும் நெய்யாற்றுப் பாக்கத்தைச் சார்ந்த பிடாரி கோயிலுக்கு விளக்கெரிக்க அரைக் காசு வழங்கப்பட்டுள்ளது. பின்னர் இப்பிடாரி கோயிலை நெய்யாடற்பாக்கம் ஈகையமந்தாள் கி.பி. 1243-இல் கற்றளியாகக் கட்டியுள்ளாள். மேலும் கோட்டத்தாள் பெருமாள் ஈகையமந்தாள் என்பவர் மணி, தூபக்கால் ஆகியவற்றை இவ்வம்மன் வழிபாட்டிற்காக வழங்கியுள்ளதை மூன்றாம் இராஜராஜனின் 27ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1243) கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

புத்தளி

இரண்டாம் குலோத்துங்கச் சோழனின் மனைவி புவனமுழு துடையாள் புத்தளி பரசுராமீஸ்வரமுடைய நாயனார் கோயிலுக்குச் சிறைத்தண்டலம் ஊரிலிருந்த 7 வேலி நிலத்தினைத் தேவதானமாக

அளித்துள்ளாள். இக்கல்வெட்டால் (கி.பி. 1135) தற்போது சத்யநாதேஸ்வரர் என்றழைக்கும் இறைவன் முன்பு பரசுராமீஸ்வர முடைய நாயனார் என அழைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிகிறது. மேலும், இவ்வூர் 12-ஆம் நூற்றாண்டிலிருந்து புத்தளி என்ற பெயரால் வழங்கப்பட்டு வருகிறது.

புலிவாய்

இவ்வூரில் மகாமுனீஸ்வரர் என்றழைக்கப்படும் கோயிலில், காணப்படும் கல்வெட்டுகளில் 'வியாக்ரபாத மகாமுனிஸ் வரமுடையார்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கோயில் கருவறை தென்புறச் சுவரில் மூன்றாம் இராஜராஜன் காலத்திய மூன்று கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் மூன்றாம் இராஜராஜனின் 23-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. நரசிங்க விக்கிரம வீரர் படைப்பிரிவைச் சார்ந்த இராமன் தாழி எனும் சிவபட்டன் இக்கோயிலைக் கட்டினான் என்பதைக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. மேலும் விளக்கெரிக்க 90 ஆடுகள் தானமளித்துள்ளான். இராஜராஜ விழுப்பரையன் என்பவன் புலிவாய் வியாக்கிரபாத மாமுனீஸ்வரமுடையர் கோயிலில் விளக்கெரிக்க 1000 காசுகள் தானமளித்துள்ளான். தஞ்சாவூர், நெற்குப்பையைச் சேர்ந்த பெருமான் என்கிற கண்டகோபாலப் பிச்சன் என்பவன் இக் கோயிலைச் சீர்படுத்தியுள்ளான். மகாபிரதானி தணாயக்க உடையாரின் மகன்கள் சாங்கயா மற்றும் தயப்பா ஆகிய இவர்கள் இக்கோயில் மண்டபத்தினை மறுசீரமைப்பு செய்துள்ளதை இக்கோயில் நிலையிலுள்ள கன்னடக் கல்வெட்டு வெளிப் படுத்துகிறது.

எனவே இக்கோயில் மூன்றாம் இராஜராஜனின் ஆட்சி காலத்தில் எழுப்பப்பட்டுள்ளது என்பதை கல்வெட்டால் அறிகிறோம்.

பெருநகர்

காஞ்சிபுரம் – வந்தவாசி செல்லும் சாலையில் 15 கி.மீ. தொலைவில் பெருநகர் என்ற இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரின்

வடகிழக்கே பிரம்மபுதிருப்ஸ்வரர் கோயில் உள்ளது. மூன்று திருச்சுற்றுகளுடன் தெற்கு நோக்கி ஐந்து நிலை கொண்ட வாயிற் கோபுரத்துடன் சிறப்பாகக் காணப்படுகிறது. பச்சைக் கற்களால் கட்டப்பட்ட தூங்கானை வடிவ விமானத்துடன் காட்சியளிக்கிறது. இங்குள்ள கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டது இரண்டாம் இராஜராஜனின் 25-ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி. 1170) கல்வெட்டாகும். அக்காலத்திலும் இவ்வூர் 'பெருநகர்'என்றே விளங்கியுள்ளது. மேலும் இறைவன் 'பிரம்மபுதிருப்ஸ்வர மகாதேவர்', பிரம்மபுதிருப்ஸ்வரருடைய நாயனார் என அழைக்கப்பட்டுள்ளார். ஜெயங்கொண்ட சோழ மண்டலம், வெண்குன்றக் கோட்டத்துப் பெருநகர் நாட்டின் 'பெருநகர்' என இவ்வூர் விளங்கியுள்ளது. இவ்வூர் ஒரு நாட்டுப் பிரிவின் தலைநகராக இருந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வயலக்காவூர்

இவ்வூரிலுள்ள சிவன் கோயில் திருப் வாகீசுவரர், வச்சீஸ்வரர், வாணதீசுவரர் என பலப் பெயர்களில் அழைக்கப்படுகிறது. இரண்டாம் இராஜராஜனின் 27-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1243) திருக்காளத்தி உடையான் வாரணாசி உடையான் களப்பாளன் என்பவன் வயலைக்காவூர் என்ற இவ்வூரில் திருப்வாரணாதி சுரமுடைய நாயனார் கோயிலையும், தேவகோட்டத்து இறை உருவங்களையும், திருமண்டபத்தையும் கற்றளியாக செய்வித்துள் ளான். இவன் தன் மகள் ஆளுடைநாச்சிக்காக ஒரு சந்தி விளக்கெரிப் பதற்குக் கண்டகோபாலன் புது மாடை ஒன்றை இக்கோயில் சிவபிராமணர்களிடம் வழங்கினான். எனவே இக்கோயில், இரண்டாம் இராஜராஜனின் 27ஆவது ஆட்சியாண்டில் கற்றளியாக எடுக்கப் பட்டுள்ளது. ஆனால் இக்கோயில் மண்டபத்தின் தரையில் பதிக்கப்பட்டுள்ள தந்திவிக்கிரமவர்மனின் 2-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 798) கல்வெட்டும், இரண்டாம் இராஜராஜனின் 22-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டும், இக்கோயில் பல்லவர் காலத்தில் தொடங்கி இரண்டாம் இராஜராஜனின் 22ஆவது ஆட்சியாண்டு வர செங்கற்களால் கட்டப்பட்ட கோயிலாக இருந்தது என்பதைக் காட்டுகின்றன.

அரும்பாக்கிழான் கூத்தாடுந்தேவன், கண்ணந்தை காவிதி காரியாழ்வான், கொம்பூருடையார் ஆதித்த தேவர் என்கிற

வில்லவராயர், இறையூர் பல கண்ணன் தழுவக் குழைந்தான் திருவீழிமிழலை உடையான் ஆகியோர் இக்கோயிலில் விளக்கெரிக்க பொன் (மாடை) தானமளித்துள்ளனர்.

குன்னவாக்கம்

குன்னவாக்கம் பிடாரி கோயில் முன்பு நடப்பட்டுள்ள பார்த்திவேந்திரவர்மனின் 3-வது ஆட்சியாண்டுக் (கி.பி. 959) கல்வெட்டு இப்பிடாரிக் கோயிலை குன்றபாக்கத்தைச் சேர்ந்த விசையநல்லூரான் என்பவன் கட்டியுள்ளான் என்ற செய்தியைத் தெரிவிக்கிறது. இதன் மூலம் 10-ஆம் நூற்றாண்டில் இவ்வூர் குன்றபாக்கம் என்றழைக்கப்பட்டதை அறியலாம்.

காஞ்சிபுரம் வட்டம்

ஆர்ப்பாக்கம்

காஞ்சிபுரம் - உத்திரமேரூர் செல்லும் சாலையில் 13 கி.மீ தொலைவில் பாலாறு மற்றும் செய்யாறு ஆகிய இரு ஆறுகளுக்குடையே இவ்வூர் அமைந்துள்ளது.

ஆதிகேசவ பெருமாள் : இக்கோயில் இறைவன் 'திருவீர விண்ணகர் ஆழ்வார்' என்று முதலாம் இராஜராஜனின் கல்வெட்டு தெரிவிக்கிறது. இராஜராஜனின் அரசியார் 'கன்னர நாச்சி பிடார நங்கை' என்கிற செம்பியன் முக்கோக்கிழானடிகள் இக்கோயிலில் வழிபாட்டிற்கு நிலம் தானமளித்துள்ளார். இக் கல்வெட்டுக் குறிப்பிலிருந்து இராஜராஜனின் அரசியார் செம்பியன் முக்கோக் கிழானடிகள் 'கன்னர' நாட்டு இளவரசி என்று அறியமுடிகிறது. இரண்டாம் இராசேந்திரன் அரசியார் திரைலோக்கிய மகாதேவியார் தன்னுடைய தாயார் உமை நங்கை மற்றும் தந்தை விக்கிரமகேசரி பல்லவராயர் நலனுக்காக தலா விளக்கொன்றிற்கு நிலம் தானமளித்துள்ளார். மூன்றாம் இராஜராஜன் காலத்தில் இவ்விறைவன் பெயர் 'கேசவ பெருமாள்' எனப் பெயர் மாற்றமடைந்து தற்போது ஆதிகேசவப் பெருமாள் என்றழைக்கப்படுகிறார். இக்கோயிலில் உள்ள நம்மாழ்வார், கருடாழ்வார் ஆகிய திருமேனிகளைச் செம்பரபாக்கத்தைச் சேர்ந்த மெய்க்கும் பெருமாள் என்பவன் கி.பி. 1578இல் செய்து அளித்துள்ளான்.

ஆதிபட்டாரகர் கோயில் : ஆதிதேவர், ஆதிநாதர், ஆதிபட்டாரகர் என அழைக்கப்படும் சமண தீர்த்தங்கர்களில் முதல் தீர்த்தங்கரரான ரிஷப தேவருக்கு எடுப்பிக்கப்பட்டது இக்கோயிலாகும். கருவறையில் ஆதிநாதர் யோகாசனத்தில் அமர்ந்தநிலையில் காணப்படுகிறார். இங்கு காணப்படும் கி.பி.

10-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு இக்கோயிலுக்கு இறைநீக்கி பள்ளிச் சந்தமாக நிலமும் பொன்னும் அளித்துள்ள செய்தியைக் கூறுகிறது.

திருவாலீஸ்வரம் : திருவாலீஸ்வரம், திரு வீரராமேஸ்வரம் என்றழைக்கப்படும் இக்கோயில் பிற்காலச் சோழர் காலத்தைச் சார்ந்தது. முதலாம் குலோத்துங்கன் ஆட்சியில் இவ்வூர் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்து மாகறல் நாட்டு ஆர்ப்பாக்கம் என்றழைக்கப்பட்டது. மேலும் 'பூஸ்வீஸ்வரர்' என இறைவன் அழைக்கப்பட்டுள்ளார். பின்னர் மூன்றாம் இராசராசன் காலத்தில் (கி.பி. 1235) 'கைலாசமுடைய நாயனார்' என அழைக்கப் பட்டுள்ளார்.

குலசேகர பாண்டியனிடமிருந்து மதுரையை ஈழப் படைகள் கைப்பற்றினர். பின்னர் இராஜாதிராஜனின் படையுடன் போரிட்டுத் தொண்டி மற்றும் பாசி ஆகிய பகுதிகளைக் கைப்பற்றியது. இதனையறிந்து எதிரிலிச் சோழ சம்புவராயன் கௌடதேசத்து (வங்காளம்) தட்சிணலாட நாட்டைச் சேர்ந்த உமாபதி தேவர் ஞானசிவதேவர் என்றழைக்கப்பட்ட சுவாமி தேவரைச் சந்தித்து போர் விவரத்தை கூறினார். 28 நாட்கள் 'அகோரபூஜை' செய்த பின்னர் பிள்ளை பல்லவராயர் தலைமையில் சென்றபடை ஜெயத்ரதர் மற்றும் லங்காபுரி தண்டநாயகர் உட்பட ஈழப்படையினைத் தோல்வி யடையச் செய்தது. ஈழப்படை அச்சுறுத்தலால் ஏற்படவிருந்த அழிவினைப் பாதுகாத்தற்காக ஆர்ப்பாக்கம் கிராமத்தினைச் சுவாமி தேவருக்குக் சம்புவராயன் தானமாக அளித்தான். இச்செய்தியை இங்குள்ள இரண்டாம் இராஜாதிராஜனின் 5-ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி. 1168) கல்வெட்டு விரிவாகக் கூறுகிறது.

களகாட்டூர்

காஞ்சிபுரம் - உத்திரமேரூர் செல்லும் சாலையில் காஞ்சிபுரத்தி லிருந்து 2கி.மீ. தொலைவில் காஞ்சியின் புறநகர்ப் பகுதியாக இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூர் அக்னீஸ்வரர் கோயில் கிழக்குநோக்கிய கருவறை, அந்தராளம், முகமண்டபம் ஆகிய கட்டட அமைப்பில் காணப்படுகிறது. நுழைவு வாயில் முகமண்டபத்தின் தென்பகுதியில் உள்ளது. இக் கோயில் தேவ கோட்டங்கள் கருவறை மற்றும் அந்தராளங்களில் அமைக்கப் பட்டுள்ளன. அந்தராளத்தின் தெற்கு

மற்றும் வடக்கு தேவகோட்டங்களில் விநாயகர், மற்றும் துர்கை உருவங்கள் உள்ளன. கருவறைத் தேவ கோட்டங்களில் தெற்கு, மேற்கு, வடக்குப் பகுதிகளில் முறையே ஆலமர்ச் செல்வர் (தட்சண மூர்த்தி) மாதொருபாகன் (அர்த்தநாரி), நான்முகன் (பிரம்மா) ஆகிய உருவங்கள் காணப்படுகின்றன. இக்கோயில் அமைப்பைக் கொண்டும் கருவறை பின்புறம் தேவகோட்டத்தில் மாதொருபாகன் உருவம் வைக்கப்படுவது முதலாம் ஆதித்தன் காலத்தின் வழக்கம் என்பதாலும் இக்கோயில் முதலாம் ஆதித்தன் காலத்தில் எடுக்கப்பட்டது எனலாம்.

களகாட்டூர் என்று தற்போது அழைக்கப்படும் இவ்வூர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் களகாட்டூர் என்றே வழங்கப்படு கிறது. மேலும் இவ்வூர் காலியூர் கோட்டத்தின் ஏரிகீழ் நாட்டின் ஒரு பகுதியாக இருந்துள்ளது. தற்போது அக்னீஸ்வரர் என்றழைக்கப்படும் இறைவன் முதலாம் இராஜராஜம் காலம் தொடங்கி மற்ற கல்வெட்டுகளிலும் 'ஊருணி ஆழ்வார்' என்றழைக்கப்பட்டுள்ளார். 'சந்திரமேக தடாகம்' என்று கல்வெட்டு குறிக்கின்ற ஏரி தற்போது 'புத்தேரி' என அழைக்கப்படுகிறது. முதலாம் இராஜனின் வேண்டு கோளுக்கிணங்க இவ்வூர் வெண்ணெய்ப் புத்தூருடையான் காடன் மைந்தன் என்பவன் இவ்விறைவனுக்கு ஒரு விளக்கெரிக்கவும். உலகிலுள்ள ஏனைய மன்னர்கள் மற்றும் உலக நலன் வேண்டியும், மற்றொரு விளக்கெரிக்க உரிய வழிவகை செய்துள்ளான்.

இவ்வூரில் சுப்ரமணியர் மற்றும் பிடாரியம்மன் கோயில் களும் உள்ளன. பிடாரி அம்மன் கோயிலருகே உள்ள தனிப் பலகைக் கல்வெட்டு பார்த்திவேந்திராதிபதி வர்மன் காலத்திய தாகும். இவ்வூர் சுப்ரமணியர் கோயிலில் 'மதிய உணவு' படைக்க வேண்டி நிலம் அளித்த செய்தியைக் கூறுகிறது.

காஞ்சிபுரம்

ஏகாம்பரநாதர் கோயில்

சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சீரும் சிறப்பும் பெற்ற முக்கியத் தலங்களில் ஒன்றாக இக்கச்சியேகம்பம் திகழ்கிறது. பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலம் தொடங்கி இக்கோயில் புகழோடு விளங்கிவருகிறது.

காஞ்சியில் உள்ள சிவாலயங்களில் மிகப்பழமையானது கைலாசநாதர் கோயில் எனக் கூறுவர். அக் கைலாசநாதர் கோயில் இரண்டாம் நரசிம்மவர்மனாகிய இராஜசிம்மன் காலத்தியதாகும். ஆனால் இராஜசிம்மனுக்கு காலத்தால் முற்பட்ட முதலாம் மகேந்திரவர்மனின் கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட தூண்கள் ஏகாம்பரநாதர் கோயிலின் வெளிச்சுற்றில் கண்டுபிடிக்கப்பட்டன. தற்போது அத்தூண்கள் சென்னை அரசு அருங்காட்சியகத்தின் முன் வாயிலில் நடப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து கைலாசநாதர் கோயிலை இராஜசிம்மன் எடுப்பதற்கு முன்பு முதலாம் மகேந்திர வர்மனால் செங்கற்களால் கோயில் கட்டப்பட்டு அதனின் முன் மண்டபம் கருங்கற் தூண்களால் எழுப்பப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. எனவே ஏகாம்பரநாதர் கோயில் முதலாம் மகேந்திரவர்மனால் முதன் முதலில் செங்கற்கட்டடக் கோயிலாக உருவானது எனலாம்.

இங்குள்ள 'சிவகங்கை தீர்த்தம்' என்ற குளத்தின் மேற்குக் கரையில் பல்லவர் காலக் கோயில் ஒன்று உள்ளது. இக் கோயில் மகேந்திரவர்மன் காலம் அல்லது இராஜசிம்மன் காலம் என இரு வேறு கருத்துகள் உண்டெனினும் முதலாம் மகேந்திரவர்மனின் கல்வெட்டால் ஏகாம்பரநாதர் கோயில் கி.பி. 7ஆம் நூற்றாண்டி லிருந்து சிறப்புடன் விளங்குகிறது என்பது தெளிவு.

ஏகாம்பரநாதர் கோயில் கொடிக்கம்பத்தின் அருகே மேற்கு நோக்கி ஒரு சிறு சன்னதி உள்ளது. இச் சன்னதியை நாவுக்கரசர் 'திருக்கச்சி மயானம்' எனப் பாடியுள்ளார்.

'மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி மயானத்தான்
வார்சடையான் என்னினல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவனல்லன் ஒருநரனல்லன்
ஓர் உவமனில்லி'

எனக் இக்கச்சி மயானத்து இறைவனைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். மேலும் மகேந்திரவர்மனும் திருநாவுக்கரசரும் சம காலத்தவர் என்பது ஒப்பு நோக்கத்தக்கது.

இக்கச்சி மயானம் முற்காலச் சோழர் கலைப்பாணியில் அமைந்தது. உண்ணாழி, அர்த்தமண்டபம் அமைப்பு, கோட்டங்

களில் காணப்படும் சிற்பங்களின் அமைதியைக் கொண்டு இக்கோயில் முற்காலச் சோழர் காலத்தைச் சேர்ந்தது எனலாம்.

ஏகாம்பரர் கோயிலுக்கு, பிற்காலச் சோழர் காலத்தில் பல நிவந்தங்கள் அளிக்கப்பட்டன. பிற்காலச் சோழர் காலத்தில் தான் தற்போதைய கோயில் கட்டப்பட்டதாகும். பின்னர் நகரத்தார். மேற்கொண்ட பணியின்போது கருவறை முற்றிலும் அகற்றப்பட்டு நகரத்தார் வடிவமைப்புடன் புதிய கருவறை விமானம் மற்றும் திருச்சுற்று கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டதாகும்.

பிற்காலச் சோழர்களில் முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் இராஜராஜன், மூன்றாம் இராஜராஜன், மூன்றாம் குலேத்துங்கனின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

பிற்காலச் சோழர் காலத்தில் இங்கு நூற்றுக்கால் மண்டபம் அமைக்கப்பட்டு, விஜயநகர அரசு காலத்தில் ஆயிரங்கால் மண்டபமாக மாற்றமடைந்துள்ளது. இதனை இம்மண்டபத்தின் சில தூண்களில் உள்ள 'விக்கிரமச் சோழன் நூற்றுக் கால் மண்டபம்' 'குலோத்துங்கன் நூற்றுக்கால் மண்டபம்' என்ற கல்வெட்டுக் குறிப்பால் அறியமுடிகிறது.

விஜயநகரப் பேரரசின் புகழ் வாய்ந்த மன்னனான கிருஷ்ண தேவராயர் காலத்தில்தான் இக்கோயிலின் தெற்கு வாயிலில் இராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. கி.பி. 1509இல் கிருஷ்ண தேவமகாராயரால் இக்கோபுரத்திற்கு முன் உள்ள மண்டப விதானத்தில் தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் உள்ள கல்வெட்டால், எடுக்கப்பட்டுள்ள செய்தி தெரியவருகிறது.

ஆயிரங்கால் மண்டபத்து விதானத்தில் விஜயநகரகாலத்து வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. திருச்சுற்றின் வடக்குப் பகுதியிலும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவை விஜயநகர காலத்திற்கு உரிய மஞ்சள், கருமை, காவி ஆகிய நிறங்களில் காணப்படுகின்றன. யானை கட்டி மண்டப விதானத்தில் நாயக்கர் கால ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. ஆனால் நாயக்கர் கால ஓவியங்கள் பழுதடைந்த சில பகுதிகள் விஜயநகரகக் கால ஓவியங்கள் மீது இவ்வோவியம் தீட்டப்பட்டுள்ளதை நன்கறியலாம்.

இக்கோயில் குளத்திற்கு மேற்கே குளத்தையொட்டி மண்டபம் ஒன்று காணப்படுகிறது. இம் மண்டபத்தின் பீடப்பகுதியில் சிறுத்

தொண்ட நாயனார் இறைவனுக்குப் பிள்ளைக் கறி சமைத்தளித்த புராணம் புடைப்புச் சிற்ப வடிவில் அழகுறச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் இக்கோயில் கருங்கல் மண்டபத்துடன் கூடிய செங்கற்றளியாக எடுக்கப்பட்டு, பிற்காலச் சோழர் காலத்தில் முழுக் கற்றளி யாகவும், மண்டபங்கள், திருச்சுற்றுகளோடும் எடுக்கப்பட்டது. விஜயநகரக் காலத்தில் ஆயிரங்கால் மண்டபம், மற்றும் இராஜகோபுரம் போன்ற அமைப்புடன் சிறப்பாக விரிவடைந்தது. ஆனால் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோழர்காலத்தில் எழுப்பப்பட்ட கருவறை மற்றும் திருச்சுற்று ஆகியவை நகரத்தார் பாணியாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

கைலாசநாதர் கோயில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் பல்லவ மன்னன் இராஜசிம்மனால் சிவனுக்காக எழுப்பப்பட்ட கோயிலாகும். இராஜசிம்மன் மாமல்லபுரத்தில் உள்ள 'கடற்கரைக் கோயிலைக் கடற்கரையை ஒட்டியும், பனைமலையில் பனமலைநாதர் கோயிலை மலைமீதும், காஞ்சிபுரத்தில் உள்ள இக்கைலாசநாதர் கோயிலை நிலத்திலும் எடுத்துள்ளான். இக்கோயில் அதிட்டானத்தின் ஒரு பகுதி மட்டும் கருங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டது. மற்றைய பகுதி அனைத்தும் மணற்கற்களால் (Sand Stone) கட்டப்பட்டதாகும். இராஜசிம்மனால் எடுக்கப்பட்ட முதன்மை கருவறையினுள் காணப்படுவது கருப்புக்கல் லிங்கமாகும். இந்த லிங்கம் 16 பட்டையுடன் கூடிய தாரா லிங்கமாகும். இராஜசிம்மன் காலத்தில் கருவறை லிங்கத்திற்குப் பின்புறம் உட்புறச் சுவரில் சிவன், பார்வதி, கந்தனோடு வீற்றிருக்கும் 'சோமாஸ்கந்தர்' உருவத்தைப் புடைப்புச் சிற்பமாக வடிப்பது வழக்கமாகும். இங்கும் மூலவருக்குப் பின் சோமாஸ்கந்தர் உருவம் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டு, அதன்மீது சுதை இடப்பட்டு வர்ணம் பூசப்பட்டுள்ளது. ஆனால் வண்ணங்கள் சில இடங்களில் மட்டும் காணப்படுகின்றன. இங்குள்ள சுவர் வண்ணச் சித்திரங்கள் அஜந்தா ஓவியங்களுக்கு நிகரானதாகும். இக்கோயில் கருவறை, மண்டபம், அதனையடுத்து மூன்றாம் மகேந்திரவர்மனால் எடுக்கப்பட்ட சிறிய கோயில் மற்றும் திருச்சுற்று மதிலை ஒட்டி, சுவரில் 58 சிற்றாலயங்களுடன் மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளது. நுழைவு வாயிலையொட்டி எட்டு சிற்றாலாயங்கள் உள்ளன. இவற்றில் வலது பக்கத்தில் மூன்றாவதாக

உள்ள சிற்றாலயம் இராஜசிம்மனின் பட்டத்தரசி ரங்கபதாகை என்பவள் கட்டியதாகும். இதனை இச்சிற்றாயத்தில் உள்ள கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

முதன்மை கருவறைக்கு முன்னால் இருதளத்துடன் கூடிய நாகர விமானமாக தோன்றும் கோயில் மூன்றும் மகேந்திரவர்மனால் 'மகேந்திரேச்வரம்' என்று எடுப்பித்ததாகும். இக்கருவறையில் தாரா லிங்கமும் பின்சுவரில் சோமாஸ்கந்தர் உருவமும் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளன. மகேந்திரவர்மேச்வர கிருஹத்தின் நுழைவு வாயில் படிக்கட்டுகளின் இருபுறமும் 'ரணரசிக' என்ற இவனது பட்டப் பெயர் காணப்படுகிறது. தென்னிந்திய கட்டடக்கலை வரலாற்றில் இராஜசிம்மன் காலம் கட்டட கலைக்குப் பொற்காலமாகும். கோயில் என்ற அமைப்பு குடைவரைக் கோயில், ஒற்றைக் கற்கோயில், கட்டடக் கலைக் கோயில் என வளர்ச்சியுற்றது. இராஜசிம்மன் காலம் கட்டடக் கலை கோயிலுக்குக்குச் சிறந்த தொடக்கம் மட்டுமின்றிச் செழிப்பான வளர்ச்சியையும் பெற்றிருந்தது.

இக்கோயில் முதன்மைக் கருவறை விமானம் நான்கு தளங்களுடனும், சிகரம் எண்பட்டை வடிவ திராவிட சிகரமாகவும் விளங்குகிறது. கோயில் சுவர்களில் ஏராளமான சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இவ்விமானத்தின் முதல் தளத்தில் ஏழு சிறிய கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கென தனி வழியும் உள்ளே இறை உருவங்களும் காணப்படுகின்றன. கருவறை தென்புறச் சுவரில் அடிமுடி காணா அண்ணலான லிங்கோத்பவரின் சிற்பம் உள்ளது. மேற்கு புறச் சுவரில் சந்திய நிருத்திய மூர்த்தி, ஊர்த்தவ தாண்டவ மூர்த்தியாகச் சிவன் நடனமாடும் நிலையில் காணப்படுகிறார். வடக்குப்புறச் சுவரில் திரிபுராந்தக உருவமும், துர்கை, பைரவி, கௌசிகை, ஜேஷ்டா எனும் மூத்தோள் ஆகியோரின் உருவங்களும் உள்ளன.

கோயில் திருச்சுற்று உட்புறச் சுவர்களில் துர்கை, சோமஸ்கந்தர், திரிபுராந்தகர், அசுர சம்ஹாரம், நரசிம்ம விஷ்ணு, திரிவிக்ரமர், பிரம்ம சிரஸ் சேதகர், யோககேச, தட்சணனின் யாகத்தை அழித்தல், தனது தேவியுடன் பிரம்மா, கங்காதரன், ஊர்த்துவ தாண்டவர், சிவன், கௌரி சங்கரன், திருப்தேவி பூதேவியுடன் திருமால், லிங்கோத்பவர், பிட்சாடனர், இராவணன், வாலி போன்ற சிற்பங்கள் எழிலுடன் காணப்படுகின்றன.

இக் கோயில் கருவறைச் சுவர், மதிற்சுவர் உட்பட அனைத்துப் பகுதிகளிலும் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் புராணத்தின் அடிப்படையிலே உருவாக்கப் பட்டுள்ளன.

பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்டத் தூண்கள் சிம்மத் தூண்களாக இருக்கும். இங்குள்ள தூண்களில் காணப்படும் சிம்மங்கள் இராஜசிம்மன் காலத்திற்கே உரிய பாயும் சிம்மங்களாக உருவாக்கப்பட்டுள்ளன.

இங்கு காணப்படும் கோயிற் கட்டடம் மற்றும் சிற்பங்கள் அனைத்தும் மணற்கற்களால் எடுக்கப்பட்டு அதன் மீது சுதை இடப்பட்டுள்ளது. கைலாசநாதர் கோயில் கருவறையைச் சுற்றி பல்லவ கிரந்தத்தில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவனின் பரம்பரை பிரம்மன் தொடங்கி அசுவத்தாமன் வழியாக உருவானது என்று கல்வெட்டு கூறுகின்றது. மேலும் அத்யாந்தகாம, திருப்பர, ரணஜெய, சித்ரகர்முக, ஏகவீர, சிவச்சூடாமணி என இவனது பட்டப் பெயர்களும் உள்ளன. விமானத்தின் ஒன்று முதல் மூன்று வரையான தளங்களில் ராஜசிம்ஹ, அத்யந்தகாம, ரணஜெய, அதிரணசண்ட, திருப்பர, திருப்மேக, குலதிலக, காஞ்சி மகாமணி, மகாமல்ல, புவனபஜனண, ஆகமபிராமண, தேவதேவபக்த போன்ற பட்டப் பெயர்கள் பல்லவ கிரந்தத்தில் பொறிக்கப்பட்டுள்ன. நான்காவது தளத்தில் அமோகபன, உக்ரசாயக, அவிஸ்மிர, அஜ்மர்த்தன போன்ற பெயர்களும் காணப்படுகின்றன. சாளுக்கியமன்னன் இரண்டாம் விக்கிரமாதித்தன் காஞ்சியை வென்று இக்கோயிலுக்கு வந்தபின் இதனழகில் பிரமித்து இக்கோயில் மற்றும் பொக்கிஷங் களைக் கவராமல் திரும்பச் சென்றான். இக்கோயில் அமைப்பைக் கண்டு வியந்து சென்றதை மண்டபத் தூணில் உள்ள 8-ஆம் நூற்றாண்டுப் பழங்கன்னடக் கல்வெட்டுக் கூறுகிறது. அவன் தன்னாட்டில் இக் கோயில் போன்று கைலாசநாதர் கோயில் ஒன்று எடுத்தான். ஆனால் இதுபோன்று மிகச்சிறப்பாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இக் கோயிலில் சோழமன்னர்களான பராந்தகன் மற்றும் இராஜராஜன் காலக் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுகளில் இக் கோயில் பெரிய திருக்கற்றளி, திருக்கற்றளி, பெரிய திருக்கற்றளி எனும் இராஜேசிம்ஹேஸ்வரம் என அழைக்கப் பட்டுள்ளது. இக்கோயில் வழிபாட்டிற்குப் பல தானங்களிக்கப் பட்டுள்ளன.

திரிபுராந்தகம்

திரிபுராந்தகன் தொடர்பாக ஏற்பட்ட கோயிலென்பதால் சிவ தாண்டவச் சிற்பங்கள் நிரம்பியுள்ளன. இக் கோயில் விமானம் சமசதுரத்துடன் இருதளங்களுடைய நாகரவிமானமாக உள்ளது. இக்கருவறை, அதிட்டானம் உபபீடம் வரை கருங்கல்லால் ஆனது, மேலுள்ள பகுதிகள் மணற் கல்லால் ஆனாது. இக்கோயில் சுவர்களின் மூலைகளில் தாவும் சிம்மங்கள் காணப்படுவதால், இக் கோயில் ராசசிம்மனால் எழுப்பப்பட்ட கோயில் என்பது வரலாற்றறிஞர்களின் கருத்தாகும். இங்குள்ள சிற்பங்கள் மீது சுதை பூசப்பட்டுள்ளது. கருவறைப் பின்புறம் சோமாஸ்கந்தர் சிற்பமும் கருவறைப் பக்கச் சுவர்களில் இராவணன் இமயமலையைப் பெயர்த்து எடுப்பது போன்றும் மற்றொரு புறத்தில் ஊர்த்துவ தாண்டவ உருவமும் காணப்படுகின்றன. இவை அனைத்தும் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இராஜசிம்மனால் எடுக்கப்பட்டதாகும். கோட்டங்களில் தென்புறத்தில் தென்முகக் கடவுளான தட்சண மூர்த்தி யோக தெட்சணா மூத்தியாக மிகப்பெரிய சுதை சிற்பமாக உள்ளார். வடக்குப்புறச் சுவர் கோட்டத்தில் துர்கை சிற்பம் சிறப்புடன் காணப்படுகிறது. பல்லவர் காலத்தில் தேவகோட்ட இறை உருவ சிற்பங்களுக்கும் வாயிற் காவலர்கள் அமைக்கப்பட்டிருக்கும். அதற்கேற்ப துர்கைச் சிற்பத்திற்கு அருகே பெண் காவலர்கள் உள்ளனர். எழில்மிகு சிற்பங்களே இக் கோயிலின் சிறப்பம்சமாகும்.

தான் தோன்றீச்வரம்

காஞ்சியில் தழைக்தோங்கிய புத்தமதம் சிறிது சிறிதாகத் தேயத் தொடங்கியது. கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் சோழன் கிள்ளி வளவன் சிறைச் சாலைகளைப் புத்த அறச் சாலைகளாக்கிய காலம் மாறின. புத்தத்தில் உட்பூசல் உண்டாகி ஈனயானம், மகாயானம், சிராவகயானம், மந்திரயானம் எனப் பல கிளைகள் தோன்றின. பிற்காலப் பல்லவர்களுள் முதன்மையானவனான மகேந்திரவர்மன் இசை, நடனம், சிற்பம், நாடகம் ஆகியவற்றில் வல்லவனாக திகழ்ந்தவன். இவன் காஞ்சியில் கபாலிக, பாசுபத, புத்தத்துறவிகளின் வாழ்க்கையினைக் கேலி செய்து 'மத்தவிலாச பிரகசனம்' என்ற நாடக நூலைப் படைத்தான். இவனியற்றிய மத்தவிலாச பிரகாசன

நிகழ்ச்சியை மணல் கல்லில் சிற்பமாக வடித்தான். மாட்டுக் கொம்பில் மதுயேந்தித் திரியும் கபாலிக, கபாலினி கூத்தைச் சிற்பங்களாகத் தான்தோன்றீச்வரர் கோயிலில் காணலாம்.

இக்கோயில் கருவறையில் கருப்புகருங்கல்லினால் சோமாஸ் கந்தர் உருவத்தைப் படைத்துள்ளான். இதனின் பீடம் மற்றும் திருவாசி அனைத்தும் கல்லால் செதுக்கப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும்.

இறவாதான் ஈஸ்வரம்

இக்கோயில் காஞ்சியிலிருந்து சென்னை வரும் வழியில் காஞ்சியின் புறநகரில் கோனேரிக்குப்பம் என்ற இடத்தில் அமைந் துள்ளது. கிழக்கு நோக்கி அமைந்துள்ள இக்கோயில், கருவறை, அந்தராளம், மண்டபம் ஆகிய அமைப்புடன் காணப்படுகிறது. இக் கோயில் சுவர் முழுவதும் சிற்பங்களாகக் காட்சியளிக்கின்றன. தென்புற அந்தராளத்தில் கணபதி சிற்பமும், கருவறை தென்புறச் சுவரில் யோகத் தட்சணாமூர்த்தி சிற்பமும் காணப்படுகின்றன. கருவறைப் பின்புற மேற்குச் சுவரில் சிவதாண்டவமூர்த்தி சிற்பமும், இதனின் வலப்புறத்தில் பிட்சாடனரும் இடப்புறத்தில் கஜசம்ஹார மூர்த்தி உருவங்களும் உள்ளன. வடபுறச்சுவரில் பிரம்மா, கங்காதரர், காலசம்ஹாரர் சிற்பங்கள் அமைந்துள்ளன. மேலும் அந்தராளத்தின் வடபுறத்தில் உள்ள துர்கை எட்டு கைகளுடன் சிம்மத்தின் மீது அமர்ந்திருக்கும் காட்சி சிறப்பானதாகும்.

இக் கோயில் (கி.பி. 8-ஆம் நூற்றாண்டு) இரண்டாம் நரசிம்ம வர்மனான இராஜசிம்மன் காலத்தைச் சார்ந்தது. மேலும் காஞ்சிபுரத்தில் இராஜசிம்மன் காலத்திய பிறவாதான் ஈஸ்வரம், திரிபுராந்தகேஸ்வரம், மாதங்கேஸ்வரம் ஆகிய கோயில்களும் இதே அமைப்பில் அமைந்துள்ளன.

முக்தீஸ்வரம்

இரண்டாம் நந்திவர்மனின் அரசியார் தர்ம மகாதேவி தனது பெயரால் 'தர்ம மகாதேவி ஈஸ்வரம்' என்ற இக் கோயில் இம்மன்னனின் 28ஆவது ஆட்சியாண்டில் எடுத்தார். மேற்கு நோக்கி அமைந்துள்ள இக்கோயில் கருவறை மற்றும் அர்த்தமண்டப அமைப்புடன் காணப்படுகிறது. அர்த்த மண்டபத்தினுள் உள்ள நான்கு

தூண்களில் முதலில் உள்ள இரு தூண்கள் சிம்ம உருவத்தின் மீதும் மற்றவை சாதாரணத் தூண்களாகவும் உள்ளன. அர்த்தமண்டபத்தின் உட்புற வடக்குச் சுவரில் இராவண அனுக்கிருஹ மூர்த்தியும், தென்புறச்சுவரில் சிவ தாண்டச் சிற்பங்கள் புடைப்புச் சிற்பங் களாகவும் வடிக்கப்பட்டுள்ளன. சிவதாண்டவமூர்த்தி, சண்டிகேஸ்வரர் மற்றும் சிவபார்வதி உருவங்கள் தென்புறச்சுவரில் காணப்படு கின்றன.

இக்கோயிலின் வடபுற வெளிச்சுவரில் ஊர்த்துவ தாண்டவம், துர்கை, சண்டேச்வர அனுக்கிரஹ மூர்த்தி, துவாரபாலகர், சுப்ரமணியர், அரிஹரர், சூரியர் சந்திரர் ஆகிய சிற்பங்கள் உள்ளன. தென்புற வெளிச்சுவரில் அந்தகாசூரவத மூர்த்தி, யோக தட்சணா மூர்த்தி, உமாமகேசுவரர், கணபதி, யோகசனத்தில் சிவன், சிவன் உமையுடன் வீற்றிருத்தல் போன்ற உருவங்கள் செம்மையாக அமைக்கப்பட்டுள்ளன.

இராஜசிம்மனின் மனைவி தர்மமகாதேவி 10 பட்டி நிலத்தினைத் தர்மமாஹேஸ்வரம் எனப்படும் இக்கோயில் இறைவன் மாணிக்கதேவருக்குத் திருவுண்ணாழிகைப் புறமாகத் தானமளித் துள்ளார். இந்நிலத்தின் வருமானத்தைக் கொண்டு வழிபாடு செய்ய மூன்று நபர்களை நியமித்தும், இம்மூவர் பரம்பரையாகத் தொடரவும் ஆணையிட்டுள்ளார்.

முதலாம் இராஜேந்திரன் காலத்தில் 'தன்மமாதேவி மாணிக்க ஈஸ்வரம்' என இக்கோயில் அழைக்கப்பட்டுள்ளது.

இக்கோயில், திருக்குறிப்புத் தொண்டர் என்ற நாயன்மாரின் புராணத்தோடு தொடர்புடையதாகும். இக்கோயிலின் எதிரிலுள்ள குளத்தின் நுழைவுவாயிலில் சுதை வடிவாகத் திருக்குறிப்புத் தொண்டரின் புராணம் அமைக்கப்பட்டுள்ளது.

சித்தீஸ்வரர் கோயில்

காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திற்கு அருகில் காமராசர் தெருவில் அமைந்துள்ளது இக்கோயில். இறைவனைச் 'சித்தீசர்' மற்றும் 'சித்தீசுவரர்' என அழைக்கின்றனர். காஞ்சிப்புராணம் இவ்விறைவனை 'மஞ்சள் நீர்க் கூத்தர்' எனக் குறிக்கிறது.

காஞ்சிக் கோயில்களில் அமைந்துள்ள லிங்க வடிவங்களில் இக்கோயில் லிங்கமே மிகப் பெரியதாகும். ஆனால் ஆவுடையார் இன்றி ருத்திரபாகம் மட்டுமே காணப்படுகிறது.

இக்கோயில் கருவறை (உண்ணாழிகை), அர்த்தமண்டபம், மகாமண்டபம், முன் மண்டபம், நர்த்த மண்டபம், பலிபீடம், திருச்சுற்று ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது. இக்கோயில் இறைவனைத் தவிர ஏனையவை பிற்காலத்தில் எழுப்பப் பட்டவையாகும்.

வைகுண்டப் பெருமாள் கோயில்

''கறையுடை வாள்மற மன்னர்கெ டக்கடல்
போல்முழங் கும்குரல் கடுவாய்ப்
பறையுடை பல்லவர் கோன் பணிந்தபர
மேச்சுர விண்ணக ரம்மதுவே''

என்று திருமங்கையாழ்வார் திருமொழி ஒன்பதாம் பாடலில் பாடியுள்ளார்.

இக்கோயில் இரண்டாம் நந்திவர்ம பல்லவனால் 'பரமேச்வர விண்ணகரம்' எனப் பெயரிட்டு திருமாலுக்கென எடுக்கப்பட்டது என்பதை இங்குள்ள கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. அதிட்டானம் தவிர மற்ற பாகங்கள் மணற் கல்லால் கட்டப்பட்டு, இங்குள்ள சிற்பங்கள் அனைத்தும் மணற் சிற்பத்தின்மீது சுதை பூசப்பட்டு வண்ணமிடப்பட்டதாகும். ஆனால் தற்போது சுதையும் வண்ணங்களும் இன்றியே காணப்படுகின்றன. இக் கருவறை விமானம் நான்கு தளங்களுடன் சிகரம் எண்பட்டை வடிவில் வடிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள கருவறை ஒன்றின் மீது ஒன்றாக மூன்று கருவறைகளைக் கொண்டதாகும். இதில் கீழ், இடை, மேல் தளங்களில் முறையே அமர்ந்த, கிடந்த, நின்ற கோலத்துடன் திருமால் காட்சியளிக்கிறார். இங்கு கலையம்சத்துடன் கூடிய பல்லவ சிம்மத் தூண்கள் தளத்தைத் தாங்கியுள்ளன. உட்புறச் சுவர்களில் பல்லவர்களின் வரலாற்றினை விளக்கும் வகையில் தங்களது முன்னோர்களின் போர், வெற்றி, முடிசூட்டு விழா ஆகிய நிகழ்வுகள் சிற்பங்களாக உருவாக்கப்பட்டுள்ளன. பல்லவர்களின் கால வரிசை மற்றும் முதாதையர்களைப் பற்றி அறிந்து கொள்ள காசாக்குடி,

தண்டன் தோட்டம், பட்டத்தாள் மங்கலம், கொற்றங்குடி ஆகிய செப்புப்பட்டயங்கள் உதவுகின்றன. இங்கு அம்மூதாதையர்களின் வரலாற்று நிகழ்வுகளைச் சிற்பங்களாக அமைக்கப்பட்டிருப்பது சிறப்பாகும்.

பல பல்லவ மன்னர்களின் முடிசூட்டு விழா, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த ஆடை, அணிகலன்கள், அலங்காரங் களைச் சிறப்புற வெளிப்படுத்துகின்றன.

திருமாலுக்குரிய பரமேசுவர விண்ணகரம் என்ற இக்கோயில் எழும்பியதையே சிற்பம் ஒன்று விளக்குகிறது. வரலாறு மற்றும் புராணக் கதைகள் கூறும் எழில் மிகு சிற்பங்கள் வடிக்கப்பட்டு வெகு பிரமிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

சொக்கீசர்

இக்கோயில் காமாட்சியம்மன் கோயிலருகே, வடக்கு மாட வீதியில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. காஞ்சி மாநகரில் முழுவதும் கற்றளியாக எடுக்கப்பட்டக் கோயில்களில் இச் சிறிய கோயிலும் ஒன்று. இக்கோயில் அதிட்டானம் முதல் சிகரம் வரை முழுவதும் கருங்கற்களால் உத்தமச் சோழனின் காலத்தில் எடுக்கப்பட்டதாகும்.

இக் கோயில் கருவறை, அர்த்தமண்டப அமைப்புடன் காணப்படுகிறது. ஒரு தளவிமானத்துடன் கிதிருப்வம், சிகரம் வடிவத் துடன் அமைக்கப்பட்டுள்ளது. கிரிவத்தில் தெற்கே தெட்சணா மூர்த்தி, மேற்கே யோகநரசிம்மர், வடக்கே பிரம்மா ஆகிய உருவங்கள் உள்ளன. ஆனால் தேவகோட்டங்களில் தென்பகுதியில் மட்டும் கணபதி உருவம் காணப்படுகிறது.

இக்கோயிலைக் 'கௌஸி கேஸ்வரம்' அழைக்கின்றனர். உத்தமச் சோழனின் 15-ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி. 985) கல்வெட்டுக் இக்கோயிலை 'தெற்கிருந்த நக்கர்' கோயில் எனக் குறிப்பிட்டுள்ளது.

சோழர் படைப்பிரிவில் மூத்தவாள்பெற்ற கைக்கோளன் அச்சன் சேனாச்சன் என்பவனிடம் காஞ்சிபுரம் நகர நிர்வாகிகள் 300 குழி நிலத்தினை விற்றுள்ளனர். இக்கோயிலிலுள்ள 'கரிகாலப் பிள்ளையார்' வழிபாட்டிற்காக அந்நிலத்தினையும் இக்கோயிலில் விளக்கெரிக்க 3 பழங்காசுகளும் வழங்கியுள்ளான்.

இங்குள்ள கல்வெட்டில் 'கரிகாலப் பிள்ளையார்' எனக் குறிப்பிடுவது தென் பகுதி தேவ கோட்டத்தில் காணப்படும் பிள்ளையார் சிற்பமேயாகும். இப்பிள்ளையார் பத்மபீடத்தின் மீது லலிதாசனத்தில் நான்கு கரங்களுடன் காணப்படுகிறார். மேற்கரங் களில் அங்குசம் பாசமும், கீழ்க்கரங்களில் தந்தம், மோதகமும் ஏந்தியுள்ளார். தலையில் கரண்ட மகுடம் அலங்கரிக்கின்றது. இதன் பீடத்தின் கீழே எலி வாகனமும் அதனைக் கயிறைக் கட்டி இழுக்கும் இரு கணங்களும் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன.

உத்தமச் சோழனின் காலத்தில் எடுக்கப்பட்ட இக்கோயில் இடிந்த நிலையில் இருந்ததை தற்போது தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை முழுவதுமாகச் சீர்செய்து பாதுகாத்து வருகின்றது.

வைணவக் காஞ்சி

காஞ்சிபுரம் மிகவும் பழமைவாய்ந்த மற்றும் புகழ்பெற்று விளங்கிய நகரமாகும். அக்காலத்தில் சைவம், வைணவம், ஜைனம், புத்தம் ஆகிய சமயங்களைச் சார்ந்த மக்கள் வாழ்ந்த சிறப்பான நகரமாகும். மேலும் சக்தி மற்றும் ஸ்கந்த வழிபாட்டுத் தலமாகவும், தொடர்ந்து இருந்து வருகிறது. இங்கிருந்த கடிகை (பல்கலைக் கழகம்) பல அறிய பெரிய அறிஞர்களை உருவாக்கியதாகும். இக்கடிகையிலிருந்து உருவான அறிஞர்கள் நாலந்தா பல்கலைக் கழகத்திலும் பணிபுரிந்துள்ளனர். கடம்ப மன்னன் 'மயூரசர்மன்' என்பவன் காஞ்சிக்கு வந்து வேதங்களைப் பயின்றுள்ளான். காஞ்சியை சிவகாஞ்சி, விஷ்ணு காஞ்சி, ஜினக்காஞ்சி எனப் பிரிக்கின்றனர். இவற்றில் ஜினக் காஞ்சி வேகவதி ஆற்றின் மேற்கு கரையில் அமைந்துள்ளது. இங்கு ஜினர்களுக்கான திருப்பருத்திக் குன்றத்தில் த்ரைலோக்கிய நாதர் மற்றும் சந்திரபிரபா கோயில்கள் உள்ளன. வைணவக் காஞ்சியில் சிறப்புமிக்க திருவெஃகா, வரதராஜப் பெருமாள் மற்றும் அஷ்டபுஜப் பெருமாள் கோயில்கள் உள்ளன. திருவெஃகா என்றும் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் (யதோக்காரி) கோயிலைப் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை எனும் சங்க நூல்

"....நீடுகுலைக்
காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்தோ னாங்கண்
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்

குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்
பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூ''

என்கிறது.

நீண்ட பூங்கொத்துக்களுடைய காந்தள் அடர்ந்த அழகிய மலையிடத்தே யானைகிடந்தாற் போன்று பாம்பணையிலே துயில் கொண்டோனுடைய திருவெஃகாவின் கண், சூரிய கதிர் ஊடே சென்றறியாதெனவும் குயில்கள் இலை நெருக்கத்தாலே நுழைந்து செல்லுவனவும் ஆகிய இளமரக்காவிடத்தே குறுகிய காலையுடைய காஞ்சி மரத்தினைச் சூழ்ந்துப் படர்ந்த நெடிய கொடியினையும் பசிய இலையினையும் உடைய குறுக்கத்தியின் பூக்கள்'' என்பது இதன் பொருள்.

இப்பாடல் விளக்கத்திலிருந்து இறைவன் 'பாம்பணைப் பள்ளியமர்ந்தோன்' என்றும் அழைக்கப்பட்டானெனத் தெரிகிறது. இதுவே இவ்வூரைப் பற்றிக் கிடைக்கும் முதல் குறிப்பாகும்.

பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரால் பாடப்பெற்றது இத்தலமாகும். 'பாந்தாட் பாழியிற் பள்ளி விரும்பிய வேந்தனைச் சென்று காண்டும் வெஃகாவுளே' எனப் பெரிய திருமொழி இவ்வூரினை வெஃகா எனக் கூறுகிறது.

''ஆடவர்கள் எவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமு முரகமும் பஞ்சரமா - நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் இவ்வன்றோ
மன்றார் மதிட்கச்சி மாண்பு''

யாப்-விருத்-மேற் 363

இப்பாடல் வரிகளால் திருவெஃகா மற்றும் காஞ்சியை மேலும் அறியமுடிகிறது.

முதலாம் பராந்தகன் காலத்தில் (கி.பி. 944) திருவெஃகாவில் வேகவதிக்குக் குறுக்கே அணையாய்க் கிடந்தருளிய அனந்த நாராயண பரமஸ்வாமிக்கு 867 கழஞ்சுப் பொன் இவ்வூரார் கொடையளித்தனர்.

எண்கரத்து எம்பெருமான்

காஞ்சிபுரம் கடைத் தெருவில் ஆடிசன் பேட்டைக்கு அருகே ரங்கசாமி குளத்தருகில் எண்கரத்தானாய் திருமால் எழுந்திருக்கும் 'அஷ்டபுஜப் பெருமாள்' எனும் கோயில் அமைந்துள்ளது. மேற்கு நோக்கி அமைந்துள்ள இக் கோயிலில் இறைவன் அட்டபுயங்கரத் தோன் என்பானின் வலதுபுற நான்கு கரங்களில் சக்கரம், கட்கம், மலர், அம்பு ஆகியவவையும், இடதுபுற நான்கு கரங்களில் சங்கு, வில், கேடயம், கதை ஆகியவை காணப்படுகின்றன.

பேயாழ்வார் மூன்றாம் திருவந்தாதியில் 99 மற்றும் 100-ஆம் பாடல்களிலும், திருமங்கையாழ்வார், பெரிய திருமடலில் 128-ஆம் பாடலிலும், மேலும் பெரிய திருமொழி கூடுதல் எட்டு வரை உள்ள பாடல்களிலும் இத்திருத்தலத்தை மங்களா சாசனம் செய்து பாடியுள்ளனர்.

முதலாம் இராஜேந்திரனின் 22 - ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1034) கல்வெட்டு திருஅஷ்டபுஜகிரகத்து மகாவிஷ்ணு வழிபாட்டிற்காவும் விளக்கெரிக்கவும் நிலம் அளிக்கப்பட்டுள்ள செய்தியைக் கூறுகிறது. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் இவ்வூர் 'இராஜ சுந்தரி சதுர்வேதிமங்கலம்' எனும் பிரம்மதேயமாக இருந்துள்ளது. திருவஷ்டபுஜ கிரகத்து நின்றருளிய பரமசுவாமி கோயிலில் உணவு தயாரிப்புக்குத் தேவையான பொருட்கள் வாங்க நிலம் தானம் வழங்கப்பட்டுள்ளது.

வரதராஜபெருமாள்

'அத்தியூரான்' என அழைக்கப்பட்ட இறைவன் பின்னாளில் வரதராஜ பெருமாள் மற்றும் அஸ்தகிரி என்ற பெயர்களால் வழங்கப்படுகிறார். முதல் மூன்றாழ்வார்களில் ஒருவரான பூதத்தாழ்வார் இவ்விறைவனைப் பாடியுள்ளார். 11-ஆம் நூற்றாண்டு வைணவ நூல்கள் 'அத்தியூர்' எனும் இவ்வூரினை ஹஸ்தகிரி (யான மலை) என்றழைக்கின்றன. அப்போது இறைவனை 'வரதராஜ பெருமாள்', 'அருளாளப் பெருமாள்' என்ற பெயர்களால் அழைக்கப் படுகிறார். முதலில் உருவாக்கப்பட்ட இக்கோயில் இறைவன் அத்திமரத்தால் ஏற்படுத்தப்பட்டது எனக் கூறுகின்றனர். இக்கோயில் குளம் 'அனந்த சரஸ்', இதன் நடுவே உள்ள நீராழி மண்டபத்தின் மீது விமானம் காணப்படுகிறது.

முதல் திருச்சுற்றில் அத்திகிரி உள்ளது. இக்கோயில் கருவறை, அந்தராளம், மண்டபங்கள் என்ற கட்டட அமைப்புடன் காணப்படுகிறது: இருதளங்களுடன் சாலை வடிவில் விமானம் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையில் வரதராச பெருமாள் நின்ற நிலையில் காணப்படுகிறார். கருவறை, மண்டபம் ஆகியவை சோழர் காலக் கட்டட அமைப்பைக் கொண்டுள்ளது. கருவறையின் மேற்குப்புறம் யோகநரசிம்மரின் சன்னதி குகை வடிவில் உள்ளது. இச்சுவரில் கல்வெட்டுகள் உள்ளன. முதலாம் இராஜாதிராஜனின் 32-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1050) கல்வெட்டு இவ்விறைவனைத் 'திருவத்தியூர் ஆழ்வார்' எனக் குறிக்கிறது.

முதலாம் குலோத்துங்கன் மற்றும் விக்கிரமச் சோழன் காலங்களில் இக்கோயில் விரிவடைந்தது. இரண்டாம், மூன்றாம் திருச்சுற்றுகளில் சோழ அரசில் அமைச்சராக் இருந்த நரலோக வீரனின் கல்வெட்டுகள் உள்ளன. இரண்டாம் திருச்சுற்றில் முதலாம் குலோத்துங்கனின் 9-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் மூன்றாம் திருச்சுற்றில் 30, 31, மற்றும் 36-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன இது திருச்சுற்றுமதில் கட்டப்பட்ட செய்தியைத் தெரிவிக்கிறது. மேலும் இக்கோயில் சமையலறையை நரலோக வீரன் கட்டியுள்ளான்.

இக்கோயிலில் கரியமாணிக்கப் பெருமாள் கோயில் விக்கிரம சோழனின் 11-வது ஆட்சியாண்டில் (கி.பி. 1129) எடுக்கப் பட்டது. கி.பி. 1212-இல் ஆனந்தாழ்வார் கோயிலும், கி.பி. 1236-இல் அபிஷேக மண்டபமும், இதே நூற்றாண்டில் பெருந்தேவித் தாயார் சன்னதியும் கட்டப்பட்டன.

சோழப் பேரரசு மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்திற்குப் பின் வலிமை குன்றத் தொடங்கியது. அப்போது பொத்தப்பிச் சோழன் காஞ்சியைத் தன்வசப்படுத்த முற்பட்டான். மேலும் ஹோய்சாளர்கள், பிற்காலப் பல்லவ மன்னனான கோப்பெருஞ்சிங்கன் ஆகியோரும் வளர்ச்சிப் பெறத் துவங்கினர். விஜயநகரப் பேரரசு ஏற்பட்ட பின்னர் இப்பகுதி வளர்ச்சிபெறத் தொடங்கியது. விஜயநகரப் பேரரசு காலத்தில் கிழக்குப் பகுதி வாயிற் கோபுரம், கல்யாண மண்டபம், துலாபார மண்டபம், ஊஞ்சல் மண்டபம் ஆகியவை எடுக்கப்பட்டுள்ளன. **கருமாணிக்க வரதருக்கும்** இரண்டாம் திருச்சுற்றில் 'விக்கிரமச் சோழனின் 11-ஆம்

ஆட்சியாண்டில் (கி.பி. 1129) இக்கோயில் எடுக்கப்பட்டு இவ்வினைறவன் 'விக்கிரம சோழ விண்ணகர ஆழ்வார்' என அழைக்கப்பட்டுள்ளார். காலியூர் நாட்டிலிருந்த வில்வலம் எனும் ஊர் 'அகளங்கன் நல்லூர்' எனப் பெயரிடப்பட்டு இக்கோயில் வழிபாட்டிற்காகத் தேவதானமாக அளிக்கப்பட்டது.

மூன்றாம் குலோத்துங்கனின் 35-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1212 - 13) கங்க மன்னன் சோழேந்திர சிம்ஹனின் மகன் சீயகங்கன் என்பவன் ஆனந்தாழ்வர் கோயிலைக் கற்றளியாக எடுப்பித்தான்.

திருப்பருத்திக்குன்றம்

காஞ்சிபுரம் தென்மேற்குப் பகுதியில் சிறப்புற்று விளங்கும் சமணத்தலம் 'ஜினகாஞ்சி' என அழைக்கப்பெறும் திருப்பருத்திக் குன்றமாகும். இத்தலம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து சமண சமய முக்கியத்துவம் வாய்ந்த தலமாகத் திகழ்கிறது. பல்லவர் ஆட்சியின் போது தோற்றுவிக்கப்பட்ட மகாவீரர் கோயில் படிப்படி யாக விரிவாக்கம் பெற்று வளர்ந்திருப்பதைக் காணலாம். இக்கோயில் சோழர் காலத்திலும், விஜயநகர மன்னர்களது ஆட்சியின் போதும், அதற்குப் பின்னரும் பல்வேறு தானங்களைப் பெற்றிருக்கிறது. இது இந்தியாவிலுள்ள நான்கு 'வித்தியா ஸ்தானங்களுள்'' ஒன்றாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது.

வர்த்தமானர் கோயில்

திருப்பருத்திக் குன்றத்திலுள்ள வர்த்தமானர் கோயில் பெரிய அளவில் பல்வேறு கருவறைகளையும், மண்டபங்களையும் கொண்டு தற்போது விளங்குகிறது. இதில் மூலவராகிய மகாவீரர், புஷ்பதந்தர் மற்றும் தருமதேவி ஆகியோருக்கும், பத்மபிரபா, வசுபூஜ்யர், பார்சுவநாதர் ஆகிய தீர்த்தங்கரர்களுக்கும் இரண்டு தொகுதிகளாகக் கருவறைகள், அர்த்தமண்டபங்கள், முகமண்டபங்கள் ஆகியவை காணப்படுகின்றன. முதற் தொகுதி கருவறைகளைக் (மகாவீரர், புஷ்பதந்தர், தருமதேவி) கொண்ட கட்டட அமைப்பினைத் திரைலோக்கிய நாதர் கோயில் எனவும், இரண்டாவது தொகுதியினைத் 'திரிகூடபஸ்தி' எனவும் பொதுவாக அழைப்பது மரபாகும். இவை இரண்டிற்கும் பொதுவாக மகாமண்டபமும் அதனையடுத்து பலிபீடம், மானஸ்தம்பம்

ஆகியவையும் காணப்படுகின்றன. இவையன்றி திருச்சுற்று மதிலை ஒட்டி பிரம்மதேவர், ரிஷபநாதர் ஆகியோரது கருவறைகளும், ஐந்து முனிவர்களுக்கெனத் தோற்றுவிக்கப்பட்ட முனிவாச மண்டபங் களும், தானியச் சேமிப்பு அறையும் உள்ளன. திருச்சுற்று மதிலின் கிழக்குப் புறத்தில் அமைந்துள்ள வாயிலில் மூன்று நிலைகளைக் கொண்ட கோபுரம் காணப்படுகிறது.

திரைலோக்கிய நாதர் கோயில்

மகாவீரர், புஷ்பதந்தர், தருமதேவி ஆகியோரது கருவறைகள் கொண்ட கட்டட அமைப்பு திரைலோக்கியநாதர் கோயில் எனப்படும். இம்மூன்று கருவறைகளுள் காலத்தால் முந்தியது, மகாவீரர் கருவறையும் அதற்கு முன்பாக உள்ள அர்த்தமண்டபமும், முகமண்டபமும். இங்கு பல்லவ மன்னனாகிய சிம்மவர்மனது ஆட்சிக் காலத்தில் (கி.பி. 556) முதன் முதலாக கோயில் கட்டப்பட்டிருக் கிறது. அப்போது மகாவீரருக்கு மட்டுமென கோயில் எழுப்பப் பட்டதால், இது வர்த்தமானீஸ்வரம் என அழைக்கப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் இது கருங்கல் கட்டடமாகத் திகழவில்லை. செங்கல்லால் கட்டப் பெற்றிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. காலப்போக்கில் இது பழுதுபட்டதால், முதல் குலோத்துங்க சோழன் காலத்தில் (கி.பி. 1070-1120) புதியதாகத் திருத்தியமைக்கப் பட்டிருக்கிறது.

தற்போதுள்ள கருவறை வட்டவடிவ பின் புறத்தினைக் கொண்ட தூங்கானை மாட (கஜபிருஷ்டம்) அமைப்பில் உள்ளது. இது செங்கல், சுண்ணாம்புச் சாந்து ஆகியவற்றால் கட்டப்பட்டிருக் கிறது. ஆனால் இதற்கு முன்பாக உள்ள அர்த்த மண்டபம், முக மண்டபம் ஆகியவை கருங்கல்லாலான அடித்தளத்தையும், மணற்கல்லாலான மேற்பகுதியையும் கொண்டு விளங்குகின்றன. இவை கி.பி. 11-ஆம் நூற்றாண்டுக் கலைப்பாணியில் மிளிர்கின்றன. இந்த மண்டபங்களிலுள்ள தூண்களும், கல்வெட்டுகளும் முதல் குலோத்துங்கன் காலத்தவை.

சங்கீத மண்டபம்

திரைலோக்கிய நாதர் கோயில், திரிகூடபஸ்தி ஆகியவற்றின் முகமண்டபங்களுக்கு முன்பாக பெரிய அளவில் 61 அடி நீளமுள்ள மகாமண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. இதனைச் சங்கீத மண்டபம் என

அழைப்பது வழக்கமாகும். இதில் பல்வேறு அமைப்புகளைக் கொண்ட இருபத்தினான்கு தூண்கள் உள்ளன. இத்தூண்கள் அனைத்தும் விஜயநகரக் காலக் கலைப்பாணியில் திகழ்கின்றன. இந்த சங்கீத மண்டபத்தை இரண்டாம் புக்கன் என்னும் விஜயநகர் மன்னனது அமைச்சராகிய இருகப்பா என்பவர் கி.பி. 1387 (அல்லது 1388) ஆம் ஆண்டு கட்டியதாக அறியவருகிறோம். இவரது சிற்பம் ஒன்று சங்கீத மண்டபத் தூண் ஒன்றில் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சங்கீத மண்டபத்தின் கூரையில் ஏராளமான ஓவியங்கள் தீட்டப் பட்டுள்ளன. கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஓவியங்களுள் பெரும் பான்மையானவை மறைந்து விட்ட போதிலும், வர்த்தமான மகாவீரருடைய வாழ்க்கை வரலாறு தொடர்புடைய சில சித்திரங்கள் மட்டும் எஞ்சியிருக்கின்றன. இவை காலம் செல்லச் செல்ல அழிந்தமையால், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் நாயக்க அரசர்கள் ஆட்சிக் காலத்தில் மீண்டும் ஓவியங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இவ்வாறு இம் மண்டபத்தில் இரண்டு காலக் கட்டங்களைச் சார்ந்த ஓவியங்களைக் காணலாம்.

காவந்தண்டலம்

காஞ்சிபுரத்திலிருந்து உத்திரமேரூர் செல்லும் சாலையில் செய்யாறு ஆற்றின் வடகரையில் இச்சிற்றூர் அமைந்துள்ளது. இவ்வூரில் பெருமாள் மற்றும் சிவன் கோயில்கள் உள்ளன. இவ்விரண்டு கோயில்களில் பெருமாள் கோயில் காலத்தால் முற்பட்டது.

லட்சுமிநாராயண பெருமாள் கோயில் : இக்கோயிலில் காணப்படும் ஆறு கல்வெட்டுகளில் மூன்று கல்வெட்டுகள் பல்லவ மன்னன் கம்பவர்மன் காலத்தைச் சார்ந்தவை.

இக்கோயில் வேங்கை நாட்டு குன்னூரைச் சேர்ந்த மானசர்பன் என்பவனால் திருமாலுக்காக எடுக்கப்பட்டதாகும். இப்பணி கம்பவர்மனின் 14வது ஆட்சியாண்டில் (கி.பி. 883) நிறைவடைந்துள்ளது. மேலும் 18வது ஆட்சியாண்டில் (கி.பி, 887) மானசர்ப்ப விஷ்ணுகிருஹம் என்று இவனது பெயரால் அழைக்கப்பட்டுள்ளதை கல்வெட்டால் அறியலாம். இக் கோயில் மானசர்ப்பனால் கட்டப்பட்டது என்பதை இங்குள்ள கிரந்த கல்வெட்டொன்றும் தெரிவிக்கின்றது. இவ்விறைவன் 'விஷ்ணு கிருக பெருமானடிகள்'

என்றழைக்கப்பட்டுள்ளார். அப்பொழுது இவ்வூர் ஊற்றுக்காட்டு கோட்டம் தாமனூர் நாட்டுச் சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப் பட்டுள்ளது.

பராந்தகச் சோழன் காலத்தில் சதுர்வேதிமங்கலம் என்கிற காய்வாந்தண்டலம் என பெயர் மாற்றம் அடைந்துள்ளது . இவ்வூர் சபையார் ஏழு நாட்கள் நடைபெற்ற சித்திரைத் திருவோணத் திருவிழாவின்போது நூறு விளக்கெரிக்கவும் பதினாறு மத்தளம் கொட்டுபவதற்கும் ஏற்பாடு செய்தனர். மேலும் அவ்வேழு நாட்களிலும் உணவளித்துள்ளனர்.

சோழீஸ்வரர் கோயில் : சோழீஸ்வரம் என்றழைக்கப்படும் இச்சிவன் கோயில் கிழக்கு நோக்கிய கருவறை, அந்தராளம், முகமண்டபம் ஆகிய கட்டட அமைப்பில் காணப்படுகிறது. பிரஸ்தரம், முதல் சிகரம் வரை தூங்கானை வடிவில் உள்ளது.

முதலாம் இராசேந்திரனின் 4-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1016-17) இப்பகுதி நாடுவகை செய்கின்ற அதிகாரியான வைகூர் வல்லாளகண்டன் பிச்சன் என்பவன் தனது மன்னன் இராசேந்திர சோழன் பெயரால் 'திருப் இராஜேந்திர சோழ ஈஸ்வரம்' என்று பெயரிட்டு இக்கோயிலை எடுப்பித்துள்ளான். இச்செய்தியினை இவ்வூர் லட்சுமி நாராயணர் கோயிலில் காணப்படும் கல்வெட்டால் அறிகிறோம். உத்தராயனம், தட்சிணாயனம், ஐப்பசி விசு, சித்திரை விசு ஆகிய திருவிழாவின் போது ஆராதனை மற்றும் உணவளிக்க வல்லாள கண்டன் நிலம் தானமளித்துள்ளான்.

முதலாம் குலோத்துங்கனின் இப்பகுதி அதிகாரியான மூவேந்தவேளான் தலைமையில் இங்கு அதிகாரிகள் கூட்டம் நடைபெற்றுள்ளது. சோழமண்டலத்து கிளியூர் நாட்டு குறிச்சியைச் சார்ந்த கன்னாள தேவனின் மனைவி பூங்கமலச் செல்வி என்பவள் இக்கோயில் வழிபாட்டிற்கு நிலமும், மூன்று சந்தி விளக்கு எரிக்கவும் வழிவகை செய்துள்ளாள். விக்கிரம சோழன் காலத்தில் இவ் விறைவன் திருவரைச்சாந்துறை ஆளுடையார் என அழைக்கப் பட்டுள்ளார்.

கூரம்

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டத்தில் அமைந்துள்ள ஊர். இவ்வூர் பல்லவர் காலத் தொன்மை மிக்கது. பல்லவ மன்னன் முதலாம் பரமேசுவரவர்மனால் வெளியிடப்பட்ட மிகவும் புகழ் வாய்ந்த கூரம் செப்பேடு இவ்வூரில் தான் கண்டெடுக்கப்பட்டது. இது தற்போது சென்னை, அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது. இவ்வூரில் முதலாம் பரமேசுவர வர்மன் கி.பி. 679-இல் வித்யா வினீத பல்லவ பரமேசுவர கிருஹம் என்ற கோயிலை எடுப்பித்தான். இக்கோயில் பல்லவர் காலக் கட்டடக் கலைப் பாணிக்குச் சான்றாகத் திகழ்க்கிறது. இதன் அடித்தளம் அரைவட்ட (கஜபிருஷ்ட) வடிவுடையது. பாம்பினைக் கரத்தில் பற்றிய ஊர்த்துவ ஜானு நடனமாடும் கூரம் நடராஜர் திருமேனி புகழ்பெற்றது.

சிவன் கோயிலில் மொத்தம் ஒன்பது கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் இரண்டாம் நந்திவர்மன், நிருபத்துங்க வர்மன், முதலாம் ராஜராஜ சோழன் ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் குறிப்பிடத்தக்கவை. அவை கோயிலிலுள்ள தெய்வங்களுக்குப் பூஜைகள் நடத்தத் தானங்கள் அளித்த செய்தியைக் குறிக்கின்றன. மேலும் கூரம் செப்பேடு கோயில் கண்காணிகளாக இரண்டு பிராமணர்கள் கோயிலில் வழிபாடுசெய்ய அமர்த்தப்பட்டார்கள் என்றும் கூரத்திலுள்ள விளைநிலங்களில் 25 கூறுகளில் 2 கூறுகள் மேற்படி பிராமணர்களுக்குக் கொடையளித்த செய்தியைக் கல்வெட்டு கூறுகிறது.

கோயிலில் உள்ள மண்டபத்தில் ''மகாபாரதம்'' படிக்க கொடையளித்த செய்தியை அறிகிறோம். அடுத்துச் சிவன் கோயிலில் உள்ள மண்டபத்தை தினமும் தண்ணீர் விட்டுக் கழுவுவதற்கும், விளக்கு எரிக்கவும் தானமளித்த செய்தியைக் குறிக்கிறது.

கோவிந்தவாடி

காஞ்சிபுரத்திலிருந்து 15கி.மீ தொலைவிலும் திருமால்பூர் இரயில் நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது இவ்வூர். இங்குள்ள கைலாசநாதர் சன்னதி கிழக்கு நோக்கியும் கோயிலின் நுழைவு வாயில் தெற்கு நோக்கியும் உள்ளன. இக்கோயிலில் தென்புறக் கோட்டத்திலிருக்கும் தென்முகக்

கடவுளான தெட்சணாமூர்த்திக்கு அர்த்தமண்டபத்திலே தனிச் சன்னதி எடுக்கப்பட்டுள்ளது. இக் கோயில் அர்த்தமண்டபத் தூணில் முதலாம் இராஜேந்திர சோழனின் 9-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுக் காணப்படுகிறது. 'க்ஷத்திர சிகாமணிபுரம்' எனும் தக்கோலம் கோயில் இறைவன் திருவூறல் ஆண்டாருக்கு விளக்கெரிக்க 96 ஆடுகள் தானமளிக்கப்பட்டுள்ளது. மேலும் திருவூறல் ஆண்டாருக்குப் பூசைக்கு மலர் அளிக்கவேண்டி 6 காசுகள் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

தாங்கி

வழிபோக்கர் மண்டபம் : சென்னையிலிருந்து 70 கி.மீ. தொலைவில் வாலாஜாப் பேட்டை வழியாகக் காஞ்சிபுரம் செல்லும் சாலையில் தாங்கி என்னும் ஊர் அமைந்துள்ளது. இவ்வூரில் சாலை ஓரத்தில் கருங்கல் மண்டபம் ஒன்று உள்ளது. இது வழிப்போக்கர் மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. இது கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இம்மண்டபம் இரண்டு பகுதிகளாகக் காணப்படுகிறது. மண்டபத்தின் பின்புறச் சுவரில் நடுவில் அனுமன் உருவமும், சுவரின் மேற்பகுதியில் விதானத்தையொட்டி கஜலட்சுமி உருவமும் உள்ளன. உட்புற மண்டபத்தின் விதானத்தின் நடுப்பகுதியில் நன்கு செதுக்கப் பட்டுள்ள அழகிய கிளிகளின் உருவங்கள் மலரை கொத்துவது போன்று புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தைப் பல வரிசைகளில் தூண்கள் அலங்கரிக்கின்றன. இத்தூண்களில் திருமாலின் அவதாரங் களும், சிவபெருமானின் பல்வேறு வடிவங்களும் செதுக்கப் பட்டுள்ளன.

உட்புற மண்டபத்தின் மேற்குச் சுவரில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. கல்வெட்டை ஆதாரமாகக் கொண்டு இந்த வழிப்போக்கர் மண்டபம் கி.பி. 1777 இல் தித்தர் செட்டி, முக்கர் செட்டி என்பவர்களால் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய முடிகிறது. இதைத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வரலாற்றுச் சின்னமாகப் பாதுகாத்து வருகிறது.

தாமல்

காஞ்சிபுரத்தின் வடமேற்கே 14கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது. தாமல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள அக்காபுரம், பரந்தூர் ஆகிய ஊர்களில் கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டன. எனவே இப்பகுதி கற்காலம் முதல் மக்கள் வாழ்விடமாக இருந்து வருகின்றது என்பதை அறியமுடிகிறது. சங்க காலத்திலும் இவ்வூர் இப்பெயர் பெற்றிருந்ததை தாமல் தமப்ப கண்ணனார் என்ற சங்ககாலப் புலவரின் பெயரால் விளங்கலாம். பல்லவர் மற்றும் சோழர் காலக் கல்வெட்டுகளில் இவ்வூர் 'தாமர் கோட்டம்' என்றழைக்கப்பட்டதி லிருந்து இது ஒரு கோட்டத்தின் தலைநகராக இருந்துள்ளது தெரிகிறது. இவ்வாறு வரலாற்றுப் பின்னணி உடைய இவ்வூரில் பல்லவர் மற்றும் சோழர் காலத்தைச் சேர்ந்த கோயில்கள் எதுவும் இல்லையென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தாமலில் 'வராஹீஸ்வரர்' என்ற சிவன் கோயிலும், 'தாமோதரப் பெருமாள்' என்ற திருமால் கோயிலும் உள்ளன. இவ்விரு கோயில் களும் விஜயநகரக் காலத்தைச் சேர்ந்தவையாகும் மேலும் வராஹீசுரர் கோயிலில் மூன்று கல்வெட்டுகளே உள்ளன.

இக்கல்வெட்டுகள் மூலம் இவ்வூர் தாமல் என்றும் இவ்வூர் இறைவன் திருப்பன்றீஸ்வரமுடைய தம்பிரனார் என்றும் கிருஷ்ண தேவராயர் மற்றும் அங்கததேவராயர் காலத்திலும் இப்பெயராலே அழைக்கப்பட்டுள்ளனர் என்பதும் தெரிகிறது. 'திருப்பன்றீஸ்வர முடைய தம்பிரனார் என்பதை 'வராகீசுவரர்' என்ற வடமொழிப் படுத்திப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கிருஷ்ணதேவராயரின் ஆட்சியின் போது (கி.பி. 1524) இக்கோயில் இறைவனுக்கு வழிபாடும், திருப்பணியும் நடைபெற வேண்டி அனந்தாழ்வார் பிள்ளை என்பவர் உபயமாகப் புங்கஞ்சேரி உடையார் நமசிவாயரிடம் தாமர் என்ற ஊரின் பிடாகையான (புறப்பகுதி) புறகால் கிராமம் மடப்புறமாக விடப்பட்டது. 'புறகால்' என்ற கிராமம் தற்போது 'காலூர்' என்றழைக்கப்படுகிறது. அச்சுததேவ ராயர் காலத்திலும் (கி.பி. 1537) இதேபோன்று 'மேலை வெண் பாக்கம்' என்ற கிராமமும் மடப்புறமாக அளிக்கப்பட்டுள்ளது.

கி.பி. 1871-இல் இவ்வூரில் உள்ள மாரியம்மன் கோயில் கட்டி முடிக்கப்பட்டபோது இவ்வூர் தச்ச வீராசாமியின் மகன் அரிமுத்து

என்பவன் இக்கோயில் நிலைக்காலைத் தானமாகக் கொடுத்துள்ளதை இங்குள்ள கல்வெட்டால் அறியலாம்.

திருப்புட்குழி

சென்னை-வேலூர் நெடுஞ்சாலையில் பாலுசெட்டி சத்திரத்திலிருந்து 1கி.மீ தொலைவில் திருப்புட்குழி என்ற இவ்வூர் உள்ளது. இங்குள்ள விஜயராகவப் பெருமாள் கோயில் இறைவன் கிழக்கு நோக்கி அமர்ந்தநிலையில் காணப்படுகிறார். இவ்விறை வனின் வலது தொடை மீது ஜடாயுவை வைத்து சம்காரம் செய்யும் நிலையில் காணப்படுகிறது. 'ஜெயங்கொண்ட சோழமண்டலத்து தாமர் கூற்றத்து தாமர் நாட்டு சித்திரமேழி திருப்புக்குழி நாயனார் கோயில்' என்று இக்கோயில் அழைக்கப்பட்டுள்ளது. திருமலைக் கூற்றத்து துஞ்சலூர் பல்லவரையன் என்பவன், இக்கோயிலில் ஆழ்வார்கள் திருமேனிகளை நிறுவி, வழிபாட்டிற்காக தயிர்பாக்கம் என்ற ஊரினைக் கொடையாக வழங்கினான். குலோத்துங்க சம்புவராயன் வீரசோழன் என்ற அதிகாரி, அவனது பிறந்தநாளான ஆயில்ய நட்சத்திர நன்னாளில் வீரச்சம்பன் சந்தி ஏற்படுத்தி இக்கோயிலில் ஆவணித் திருநாள் விழா நடத்திட படுவூர் கோட்டத்து 'படுவூர்' ஊரினைத் தானமாக வழங்கினான். பெருமாள் குலசேகரனின் நலனிற்காக எடுத்த கையழகியான் பல்லவராயர் எனும் அதிகாரி இக்கோயிலின் முன்மண்டபத்தைக் கட்டியுள்ளான்.

மாசாந்தி நாட்டு வைணவர்கள் இக்கோயிலுக்குச் சேனை முதலியார் திருமேனியை வழங்கியுள்ளனர். 'இராஜவிபாடன்' மற்றும் 'கண்டார்கண்டன்' என இரு நில அளவு கோல்கள் இக்கோயில் சுவற்றில் வெட்டப்பட்டுள்ளன. நித்தவிநோத நல்லூர் எனும் தாமரைச் சேர்ந்த முக்கணதேவன் சனப்பிள்ளை என்பவன் 'வாழமந்த பெருமாள்', 'நித்திவிநோதச் செல்வர்' ஆகிய இரு திருமேனிகளை இக்கோயிலில் எடுப்பித்துள்ளான். நந்தை பாக்கத்தைச் சேர்ந்த தேவப்பெருமாள் சரணதேவன் என்பவன் 'திருமங்கை ஆழ்வார்' திருமேனி வைத்துள்ளான். மேலும் 'பெருமாள்', 'இளைய பெருமாள்', 'நாச்சியார்' ஆகிய திருமேனிகளை மாமனூரைச் சார்ந்த கோமடத்து அருளாளப்பெருமாள் எனும் தியாகப்பெருமாள் தாசன் என்பவன் இக்கோயிலில் எடுப்பித்துள்ளான்.

தென்னேரி / திரையனேரி

காஞ்சிபுரத்திலிருந்து - வாலாஜாபாத் சாலையில் வாலாஜாபாத்திலிருந்து திருப்பெரும்பெதூர் செல்லும் வழியில் வடக்கே 4 கி.மீ. தொலைவில் உள்ளது. சங்ககால மன்னன் திரையனால் ஏற்படுத்தப்பட்ட ஏரி என்பதால் திரையனேரி என்று பெயர்பெற்றது. பின்னாளில் இது தென்னேரி என மருவியுள்ளது.

தென்னேரி கந்தளீஸ்வரர் கோயில்

இது ஊரின் ஒதுக்குப்புறத்தில் உள்ளது. இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபக் கட்டட அமைப்புடன் காணப்படுகிறது. மேலும் இக்கருவறை விமானம் செங்கல் மற்றும் சுதையால் கட்டப்பட்ட தாகும். கருவறை கோட்டங்களில் தெற்கே தென்முகக் கடவுளான தெட்சணாமூர்த்தியும், மேற்கே விஷ்ணுவும், வடக்கே பிரம்மா ஆகிய உருவங்களும் உள்ளன. அர்த்தமண்டபத்தின் வடக்கு, மற்றும் மேற்குப் பகுதியில் தலா மூன்று தேவகோட்டங்கள் இருப்பினும் தென்பகுதியில் மட்டுமே துர்கை சிற்பம் உள்ளது.

இக்கோயிலில் காணப்படும் ஐந்து கல்வெட்டுகளில் நான்கு கல்வெட்டுகள் முதலாம் இராஜராஜன் காலத்தியவை. மற்றொரு கல்வெட்டு வீரராஜேந்திரனின் கல்வெட்டாகும்.

இராஜராஜனின் 11-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு உத்தம சோழீஸ்வரத்து ஆழ்வார் கோயில் வழிபாட்டிற்குத் தேவையான செப்புப் பாத்திரங்கள் மற்றும் வழிபாட்டிற்காக நிலம் தானமளிக்கப் பட்ட செய்தியைக் கூறுகிறது. ''கண்டராதித்த தேவர் பிராட்டியார் உத்தமச் சோழனைத் திருவயிற்றில் வைத்தருளிய பிராந்தகன் மாதேவியார் செம்பியன் மாதவியார் ஆன உடைய பிராட்டியார்''என்ற கல்வெட்டுக் குறிப்பால் இக்கோயில் உத்தமச் சோழனின் நினைவாக அவரது தாயார் செம்பியன் மாதேவியால் எடுக்கப்பட்ட கோயில் என்பது புலனாகிறது. இவ்வூர் 'உத்தமச்சோழ சதுர்வேதிமங்கலம்' எனவும் பெயரிடப்பட்டுள்ளது.

கண்டராதித்தனின் மனைவி செம்பியன் மாதேவியால் எடுக்கப்பட்ட பல கோயில்களில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்வரசியின் வேலையாள் வீரசோழன் சூரியன் என்பவன் உத்தம சோழீஸ்வரம் கோயிலில் அரை விளக்கு வைக்க 45 ஆடுகளைத் தானமளித்துள்ளான். இராஜராஜனின் ஆட்சிக்காலத்தில் இவ்வூரில் பயிரிடப்பட்ட கமுகு(பாக்கு)த் தோட்டத்திற்கு வரிவிதிக் கும்போது முதல் பத்து ஆண்டுகளுக்குப் பாதியளவு வரியும், பத்தாண்டுகளுக்குப் பிறகு முழுவரியும் செலுத்த வேண்டும் எனக் கல்வெட்டொன்று கூறுகிறது. அதேபோல் வாழைப்பயிரிடும் போது வாழை குலை விடும்வரை பாதியளவும் பின்னர் முழுவரியும் செலுத்த வேண்டும். இக்கோயிலில் சபை கூடும் மண்டபத்திற்கு 'இராஜராஜ மண்டபம்' என பெயரிட்டுள்ளனர்.

தென்னேரி - ஆபத்சகாயேஸ்வரர்

இக்கோயில் பிற்காலச் சோழர் காலத்தில் எழுப்பப்பட்ட கோயிலாகும். முதலாம் குலோத்துங்க சோழனின் 33-ஆவது ஆட்சியாண்டில் இவ்விறைவன் 'அநந்தீஸ்வரமுடைய மாதேவர்' எனற பெயர்பெற்றிருந்தார். வேலன் சங்கரன் என்பவன் அர்த்தசாம பூசைக்கு உணவளிக்க நிலம் தானமளித்துள்ளான். முதலாம் இராஜராஜன் ஆட்சியில் இவ்வூர் உத்தம சோழச் சதுர்வேதிமங்கலம் என்றும், முதலாம் குலேத்துங்கனின் 41-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1111) 'திரையனூர் ஆன குலோத்துங்க சோழச் சதுர்வேதிமங்கலம்' என்றிருந்த இவ்வூரின்பெயர் இதே மன்னனின் 46-வது ஆட்சி யாண்டில் (கி.பி. 1116) 'தென்னேரி ஆன குலோத்துங்கச் சோழச்சதுர் வேதிமங்கலம்' எனப் பெயர் மாற்றமடைந்தது குறிப்பிடத் தக்கதாகும். மதுராந்தகப் பொத்தப்பிச் சோழனின் முகவரான இருசப்பராசர் திக்கராசர் இவ்வூர் ஏரியினைச் சுத்தப்படுத்தும் சம்பந்தப் பெருமாள் என்பவனுக்கு ஒரு வேலி நிலம் வரி நீக்கி வழங்கி யுள்ளான். இச்சிற்றரசனின் காலத்தில் இவ்வூர் 'திரையனூர்' என்றும் இங்குள்ள ஏரி 'தென்னேரி' என்றும் அழைக்கப்பட்டுள்ளதை கல்வெட்டால் அறியமுடிகிறது.

தென்னேரி விஜயநாராயணப் பெருமாள்

திரையனூர் புறப்பகுதியில் இருந்த தானவமுராரி சதுர்வேதி மங்கலத்து கிராம நிர்வாகத்தினர் மற்றும் கணக்கரிடம் 1 காணிநிலம் விஜயநாராயண பெருமாளுக்குத் தானமாக அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வூர் கந்தளீஸ்வரர் கோயிலில் காணப்படும் முதலாம் இராஜராஜனின் 12-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டொன்று இவ்வூர் உத்தமச் சோழ சதுர் வேதிமங்கலத்து மகாசபையினர் மும்முடிச் சோழ விண்ணகராழ்வார் கோயில் முன்மண்டபத்தில் கூடியிருந்தனர் என்ற செய்தியின் மூலம் இப்பெருமாள் கோயில் முதலாம் இராஜராஜன் காலத்திலேயே இருந்ததுள்ளது என்பதை அறியலாம். மேலும் இராஜராஜனின் சிறப்புப் பெயர்களில் ஒன்றான 'மும்முடிச் சோழன்' என்ற பெயரிலே இவ் இறைவன் பெயர் அழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

நவாசிப் பேட்டை

வாலாஜா பேட்டையிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் சாலையில் ஏகனாம் பேட்டையில் வடக்கே நவாசிபேட்டை என்ற இச்சிற்றூர் உள்ளது. இவ்வூரில் சிதிலமடைந்த காசி விசுவநாதர் கோயிலிலுள்ள மடப்பள்ளி செங்கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. மடப்பள்ளி செங்கல் சுவரில் 18-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியைக் கொண்ட கல்வெட்டொன்று காணப்படுகிறது. இக்கல்வெட்டு, நவாசிப் பேட்டை விசுவநாத சுவாமிக்கு முனியன் என்பவன் திருப்பணி செய்வித்ததைத் தெரிவிக்கிறது.

செங்கல்லில் கல்வெட்டு காணப்படுவது இவ்வூரில் மட்டுமே என்பது சிறப்புக்குரியதாகும்.

நெல்வாய்

காஞ்சிபுரத்திலிருந்து வடக்கே பரந்தூர் செல்லும் சாலையிலிருந்து பிரியும் வழியில் கிழக்கே சுமார் 12 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரில் உள்ள கி.பி. 1863 ஆம் ஆண்டு கல்வெட்டில் நெல்வாய் மற்றும் தண்டலம் கிராமத்தார்களிடையே ஏற்பட்ட தண்ணீர் பிரச்சினை முடிவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது பற்றி கூறப்பட்டுள்ளது.

பழையசீவரம்

செங்கல்பட்டு - காஞ்சிபுரம் பாதையில் 15.கி.மீ தொலைவில் பழைய சீவரம் என்ற இவ்வூர் உள்ளது. இவ்வூரில் உள்ள சிறிய மலை மீது மேற்கு நோக்கி லட்சுமி நரசிம்மர் கோயில் அமைந்துள்ளது.

இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டது இதலாம் குலோத்துங்கச் சோழனின் 10-ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி. 1080-1) கல்வெட்டாகும். இக்கல்வெட்டு சீயபுரம், இராஜேந்திர சோழ விண்ணகர் சிங்கப்பிரானாழ்வார் கோயிலுக்கு வாரியம்பாக்கம் ஊரில் இருந்த சில நிலங்களைத் தானமாக அளித்த செய்தியைக் கொடுக்கின்றது. கி.பி. 1080-இல் இவ்வூர் 'சீயபுரம்' என்றும் இக்கோயில் இராஜேந்திர சோழவிண்ணகர் என்றும் தற்போதுள்ள லட்சுமி நரசிம்மர் என்ற இறைவனின் பெயர் சிங்கப் பிரானாழ்வார் எனத் தமிழிலும் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிகிறது. சேதிராயன் என்பவன் இக்கோயில் இறைவனை மீண்டும் நிர்மாணித்து வழிபாடு தொடர 'வைகாஸன காணி' என்னும் பெயரில் நிலம் தானமளித்துள்ளான். இதனை அருளாளப் பெருமாள் எனும் விக்கிரம சோழப் பிரம்மராயன் என்ற அதிகாரி முறையீட்டின் பேரில் மன்னன் கோனேரினமை கொண்டான் இதற்கான உரிமையை வழங்கியுள்ளான். அப்போது இறைவன் பெயர் 'திருமாலிருஞ் சோலை' எனவும் இவ்வூர் 'சீயபுரம்' எனும் திரிபுவனவீரச் சதுர்வேதி மங்கலம்' என்றும் இருந்துள்ளது. இக்கோயிலில் திருப்பலி (உணவு படைத்தல்) நிகழ்ச்சியின் போது இசை அமைக்கும் ஏழு நபருக்கு நிலம் தானமாக அளித்துள்ளனர். ஏரிவாரியம் அமைத்து ஏரியினைக் கண்காணித்துள்ளனர்.

புள்ளலூர்

புள்ளலூர் என்ற இவ்வூர், வரலாற்றுச் சிறப்புவாய்ந்த ஊராகும். பல்லவ மன்னர்களில் பெருமையும் புகழும் வாய்ந்த முதல் மன்னன் மகேந்திரவர்மன் ஆவான். ஆரிய வர்த்தத்தை நிறுவி மிகப்பெரிய நிலப்பரப்பை ஆண்ட ஹர்ஷரை சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி தோற்கடித்தான். இச்சிறந்த வீரனான இரண்டாம் புலிகேசி காஞ்சி மீது படையெடுத்து வந்தான். கி.பி. 616 ஆம் ஆண்டு இரண்டாம் புலிகேசியை முதலாம் மகேந்திரவர்மன் தோற்கடித்து விரட்டியது இப் புள்ளலூரில் நடந்த போரிலேதான். நிகரற்ற தோள் வலிமையுடைய மகேந்திரவர்மன் போரில் வென்ற இடம் இவ்வூராகும். இப்போர்ச் செய்தியினை காசாக்குடிச் சாசனம் கூறுகிறது.

புள்ளலூரில், கைலாசநாதர் மற்றும் இராகவப் பெருமாள் ஆகிய கோயில்கள் உள்ளன. இவற்றில் கைலாசநாதர் கோயிலில் உள்ள

காமாட்சியம்மன் கோயிலில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இங்குள்ள கல்வெட்டுகள் பெருமாள் மற்றும் கைலாசநாதர் கோயில்களுக்குரியதாகும். இக்கோயில்கள் பழுதடைந்ததாலோ அல்லது பிரித்துக் கட்டும்போதோ காமாட்சியம்மன் கோயிலில் வைத்துக் கட்டப்பட்டுள்ளன என்பதை அறியமுடிகிறது. பிற்காலச் சோழர் காலத்தில்தான் அம்மனுக்கென்று தனிச் சன்னதி எடுக்கும் வழக்கம் உருவானது என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே பிற்காலத்திலேயே இக்கோயில் பிரிக்கப்பட்டு தற்போதைய அமைப்பில் உருவாக்கப்பட்டிருக்கும்.

காமாட்சியம்மன் கோயில் சுவரில் காணப்படும் முதலாம் பராந்தகனான மதுரை கொண்ட பரகேசரியின் 34ஆம் ஆட்சி யாண்டுக் (கி.பி. 941) கல்வெட்டே காலத்தால் முற்பட்டதாகும். இக்கல்வெட்டு, எயிற்கோட்டம் புல்வேலூரில் உள்ள திருவயோத்தி பெருமாள் கோயிலுக்கு அரசியார் ஜெய புவன - சுந்தரமணியார் நந்தா விளக்கு வைக்க 10 கழஞ்சு பொன் அளித்துள்ள செய்தியைத் தெரிவிக்கிறது.

இக்கல்வெட்டு இவ்வூரிலிருந்த அயோத்திப் பெருமாள் கோயிலுக்கு தானமளிக்கப்பட்ட செய்தியை தருகின்றது. மேலும், இதேபோன்று திரு அயோத்திப் பெருமாள் கோயிலில் பாரதம், இராமாயணம், புராணங்கள் பற்றிச் சொற்பொழிவு நடத்தியவருக்குப் ''பாரதவிருத்தி'' என்ற பெயரில் நிலம் தானமளிக்கப்பட்டதாக இரண்டாம் இராஜேந்திரனின் கல்வெட்டு வெளிப்படுத்துகிறது. புல்வேலூர் ஊரார்டமிருந்து மதுராந்தக சதுர்வேதிமங்கலத்து ஆளுங்கண உறுப்பினர் ஒருவரின் மனைவி நிலம் ஒன்றினை வாங்கி 'பாரத விருத்தி'யாக அளித்துள்ளாள்.

பரமேஸ்வர சதுர்வேதிமங்கலம் என்ற இவ்வூர் சம்வத்சர வாரிய பெருமக்கள் மற்றும் மன்னனின் அதிகாரி இருவர் உட்பட அனைவரும் கூடி முன்பு தேவதானமாக அளித்த நிலத்தை வாங்கி மீண்டும் தேவதானமாக அளித்துள்ளனர். இக்கோயிலின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதியில் மதிற்சுவரைச் சுற்றி நந்தவனம் அமைக்க முடிவெடுத்துள்ளனர். மேலும் இக்கோயில் வழிபாடு சரியாக தொடரவில்லையெனில் இக்கோயில் சிவபிராமணர்களுக்குத் தண்டம் வசூலிக்கப்படும் எனவும் இக்கூட்டத்தில் முடிவெடுத்ததாக முதலாம் இராஜராஜனின் 5-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 990) கல்வெட்டு விவரிக்கிறது.

இதற்கு அடுத்த ஆண்டும் இதேபோல் அனைவரும் கூடி சிவப்பிராமனர்கள் சரியாக விளக்கெரிக்கவில்லை என அதிகாரியிடம் புகார் அளித்தனர். இனி இதுபோல் தொடருமானால் கால் கழஞ்சுப் பொன் தண்டமாக ஊர்நிர்வாகிகள் மற்றும் வர்ரிய உறுப்பினர்கள் நேரடியாகச் சிவப்பிராமணர்களிடம் வசூலிக்க வேண்டும் என அதிகாரிகள் உத்திரவிட்டுள்ளனர்.

பெருமாள் கோயில் கல்வெட்டொன்றில் இவ்வூர் திருவயோத்திப் பெருமாள் மற்றும் தண்டலத்துப் பெருமாள் கோயில் களில் விளக்கெரிக்க 6 கழஞ்சு பொன் வழங்கப்பட்டுள்ளன. இறைவனுக்கு உணவு படைக்க, வெற்றிலை, பாக்கு, விளக்கு வைத்த போன்றவற்றிற்கு உரிய ஏற்பாடு செய்யபட்டதாக மற்றொரு கல்வெட்டு கூறுகிறது.

மாகறல்

காஞ்சிபுரத்திலிருந்து உத்திரமேரூர் செல்லும் சாலையில், காஞ்சிபுரத்திலிருந்து 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது மாகறல் என்ற இவ்வூர். செய்யாற்றின் வடகரையில் மாகறலும் தென் கரையில் கடம்பர் கோயிலும் என இரு ஊர்கள் அமைந்துள்ளன. மாகறலில் சிவன் கோயிலொன்றும் திருமால் கோயிலொன்றும் வீற்றிருக்கின்றன சிவன்கோயில் இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்திலும் திருமால் கோயில் மூன்றாம் இராஜராஜன் காலத்திலும் எடுக்கப்பட்டவை யாகும்.

மாகறலீஸ்வரர் : இக்கோயில் திருஞானசம்பந்தரால் பாடப் பெற்ற தலமாகும். தற்போதுள்ள இக்கோயில் பிற்காலச் சோழர்களின் கட்டட அமைப்பைக் கொண்டுள்ளது. இவ்வூர் ஜெயங்கொண்ட சோழமண்டலத்தின் எயிற்கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் எனப் பெயர் பெற்றிருந்தது. மேலும் இறைவன் ஆளுடையார் திருவகத்தீஸ் வரமுடையார் என்பதை இக்கோயிலில் உள்ள தொன்மையான கல்வெட்டான இரண்டாம் குலோத்துங்க சோழனின் 11-ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி. 1144) கல்வெட்டால் தெரிகிறோம். இரண்டாம் குலோத்துங்கன் பெரும் பற்றப்புலியூர் திருமட வளாகத்தில் தேவாரப் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தபோது இவ்வூர் திவகத்தீஸ்வரமுடைய நாயனாருக்குக் குலோத்துங்க சோழ நல்லூர், சிவபாதசேகரபுரம் ஆகிய ஊர்களைத் தேவதானமாக அளித்துள்ளான்.

இரண்டாம் இராஜராஜனின் ஆட்சியின்போது (கி.பி. 1156) ஆற்றுத் தண்டலத்து ஊர் சபையாருடன் மங்கலகிழான் திருவன் செல்வன் நீர் வழக்காடு தொடர்பாகச் சண்டை எழுந்தபோது பிரமாதி என்பவன் இறந்தமையால் அதற்கு பிராயச்சித்தமாக இவ்வூர் சபையார் அகத்தீஸ்வாருடையர் கோயில் விளக்கு வைக்க 1000 குழி நிலம் வழங்கப்பட்டது. இக்கோயிலுக்கு எயிற்கோட்டத்திலுள்ள இருமரம் என்ற குலோத்துங்க சோழ நல்லூரில் விளைநிலம், ஏரி, ஏரிநிலம் உட்பட 40 வேலி நிலமும் காலியூர்க் கோட்டத்து வெங்கற்சேரியில் 11வேலி நிலமும் பழந்தேவதானமாக இருந்துள்ளது. இதனை மீண்டும் இக்கோயிலுக்கு இறையிலியாக தொடர வேண்டுமெனவும் இது காலிங்கராயருக்குப் பற்றாய் ஆகவேண்டும் எனவும் நந்திவர்மர் என்ற அதிகாரி ஆணையிட்டுள்ளான். இந்த ஆணையை திருமந்திர ஓலை இராசநாராயண மூவேந்த வேளான் எழுத அதிகாரிகள் பலரும் கையெழுத்திட்டுள்ளனர்.

உக்கல் என்ற விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலத்து சபையார் திருப்கிருஷ்ணச்சேரி என்ற ஊரினை ஈக்காட்டுக் கோட்டத்து காக்கலூர் நாட்டு எசலை என்ற ஊரைச்சேர்ந்த படம்பக்க நாயகன் அழகிய பெருமாள் என்பவரிடம் விற்றுள்ளனர்.

சுந்தரபாண்டியன் 7ஆம் ஆட்சியண்டில் சுந்தரபாண்டிய நல்லூர் திருவருளாளீஸ்வரமுடைய நாயனார், விநாயகப் பிள்ளையார், அழிசியூர் அருளாளீஸ்வரமுடைய நாயனர், வரதராஜ விண்ணகர், பிடாரி ஆகிய கோயில்களுக்கு நாலாயிரம் குழி நிலம் கொடையளிக்கப்பட்டன. இக்கல்வெட்டில் குறிப்பிடுகின்ற அழிசியூர் தற்போது அழிசூர் என மருவியுள்ளது.

வைகுந்த பெருமாள் கோயில் : வைகுந்த பெருமாள் கோயிலும், தாயார் சன்னதியும் மூன்றாம் இராஜராஜன் காலத்தில் எடுக்கப்பட்டதாகும். இங்குள்ள மூன்றாம் இராஜராஜனின் 20-ஆவது ஆட்சியாண்டில் மூன்று கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இக் கல்வெட்டுகளில் ஊரங்கிழான் திருவகத்தீசுவரமுடையான் அருளாளன், ஊரங்கிழான் சாமுண்டிதேவன். திருவேகம்ப முடையான், இவ்வூர் பட்டியர் போயன் ஆழ்வான் மதியன், ஆகிய இம்மூவரும் இப்பெருமானைத் திருவடிப் பிடிக்கும் நயிமிசை வரதராஜபட்டனிடம் தனித்தனியாக விளக்கு வைக்க பொன் அளித்த செய்திகளைத் தெரிவிக்கின்றன. மேலும் இரண்டாம் இராஜராஜனின்

23-ஆம் ஆட்சியாண்டில் இவ்வூரிலுள்ள 'திருமேற்கோயில் வீற்றிருந்த எம்பெருமான்' கோயிலை இவ்வூரைச் சேர்ந்த போசன் மணியன் பெருங்கன் என்பவன் கட்டியுள்ளான். இக்கோயில் திருப்விமானம், அர்த்தமண்டபம், அதையொட்டிய திருமண்டபம், சோபானம் மற்றும் திருப்பீடம் ஆகியவற்றைக் கட்டுவித்தான் என்ற செய்தியை தெரிவிக்கின்றது. மேலும் இக்கல்வெட்டின் முடிவில் இதேச் செய்தி பாடலாகவும் வெட்டப்பட்டுள்ளது.

வைகுந்தப் பெருமாள் என்று அழைக்கப்படும் இக்கோயில் முன்பு 'திருமேற்கோயில் வீற்றிருந்த பெருமாள்' கோயில் என அழைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் இராஜராஜனின் 18-ஆவது ஆட்சியாண்டில் கருவறை வரை கட்டத் தொடங்கியிருந்த நிலையில், இம்மன்னனின் 27-ஆம் ஆட்சியாண்டில் விமானம், அர்த்தமண்டபம், முன் மண்டபம் உட்பட அனைத்துப் பகுதிகளும் கட்டப்பட்டுள்ளது என்பதை முன்னர் கூறிய கல்வெட்டால் அறியமுடிகிறது.

திருப்பெரும்புதூர் வட்டம்

இடையார் பாக்கம்

சென்னை - காஞ்சிபுரம் நெடுஞ்சாலையில் சங்குவார்ச் சத்திரத்திலிருந்து திருவள்ளூர் செல்லும் சாலையில் 20 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. சோழர் காலத்திய இக்கோயில் மகாதேவர் 'திருப்படக்காடுடைய மகாதேவர்' கோயில் என்றழைக்கப்படுகிறது. தொண்டை மண்டலத்திற்குரிய துங்கானை வடிவக் கட்டமைப்புடன் விளங்குகிறது. இக்கோயிலின் கட்டட அமைப்பைக் கொண்டும், இங்குள்ள கல்வெட்டுகளைக் கொண்டும் இக்கோயில் முதல்குலோத்துங்க சோழன் காலத்தில் கற்றளியாக எழுப்பட்டுள்ளது எனக் கருதலாம். இக்கோயில் கட்வெட்டொன்றால் சந்திரசேகரன்ரவி என்கிற 'சோழேந்திர சிம்ம ஆசாரி' என்ற சிற்பியால் கட்டப்பட்டது என அறிய முடிகிறது. கல்வெட்டுகளில் இவ்வூர் 'இடையாற்றுப் பாக்கம்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜெயங் கொண்ட சோழ மண்டலத்தில் மணவிற் கோட்டத்துப் புரிசை நாட்டின் ஒரு பகுதியாக இருந்துள்ளது. புரிசை என்ற ஊர், இவ்வூரிலிருந்து 4கி.மீ தொலைவில் தற்போதும் 'புரிசை' என்ற பெயரிலே அழைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். திருப்படக்காடுடையார் கோயிலுக்குப் புரிசை தேவதானமாக அளிக்கப்பட்ட ஊராகும்.

சேதமடைந்திருந்த இக்கோயில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் சீரமைக்கப்பட்டு, நல்ல நிலையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

இக்கோயிலுக்குப் பிராமணப் பெண் ஒருத்தி விளக்கெரிக்க 1 வேலி நிலம் ஊராரிடம் வாங்கி கோயில் நிர்வாகத்திடம் அளித்தாள். அந்நிலம் நீர் வசதி பெறமுடியாத தாலும் மற்றும் ஊரை விட்டு வெகு தொலைவில் இருந்ததாலும் ஊரார் யாரும் வேளாண்மை செய்ய முன்வரவில்லை. ஆதலால் ஊராரின் வேண்டுகோளுக்கிணங்க அந்நிலத்தினைப் பெற்றுக் கொண்டு அதற்கு ஈடாக பசுக்களைத் தானமளித்து விளக்கெரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எழுச்சூர்

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டத்தில் தாம்பரம் - காஞ்சிபுரம் நெடுஞ்சாலையில் படப்பைக்கு அருகே எழுச்சூர் என்ற இச்சிற்றூர் உள்ளது. இவ்வூரில் பழுதடைந்த நிலையில் ஒரு சிவன் கோயில் உள்ளது. இங்குள்ள முதலாம் பராந்தகச் சோழனின் 13-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் இவ்வூர் 'வெளிமா நல்லூர்' எனக் குறிப்பிட்டுள்ளது. மேலும் வெளிமா நல்லூர், ஊற்றுக்காட்டுக் கோட்டத்தின் ஒரு நாட்டுப் பிரிவாக இருந்துள்ளது. இவ்வூரின் அருகே உள்ள செரப்பனஞ்சேரி கல்வெட்டுகளும் 'வெளிமா நல்லூர்' நாட்டுப் பிரிவாக இருந்துள்ளதை உறுதிப்படுத்துகிறது. இக் கோயில் இறைவன் பெயர் 'நல் இணக்கீஸ்வரர்' எனக் கல்வெட்டு கூறுகிறது. இக்கோயிலினைக் கட்டுவதற்கு நொச்சிக் கிழான் கலியபெருமான் என்பவன் இந்நாட்டை நிர்வாகம் செய்யும் நிர்வாகிகளிடம் பொன் அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டு மூலம், கி.பி. 920-இல் நொச்சிக் கிழான் கலியபெருமான் என்பவன் இக்கோயிலை எடுப்பித்துள்ளான் என அறியமுடிகிறது. மேலும் இக்கோயிலை இந்நாட்டார் எடுக்கத் தவறினால் இதற்கு தண்டனையாக பொன் (மஞ்சாடி) கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது ஒரு சிறப்புச் செய்தியாகும்.

குளப்பாக்கம்

குளப்பாக்கம் திருவகத்தீஸ்வரர் கோயிலை இரண்டாம் இராஜராஜனின் 6-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1152) இவ்வூரைச் சேர்ந்த செங்கோன் தில்லைவாணன் காக்குநாயகன் என்பவன்

திருஅகத்தீஸ்வரமுடைய நாயனார் கோயில், திரு அர்த்தமண்டபம், திருவிடைக்கட்டு, நிருத்தமண்டபம், சோபானம், உபாநாதி பரியந்தம் ஸ்தூபி திருக்கற்றளியாகச் செய்வித்துள்ளான். இவ்வூர் 'குளப்பாக்கம்' 'குளப்பாக்கமான சிவபாதசேகர நல்லூர்' என அழைக்கப்பட்டுள்ளது. மேலும் புலியூர் கோட்டத்துப் பேரூர் நாட்டின் ஒரு பகுதியாக இருந்துள்ளது. இதில் குறிப்பிட்டுள்ள 'பேரூர்' தற்போது 'போரூர்' என அழைக்கப்படுகிறது. இவ்வூரில் இருந்த பெருங்குளம் மழை வெள்ளத்தின்போது உடைப்பெடுத்ததால் இக்குளத்தின் கரையை என்றென்றும் உடையாதவாறு மலைபோல் பெருங்கரையாக உயர்த்தி வீரசோழ விழுப்பரையன் என்பவன் கி.பி. 961-இல் கட்டினான் என்பதை இங்குள்ள பாடல் கல்வெட்டால் அறியமுடிகிறது.

'குளப்பாக்கம் என்று கல்வெட்டுகளில் குறிப்பிடும் இவ்வூர் இங்குள்ள பெருங்குளத்தின் காரணமாகவே இப்பெயர் பெற்றது. மேலும் இவ்வூர் தற்போது 'கொளப்பாக்கம்' என மருவியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

குன்றத்தூர்

இவ்வூரில் செங்கற்களால் கட்டப்பட்ட் செல்லியம்மன் கோயிலில் கருவறையில் சப்தமாதர்கள் (கன்னிமார் எழுவர்) சிற்பங்கள் வரிசையாக உள்ளன. வடக்கு திசை நோக்கி அமைந்துள்ளன. இக்கன்னியர்களின் இடது பக்கம் விநாயகரும் வலதுபக்க இறுதியில் சிவன் யோகேஸ்வரராகவும் காணப்படு கின்றனர். யோகேஸ்வரர், வராஹி உருவங்கள் மிகச் சிறப்பாக உள்ளன. இவ்வுருவங்கள் அனைத்தும் மணற்கல்லினால் உருவாக்கப் பட்டதாகும். கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இவ்வுருவங்கள் தமிழகத்தில் கிடைத்துள்ள சப்த கன்னி சிற்பங்களில் மிகப் பழமையானதாகும்.

திருவாலீஸ்வரர் கோயில் மூன்றாம் இராஜராஜன் காலத்தில் எடுப்பிக்கப்பட்டதாகும். சவர்ண காசியபன் குலோத்துங்க மங்களாதிராஜன் சீராளதேவன் என்பவன் வைத்தியக் காணியாக இவ்வூராரிடம் நிலம் பெற்ற வைத்தியனாவான். இவ்வூர் திருவாலீஸ் வரமுடையார் கோயிலில் விளக்கெரிக்க பசுக்கள் தானமளித்

துள்ளான். இக்கோயிலில் இருந்த குன்றை வடுக பிள்ளையார் கோயில் முன் விளக்கெரிக்க இளங்காவிரி தென்ன விழுப்பரையன் பெருமாள் பிள்ளை என்பவனிடமிருந்து திருவாலீஸ்வரமுடைய நாயனார் கோயில் பிராமணர்கள் பணம் பெற்று கொண்டச் செய்தியை வீரகண்ட கோபாலனின் 5-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

கந்தலீஸ்வரமுடைய நாயானர் கோயில் பற்றி பிற்காலப் பல்லவ மன்னனான கோப்பெருஞ்சிங்கனின் கல்வெட்டு வெளிக்கொணர்கிறது. கந்தலீஸ்வரமுடைய நாயனார் கோயில் சிவபிராமணர்களின் சிற்றன்னை தானமாக அளித்த தொகையைக் கொண்டு நந்தா விளக்கு வைத்துள்ளனர்.

இவ்வூரிலுள்ள திருவூரகப் பெருமாள் கோயில் மூன்றாம் இராஜராஜனின் காலத்தியதாகும். இவனின் 14-ஆவது ஆட்சி யாண்டில் திருநாகேஸ்வரமுடையார் கோயிலில் இருந்த நடன மங்கை ஒருத்தி இக்கோயிலில் விளக்கெரிக்க ஒரு குறிப்பிட்டத் தொகையை அளித்துள்ளாள். விஜய கண்ட கோபாலன் கல்வெட்டு (கி.பி. 1257) இவ்விறைவனை 'இலந்தத்த விண்ணகர எம்பெருமான்' என்றும் இவ்வூரினைக் குன்றத்தூர் எனவும் சுட்டுகிறது.

கோவூர்

காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் வட்டத்தில் போரூரிலிருந்து குன்றத்தூர் செல்லும் சாலையில் இவ்வூர் உள்ளது. எழுநிலை வாயிற் கோபுரம் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறையில் சுந்தரேஸ்வரர் எனும் திருமேனீஸ்வரர் கிழக்கு நோக்கிக் காணப்படுகிறார். முதலாம் இராஜராஜனின் 9-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இக்கோயில் திருச்சுற்றுத்தூண் ஒன்றில் காணப்படு கிறது. இவ்வூர் பெண் ஒருத்தி தினமும் இவ்விறைவனுக்கு வழிபாடு நடத்த பொன் கொடுத்து நிலம் ஒன்றினை வாங்கித் தானமாக வழங்கியுள்ளான்.

இக்கல்வெட்டில் இறைவன் இராஜராஜேஸ்வரமுடைய நாயனார் என்ற குறிப்பிலிருந்து இம்மன்னன் பெயரிலே

இவ்விறைவனை அழைத்திருக்கின்றனர். காமன் பெருங்காட்டு பிள்ளை என்பவன் கோவூர் இராஜராஜேஸ்வரமுடைய நாயனார் கோயிலுக்கு விளக்கெரிக்க இக்கோயில் பெருமாள் பட்டன் எனும் சிவபிரமானனிடம் 10 பணம் அளித்துள்ளான். காமன் பெருங்காட்டுப் பிள்ளை என்பவன் தன்னை காஞ்சி இராமதேவச்சேரியில் கரிகாலனால் குடியமர்த்தப்பட்டு, திருமயிலாப்பூர் ஏலேலசிங்கன் பரம்பரையில் வந்த எழுபது குடும்பங்களில் தானும் ஒருவன் எனக் கூறுவதைக் கல்வெட்டால் அறியமுடிகிறது.

இக்கோயில் தென்புறச் சுவரில் விஜைய கண்ட கோபலனின் 5-ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி. 1253) கல்வெட்டொன்று உள்ளது. எனவே இக்கோயில் 13-ஆம் நூற்றாண்டில் மீண்டும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது எனலாம்.

சிவபுரம்

சென்னை - பெங்களூர் நெடுஞ்சாலையில் பேரம்பாக்கத்தி லிருந்து 3 கி.மீ. தொலைவிலும், கூவத்திலிருந்து வடக்கே 7 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது. தற்போது 'சிவபுரம்' என்றழைக்கப் படும் இவ்வூர் முதலாம் இராசேந்திரன் காலத்தில் 'உரோகடம்' என்றழைக்கப்பட்டுள்ளது.

இக்கோயில் அதிட்டானம் முதல் சிகரம்வரை முழுவதும் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. மேலும் கருவறை, அந்தராளம், அர்த்தமண்டபம், முன்மண்டபம் ஆகிய கட்டட அமைப்புடன் காணப்படுகிறது. இதன் விமானம் ஒரு தள விமானமாகவும், கிதிருப்வம் உருளை வடிவத்துடனும் உள்ளது. தேவகோட்டங்களில் கணபதி, தட்சணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா, துர்கை ஆகிய உருவங்கள் காணப்படுகின்றன.

இங்கு காணப்படும் கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டது இராஜராஜனின் 24-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். மேலும் இக்கோயில் கட்டட அமைதியைக் கொண்டும் கல்வெட்டுகளில் இராஜராஜ ஈஸ்வரமுடைய மகாதேவர் கோயில் என்று முதலாம்

இராஜராஜனின் பெயரில் அழைத்துள்ள அவனது கல்வெட்டு குறிப்பாலும் இக்கோயில் முதலாம் இராசராசனின் காலத்தியது எனக் கூறலாம்.

பராந்தகச்சேரி என்றழைக்கப்பட்ட சிறையார் புதூர் ஊர் ஏரியிலிருந்து வாய்க்கால் மூலம் இவ்வூர் கோயிலுக்குத் தண்ணீர் கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பணியை ம்துராந்தக நல்லூர் என்றழைக்கப்பட்ட கூவம் ஊரார் செய்துள்ளனர்.

இக்கோயிலில் பணிபுரிந்த பணியாளர்கள் பற்றி விரிவான குறிப்புகளே முதலாம் இராஜாதிராஜனின் 27ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தெரிவிக்கிறது. பணியாளர்கள் விவரம் 1. திருவுண் ணாழிகை உடையார், 2. ஆறு மாணிகள், 3. இருபத்தி நான்கு பதியிலார், 4. பஞ்சாச்சார்யர், 5. இருபது உவச்சர்கள், 6. வீணை மற்றும் உடுக்கை வாசிப்பவர்கள், 7. திருப்பதியம் பாடுவர், 8. திருவாய்க் கேழ்வி உடையான், 9. நான்கு பள்ளித்தொங்கல் (குடைபிடிப்பவர்கள்), 11. கணக்கர், 12. பொருளாளர், 13. நான்கு மெய்க்காப்பாளர்கள், 14. நான்கு மாலை கட்டுபவர்கள், 15. நான்கு திருவிளக்குப் பிடிப்பவர்கள், 16. நான்கு காவலர்கள் ஆகிய பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இக்கோயில் தொன்மைச் சின்னமாக அறிவிக்கப்பட்டு தமிழ் நாடு அரசுத் தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

சிவன் கூடல்

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டத்தில் சென்னை - காஞ்சிபுரம் நெடுஞ்சாலையில் பிள்ளைச் சத்திரத்திற்கு வடக்கே சுமார் 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரைச் சிவன் கூடல் என்றும் இறைவனைச் 'சிவக்கொழுந்தாண்டார்', 'சிவக் கொழுந்தீசுவரர்' என்னும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இக்கோயிலில் முதலாம் குலோத்துங்கனின் 25, 28, 49 மற்றும் 50 ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இருந்தாலும் அவை சிதைந்தும் ஒழுங்கற்ற முறையிலும் அக்கோயில் காணப்படுகின்றன.

மேலும் முதலாம் இராஜேந்திரனின் 3ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1015) கல்வெட்டொன்று இக்கோயில் தூணில் உள்ளது. எனவே இக்கோயில் முதலாம் இராஜேந்திரனின் காலத்திற்கு முற்பட்ட கோயில். மிகவும் சிதிலமடைந்திருந்ததால் விக்கிரம சோழன். புதிதாக மீண்டும் நிர்மாணித்துள்ளான். இராஜேந்திரனின் கல்வெட்டு பிரம்மதிராய புத்தேரிக்கு கீழ் உள்ள நிலம் ஒன்றினை இக்கோயில் மகாதேவர் வழிபட்டிற்கும் விளக்கெரிக்கவும் வழங்கியுள்ள செய்தி தருவது. குலேத்துங்கன் கல்வெட்டுகள் இவ்வூரைச் 'சிவன்கூடல்' எனவும் இறைவனை 'சிவக் கொழுந்தாண்டவர்' எனவும் குறிக் கின்றன. மலைமங்கலச் சபையினர் சிவக்கொழுந்தாண்டார் கோயிலுக்கு விளக்கெரிக்க நிலம் ஒன்றினைக் கொடையாக அளித்துள்ளனர். விக்கிரம சோழனின் பிறந்தநாளான ஆனி உத்திரட்டாதி நாள் முதல் 7 நாட்கள் நடைபெறும் திருவிழாவிற்கு நிலம் தானமளிக்கப்பட்டுள்ளது. இக்கோயில் தேவகோட்டத்திலுள்ள துர்கை மற்றும் நூற்றெண்மப் பிள்ளையார் ஆகியோர் வழிபாட்டிற் காக நிலம் தானமளித்துள்ளனர். இக்கோயில் விக்கிரம சோழன் காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் உள்ள மரகதவல்லி நாச்சியார் என்ற திருக்காமக்கோட்டம் விஜயகண்ட கோபால மன்னனின் கொடையால் கட்டப்பட்டுள்ளது.

தற்போது இக்கோயில் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையின் பாதுகாப்புச் சின்னமாக அறிவிக்கப்பட்டுப் பாதுகாக்கப் பட்டு வருகின்றது.

செரப்பனஞ்சேரி

தாம்பரத்திலிருந்து வாலாஜாபாத் வழியாக காஞ்சிபுரம் செல்லும் சாலையில் படப்பையிலிருந்து 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் 'விமீசுவரர்' என்ற சிவன்கோயில் சிதிலமடைந்த நிலையில் உள்ளது. தொண்டை மண்டலத்திற் குரிய 'தூங்கானை மாடக் கோயில்' வகையிலே அமைக்கப் பட்டுள்ளது. இக்கோயில் கிழக்கு நோக்கிய கருவறை, இடைநாழி, அர்த்தமண்டபம் மற்றும் மகாமண்டப அமைப்புடன் காணப் படுகிறது. கோயிலின் பின்பகுதி தூங்கானை மாடத்தின் கற்சுவர்கள்

சிதைந்துள்ள செங்கற்பகுதி மட்டுமே காணப்படுகிறது. அர்த்த மண்டபத்தில் சுவர்ப்பகுதி வரை உள்ளது, மேல் தளம் இல்லை, மகா மண்டபத்தின் நான்கு புறச்சுவர்களும் விழுந்து தரைப்பகுதி வரையே உள்ளது. இதன் நுழைவு வாயில் தெற்குப் புறமாக அமைந்திருந்ததை தென்புற படிக்கற்கள் அமைப்பினையும் மகாமண்டபத்தின் கிழக்குப் பகுதியில் நுழைவுவாயில் அமைப்புகள் ஏதும் இல்லாததாலும் அறியலாம். தேவகோட்டங்களில் சிற்பங்கள் ஏதும் காணப்பட வில்லை. இக்கோயிலின் முன்னே நந்தி மண்டபம் உள்ளது

பிற்காலச் சோழர்களின் கோயில் கருவறை, இடைநாழி, அர்த்தமண்டபக் கட்டட அமைப்புடன் காணப்படும். எனவே இக்கோயிலின் கட்டட அமைப்பைக் கொண்டு பிற்கால சோழர் காலத்தில் தூங்கானை மாடக் கோயிலாக முழுவதும் கருங்கற்களால் கட்டப்பட்டது என்பது தெளிவாகிறது. மேலும், இக்கோயிலில் 7 கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டது மூன்றாம் குலேத்துங்கனின் (கி.பி. 1178-1218) 2ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். எனவே இக்கோயில் பிற்காலச் சோழர் காலத்தியது என உறுதிப்படுத்தலாம்.

இங்குள்ள கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்ட மூன்றாவது குலோத்துங்கனின் கல்வெட்டில் இவனைத் 'திரிபுவனச் சக்கர வர்த்திகள் திருப் வீரராஜேந்திர சோழ தேவர்' என்று குறிப்பிட்டுள்ளது. முதலாம் இராஜேந்திரனின் மகன்களில் ஒரு வீரராஜேந்திரன் (1063-1069) இருந்தான். அவன் 'இராசகேசரி' என்ற பட்டத்துடன் அழைக்கப்பட்டான், திரிபுவனச் சக்கரவர்த்தி என்று அவனை அழைக்கவில்லை. வீரராஜேந்திரன் என்ற சிறப்புப் பெயர் மூன்றாம் குலோத்துங்கன் பெற்றிருந்தான் எனவே இக்கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்கனது என்பதை அறுதியிட்டுக் கூறலாம்.

இக்கோயில் கல்வெட்டுகளில் இவ்வூர் காலவாரியாக பெருவஞ்சூர், பெருவஞ்சூரான இராசகேசரி நல்லூர், பெருவஞ் சூரான ராஜேந்திர சோழ நல்லூர், ராஜேந்திர கேசரி நல்லூர், பெருவஞ்சூர் என அழைக்கப்பட்டுள்ளது. 'பெருவஞ்சூர்' என்றழைக் கப்பட்ட இவ்வூர் தற்போது செரப்பனஞ்சேரி என்றழைக்கப்படுகிறது.

இக் கோயில் இறைவனை 'விமீசுரமுடைய நாயனார்'. என்று கல்வெட்டுகள் குறிக்கின்றன.

மூன்றாம் குலோத்துங்கனின் 2ஆவது ஆட்சியாண்டு முதல் (கி.பி. 1180) தெலுங்குச் சோழர் விசைய கண்ட கோபாலனின் (கி.பி. 1265) காலம் வரை, கோயிலின் அருகே காணப்படும் 16ஆம் நூற்றாண்டுத் தனிக்கல்வெட்டு மூலம் இக்கோயில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு முதல் 17-ஆம் நூற்றாண்டு வரை சிறப்புடன் இருந் துள்ளதை விளங்கலாம்.

இக்கோயில் கல்வெட்டுகள் கூழாங்கற்சேரி, உறத்தூரான கலிங்ககுலகால நல்லூர், அமண்பாக்கம், ஆலத்தூர் ஆகிய ஊர்களைத் தெரிவிக்கின்றன. இவ்வூர் அருகே உள்ள கூழாங்கற் சேரி என்ற ஊர் இன்றும் அதே பெயரில் அழைக்கப்படுகிறது. இவ்வூர், ஜெயங்கொண்ட சோழமண்டலத்து ஊற்றுக் காட்டுத் கோட்டத்து வெளிமானல்லூர் நாட்டுப்பிரிவில் அமைந்திருந்தது.

சோமங்கலம்

மணிமங்கலத்திலிருந்து 4 கி.மீ. தொலைவிலும் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டத்தில் போரூரிலிருந்து 10 கி.மீ. தொலைவிலும் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரில் சுந்தரவரதராஜ பெருமாள் மற்றும் சோமநாதீஸ்வரர் ஆகிய இருகோயில்கள் உள்ளன. 'இராஜசிகாமணி சதுர்வேதிமங்கலமான சோமங்கலம் திருச்சித்திர கூடத்து ஆழ்வாருக்கு' இவ்வூர் மகாசபையினர் நிலம் வழங்கி யுள்ளனர்.

சோமநாதீஸ்வரர் கோயில் இறைவன் கிழக்கு நோக்கிக் காட்சியளிக்கிறார். இக்கோயிலினுள் செல்லும் நுழைவு வாயில் தென்புறத்தே காணப்படுகிறது. இக்கருவறை மற்றும் விமானம் தூங்கானை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் முன் மண்டபத்தில் பிரம்மா, திருமால் ஆகிய உதிரிச் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் திருமால் பிற்காலப் பல்லவர் காலச் சிற்ப வடிவில் காணப்படுகிறது. மேலும் திருச்சுற்றில் சப்தமாதர் சிலைகள் உள்ளன. இவற்றருகே பல்லவர்காலச் சிதைந்த சிம்மத்

தூண்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். எனவே தற்போதைய கோயில் எடுப்பதற்கு முன் பல்லவர் காலத்தில் செங்கற் கோயிலாக இருந்துள்ளது.

புலியூர் கோட்டம், சோமங்கலம், சோமேஸ்வரமுடையார் கோயிலுக்குப் பெருமுனையூர் கரணத்தான் சந்திர சேகரன் என்பவன் இரண்டு பசுக்கள் தானமளித்துள்ளான். மூன்றாம் குலோத்துங்கனின் 12-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1190) சோமங்கலத்து ஏரிக்கரை ஏழிடத்தில் உடைந்தது. மேலும் 13-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1191) இல் இரண்டு இடத்திலும் ஏரிக்கரை உடைந்தது. இவ்விரண்டு ஆண்டுகளிலும் திருச்சுரக் கண்ணப்பந் திருவேகம்பமுடையான் காமன் கண்டவானவன் இவ்வேரி உடைப்பினைச் சரிசெய்தான். இதன் பின்னர் இம்மன்னனின் 14-ஆம் ஆட்சியாண்டில் இவ்வூர் ஊர்ச் சபையார் 40 பழங்காசு பெற்று வருடந்தோறும் ஏரியை பழுதுபார்க்கவும் வண்டல்கள் எடுத்துக் கரையை உயர்த்தவும் இத் தொகையின் மூலம் ஏற்பாடு செய்தனர்.

மணிமங்கலம்

பெரும்புதூர் வட்டத்தில் தாம்பரத்திலிருந்து 7 கி.மீ தொலைவில் 'மணிமங்கலம்' என்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஊர் அமைந்துள்ளது. பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்மனுக்கும் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசிக்கும் மணிமங்கலத்தில் நடந்த போரில் முதலாம் நரசிம்மவர்மன் வெற்றி பெற்றான் இப்போர்ச் செய்தியைக் கூரம் செப்பேடு விளக்குகிறது. பிற்காலச் சோழர்கள் காலத்தில் இவ்வூர் 'லோகமாதேவிச் சதுர்வேதிமங்கலம்', 'இராஜ சூளாமணிச் சதுர்வேதிமங்கலம்', 'பாண்டியனை இருமடி வெண கெண்ட சோழச் சதுர்வேதி மங்கலம்' எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது.

இப் பண்டையச் சிறப்பான ஊரில் சிவன் மற்றும் திருமால் ஆகியோருக்குக் கோயில்கள் பல எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் இராஜகோபாலப் பெருமாள், வைகுந்த பெருமாள், கிருஷ்ணசாமி ஆகிய மூன்று திருமால் கோயில்களும் தர்மேஸ்வரர் மற்றும் கைலாசநாதர் கோயில் என இரு சிவன் கோயில்களும் உள்ளன.

வைகுந்தப் பெருமாள் கோயிலில் முதலாம் இராஜராஜனின் கல்வெட்டில் சிங்க மன்றாடி என்பவன் லோகமாதேவி சதுர்வேதி மங்கலம் எனும் மணி மங்கலத்துத் திருவாய்ப்பாடி கிருஷ்ணப் பெருமாள் கோயிலில் விளக்கெரிக்க 90 ஆடுகள் தானமளித் துள்ளான். இக்கோயிலில் காணப்படும் இராஜராஜனின் 5-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டே காலத்தால் தொன்மையானதால் இக்கோயில் (கி.பி. 989) இராஜராஜன் காலத்தில் எழுப்பப் பட்டிருக்கலாம்.

இவ்வூர் பிரம்மதேயமாக அளிக்கப்பட்டுள்ளது. 'திருவாய்ப்பாடி கிருஷ்ணன்' என இக்கோயில் அழைக்கபட்டுள்ளது. வானராய தேவர், ஜடாவர்மன் சுந்தரபாண்டியனிடம் கேட்டுக் கொண்டதற் கிணங்க முதலி உடையார் மலைக்குடையார் கொங்கரையர் தேவர் என்பவரால் 'நாராயணன்' என்ற பெயரிடப்பட்ட 16 அடி அளவுகோல் உருவாக்கப்பட்டது.

இராஜகோபாலப் பெருமாள் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் தொன்மையானது முதலாம் இராஜராஜனின் 6-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும் (கி.பி. 991). இக்கல்வெட்டின் முன் பகுதியில் சமஸ்கிருத மொழிப் பாடல் உள்ளது. இதில் இரத்ன கிராம அகரத்து திருப்மத் துவாரகை கோயிலுக்குத் தானம் வழங்கியதாகக் கூறப்பட்டுள்ளது. தமிழ்ப்பகுதியில் உலோக மகாதேவி சதுர்வேதிமங்கலம் எனும் மணிமங்கலத்து திருப்மத் துவாராபுரிதேவர் கோயிலுக்கு 4,000 குழி நிலத்தினை இவ்வூர் சபையார் வழங்கியுள்ள செய்தி உள்ளது. இராஜாதிராஜனின் 29-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1046) இவ்வூர் இராஜசூளாமணிச் சதுர்வேதிமங்கலம் எனப் பெயர்மாற்றம் பெற்றது. சேனாபதி ஜெயங்கொண்ட சோழ பிரம்மாதிராஜன் என்ற அதிகாரியின் தாயார் காமக்காவையல் என்பவள் அமண்பாக்கத்தி லிருந்து சிறிது நிலம் வாங்கித் தானம் அளித்துள்ளாள். இவனின் தந்தை மஞ்சிபயனார் எனும் ஜெயசிங்க குலாந்தக பிரம்மாதிராஜர் ஆவார். நடுவிற் கோயில் எனும் புரவுவரிவிண்ணகர் கோயில் திருப்பலிக்காக(உணவு படைக்க) நிலம் அளிக்கப்பட்டுள்ளது.

முதலாம் பராந்தகனின் 19-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று இவ்வூரில் இருந்த சபையைப் பற்றியும் நிர்வகித்த விவரங்களையும், நிர்வாகத்திறன் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறுகிறது. இக்கிராம சபையானது பல குழுக்களை நியமித்தது. இக் குழுக்கள் நிலம், தோட்டம், ஏரி, பொன் ஆகியவற்றை நிர்வகிக்கத் தனித்தனியே ஏற்படுத்தப்பட்ட குழுக்களாகும்.

ஒவ்வொரு வாரியத்திலும் (குழு) முன்பு அனுபவம் இல்லாத இரண்டு உறுப்பினர்களை நியமிக்கவேண்டும். நிலவரிகளை இக்குழுவின் மூலமே செலுத்த வேண்டும். இக்குழுவில் இடம்பெற்ற உறுப்பினர்கள் விதிகளுக்கு முரண்பட்டு நடந்தால் ஒரு மஞ்சாடி பொன் தினம் ஒன்றிற்கு தண்டம் வசூலிக்கப்படவேண்டும். ஊர்ச் சபையின் மத்தியஸ்தன் ஒவ்வொரு குழு உறுப்பினர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ஒரு கழஞ்சுப் பொன்னும், ஆறுமாத்திற்கு ஒரு முறை சில துணிகளையும் சன்மானமாக வழங்கவேண்டும். இவ்வாறு ஊர் சபை நியமித்த குழுக்களின் பணி விவரத்தினைப் பராந்தகன் கல்வெட்டு உணர்த்துகிறது.

கைலாசநாதர் கோயில் முதலாம் இராஜராஜனின் 15-ஆவது ஆட்சிக் கல்வெட்டைத் தொன்மையானதாக கொண்டுள்ளது. விக்கிரம சோழன் காலத்தில் மகாசபையினர் நிலம் தானமாக அளித்துள்ளனர்.

தர்மேஸ்வரர் கோயிலுக்குப் பெருங்குன்றத்தைச் சேர்ந்த கண்ணந்தை குப்பன் என்பவன் நான்கு பசுக்களைத் தானமாகக் கொடுத்து இரண்டு விளக்கு வைக்க இரண்டு பழங்காசுகளை அளித்துள்ளான். இதனை உண்ணாழியாழ்வார்கள் தொடரச் செய்துள்ளனர். மேலும் மணிமங்கல மாணிக்கம், திருநாழிகை மாணிக்கம், இனியபெருமாள் மாணிக்கம், தொண்டத் தொகை மாணிக்கம், ஏகம்பத்து மாணிக்கம், பொன்னம்பல கூத்த மாணிக்கம் ஆகிய ஆடல் மகளிர் தர்மேஸ்வரமுடைய நாயனார் கோயிலில் பணிபுரிந்துள்ளனர். கிழக்கு நோக்கி அமைந்துள்ள இக்கோயிலுக்கு நுழைவு வாயில் தெற்குப் பகுதியில் உள்ளது. கருவறை, கிதிருப்வம் ஆகியவை நான்கு பட்டை வடிவத்திலும் சிகரம் மட்டும் தூங்கானை

வடிவிலும் அமைந்துள்ளது. தேவகோட்டத்தில் கணபதி, தெட்சணா மூர்த்தி, விஷ்ணு பிரம்மா, துர்கை ஆகிய சிற்பங்கள் உள்ளன.

மாங்காடு

இவ்வூர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து 'மாங்காடு' என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டு வருகின்றது. இதனை வள்ளீஸ்வரர் கோயில் கருவறை முன் தரையில் காணப்படும் அபராஜிதவர்மனின் 3-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் (கி.பி. 898) உணரலாம். மேலும் மூன்றாம் நந்திவர்மனின் 17-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டும் (கி.பி. 863) தரையில் பாவப்பட்டுள்ளது. எனவே இக்கோயில் பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனின் காலத்தில் செங்கற்றளியாகக் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் மூன்றாம் இராஜராஜனின் காலத்தில் கற்றளியாக எழுப்பப்பட்டிருக்கிறது. ஏனெனில் கருவறைச் சுவரில் மூன்றாம் இராஜராஜனின் 16-ஆவது மற்றும் 23-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளே காலத்தான் தொன்மையானது என்பதிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் குன்றத்தூரைச் சேர்ந்த 'செழிய வாணியன்' என்பவன் இக்கோயில் இறைவனுக்கு திருவாதிரை, அமாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களில் வழிபாட்டிற்குத் தேவையானதைத் கொடுத்து திருவெள்ளிக்கீழ் சபையினரைத் தொடரச் செய்துள்ளான். அபராஜிதன் காலத்தில் கச்சிப்பேட்டு தனித்தேவனார் என்பவர் மாங்காடு திருவெள்ளிக்கீழ் மகா தேவருக்கு வழிபாடு மற்றும் விளக்கிற்காகப் பொன் அளித்துள்ளான்.

மூன்றாம் இராஜராஜனின் கல்வெட்டுகள் புலியூர் கோட்டத்து அழகிய சோழ நல்லூர் எனும் மாங்காடு 'திருவெள்ளிக் கீழ்மேய நாயனார்' என்று இறைவனையும் இவ்விறைவனுக்குச் சித்தவடத் தேவன் கண்டாதித்தன் விளக்கு வைக்க தானம் அளித்த செய்தியையும் வெளிப்படுத்துகின்றன.

தற்போதுள்ள மாங்காடு காமாட்சியம்மன் கோவில் எப்பொழுது கட்டப்பட்டது என்பதை அறிய கல்வெட்டு ஆதாரங்கள் இல்லை. ஆனால் இக்கோயில் கோபுரத் தளத்தில் பதிக்கப்பட்டுள்ள உத்தமச்

சோழனின் கல்வெட்டு மாங்காட்டைச் சேர்ந்த மதகுருவின் மகள் ஒருத்தி விளக்கெரிக்க நிலம் ஒன்றினை தானமளித்துள்ளாள் என்பதை விளக்குகிறது. மேலும் மண்டபத் தரையில் பதிக்கப் பட்டுள்ள ஜடாவர்மன் சுந்தர பாண்டியனின் 5-ஆவது ஆட்சி யாண்டுக் கல்வெட்டுப் பள்ளிச் சந்தமாக நிலம் தானம் அளித்த செய்தியைத்தருகிறது.

மாங்காட்டுப் பெருமாள் கோயில் கருவறை வடக்குப் புறச் சுவரில் முதலாம் இராஜேந்திரனின் 2-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று காணப்படுகிறது. 'அழகிய சோழநல்லூர் எனும் மாங்காட்டு கலிகேசரி விஷ்ணுகிரகத்து' இறைவனுக்கு விளக்கெரிக்க 96 ஆடுகள் வழங்கப்படுள்ளதாகக் கூறுகிறது. மாங்காட்டிற்கு 'அழகிய சோழ நல்லூர்' என்ற மற்றொரு பெயரும் இருந்துள்ளதை கல்வெட்டால் அறியமுடிகிறது.

இக்கோயிலில் கொற்றவை, சிவபெருமான், அமர்ந்த சிம்மம், ஜேஷ்டா ஆகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. இவையனைத்தும் கி.பி. 7-8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர் காலச் சிற்பங்களாகும்.

மாங்காட்டில் ''திருவராந்தானம்'' எனப்பட்ட சமணப் பள்ளி பல்லவர் காலத்தில் இருந்ததுள்ளது என்பதை ஆலந்தூர் சிவசுப்ரமணிய சுவாமி கோயில் நுழைவு வாயிலில் உள்ள பல்லவர் காலக் கல்வெட்டால் அறியமுடிகிறது. அருகன் தானம் (அர்ஹ ஸ்தானம்) என்ற தொடரே 'அராந்தானம்' என வழங்கியுள்ளது எனலாம். மேலும் மாங்காடு காமாட்சியம்மன் கோயில் தளத்தில் காணப்படும் சடையவர்மன் சுந்தர பாண்டியனின் (கி.பி.1256) கல்வெட்டு மாங்காட்டிலிருந்த சமணப் பள்ளியைச் சேர்ந்தது என்பதை அறியமுடிகிறது. அச்சமணப்பள்ளியே ''மாங்காட்டுத் திருவராந்தானம்'' என ஆலந்தூர் கல்வெட்டு குறிப்பிடும் சமணப் பள்ளி எனலாம். இச்சமணப் பள்ளியின் நிர்வாகியாக இருந்தவர் 'அநந்த வீரக்குரவர்' என்ற ஆசாரியார். அவரது மாணக்கியராக இருந்தவர் ஆர்க்காடு கூற்றத்துப் பரிபண்டத்துறை பரிசைக் கிழார் அமர்நிலையார் என்பவரின் மகளாவார் என்று கல்வெட்டால் தெரியவருகின்றது. மாங்காட்டுச் சமணப் பள்ளி முற்றிலும் சிதைந்த

பின்னர் இக்கல்வெட்டு காமாட்சியம்மன் கோயிலில் கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ளது எனக் கருதலாம்.

மாம்பாக்கம்

திருப்பெரும்புதூர் வட்டம் சென்னை - திருப்பெரும்புதூர் செல்லும் சாலையில் திருப்பெரும்புதூரிலிருந்து 2 கி.மீ தூரத்தில் மாம்பாக்கம் என்ற ஊர் உள்ளது. இப்பகுதியில் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான சான்றாகத் தொல்லியல் தடயங்களான மிகப்பெரிய ஈமப்பேழை, சிறிய ஈமப்பேழை (Sarcophagus) மற்றும் மண்டை (Bowl) ஒன்றும் இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டன. இதுபோன்ற மிகப்பெரிய ஈமப்பேழை கிடைப்பது அரிதானதாகும். தற்போது இவை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பூண்டி அங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

வல்லம்

திருப்பெரும்புதூர் வட்டம் வல்லக்கோட்டையிலிருந்து 2 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூர் வல்லம் என்றும் இறைவன் திரு அகத்தீஸ்வரமுடைய மகாதேவர் என்றும் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

பல்லவர் காலத்தில் முதன் முதலில் கட்டப்பட்டது இக்கோயில், இதற்கு ஆதாரமாக பல்லவர் கால கல்வெட்டொன்று விநாயகர் சன்னதியின் விதானத்தில் காணப்படுகிறது. பல்லவர் காலத்தில் கருவறையின் உட்சுவரில் புடைப்புச் சிற்பமாக சோமாஸ்கந்தர் உருவம் அமைப்பது மரபு. அதுபோலவே இக் கோயிலில் கருவறை பின்பகுதியில் சோமாஸ்கந்தர் உருவம் காணப்படுகிறது. முதலாம் குலோத்துங்கசோழன் காலத்தில் மறு சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. 12-ஆம் நூற்றாண்டுக் கட்டட அமைப்புடன் காணப்படுகிறது. வல்லத்து ஊரவர்கள் (ஊர்ச்சபையார்) கொல்லை நிலம் ஒன்றைப் பொதுவிடத்தில் பலரும் அறியக் கூவி விற்றனர். செங்குப்பை புலீந்திரன் என்பவன் இந்நிலத்தை நான் வாங்குகிறேன் எனப் பலரும் அறிய உரக்கக் கூறி விலைக்கு வாங்கித் திரு அகத்திஸ்வரமுடைய மகாதேவரின் அர்த்தயாம பூசைக்கும் திருவமுது படிக்கும் பயன்படும்படி வழங்கியுள்ளான்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அகழாய்வு நடைபெற்ற இடங்கள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அகழாய்வு நடைபெற்ற இடங்கள்

நங்கநல்லூர்

சென்னை-தாம்பரம் இருப்புப் பாதையில் பழவந்தாங்கலிருந்து தெற்கே 1 கி.மீ தொலைவில் இவ்வூர் உள்ளது. இவ்வூரில் இருந்த மண்மேடு, கோயிலொன்று புதைந்திருந்த மண்மேடாக இருக்கலாமென்று எண்ணி மத்தியத்தொல்லியல் துறையினர் K.V. சௌந்திரராஜன் தலைமையில் 1973 - 74 ஆம் ஆண்டு மாதிரிக் குழி அகழாய்வினை நடத்தினர். அப்பொழுது அதிட்டானம் வரையிலான கோயில் ஒன்றின் கட்டடம் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அதிட்டானத்தின் மேல் பகுதிகளான குமுதம் முதலானவை சரளைக்கற்கள் மற்றும் சுண்ணாம்பு கலந்த கட்டடப் பகுதியாகக் காணப்படுகிறது. இக் கோயில் கிழக்கு நோக்கியும் இதன் கருவறை 5.8 மீ நீளமும் 6.1. மீ அகலமும் கொண்டிருந்தது. கருவறையை ஒட்டி 2.85 நீளமுடன் அர்த்த மண்டபமும் காணப்பட்டது. இக் கோயிலின் வளாகத்தில் கருங்கல்லிலான பெரிய லிங்கமும், மணற் கல்லிலான நரசிங்கர் சிற்பமும் கண்டெடுக்கப்பட்டன. இக் கோயிலின் கட்டட அமைப்பைக் கொண்டும், சிற்பங்களைக் கொண்டும் இக் கோயில் பல்லவர் காலத்தைச் சார்ந்தது எனக் கூறலாம். மேலும் இக்கோயிலின் அதிட்டானத்தில் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்றும் காணப்படுகிறது.

பெரும்பேர்

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தில் சென்னை - விழுப்புரம் நெடுஞ்சாலையில் தொழுப்பேட்டிலிருந்து 2 கி.மீ.

தொலைவில் பெரும்பேர் அல்லது பெரும்பெயர் என்ற தொன்மையான இவ்வூர் அமைந்துள்ளது. பெரும்பேரைச் சுற்றிக் குன்றுகளும், ஏரிகளும் அச்சிறுப்பாக்கம் காடுடன் மேடான பகுதியில் பெருங்கற்காலச் சின்னங்கள் சிதைக்கப்பட்ட நிலையும் காணப்படு கின்றன.

இவ்வூரில் உள்ள ஈமச்சின்னங்கள் மேற்பரப்பில் 8 அடியிலிருந்து 50 அடி வரையிலான கல்வட்டத்தின் விட்டங் களைக் கொண்டு உள்ளன. பெரும்பேரில் அலெக்சாந்தர் ரீ என்பவர் 1908 - ஆம் ஆண்டு அகழாய்வினை மேற்கொண்டு எட்டு ஈசமச்சின்னங்களை வெளிக் கொணர்ந்தார். இரண்டு அடி முதல் ஏழு அடி வரையிலான ஆழத்தில் சுடுமண் தாழிகள் மற்றும் ஈமத் தொட்டிகளும் கண்டெடுக்கப்பட்டன. ஈமத்தொட்டிகள் (Sarco phagi)குதிரை மற்றும் ஆடு போன்ற உருவ அமைப்பில் உள்ளன. இவை இரண்டு, மூன்று வரிசையிலான குறுகிய கால்களை அடிப்பாகத்தில் கொண்டுள்ளன. இத் தொட்டிகளின் நீளம் 2 முதல் ஏழு அடி வரை பல்வேறு அளவுகளில் உள்ளன.

பெரும்பேர் ஈமக் குழிகளில் இரும்பினாலான கைப்பிடியுடன் கூடிய வாள், கத்தி, அரிவாள் உள் அம்புமுனை போன்றவைகளும் சங்குப் பொருள்கள், தந்தத்திலான மணிகள், புதிய கற்கால கைக்கோடாரிகள், மாவரைக்கப்படும் கல், மற்றும் கல் உலக்கை ஆகிய தொல்பொருட்கள் கிடைத்தன.

கறுப்பு சிவப்பு மட்கலன்கள், வெண்மை நிறம் தீட்டப்பட்ட கறுப்பு சிவப்பு மட்கலன்கள், சிவப்பு மடகலன்கள் குறிப்பிடத் தக்கவை. சிறிய குடுவைகள், கிண்ணங்கள், மூடிகள், தாங்கிகள் ஆகிய மட்பாண்ட வகைகளும் கண்டெடுக்கப்பட்டன.

பெரும்பேர் ஈமக்குழி ஒன்றில் தியான நிலையில் அமர்ந்தவாறு எலும்புக் கூடு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது. கைகள் இரண்டும் முழங்கால்களைத் தொட்ட நிலையில் காணப்பட்டது. மண்டை ஓடு உடைந்தும் பிற எலும்புகள் நொறுங்கிய நிலையிலும் இருந்தன.

பெருங்கற்காலப் பண்பாட்டினை அறிவதற்கு பெரும்பேர் அகழாய்வு சிறப்பானதாகும். ஈமக்குழியில் புதிய கற்கால மனிதன் பயன்படுத்திய கைக்கோடாரி ஒன்று கிடைத்திருப்பது குறிப்பிடத்

தக்கது. புதிய கற்காலத்தின் கடைப்பகுதிப் பண்பாட்டின் தொடர்ச்சியாகப் பெருங்கற்காலப் பண்பாடு இவ்வூரில் நிலவியதை தெளிவுறுத்துகின்றது.

கடமலைப்புத்தூர்

காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில் கடமலைப் புத்தூர் அமைந்துள்ளது. அலெக்சாந்தர் ரீ பெரும்பேரைப் போன்றே இங்கும் அகழாய்வினை மேற்கொண்டு பெருங்கற்கால பண்பாட்டினை வெளிக்கொணர்ந்தார். இவ்அகழாய்வில் பெரும்பேரைப் போன்ற பல தொல்பொருட்கள் கிடைத்தன. இவற்றில் 3 கால்கள் மற்றும் மேல் பக்கத்தில் 3 வாயுடன் கூடிய சிவப்பு ஜாடி கண்டெடுக்கப்பட்டது சிறப்பு வாய்ந்தது.

சானூர்

சென்னை - விழுப்புரம் நெடுஞ்சாலையில் சென்னையி லிருந்து 72 கி.மீ. தொலைவில் சானூர் அமைந்துள்ளது. இவ்வூரில் இரு மலைகளுக்கிடையே மேட்டுப் பகுதியில் 45 ஏக்கர் பரப்பளவில் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் காணப்படுகின்றன. 300க்கும் மேற்பட்ட பெருங்கற்படை ஈமச்சின்னங்கள் உள்ளன. தமிழகத் திலேயே காணப்படுகின்ற பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் இது மிகப்பெரிய நிலப்பரப்பில் உள்ளது. மத்திய தொல்லியல் துறையைச் சேர்ந்த N.R. பானர்ஜி, K.V. சௌந்திரராஜன் ஆகியோர் தலைமையில் 1950 மற்றும் 1952 ஆம் ஆண்டுகளில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டன.

இங்கு கற்குவியல் (Cairn circle) கல்திட்டை (Dolmenoid) என்ற இருவகையான பெருங்கற்கால ஈமச் சின்னங்கள் காணப்படு கின்றன. இந்த ஈமச்சின்னங்களைச் சுற்றிப் பெரிய கருங்கற்களினால் வட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வட்டங்களின் விட்டம் 18 முதல் 50 அடி வரை பல்வேறு அளவுகளில் காணப்பட்டன.

மூன்று கல்திட்ட வகையையும் இரண்டு கற்குவியல் வகையும் ஆக ஐந்து பெருங்கற்கால ஈமச்சின்னங்களிலும் அகழாய்வு செய்யப்பட்டன. இவ் வகழாய்வுகளில் ஈமச்சின்னங்களில் கிடைத் துள்ள பேழைகளில் சில மூடிகளுடனும் அடிப்பகுதி கால்களுடனும்

பல்வேறு அளவுகளில் கிடைத்துள்ளன. மேலும் நீண்ட கழுத்துடைய பானைகள், தாங்கிகள், மூடிகள், இரும்பாலான குறுவாள், வாள், அரிவாள், கத்தி,அம்பு முனை ஈட்டி முனை, தூண்டில், மூன்று கால்களுடன் கூடிய ஜாடிகள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன.

ஒரு பேழையில் 15கால்கள் மூன்று வரிசைகளில் தாங்கிகளாக இருந்தன. எலும்புக்கூடுகள் பேழையின், உட்பகுதி, வெளிப்பகுதி களில் காணப்பட்டன. இரும்பிலான உளிகள் கறுப்பு சிவப்பு மட்கலன்கள் சிவப்பு மட்கலன்கள், குதிரையின் லாடம், கத்தி, கரண்டி, நீண்ட கத்தி, சில மட்பாண்டகளில் கீறல் குறியீடுகள் காணப்பட்டன. இம்மட்கலன்களில் சிறிய கிணணங்களே பெரும்பாலானவை கிடைத்தன.

இங்கு வாழ்ந்த மக்கள் வேட்டையாடும் தொழிலை மேற் கொண்டிருந்தனர். மேலும் சுடுமண்ணாலான மணிகளையும், அழகிய கல்மணியையும் சங்குப் பொருள்களையும் பயன்படுத்தி உள்ளனர். பெருகற்கால மக்கள் கால்நடைகளை வளர்த்துள்ளனர். குதிரையின் பயனையும் அறிந்திருந்தனர்.

குன்றத்தூர்

குன்றுகள் நிறைந்து காணப்படுவதால் இப்பெயர் பெற்றது. பேச்சு வழக்கில் குன்னத்தூர் என அழைக்கப்படும் இவ்வூர், இங்குள்ள திருவகத்தீஸ்வரர் சிவன் கோயிலில் கிடைக்கின்றன கல்வெட்டு களிலும் குன்னத்தூர் என்றே குறிக்கப்படுகின்றது. இவ்வூர் முருகன் கோயில் புகழ்பெற்றதாகும் பெரியபுராணம் இயற்றிய சேக்கிழார் பெருமான் இவ்வூரில் தான் பிறத்தார். இங்குள்ள மலையடிவாரத்தில் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் காணப்படுகின்றன. மத்தியத் தொல்லியல் துறை 1955-58 ஆம் ஆண்டுகளில் அகழாய்வுகளை மேற்கொண்டனர். இங்கிருந்த பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் மட்கலன்கள், இரும்புக்கருவிகள், அகழாய்வில் கண்டெடுக்கப் பட்டன. இப்பொருட்களில் குறிப்பிடத்தக்கன, மட்கலன்களாலான தட்டு, தாங்கி, மூன்று கால்களுடைய ஜாடி, தாழி போன்றவைகளும், இரும்பிலான பொருட்கள் கத்தி, வளையல்கள், கோடரி, ஈட்டி, ஆணி, குதிரை லாடங்கள், 5 அடி நீளமுள்ள ஈட்டி, ஈட்டி முனை, குறுவாள், உளி, போன்ற பொருட்களும் கிடைத்தன. மேலும்

செம்பாலான பூசை மணி, செம்புக் கிண்ணம் ஒன்றில் அரிசித் தவிடும் கண்டெடுக்கப்பட்டன.

இங்கு 7 அடி நீளமும் 3 அடி அகலமும் கொண்ட ஈமப்பேழை யின் அடிப்பகுதியில் 7 கால்கள் வீதம் 3 வரிசையில் மொத்தம் 21 கால்கள் கொண்டதாகக் கண்டறியப்பட்டது. இதேபோன்று 12 கால்களை உடைய ஈமப்பேழை ஒன்றும் கண்டறியப்பட்டது.

இங்கு நிலவிய முதற் பண்பாட்டில் சுடுமண்ணலான கழிவு நீர் குழாய்கள் காணப்பட்டன. அடுத்து சரளைக் கற்களால் கட்டட சுவர்ப் பகுதி வெளிப்பட்டது. இது பெருங்கற்காலப் பண்பாடாகும். அதற்கடுத்த இரண்டாவது பண்பாட்டில் உறைகிணறும், அரியகல் மணிகளும், செப்பு நாணயங்கள், சுடுமண் பொம்மை மற்றும் முத்திரைகளும் கிடைத்தன. இப்பண்பாடு வரலாற்றுக் காலத்தின் தொடக்ககால மாகும். மூன்றாவது இடைக்காலப் பண்பாட்டில் செங்கற் சுவர் பகுதிகள் கண்டெடுக்கப்பட்டன.

குன்னத்தூர் அகழாய்வின் மூலம் இப்பகுதியில் பெருங்கற் காலம் முதல் தொடர்ந்து மக்கள் வாழ்ந்துவருகின்றனர் என்பதை அறியமுடிகிறது.

வசவ சமுத்திரம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிழக்குக் கடற்கரையை ஒடடியவாறு மாமல்லபுரத்திலிருந்து தெற்கே 18 கி.மீ. தொலைவில் வசவசமுத்திரம் என்ற இவ்வூர் அமைந்துள்ளது. சங்க இலக்கியமான பெரும்பாணாற்றுப்படை இப்பகுதியில் இருந்த துறைமுகப் பட்டினத்தைப் பற்றி விரிவாகக் கூறுகிறது. ரோமானியர்கள் இத்துறைமுகத்திற்கு வருகை புரிந்துள்ளனர். வசவ சமுத்திரத்திற்கு அருகே சதுரங்கப் பட்டினம் என்ற ஊர் அமைந்துள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியில் சதுரங்கபட்டினம் புகழ்பெற்று விளங்கியது. வசவ சமுத்திரத்திற்கு அருகிலுள்ள வாயலூர் என்ற ஊர் பல்லவர் காலத்தில் சிறப்புற்றிருந்தது. இங்குள்ள வியாக்ர புரீஸ்வரர் கோயிலில் உள்ள தூண் ஒன்றில் பல்லவ மன்னர்களின் மரபுப் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. முன்பு வசவ சமுத்திரம், வாயலூரில் ஒரு பகுதியாக இருந்து விஜயநகரப் பேரரசுக் காலத்தில் தனியாகப் பிரிந்துள்ளது.

வசவசமுத்திரத்தில் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை அகழாய்வினை மேற்கொண்டு இப்பகுதியின் தொன்மைச் சிறப்பை வெளிப்படுத்தியது.

வசவசமுத்திரத்தில் மேற்கொண்ட அகழாய்வில் இரண்டு உறைகிணறுகள் அருகருகே காணப்பட்டன. இதேபோன்ற உறை கிணறுகள் புதுச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேட்டிலும் கண்டுபிடிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

செங்கற்களால் அமைக்கப்பட்ட சாக்கடை கால்வாய், சுடுமண்ணாலான அடுப்புகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

உறை கிணறுகள் பெரும்பாலும் குடிநீர்க் கிணறுகளாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இவ்விரண்டு உறை கிணறுகளும் அருகருகில் இருந்ததுடன் இவற்றின் அருகில் கால்வாய் போன்ற அமைப்பும் காணப்பட்டது. இதில் முதல் உறைகிணறு 11 உறைகளையும் இரண்டாவது 5 உறைகளையும் பெற்றிருந்தது. மேலிருந்த உறையின் அகலம் 60 செ.மீ. ஆகும் ஆனால் கீழ் செல்லக் செல்ல உறைகளின் அகலம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. இவ்வுறைகளின் உயரம் 16 செ.மீ முதல் 43 செ.மீ. வரை மாறுபட்டுக் காணப்படுகிறது.

வசவ சமுத்திரம் அகழாய்வில் 'ஆம்போரோ' ஜாடி ஒன்றின் கழுத்துப் பகுதி கைப்பிடியுடன் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வகை ஜாடி முதலாவது பண்பாட்டுக் காலத்தைச் சார்ந்ததாகும். மேலும் கூம்பு வடிவ ஜாடிகள் பெரும்பான்மையாகக் கிடைத்தன. இவற்றில் கைப்பிடிகள் காணப்படுவது சிறப்பம்சமாகும். ஏனெனில் அரிக்கமேட்டில் கிடைத்துள்ள கூம்பு வடிவ ஜாடிகள் எவற்றிற்கும் கைப்பிடி இல்லை என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

மேலும் மத்தியத் தரைகடற் பகுதியில் செய்யப்பட்ட 'ரௌலட்டட்' பான ஓடுகளும் இங்கு கிடைத்துள்ளன. இவற்றுடன் சிவப்பு மட்கலன்கள், வழவழப்பான சிவப்பு மட்கலன்கள், பழுப்பு நிற மட்கலன்கள் போன்றவைகளும் கிடைத்துள்ளன. இதுமட்டுமின்றி பல்வேறு அரிய கல்மணி வகைகளும் கிடைத்தன.

இவ்வகழ்வாயின் மூலம் கிழக்குக் கடற்கரையில் வசவ சமுத்திரம் ஒரு வணிக நகரமாக விளங்கியுள்ளது. மேலும் ரோமனியர்

களுடன் கொண்டிருந்த வாணிகத் தொடர்பையும் உறுதி செய்கிறது.

காஞ்சிபுரம்

காஞ்சிபுரத்தின் தொன்மையையும் நாகரிகத்தையும் அறியும் வண்ணம் 1953 முதல் 1976 ஆம் ஆண்டு வரை மத்தியத் தொல்லியல் துறை, தமிழகத் தொல்லியல் துறை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகம் ஆகிய மூன்று நிறுவனங்களும் இப்பகுதியில் அகழாய்வுகளை மேற்கொண்டன.

பல்லவமேடு : 'பல்லவர் மேடு' 'பாலியர் மேடு' என்றழைக்கப்படும் இப்பகுதி மண்மேடாக காஞ்சியின் தென்மேற்கே 2கி.மீ. தொலைவில் உள்ளது. 1953 - 54 ஆம் ஆண்டு மத்தியத் தொல்லியல் துறை மேற்கொண்ட அகழாய்வில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு வரையான நான்கு கால கட்டத்தைச் சேர்ந்த கட்டடங்கள் அவற்றுடன் உறைகிணறுகளும், மட்பாண்டங்களும், சங்கு வளையல்களும் கிடைத்தன.

மேலும் இப்பகுதியில் தமிழகத் தொல்லியல் துறையும் 1970-71 ஆம் ஆண்டில் அகழாய்வு மேற்கொண்டது. கி.பி. 6 கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரையிலான மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்களாக சிவப்பு மட்கலன்கள், பளிங்கு மற்றும் கண்ணாடி மணிகளும், சுடுமண் பொம்மைகளும் கிடைத்தன.

சங்கரமட வளாகம் : மத்தியத் தொல்லியல் துறை 1962-63 ஆம் ஆண்டில் சங்கர மடவளாகத்தில் அகழாய்வு மேற்கொண்டது. 4.80 மீ ஆழமுடைய அகழாய்வு குழியில் இரண்டு பண்பாட்டுப் பிரிவுகளின் எச்சங்கள் காணப்பட்டன. இங்கு ரோமானிய ரௌலட்டட் மட்கலன்களும் 59 கூம்பு வடிவ சாடிகளும் கிடைத்தன. சுடுமண் பொம்மைகளும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சாதவாகன மன்னர் சாதகர்ணியின் செப்புக் காசும், திருமகள் சின்னமும் தமிழ்-பிராமி எழுத்துக்களும் உள்ள ஈயக் காசு, உஜ்ஜயினி சின்னம் உள்ள செம்புக் காசு, செம்பு பவளம், கண்ணாடி, அரிய மணிகள், வளையல்களும், தந்தத்தினாலான சீப்பும், சுடுமண்ணாலான யானையின் தலை, முதலாம் இராஜராஜனின் செப்புக் காசு ஆகிய தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்ட இவ்வகழ்வாய்வின்

மூலம் கி.மு. 1-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரையிலான நாகரிகத்தை வெளிப்பட்டுள்ளது.

காமாட்சியம்மன் கோயில் : இக்கோயிலருகே 1970-71 ஆம் ஆண்டில் மூன்று அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டன. இங்கு ரௌலட்டட், அரிட்டைன் மட்கலன்களும், சுடுமண் பொம்மை களும், சுடுமண்ணாலான காசுகளை வார்க்கும் மூன்று அச்சுகளும் கிடைத்தன. ஒரு காசின் அச்சு தமிழ் - பிராமி எழுத்துக்களையும், உஜ்ஜயினி சின்னத்தையும் மற்றொரு காசின் அச்சு இரட்டை மீன்கள் மற்றும் உஜ்ஜயினி சின்னத்தையும் கொண்டிருந்தன. இவ்வகழாய் வில் புத்த ஸ்தூபி அமைப்புக் கொண்ட கட்டடம் நான்கு வரிசையி லான செங்கற்களைக் கொண்டிருந்தது. கீழ் இருவரிசை வட்ட வடிவிலும் மேல் வரிசைகள் நீண்ட செவ்வக அமைப்பிலும் இருந்தன. இத்தூபி கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பது வரலாற்றிஞர்களின் கருத்தாகும்.

1971-72 ஆம் ஆண்டில் நடைபெற்ற அகழாய்வில் புத்த ஸ்தூபி எனக் கருதப்படும் கட்டடத்தின் கீழ்வரிசை 56×23×8 செ.மீ. அளவு செங்கற்களையும், மேல்வரிசை 40×18×6 செ.மீ அளவு செங்கற்களைக் கொண்டிருந்தது தெரிய வந்தது. எலும்பிலான அழகிய திருமகள் உருவமும் கிடைத்துள்ளது.

1974-75 ஆம் ஆண்டு மேற்கொண்ட அகழாய்வில் கி.மு. 2 முதல் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரையான மூன்று பண்பாடு களுடைய நாகரிகம் வெளிப்பட்டன. இங்கு பல்வேறான மட்கலன் களும், தொல்பொருட்களும் கிடைத்தன. அவற்றுள் எலும்பிலான சீப்பும், கொண்டை ஊசியும், சுடுமண் தாயத்து ஒன்றும் கிடைத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஞானப்பிரகாச சுவாமிகள் மடம் : காமாட்சியம்மன் மற்றும் ஏகாம்பரநாதர் கோயில்களின் அருகே உள்ளது இம்மடம். 1969-70ஆம் ஆண்டில்6 மீட்டர் ஆழம் வரை அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இங்கு கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரையான மூன்று பண்பாட்டு நாகரிகங்கள் வெளிப்பட்டன. இவ்வகழாய்வில் கறுப்பு - சிவப்பு மட்கலன்கள், சாம்பல் நிற மட்கலன்கள், பளபளப்பான சிவப்பு மட்கலன்கள், செங்காவி மட்கலன்கள், கூம்பு வடிவத் தொட்டிகள் போன்ற மட்கலன் வகையைச் சார்ந்த தொல் பொருட்கள் கிடைத்தன.

புத்தவிகாரம் என்று கருதப்படும் கட்டடத்தின் சுட்ட செங்கற்களும், வட்டவடிவிலான சிறிய ஸ்தூபியின் அடிப்பகுதி ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டன. கீழ் மண்ணடுக்கில் 'புதலதிசு' என்று தமிழ்ப் பிராமி எழுத்துப் பொறிப்புடன் கூடிய சாம்பல் நிற மட்கல ஓடு கிடைத்தது. இது 'புதலதிச' என்பது புத்த துறவியின் பெயராக இருக்கலாம் என்பது தொல்லியல் அறிஞர்களின் கருத்தாகும்.

ஏகாம்பரநாதர் கோயில் : 1972-73 ஆம் ஆண்டில் ஏகாம்பரநாதர் கோயில் சர்வதீர்த்தம் அருகே நடைபெற்ற அகழாய்வில் சுடுமண் பொம்மைகள் கிடைத்தன.

வரதராஜப்பெருமாள் கோயில் : இக் கோயிலருகே 1975-76 ஆம் ஆண்டில் இரண்டு குழிகள் அகழப்பட்டன. இவற்றில் பல்லவர் கால மட்கலன்கள், உறைகிணறுகள் ஆகிய தொல் பொருட்கள் கிடைத்தன. மேலும் விஜயநகர காலத்தைச் சேர்ந்த தங்கக் காசு ஒன்று மேல் மண்ணடுக்கில் கண்டெடுக்கப்பட்டது.

இந்நகரத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அகழாய்வு களின் பண்பாட்டு மண்ணடுக்குகளின் கிடைத்த தொல்பொருட்கள் மூலமும் 'கார்பன் 14' காலக்கணிப்பு அறிவியல் அடிப்படையிலும் இந்நகரம் கி.மு. 5ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்ச்சியான சிறந்த நாகரிகத்தை கொண்டு விளங்கி வந்தது தெரிகிறது. இலக்கியங்கள் குறிக்கின்றவாறு பல்வேறு நகரங்களுடன் தொடர்பு கொண்டிருந் ததை இவ்வகழாய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக ரோமாபுரி யுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பினை இங்கு கண்டெடுக்கப் பட்ட தொல்பொருட்களால் அறிய முடிகிறது.

மாமல்லபுரம்

தமிழகக் கட்டக் கலையின் கருவூலமாக மாமல்லபுரம் திகழ்கிறது. கிழக்குக் கடற்கரையில் சென்னையிலிருந்து 58கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. ஐக்கிய நாடுகளின் கலாச்சார அமைப்பு (UNESCO) மாமல்லபுரம் பழமைச் சின்னங்களை உலக வரலாற்றுச் சின்னங்களில் ஒன்றாக அறிவித்துள்ளது. பல்லவர்களின் துறைமுகமாக விளங்கிய மாமல்லபுரக் கடற்கரைக் கோயிலில் மத்தியத் தொல்லியல் துறையினர் அகழாய்வு மேற்கொண்டனர்.

கடற்கரைக் கோயிலின் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் முற்றிலும் கருங்கற்களால் கட்டப்பட்ட தூங்கானை வடிவ அமைப்பில் கோயிலின் சுற்றுப்புறம் இருந்ததற்கான சிதைவுகளும், இதன் நடுவில் சிறிய கோயிலொன்றும் கண்டுபிடிக் கப்பட்டது. இருப்பினும் இக்கோயில் சிதைவுற்று இருந்தது. இச்சிறிய கோயிலின் அதிட்டானப் பகுதி இயற்கையான பாறையில் செதுக்கப் பட்டுள்ளது. ஏனைய பகுதிகளான பாதம், பிரஸ்தரம், கிரீவம் போன்றவை பிரிந்து தனித்தனியாக கிடந்தது பின்னர் ஒன்றிணைக் கப்பட்டு முழுமை பெற்றுள்ளது. எனினும் இக்கோயிலின் சிகரம் காணப்படவில்லை.

இச்சிறிய கோயிலின் உயரம் 3 மீட்டர் ஆகும் அதிட்டானப் பகுதி 0.75 மீ உயரமுடையது. கிழக்கு நோக்கி அமைந்துள்ள இக்கோயிலின் மேற்கு புறச் சுவற்றின் உட்பகுதியில் இடபாரூடர் உருவம் காணப்படுகிறது. ரிஷபாரூடர் திரிபங்க நிலையில் தனது வாகனமான ரிஷபத்தின் மீது சாய்ந்த நிலையில் நான்கு கைகளுடன் வீணை மற்றும் திரிசூலத்துடன் காட்சியளிக்கிறார். கிரீவப்பகுதியில் கணபதி புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. பல்லவர் காலக் கணபதி சிற்பத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இச்சிறிய கோயிலின் தென்பகுதியில் பன்றியின் சிற்பம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது. இச்சிற்பத்தின் பீடத்தில் பல்லவ கிரந்தக் கல்வெட்டுப் பொறிக்கப் பட்டுள்ளன. 1.60மீ உயரமுடையச் இச்சிற்பம் ஒரே கல்லினால் வடிவமைக்கப்பட்டதாகும்.

இச்சிறிய கோயிலின் வடபகுதியில் வட்ட வடிவ அமைப்பில் கருங்கல்லினால் 1. மீட்டர் ஆழமும், 1.20 மீ. விட்டமும் கொண்ட சிறிய கிணறு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கிணறு இரண்டு கருங்கல் உறைகளால் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கிணற்றின் உட்புற விளம்பின் கிழக்குப் பகுதியில் பெண் தெய்வத்தின் உருவத்துடன் இரண்டு பணிப்பெண்கள் சாமரம் வீசியநிலையில் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. கோயிலின் பூசைப் பணி களுக்கு இக்கிணறு நீரைப் பயன்படுத்த ஏற்படுத்தப் பட்டிருக்கலாம்.

அகழாய்வில் வெளிக் கொணர்ந்த சிறிய கோயில், பன்றிச் சிற்பம், சிறிய கிணறு ஆகிய பகுதிகளையும் சுற்றி இலாட வடிவில் கருங்கற் படிக்கட்டுகள் அமைப்புடன் கூடியச் சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. இப்படிக்கட்டுச் சுவரின் தென்மேற்கு

மூலையில் படிக்கட்டின் உட்புற விளிம்பிலும் கிரந்த கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் யாவும் இரண்டாம் நரசிம்மவர்மனின் வாயலூர் தூண் கல்வெட்டுகளில் காணப்படும் பட்டப் பெயர்களை கொண்டு விளங்குகிறது. எனவே இக்கோயில் இரண்டாம் நரசிம்மவர்மனின் (இராஜசிம்மன்) காலத்தைச் சார்ந்தாகக் கூறலாம்.

கடற்கரைக் கோயிலின் தென்பகுதியிலும் தென் மேற்குப் பகுதியிலும் அகழாய்வுகள் மேற்கொண்டபொழுது கட்டடப் பகுதிகள் காணப்பட்டன. மேலும் தென்மேற்குப் பகுதியில் படிக்கட்டுகளுடன் கூடிய குளம் ஒன்றும் தென்பகுதியிலும் சிறிய கோயிலொன்றும் இருந்ததற்கான எச்சங்கள் கிடைத்துள்ளன.

இங்கு மட்டுமின்றி கிருஷ்ண மண்டபத்திற்கு மேற் கிலுள்ள மலையில் இராய கோபுரத்திற்கு அருகிலும் அகழாய்வு செய்யப்பட்டன. இங்கு செங்கற்களாலான கட்டப்பட்டப் பகுதி கண்டுபிடிக்கப்பட்டது.

இதற்கு அருகிலுள்ள சிம்ம இருக்கை என்னும் இடத்திற்கு அருகே ஒரு மண் மேட்டினை அகழாய்வு செய்தபொழுது பாறையை குடைந்தமைக்கப்பட்ட செவ்வக வடிவிலான குளம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

டிசம்பர் 26, 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரலைகள் தமிழகம் உட்பட தென்னிந்தியாவில் சில மாநிலங்களைத் தாக்கியது. அதன்பின்னர் மாமல்லபுரம் கடற்கரையை ஒட்டியுள்ள பகுதிகளில் புதைந்திருந்த பழங்காலக் கட்டடங்கள் வெளியே தெரிந்தன. கடற்கரைக் கோயிலின் தென்பகுதியில் மத்தியத் தொல்லியல் துறையினர் அகழாய்வு மேற்கொண்டனர். இவ்வகழாய்வில் சிதிலமடைந்த பழங்கால கோயில் கண்டு பிடிக்கப்பட்டது. அதில் கருவறை ஒன்றும் அதனைச் சுற்றிச் சுற்றுச் சுவரும் கண்டறியப் பட்டது. இக்கருவறையில் சிலைகள் ஏதும் கிடைக்கவில்லை. இக்கோயிலின் வடகிழக்கு மூலையில் சுடுமண்ணால் ஆன உறை கிணறு கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வுறை கிணறு நான்கு உறை களைக் கொண்டதாக உள்ளது. மேலும் இக்கோயிலின் உட்பகுதி யில் உடைந்த கல் ஒன்றில் தமிழ் எழுத்துப் பொறிப்புகளுடன் கூடிய இருவரி கல்வெட்டு அறியப்பட்டது. இக் கல்வெட்டில் 'சிகமல்ல

எதி...' என்ற பெயர் உள்ளது. இவ்வெழுத்தமைதியைக் கொண்டு இது 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம். இக்கல்வெட்டின் மூலம் இக்கோயில் பல்லவர் காலத்தைச் சேர்ந்தது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் உள்ள 'மல்லன்' என்ற பெயர் பொதுவாக பல்லவ மன்னர்களின் பட்டப்பெயராகும்.

மாமல்லபுரம் அருகே சாளுவன் குப்பத்தில் அமைந்துள்ள புலிக்குகை அருகில் பல்லவர் காலத்திற்கு முந்தைய முருகன் கோயில் ஒன்று கண்டறியப்பட்டது. பல்லவர் காலத்துக்கு முந்தைய செங்கற் கட்டட அமைப்பை நோக்கும்போது சங்க காலத்தைச் சார்ந்ததாக இருக்க வாய்ப்புள்ளது. இங்குப் புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்ட கோயில் மூன்று காலக் கட்டத்தில் கட்டப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. சுண்ணாம்பு மற்றும் சுதைமூலம் செங்கற்களால் கட்டப் பட்ட ஒரு கட்டடம், கல் மற்றும் செங்கற்களால் கட்டப்பட்ட அர்த்த மண்டபம், அதையடுத்து மூன்றாவதாக மகா மண்டபம் கட்டப் பட்டுள்ளது. இவ்விடத்தில் கிடைத்துள்ள கல் தூணில் பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 858) திரு எழிச்சில் கோயிலுக்குப் பதினாறு கழஞ்சுப் பொன் கொடுத்ததாக அக்கல்வெட்டு கூறுகிறது.

தமிழ்நாட்டில் இதுவரை கண்டறியப்பட்ட செங்கலால் கட்டப்பட்ட கோயில்களில் மிகவும் பழமையாது இக்கோயி லாகும். இக்கோயிலில் கருங்கல்லில் ஆன வேல் ஒன்றும் கிடைத்துள்ளது.

விசும்பின் துறைபோவுகள்

காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகளில் சில ..

திருவல்லம் கல்வெட்டு

பகாப்பிடுகு லளிதாங்குரான்
சத்துரு மல்லன் குணபரன்
மயேந்திரப் போத்தரெசரு அடியான்
வயந்தப் பிரி அரசர் மகன் கந்தசேனன்
செய்வித்த தேவகுலம்.

திருக்கழுக்குன்றம் - ஒரு கல் மண்டபக் கல்வெட்டு

ஸ்ரீ திருக்கழுக்குன்றத்துப் பெருமா
னடிகளுக்கு களத்தூர்க் கோட்டத்
து தன்கூற்று திருக்கழுக்குன்ற
த்து ஸ்ரீமலைமேல்
மூலத்தானத்துப் பெருமா
னடிகளுக்கு வழிபாட்டுப் புறமா
க வாதாபி கொண்ட நரசிங்கப்
போத்தரசர் வைத்தது

ஓணம்பாக்கம் கருப்புக்குன்றில் அமைந்துள்ள பார்சுவநாதர் கோயில் செய்வித்ததைத் தெரிவிக்கும் கிரந்தக் கல்வெட்டு.

ஸ்ரீ சதுர்விம்
சதி ஸ்தாவக வ
ஸுதெவ சித்தா
ந்த படாரர்
செய்வித்த
தேவாரம்

திருக்கழுக்குன்றம் கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ. கோஇராஜகேசரி பர்மர்க்கு யாண்டு இருபத்தேழாவது.

களத்தூர்க்கோட்டத்து தன்கூற்றுத் திருக்கழுக்குன்றத்து ஸ்ரீ மூலஸ்தானத்து பெருமான்அடிகளுக்கு இறையிலியாகக் கந்தசிஷ்யன் குடுத்தமையில்

அப்படியே வாதாபிகொண்ட நரசிங்க போதரையரும் அப்பரிசை ரக்ஷித்தமையில்

அண்டுறையன் குணவன் மகன் புத்தன் விண்ணப்பத்தினால், பூர்வ்வ ராஜாக்கள் வைத்தபடியே வைத்தேன் இராஜகேசரி பர்ம்மனேன்.

இத்தர்மமம் ரக்ஷித்தான் அடி என் முடிமேலின

களத்தூர் கல்வெட்டு

1. ஸ்ரீ யாண்டு
2. கொங்கரையர் கள்ளப்பெ
3. ருமானார் தேவியார் கொங்கச்சியா
4. ர் களத்தூரேரிச் செய்வித்த
5. தூம்பு ஸ்ரீ

உத்தரமேரூர் கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ மதுரை கொண்ட கோப்பரகேசரி வன்மர்க்கு. யாண்டு பதினாலாவது, நாள் பதினாறு, காளியூர்க் கோட்டத்து, தன் கூற்று, உத்திர மேரூர் சதுர்வேதி மங்கலத்து சபையோம்

இவ்வாண்டு முதல் எங்களுக்கு பெருமானடிகள் எம்பெருமான் ஸ்ரீவீர நாராயணன் ஸ்ரீபராந்தக தேவன் ஸ்ரீபரகேசரி மன்னருடைய ஸ்ரீமுகம் வரக்காட்ட, ஸ்ரீமுகப்படி ஆக்ஞையினால், சோழநாட்டு புறங்கறம்பை நாட்டு ஸ்ரீவங்கநகர் கரஞ்சை கொண்டயக்ரமவித்த

பட்டன் ஆகிய சோமாசி பெருமான் இருந்து, வாரியமாக ஆட்டொருகாலும் சம்பத்ஸர வாரியமும், தோட்ட வாரியமும் ஏரி வாரியமும் இடுவதற்கு வ்யஸ்தை செய்த பரிசாவது.

குடும்பு முப்பது. முப்பது குடும்பிலும் அவ்வக் குடும்பிலாரே கூடி... கால் நிலத்துக்கு மேல் அரை நிலமுடையான், தன் மனையிலே அகம் எடுத்துக்கொண்டு இருப்பான். எழுபது பிராயத்தின் கீழ் முப்பத்தைந்து பிராயத்தின் மேற்பட்டான், மந்திர பிராம்மணம் வல்லான், ஓதுவித்தறிவான், அல்லது அரைக்கால் நிலமே உடையான் ஆயினும் ஒரு வேதம் வல்லானாய் நாலு பாஷ்யத்திலும் ஒரு பாஷ்யம் வக்கணித்து அறிவான், அவர்களிலும் கார்யத்தில் நிபுணன், ஆசாரம் (ஒழுக்கசீலம்) உடையான், அர்த்த சௌசமும் (பொருள் சுத்தம்) ஆன்ம சௌசமும் (மனச்சுத்தம்) உடையான், மூவாட்டின் இப்புறம் வாரியம் செய்திலான், பெயர் தீட்டி குடம் புக இடுவதாகவும்,

